கல்கி

KALKI 23.8.98
ரூ. 4.50

இலவச இணைப்பைக் கேட்டு வாங்குங்கள்!



மூப்பனார் சிறப்புப் பேட்டி

தடுமாறுகிறதா த.மா.கா?

கடைசி வாய்ப்பு!

வழக்கம் போல் **சலுகை, சலுகை மேல் சலுகை, இலவச நூல்** ஆகிய அனைத்தும் உண்டு.

அருட்செல்வர். டாக்டர். நா. மகாலிங்கம் அவர்களின்
பொருளாதரவுடன் மிகக் குறைந்த சலுகை விலையில் ! இலவச நூலுடன் !!

தேவாரம், திருவாசகம்,
திருமந்திரம், பெரியபுராணம்
முதலான நூல்கள் அடங்கிய

பன்னிரு திருமுறைகள்

மூலமும் உரையும் - 12000 பக்கங்களுக்கு மேல் - 24 தொகுதிகள்

விலை ரூ. 2500 . சலுகை விலை ரூ. 1200 மட்டுமே.

திருவிளையாடற் புராணம் (மூலமும் தெளிவுரையும்) 5 தொகுதிகள் - ரூ.500 இலவசம்

8.8.98க்குள் பணம் அனுப்புவோர்க்கு மட்டுமே இந்தச் சலுகைகள்!
24.9.98 தேதியிலிருந்து பணம் வந்த வரிசைப் படி நூல்கள் அனுப்பபடும்.

பன்னிரு திருமுறைகள் 24 தொகுதிகள்	ரூ. 2500.00
முன் வெளியீட்டுச் சலுகை	500.00
	ரூ.2000.00
இராமானந்தா அடிகளார் அறக்கட்டளையின் தலைவர் **அருட்செல்வர். டாக்டர்.நா. மகாலிங்கம்** அவர்கள் வழங்கும் உதவித் தொகை	800.00
சலுகை விலை	ரூ. 1200.00

ரூ.1200யினை DRAFT (Varthamanan Pathi pagam என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க தாக)/MO மூலம் 8.8.98க்குள் அனுப்புக. செப்டம்பர் 24 தேதியிலி யிருந்து, பணம் வந்த வரிசைப்படி நூல்கள் அனைத்தும், அதாவது பன்னிரு திருமுறைகள் 24 தொகுதிகள், திருவிளையாடற் புராணம் 5 தொகுதிகள் ஆக 29 தொகுதிகள் லாரிபார்சல் (A.B.T / T.V.S / POPULAR தங்கள் விருப்பப்படி) மூலம் அனுப்பப்படும். அனுப்பும் செலவினை மட்டும் லாரி அலுவலகத்தில் செலுத்திப் புத்தகப் பார்சலைப் பெற்றுக் கொள்ளலாம்.

நேரில் பதிவு செய்ய விரும்புவோர் கவனத்திற்கு : 8.8.98க்குள் எமது அலுவலகத்தில் ரூ.1200 செலுத்தி ரசீது பெற்றுச் செல்லலாம். நூல்கள் தரப்படும் சரியான தேதி ரசீதினில் குறித்துத் தரப்படும். குறித்த தேதியில் ரசீதினைக் கொண்டு வந்து கொடுத்து நூல்கள் அனைத் தையும் நேரிலேயே பெற்றுச் செல்லலாம். எமது அலுவலக நேரம் : 9 A.M.-7 P.M. உணவு இடைவேளையின்றி. ஞாயிறு விடுமுறை.

மேலும் சில தகவல்கள் : 1. MO/DD அனுப்புவோருக்கு லாரி பார்சல் மூலம் தான் அனுப்பப்படும். நேரில் நூல்கள் தரப்பட மாட்டாது. 2. Cheque ஏற்கப்படமாட்டாது.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி :

வர்த்தமானன் பதிப்பகம்
ஏ. ஆர். ஆர். வளாகம், 141, உஸ்மான் ரோடு,
தி.நகர், சென்னை - 17 (பனகல் பார்க் அருகில்)

நன்முயற்சிக்கு நல்வாழ்த்துக்கள்
அருட்செல்வர். டாக்டர். நா. மகாலிங்கம்
தலைவர், இராமானந்தா அடிகளார் அறக்கட்டளை.



சொல்லாமலே

சூழ்நிலையால் கதாநாயகனை ஊமை என எண்ணி பழகத் தொடங்குகிறாள், அமெரிக்காவில் வளர்ந்து தாயகம் திரும்பிய கதாநாயகி. ஊமையில்லை என்பது தெரியவந்தால் அவளது நட்பை இழந்து விடுவோமோ என்கிற பயத்தில் அவன் வேடத்தைத் தொடர்கிறான். ஒரு கட்டத்தில் நட்பும் கருணையும் காதலாக மாற, நிழல் நிஜமாகிறது!

படத்துக்குப் பொருத்தமான தலைப்பு. அறிமுக இயக்குனர் என்று அடையாளம் காட்டிக் கொள்ளாத அளவுக்கு சசி படத்தைத் திறமையாக நெய்திருக்கிறார்.

“அழகில்லாம பொறந்தாலும், மத்த இளைஞர்களை மாதிரிதானே ஆண்டவன் எனக்கும் உணர்ச்சிகளைக் கொடுத்திருக்கான். ஸ்வேதாவின் நட்பிலே கிடைக்கும் சந்தோஷத்தை அவ அமெரிக்கா போகும்வரை அனுபவிக்கிறேனே” என்று தொடங்கி, பிறகு அவளிடம் மனநெருக்கமும் அதே சமயம் அவளை ஏமாற்றுகிறோமே என்ற தவிப்பும் கலக்கும் காட்சிகளில் லிவிங்ஸ்டன் உணர்ந்து செய்திருக்கிறார்.

அவரது தோழனாக வரும் விவேக் சரளமாக சிரிக்க வைக்கிறார். ஈவ் டீஸிங் காமெடி காட்சிகளின் போது தியேட்டரில் கலகலப்பு கம்மி. (சரிதானா?)

நொண்டி என்று நம்பி, தான் கடை வைத்துக் கொடுத்த ஒருவன் நடக்கக் கூடியவன் என்பது தெரிந்ததும் அவனைப் போலீஸில் ஒப்படைத்து விட்டு கௌசல்யா (படம் முழுதும் கச்சிதமான நடிப்பு) "நம்பிக்கை துரோகத்தை மட்டும் என்னால் மன்னிக்கவே முடியாது" என்று கூற, லிவிங்ஸ்டன் பேய்முழி முழிக்குமாறு அமைக்கப்பட்டுள்ள கிளைக்கதை மையக் கதைக்கு வலு சேர்க்கிறது. ஆனால் கடைசிக் காட்சியில் "நொண்டியின் மேல் கொண்டது கருணை. உன் மேல் உண்டானது காதல். அவன் துரோகம் செய்தபோது ஏற்பட்ட கொந்தளிப்பு உன் மேலும் ஏற்படுமா?" என்று காதலி கேட்கிறாள். நெருங்கியவர் துரோகம் செய்தால் அதிக சீற்றம் வராதோ?... லாஜிக் உதைக்கிறது!

அமெரிக்க ஆசையில் கௌசல்யாவைத் திருமணம் செய்து கொள்ள எண்ணும் கரணின் பாத்திரமும், நடிப்பும் இயல்பு.

கொஞ்சம் ஜவ்வுத்தனமும், கொஞ்சம் ரீல் போக்கும் ஆங்காங்கே தலைகாட்டுகின்றன. க்ளைமாக்ஸின் அதிர்ச்சி முடிவு கூட 'காதலுக்குக் கண் (வாய்?) இல்லை' என்ற ஒரே லாஜிக்(?)கில்தான் பொருந்துகிறது. ஆனால் (ஒளிப்பதிவு உட்பட) படத்தின் மற்ற 'ப்ளஸ்'கள் இவற்றை எளிதாக மன்னிக்க வைத்து விடுகின்றன.

— ஜி.





ஸ்கூட்டரில் ஏறி ரயிலைத் துரத்தியவர்!

காட்சி – 1

சென்னை சென்ட்ரலில், தம் மனைவியை ஹைதராபாத்துக்கு, ரயிலேற்றி அனுப்பி வைத்தார் இஞ்சினியர் கிருஷ்ணமூர்த்தி (51 வயது). ரயில், ஸ்டேஷனை விட்டுச் சென்ற பின், மனைவியின் ரயில் டிக்கெட் தன்னிடமே இருப்பது தெரிந்ததும் ஷாக்! நிலைய அதிகாரிகளிடம், டிக்கெட்டைக் காட்டி, பிரச்னையை விளக்கினார். ஆனால், தங்களால் உதவ முடியாது என்று அவர்கள் கூறிவிட்டனர்.

காட்சி – 2

டிக்கெட் இல்லாமல், தம் மனைவிக்குப் பிரச்னை வந்துவிடுமே என்று கவலைப்பட்ட கணவர், ரயில் அடுத்து எங்கே நிற்கும் என்று தெரிந்து கொண்டார். சூலூர்பேட்டை. சென்னையிலிருந்து 80கி.மீ. இரண்டு மணிநேரத்தில், ரயில் சூலூர் பேட்டையை அடையும். அதற்குள் தம் ஸ்கூட்டரிலேயே, சூலூர் பேட்டைக்குப் போய், ரயில் நிற்கிறபோது, மனைவியிடம் டிக்கெட்டைக் கொடுத்து விடுவது என்று (அசட்டு தைரியத்தில்) முடிவெடுத்தார் கணவர். ஸ்கூட்டரில் விரைந்தார்.

காட்சி – 3

கிருஷ்ணமூர்த்தியிடம் விதி விளையாடிப் பார்க்க முடிவு செய்து விட்டது. ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்தவரை ஒரு லாரி அடித்து விட்டுப் பறக்க, ஸ்கூட்டரிலிருந்து தூக்கி எறியப்பட்டு ஒரு புதர் அருகே போய் விழுந்து, நினைவிழந்தார். ரோட்டின் மறுபுறம் ஸ்கூட்டர் போய் விழுந்தது. ரொம்ப ஆள் நடமாட்டமில்லாத பகுதி என்பதால், அடிபட்ட கிருஷ்ணமூர்த்திக்கு உதவ யாருமில்லை. அந்தப் பக்கம் வாகனங்களில் சென்ற ஒரு சிலரும் 'ஹிட் அண்டு ரன்' கேஸ்; பாவம்! மனுஷன் செத்து விட்டார்' என்று 'ப்ச்' கொட்டி விட்டுப் போய் விட்டனர்.

காட்சி – 4

இப்படியே சுமார் ஆறு மணி நேரம் அடிபட்டு,


• டாக்டர் ரெஜினால்ட்

கவனிக்காமல் இருந்த மனிதரை, யாரோ ஒரு புண்ணியவான் கிட்டே வந்து கவனித்துவிட்டு, 'உயிர் இருக்கிறதே!' என்று சொல்லி, சூளூர்பேட்டை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார். அங்கே, 'பூட்டகேஸ்!' என்று சொல்லிக் கைவிரித்துவிட, உறவினர் களுக்குத் தகவல் அனுப்பப்பட்டு அவர்கள் வந்து சேர்ந்தனர். அவர்கள் கிருஷ்ண மூர்த்தியை உடனடியாக சென்னைக்குக் கொண்டு வந்து, அப்போலோ ஆஸ் பத்திரி யில் சேர்த்தார்கள்.

காட்சி – 5

அப்போலோவின் நரம்பியல் நிபுணர் டாக்டர் ரெஜினால்டு தலைமையில் மருத்துவர்கள் குழு, முழுமூச்சாய்ப் பணியில் இறங்கியது. மண்டையில் பலத்த அடிபட்டு, மூளையின் இடது புறம் பெரும் பாதிப்பு. தவிர, மூளைக்குள் பெரிதாய் ரத்தம் கட்டிக் கொண்டு, அதனால் ஏற் பட்ட அழுத்தம், மூளையின் செயல் பாட்டை ரொம்ப பாதித்திருந்தது. உயிர் பிழைக்க வைக்கும் சாத்தியங்கள் மிகக் குறைவு என்றாலும், சூளூர் பேட்டை டாக்டர்கள் போல, கைவிட்டு விட விரும்பவில்லை, அப்போலோ டாக்டர்கள்.

காட்சி – 6

மண்டையோட்டின் ஒருபகுதி கட் பண்ணி எடுக்கப்பட்டது. அறுவைச் சிகிச்சை மூலம் பழுதுகள் சீர்செய்யப் பட்டன. மனிதர் பிழைத்துக் கொண்டார் என்றாலும் பேச வரவில்லை; வலதுப்பக்க இயக்கத்தில் பாதிப்பு இருந்தது. டாக்டர் களின் தீவிர கண்காணிப்பும் சிகிச்சையும் தொடர்ந்தது.

காட்சி – 7

கிருஷ்ணமூர்த்தி குணமடைந்து, ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆனார். அவர் நார்மலாய் இருக்கிறார். பேச்சும் வந்து விட்டது! ●

டாக்டர் ரெஜினால்டு கூறக்
கேட்டவர்: **ஜூலி**

அருவிக் கரையில்

எச்சரிக்கை 1 : இது பக்தர்களுக்கான கட்டுரை.

எச்சரிக்கை 2 : இது பக்திக் கட்டுரை அல்ல!

தீபாவளி மலருக்காக, திருநெல்வேலிப் பக்கம் ஒரு ஜோலியாகப் போக வேண்டி இருந்தது. போன காரியத்தை முடித்துக் கொண்டு சமர்த்தாகத் திரும்பியிருக்கலாம். திரும்ப விடவில்லை, உள்ளூர் நண்பர் ஒருவர்.

''வள்ளியூருக்குப் பத்து கிலோ மீட்டர் அந்தாண்ட மகேந்திரகிரி மலை இருக்குது தம்பி. உச்சாணில ஒரு பெருமா கோயில். சும்மா போயி வாருங்க. பிரம்ம்மாதமா இருக்கும் சீனரியெல்லாம்....''

எத்தனையோ மலை உச்சிக் கோயில்கள். இது என்ன பிரம்ம்மாதம்?

''அது, போயிப் பார்த்தால்ல தெரியும்?''

ரயிலுக்கு முழுசாக எட்டு மணி நேரம் சமயமிருந்ததால் பஸ் பிடித்து வள்ளியூர் போய், விசாரித்தேன்.

''மகேந்திர மலைக்குங்களா? நம்பி கோயிலுக்குங்களா? வேன் வேணுங்களா?''

''எவ்வளவு ஆவும்?''

''அதிகமில்லீங்க. எளுநூத்தம்பது ரூவா.''

''அட சாமீ...'' என்று கவுண்டமணி ஸ்டைலில் அலற, ''அப்ப ஆட்டோவுல போறீயளா? முந்நூத்தம்பது.''

''பஸ்ஸு இல்லை...''

''பொளச்சு கெடந்து, ஃபாரஸ்டுக்காரன் மனசு வெச்சா இன்னும் ரெண்டு மூணு வருசத்துல பஸ்ஸு வந்துரும்ங்க.''

ஆசிரியர் நறநறத்தால் பரவாயில்லை; பிரம்ம்மாதமான (சே!) கட்டுரையால் ஈடுசெய்து விடலாம் என்று ஆட்டோ பிடித்துக் கிளம்பினோம்.

'ராயல் அன்றோனி' என்கிற ஆட்டோ டிரைவர், ''டிபன் முடிச்சுட்டீங்களா? மதியத்துக்கு எதனா வாங்கிக்கிறீயளா? கொறிக்க ஏதும் வேணுங்களா? மருந்து, மாத்திரை எதும் வேணுங்களா?'' என்று ஒரு மாதிரி கலவரப்படுத்திவிட்டு, எல்லாம் வல்ல எம்பெருமான் ஏசுவை வணங்கி, வண்டியை ஸ்டார்ட் செய்தார்.

குறுக்கே பூனையோ என்னவோ ஓடியிருக்க வேண்டும். அப்போது கவனிக்கவில்லை.

சாலைகளைக் கடந்து மலைப் பாதையைத் தொட்டு ஓரிரு கிலோ மீட்டர்கள் சரளைக் கற்களை உருட்டிக் கடந்ததும் ஆட்டோ புஸ் புஸ் என்று மூச்சு விட்டது.

சய்தே, கஸ்மாலம் என்று திட்டாமல், ராயல் அன்றோனி, வண்டியை நிறுத்தி விட்டு, பின்பக்கம் திறந்து ஆராய்ச்சியில் இறங்கினார். அரை மணி.

மறுபடி கிளம்பி ஒரு மூணு கிலோ மீட்டர். மறுபடி ஆட்டோவுக்கு ஆஸ்துமா ஜாஸ்தியாகி, இறுதியில் புர்ர் என்று ஒரு பெருமூச்சுவிட்டு, தாற்காலிகமாக இறந்து விட்டது.

''இந்த ரூட்டுல வந்தாலே இதான் சார் சன்னை! பள்ளம், மேடு ஜாஸ்தி பாருங்க!''

ஒரு கோணிப் பையை ஆட்டோவுக்கு அடியில் விரித்துப் படுத்து விட்டார் அன்றோனி.

கஷ்டமே என்று இறங்கி நின்றோம், நடுக் காட்டில்.

திடீரென்று ஆட்டோவுக்கு அடியிலிருந்து ஓர் அமானுஷ்யக் குரல் கேட்டது. நண்பர் அன்றோனிதான்.

''ஓரமா நிக்காதீங்க சார். நடுவுல வந்துருங்க. இங்கத்திப் பக்கம் கருநாகம் ஜாஸ்தி.''


அடிவயிற்றில் ஒரு ரஷ்யப் புரட்சி கிளம்ப, நாலடி பாய்ந்து ஆட்டோவை ஒட்டிக் கொண்டேன். உடன் வந்த போட்டோகிராஃபர், ஆட்டோவுக்கு அடிப்புறத்தை ஆராய்ச்சிக்கூடமாக்கிக் கொண்டிருந்த டிரைவரைச் சற்று நகரச் சொல்லித் தானும் படுத்துக் கொள்ளலாமா என்று யோசிக்க ஆரம்பித்தார்.

சரியான காடு. பாதை என்று எதுவும் இல்லை. நேர் செங்குத்தான மலை வழியில் ஒரு குத்துமதிப்பாகத்தான் ஆட்டோ போக வேண்டும். எங்கே பள்ளம், எங்கே மேடு



• பொங்கும் அருவி

திருமலைநம்பி!



என்பது அந்த இடத்தைப் படைத்தவனுக்கே அத்தனை துல்லியமாகத் தெரியுமா என்பது சந்தேகம்.

"ஜனங்க போக்குவரதது கிடையாது சார்! சலிக்கெனமைங்கல்ல கொஞ்சம் பேரு சாமி கும்புட வருவாக. மத்தப்படி மனுச வாசனை



• காடுமுரடான மலைப் பாதையில் பயணம்...

கிடையாது! மேலிருந்து யாரானா வர்றாங்கன்னா, மேல பட்டாச்சார் காத்திருப்பாக. இல்லாட்டா சாமீ தனிதான்!"

அடர்ந்த மரங்களும் இனம்புரியாத மூலிகை வாசனையுமாகப் பிரமாதமாகத்தான் இருந்தது சூழ்நிலை. ஆனால் நின்று ரசித்துக் கொண்டிருக்கச் சமயம் இல்லை. அன்றோனி சொன்ன கணக்குப்படிப் பார்த்தால் மலை ஏற இரண்டு மணி நேரம். இறங்க ஒன்றரை மணி நேரம். மாலை ரயில் பிடிப்பது சுலபம். ஆனால் ஆட்டோ ரிப்பேராகி அநாதையாக நிற்கிற நேரத்தை எந்தக் கணக்கில் சேர்ப்பது?

டிரைவருக்கு அந்தக் கவலை இல்லை. வேலைச் சுமை மறக்க, உற்சாகமாகப் பேசிக் கொண்டே போனார்.

"அதுல பாருங்க, இங்க 'மிளா'ன்னு ஒரு சாதி எருமை உலாத்துங்க. காட்டெருமை வம்சம். கம்மா பளபளன்னு தோலு மினுக்கும் சாரே! இந்தப் பாதைல அடிக்கடி குறுக்கால வரும். தனியா வந்துச்சன்னா ஒரு போட்டோ புடுச்சுக்கங்க. ஆனா..."

"ஆனா?"

"பத்து பன்னெண்டு மொத்தமாவும் வர்றதுண்டுங்க. அப்பம் வேற வ்ளி இல்லை. ஒரே ஓட்டமீ ஓடிப் போயிற வேண்டியது தான்!"

மறுபடியும் ஒரு ரஷ்யப் புரட்சி!

"ஐயா அன்றோனி! எங்களுக்குத் தெரிஞ்ச தெல்லாம் ஊர்மிளா மட்டும்தான். இது என்ன புது மிளா?"

"ரொம்ப முரட்டு சாதி எருமைங்க."

"வேற என்னென்ன உண்டுங்க?"

"சிங்கம் தவிர எல்லாம் உண்டு. பதினெட்டுப் புலி உலாத்துதுங்களாம். அதனாலதான் ஃபாரெஸ்டுக்காரன் ரூட்டுப் போட பர்மிஷன் தர மாட்டேங்கறான். சனங்க வந்து போனா புலிங்களுக்குப் பிரச்னை ஆயிருமில்லை?"

மகேந்திர மலையில் இருக்கிற திருமலை நம்பி ஆலயத்துக்கு சம்ப்ரோக்ஷணம் செய்து சிரமைக்கிற பணியை டி.வி.எஸ். நிறுவனம் செய்து வருகிறது. தம் சொந்தச் செலவில் பாதை போட டிவிஎஸ் தயாராக இருந்தும் அதற்கு அனுமதி அளிக்க வனத்துறை தயங்கி நிற்கிறது என்கிறார்கள். மேற்சொன்ன காரணம்தான்.

நேரம் ஆகிக் கொண்டிருந்தது. வெயில் தெரியாமல் மரங்கள் குடைபிடித்தாலும் வெட்டியாக நிற்பது மகா கஷ்டமாக இருந்தது. ஒரு கட்டு சையது



• மூலவர்

பீடியே ராயல் அன்றோனியின் பகலுணவாக இருக்க, தெனாவெட்டாக ஒன்றும் வாங்கி வந்திராதது அப்போது எனக்குப் பெரிய பிசகாகப்பட்டது.

"இங்க கடை கன்னி எதும் உண்டுங்களா?"

கேள்வியின் அபத்தம், கேட்கும்போதே புரிந்தது. பதினெட்டுப் புலிகளுக்கும் மிளாக்களுக்கும் கருநாகங்களுக்கும் கடை கன்னி தேவையில்லை.

"நீங்க மேல நடந்துட்டே இருங்க. நான் இந்தா சரிபண்ணிட்டு வாரேன்" என்றார் அன்றோனி.

வேறு வழி? நடக்க ஆரம்பித்தோம். குடல் உள்ளுக்குள் புல் அப்ஸ் எடுக்கிற விதமான ஏற்ற இறக்கங்கள். பிடிமானமில்லாத சரியான செங்குத்து. திமுர் திமுரென்று கிளைகள் முறியும் ஓசை. யானையோ என்னவோ. 'மேலே திருமலை நம்பிக்குத் தனியாக எப்படிப் பொழுது போகும்?'

ஆயிரம் வருஷத்துக்கு மேலாக அங்கே கால் வலிக்க நின்று கொண்டிருக்கும் ஆண்டவன் என்று சொன்னார்கள். வராக புராணத்தில் இந்த இடம் பற்றிய குறிப்பும் ஒரு பிரும்மராட்சஸனுக்கு இங்கே மோட்சமளித்த கதையும் வருகிறதாம். ஆழ்வார்கள் நாலைந்து பேர் வந்து பாடி விட்டுப் போயிருக்கிறார்கள். கிளம்புகிறபோது நண்பர் கொடுத்த ஸ்தல புராணத்தில் எத்தனையோ பல நூற்

நாண்டுகளுக்கு முன்னால் பாண்டிய மன்னர்களும் சேரர்களும் பிற்பாடு நாயக்கர்களும் கால் வலி பாராமல் ஏறி, திருமலை நம்பி ஆலயத்தில் சில பல கைங்கர்யங்கள் பண்ணியிருப்பது தெரிகிறது. ஆனால் ஏறுவது இத்தனை கஷ்டம் என்பது பற்றி ஒரு குறிப்பும் அதில் இல்லை!

"தாகம் பிச்சிக்குது இல்லை?" என்றார் போட்டோகிராபர்.

தண்ணீர் கிடைத்தால் தான் அடுத்த அடி எடுத்து வைக்க முடியும் என்பதாக ஒரு சத்யாகிரகி போல வழியில் அமர்ந்து விட்டார்.

திருமலை நம்பி, அருள் பாலித்து ஆட்டோவைக் கிளப்பி, அன்றோனி உருவில்



காட்டு வழியில்...

ஓட்டி வந்து சொன்னார் :

"இன்னும் நூறடிதான் ஆட்டோ போவும். அதுக்கு மேல நீங்க ரெண்டு கிலோ மீட்டர் நடக்க வேண்டியதுதான். தண்ணி கிடைக்கும் அங்க."

அடப்பாவி! இன்னும் நடக்கணுமா?

அன்றோனியைப் பகைத்துக் கொள்வதும் அத்தனை உசிதமல்ல என்று தோன்றியது. வேறு வழி? நடந்தும் அமர்ந்தும் மேற்கொண்டு நடந்தும் கடந்து, மூச்சிறைக்கத் திரும்பி நோக்கினால் –

அருவி! ஆளற்ற அநாமதேய மலைக்காட்டில் பால் வெள்ளமாகப் பொங்குகிற அருவி. ஹோவென்ற இரைச்சலும் சீற்றமும் துள்ளலுமாகப் பாறைகளில் பட்டுத் தெறித்துப் பதறி ஓடி வரும் அருவி! பனிக்குச் சுத்தமும் கும்மென்று கிளம்பும் மூலிகை நெடியுமாக விழுந்து புரண்டு, தவழ்ந்து, எழுந்து, குதித்து, கொஞ்சி, ஆடி, ஓடி (போதுமா?) வரும் அருவி! சொய்யாவென்று சட்டை, பேண்ட்டை உருவிப் போட்டு விட்டு, கேமரா மூட்டையை விசிறிக் கடாசி விட்டு இறங்கி விட்டார் போட்டோகிராபர்!

"கோவில் பார்க்க வேணாமாய்யா?"

"நீங்க பார்த்து, கும்பிட்டுட்டு வாங்க. என் ஆயுசுல இத்தனை தண்ணி பார்த்ததே இல்லை. ஒரு மினரல் வாட்டர் ஃபாக்டரி ஆரம்பிக்க என்ன செலவாகும்?"

அது நாள் வரை குளித்தே இராதவர் போல விழுந்து புரண்டு, குளித்துக் களித்து எழுந்து வந்தவர்,

"டக்கரா ஒரு மிளகு ரசம் அடிச்சா எப்படி இருக்கும்?" என்று கேட்டார்.

கதறக் கதற இழுத்துக் கொண்டு கோவிலை நோக்கி நடந்தேன்.

சுற்றிலும் மலைத் தொடர்கள். சுழற்றி அடிக்கும் காற்று. சலசலக்கும் நீரோடை. நடுவே ஒரு லட்டு போல இருந்தது அந்தச் சரித்திரச் சின்னம்.

விசாலமான பிராகாரம். படி ஏறி மேலே போனால் இருள் சாம்ராஜ்ஜியத்தின் நடுவே நின்ற கோலத்தில் புன்னகைத்துக் காட்சி தரும் திருமலைநம்பி. கற்பூர ஒளியில் மின்னும் விழிகள். ஒருகணம் நடந்த வலியெல்லாம் பறந்து, எழிலில் லயித்துப் போய்க் கிறுகிறுத்தது மனம்.

"இது பிரார்த்தனை ஸ்தலம். வேண்டிக்கிட்டது நடக்கும்!"

அமானுஷ்யமாகக் கேட்டது பட்டாச்சாரியாரின் குரல்.

சுற்றி வருகையில் சுவர்களில் தென்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கோயிலின் ஆயிரம் வருடப் பழைமையைச் சொல்லின. உத்தரத்தில் செதுக்கப்பட்ட மீன் வடிவங்கள் பாண்டியர்களைப் பறைசாற்றின.

"அரசாள் காலத்துலே அமோகமா கைங்கர்யம் பண்ணியிருக்கா. இப்போ டிவிஎஸ்காரா பார்த்துக்கறா. நிறைவா, நிறைய கைங்கர்யங்கள். பக்தர்கள்தான் வர முடியலை. பாதை இல்லியோல்லியோ? அதான்! பத்திரிகைல எழுதுங்கோ. நாலு பேருக்குத் தெரியட்டும். பிரசாதம் வாங்கிக்கோங்கோ."

இருளில் முகம் தெரியாத இளவயது பட்டாச்சார்யார் பேசிக் கொண்டே போனார்.

திரும்பி வருகையில் ராயல் அன்றோனி சொன்னார் :

"ரோடெல்லாம் போடக் கூடாது சார். இப்பவே சில காலிப் பயலுவ லீவு நாளானா தண்ணி பாட்டில் எடுத்துட்டு வந்து அருவிக் கரையை அசிங்கப்படுத்தறாங்க. ரோடு வேற போட்டுட்டா கேக்கவே வேணாம்!"

நெல்லை வந்து ரயில் பிடித்து, சென்னை வந்த பின்பும் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது அருவியோசை. கண்களில் நின்று கொண்டே இருந்தது நம்பியின் எழில்! கூடவே அன்றோனியின் எச்சரிக்கை மொழியும். ◉

— **ஔரங்கசீப்**

படங்கள் : **ஸ்ரீஹரி**

தங்க மகன்!



• ஸ்ரீராம்

ஒன்பது புள்ளி எட்டு ஐந்து புள்ளிகள்.

ஐஐடி படிப்பில் இந்த ஸ்கோருக்கு என்ன மதிப்பு என்று யாராவது விஷயம் தெரிந்த தொழில்நுட்ப ஆசாமியிடம் கேட்டுப் பாருங்கள். சுமார் ஒரு ஃபர்லாங் உயர, அகலத்துக்கு அவர் வாய் பிளக்கும்.

சென்னை ஐஐடியைச் சேர்ந்த ஆர். ஸ்ரீராம் (பி.டெக் - கம்ப்யூட்டர் சயின்ஸ் அண்ட் எலக்ட்ரானிக்ஸ்) இந்த வருஷத்துப் படிப்பில் சிறந்த மாணவராகத் (Best academic record) தேர்வாகி, குடியரசுத் தலைவரின் பரிசைப் பெற்றிருக்கிறார். பரிசை வழங்கியவர் துணை ஜனாதிபதி கிருஷ்ணகாந்த்.

காத்திருந்தாற்போல அமெரிக்காவின் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக் கழகம் இவரைத் தன் 'சிறப்பு விருந்தாளி'யாக, ஆராய்ச்சி மாணவருக்கான இடம்கொடுத்து மாதம் ஆயிரத்தைந்நூறு டாலர் ஸ்காலர்ஷிப்பும் கொடுத்து ஸ்வீகரித்துக் கொண்டு விட்டது.

இதை நீங்கள் படித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் ஸ்ரீராம் துணிமணிகளை பேக் பண்ணிக் கொண்டிருப்பார்!

"வாழ்த்துக்கள் ஸ்ரீராம். இந்த வெற்றியின் பின்னால் உள்ள உங்களின் முயற்சி பற்றிச் சொல்ல முடியுமா?", என்று ஆழ்வார்ப்பேட்டையிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்துக் கேட்டோம்.

சின்னதாக ஒரு புன்னகை. அதை விடச் சின்னதாக ஒரு வெட்கம். பிறகு தன் பெற்றோரை ஒரு பார்வை. கணீரென்று பேசத் தொடங்கினார் ஸ்ரீராம்.

"ஐ.ஐ.டி. ஸீட் கிடைக்கறது எத்தனை கஷ்டம்னு தெரியும் இல்லையா? அத்தனை கஷ்டப்பட்டு சீட் வாங்கறது சும்மா பாஸ் பண்ணிட்டுப் போறதுக்குத்தானா? I don't think so! அங்க வர்ற எல்லா ஸ்டூடன்ஸுமே பாஸ் பண்ணிடுவாங்க. எல்லாருமே பிரில்லியன்ட் ஸ்டூடன்ட்ஸ்தானே? பாஸ் பண்றது பெரிய விஷயமில்லை. ஸோ, அடுத்த ஸ்டெப்? அதுதான் அங்க வர்ற எல்லாருடைய குறிக்கோளும்!

"கோர்ஸ் கம்ப்ளீட் பண்ணினா வேலை கிடைச்சுடும். ஆனா இன்னும் கொஞ்சம் பெரிய லெவல்ல - ரிஸர்ச் கிரவுண்ட்ல ஒர்க் பண்ண ஆசைப்பட்டேன். அதுக்கு 'பேரல்லல் ஸ்டடி' அவசியம். அதாவது, இப்ப நான் கம்ப்யூட்டர் ஸ்டூடன்ட்னா, இந்தத் துறைல உலக அளவுல என்னென்ன வளர்ச்சி நடந்துட்டிருக்குன்னு கவனிக்கணும். டெக்ஸ்ட் புக் தாண்டின நாலெட்ஜ் வேணும். அதுக்கு நிறையப் படிக்கணும். நான் அதைத்தான் செஞ்சேன்" என்கிற ஸ்ரீராம், ஐ.ஐ.டி. நுழைவுத் தேர்வுக்காகத் தாம் +2 படித்துக் கொண்டிருந்தபோதே (வித்யா மந்திர்) நள்ளிரவு பன்னிரண்டு, ஒரு மணி வரை கண் விழித்துப்

படிப்பாராம்.

"ஆனால், இங்க சேர்ந்த பிறகு அத்தனை சிரமப்படலை. பாடங்களை பாக்கி வைக்காமல் அன்றன்று படித்து விட்டாலே போதும். நிறைய நேரம் கிடைக்கும். அந்த நேரத்தில் இந்த பேரலல் ஸ்டடியில் கவனம் செலுத்தலாம்."

கம்ப்யூட்டர் துறையில் ஆராய்ச்சி. ஸ்டான்ஃபோர்டில் சீட்... பெரிய விஷயம்தான். ஆனால் ஐயா,



• பெற்றோருடன் ஸ்ரீராம்

இந்தியாவில் உங்கள் ஆராய்ச்சிப் படிப்பைத் தொடர முடியாதா?

ரொம்பக் கஷ்டம் என்கிறார் ஸ்ரீராம்.

"ஆராய்ச்சிப் படிப்பு இங்கே அவ்வளவா வளரலை. சென்னையில் ஸ்கோப் மிகவும் குறைவு. வேணுமானால் பெங்களூர் IISல் (Indian Institute of Science) தொடரலாம். ஆனால் அதற்கான முழு வசதிகளும் சாத்தியமும் நம் நாட்டில் இல்லை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேணும்!"

"என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? அப்துல் கலாம் எல்லாம் முழுக்க முழுக்க சுதேசித் தயாரிப்பு அல்லவா?" என்று கேட்டால்,

"அது வாஸ்தவம்தான். அவர் திட்டமிடும் அதிகாரி - விஞ்ஞானியாக இருப்பவர். ஆனால் செயல்படுத்தும் இஞ்சினியர்கள் யாராவது யு. எஸ். போகாதவர்கள் என்று அடையாளம் காட்டுங்கள் பார்க்கலாம்?" என்று கேட்கிறார்.

விஞ்ஞானத் துறையில் ஆராய்ச்சிக்கு நம் அரசு மேலும் மேலும் வசதி வாய்ப்புகளை உருவாக்கித் தந்தால் நம் அறிவுச் செல்வம் ஏன் அயல்நாடு போகப் போகிறது என்று கேட்கிறார் ஸ்ரீராம்.

ஐஐடி ஃபர்ஸ்ட் என்றால் வெறும் புத்தகப் புழு என்று அர்த்தமல்ல. ஸ்ரீராமுக்குக் கர்நாடக - ஹிந்துஸ்தானி இசைகளில் அபாரமான மோகம் இருக்கிறது. சுந்தரம் பைனான்ஸின் செயல் இயக்குநர்களுள் ஒருவராக இருக்கும் இவரது அப்பா ராகவன் ஒரு மிருதங்கக் கலைஞர் என்பதால் ஸ்ரீராமுக்கும் இயற்கையாக மிருதங்க ஆர்வம் இருந்திருக்கிறது. பாலக்காடு ரகுவிடம் பயின்று சில கச்சேரிகளுக்குக் கூட வாசித்திருக்கிறார். பிறகு படிப்பு முக்கியமாகிவிடவே மேடை ஆர்வத்தைக் கட்டிப் போட்டிருக்கிறார்.

டீவியில் நகைச்சுவை நேரங்களை ரசிப்பது, ஆங்கில நாவல்கள் என்று சராசரி இளைஞர்களின் ஆர்வங்கள்தான் இவருக்கும். ஆனாலும் இவர் ஒரு சராசரி அல்ல!

"திட்டமிடணும். நாம் என்னவா ஆக விரும்பறோம்? எதுல நமக்கு ஆர்வம்? எது நம்மை உயர்த்தும்னு தெளிவா தெரிஞ்சுக்கணும். ஒரு துறையைத் தேர்ந்தெடுக்கும் முன்னால் நாலு பேர்கிட்ட அட்வைஸ் கேக்கறதுல தப்பில்லை. ஆனா முடிவெடுக்கறது நாமாகத்தான் இருக்கணும். ஒரு ஃபீல்டுல நுழைஞ்சாச்சுன்னா, அதனோட அன்றன்றைய வளர்ச்சி என்னன்னு தெரிஞ்சிக்கற ஆர்வம் இருக்கணும். பரபரப்பு அடைய வேணாம். ஆனா தெளிவா, தீர்மானமா இருக்கணும். என்னைப் பொறுத்தவரைக்கும் இதுதான் சக்ஸஸ் ஃபார்முலா!"

பேட்டி : **கிருஷ்ணன்**

படங்கள் : **ஸ்ரீஹரி**

மூன்றாவது குழந்தையா? மூச்!


பி.டி.ஐ. செய்தி நிறுவனத்தில் டெல்லி நிருபராய் இருக்கும் சுதாமன், சீனாவின் நிருபராக பெய்ஜிங்கில் சில வருடங்கள் பணிபுரிந்தவர். சமீபத்தில் சென்னை வந்த அவர் சொன்ன சீனா செய்திகள்:

- சீனாவின் மக்கள் தொகை 120 கோடி. ஆனாலும் வறுமைக் கோட்டுக்குக் கீழே வசிப்பவர்கள் சுமார் பத்து சதவீதம்தான்! 1949ல் இது 50% ஆக இருந்தது என்பது கவனிக்கத்தக்கது. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்ததற்கு, எப்படியும் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் வழங்கிவிட வேண்டும் என்ற அரசாங்கத்தின் முனைப்புத்தான் முக்கியக் காரணம்.
- உணவுக்காக வேலைத் திட்டம் - இதுவே முன்னேற்றத்தின் முதற்படி. நம் ஊரில் செயல்படுத்தப்படும் ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் போன்றதுதான். ஆனால் என்ன வித்தியாசம்? அங்கே உழைப்பவர்களுக்கு, உணவு வழங்கப்பட்டாலும், உழைப்பில் உருவானவை எல்லாம் நிரந்தர சொத்துக்கள். நம் ஊர் போல, கோடையில் ரோடு போட்டு, மழைக்காலத்தில் அடித்துக் கொண்டு போய்விட, மறுபடி ரோடு போடுகிற பிசினெஸ் அங்கே இல்லை.
- அரசாங்கம், நாட்டு மக்கள் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கியிருக்கிறது.
- ஒரு குடும்பம்; ஒரு குழந்தை. இதுவே அரசின் கொள்கை. முதல் குழந்தைக்கு மட்டுமே கல்வி, மருத்துவம் இன்ன பிற விஷயங்களில் சலுகை. இரண்டாவது பெற்றுக் கொண்டால் சலுகை ஏதும் கிடையாது. எனவே மூன்றாவது குழந்தையா? மூச்!
- சீனாவில் சட்டப்படி திருமணம் செய்துகொள்ள நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச வயது ஆண்களுக்கு 25. பெண்களுக்கு 23.
- அங்கேயும் ஆண் குழந்தைக்கு ஆசைப்படும் பெற்றோர் அதிகம். முதல் குழந்தை பெண்ணாய்ப் பிறந்து விட, ஆண் குழந்தைக்கு ஆசைப்பட்டு, இரண்டாவது பெற்றுக் கொள்ள, ஆனால் அதுவும் பெண்ணாகிப் போய்த் திண்டாடுபவர்களும் உண்டு.
- 'சைனா டெய்லி'தான் ஒரே ஆங்கில நாளிதழ். நூற்றுக்கும் அதிகமான சீன மொழி தினசரிகள் உண்டு.



● கல்வி நிலையங்களில் எந்தப் பிரிவினருக்கும் இட ஒதுக்கீடு இல்லை. பட்டப் படிப்புக்கு ஆண்டுக்கு சுமார் ஆறாயிரம் ரூபாய் முதல் இருபதாயிரம் வரை செலவாகும். வசதி இல்லையெனில், அரசாங்கமே மாணவர்களுக்குப் படிப்புச் செலவுக்குக் கடனுதவி செய்யும். படிப்பை முடித்துவிட்டு, வேலைக்குப் போனவுடன், மரியாதையாய் வாங்கின கடனைத் திருப்பிச் செலுத்தி விட வேண்டும்!





• சுதாமன்

● அயல் நாட்டு மாணவர்களுக்கென்று ஸ்பெஷலாய் தொழிற் கல்லூரிகள் நடத்தத் தனியாருக்கு அனுமதி உண்டு. அவர்கள் கேபிடேஷன் கட்டணம் வாங்கிக் கொள்ளலாம். ஆனால் அமெரிக்க டாலரில்தான் வாங்க வேண்டும். இப்படியும் அந்நியச் செலாவணி சம்பாதிக்கிறது சீனா!

● வங்கித் துறையை எடுத்துக் கொண்டால், நம் ஊர் ரிசர்வ் பாங்க் போல, பீபிள்ஸ் பாங்க் ஆஃப் சைனா செயல்படுகிறது. மற்றபடி, நாடு முழுக்க பாங்க் ஆஃப் சைனாவின் கிளைகள்தான் பரவியிருக்கும்.

● சீன கம்யூனிஸ்ட் கட்சிதான் பிரதான அரசியல் கட்சி. தவிர, சில உதிரிக் கட்சிகளும் உண்டு.

● சீன மக்களிடையே மிகப்பிரபலமான இந்திய நட்சத்திரம் ராஜ்கபூர்தான். இன்னமும் 'ஆவாரா' படப் பாடல்களை சீனர்கள் முணுமுணுப்பது வியப்பு.

● மக்கள் எம்மதத்தையும் பின்பற்றலாம். மத அடிப்படையில் பிரச்னைகளோ, கலவரமோ மூண்டதில்லை.

● சீனர்களில் சைவர்கள் அபூர்வம். நிறைய காய்கறிகளை உண்பார்கள். ஆனால், எல்லாவற்றிலும் துளியாவது அசைவம் கலந்திருக்கும். உணவில் அதிக அளவில் பூண்டு சேர்த்துக் கொள்வார்கள்.

● பாம்பு, தேள், குரங்கு, எலி, பூனை போன்றவையெல்லாம் வெகு விசேஷமான உணவு ஐட்டங்கள்! கொடுக்குடன் தேளைப் பொறித்து சாப்பிட்டால், செக்ஸ் உணர்வு பெருகும் என்பது சீனர்களின் நம்பிக்கை!

● வருடத்துக்கு இரண்டே நாட்கள்தான் தேசிய விடுமுறை. ஜனவரி இறுதியில் வரும் சீனப் புத்தாண்டு. அக்டோபர் முதல் தேதி வரும் 'அக்டோபர் புரட்சி தினம்'.

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**

2

ரெண்டு ஒண்ணு வெச்சிருக்கேன்!



ஒன்பது மணிக்காகக் காத்திருந்தான் சேது. இதோ கைக் கடிகாரத்தில் சின்ன முள்ளும், பெரிய முள்ளும் கண்ணாமூச்சி விளையாடுகின்றன.

பீப்! பீப்!

கைக்கடிகாரத்தின் அலாரம் தன் கடமையைச் செய்ய, முன் வராந்தா ஜன்னல் வழியே தெருவைப் பார்த்தான்.

தெருவும், அதில் நடமாடும் முகங்களும் ஓரளவு பழக்கப்பட்டு விட்டன, விடாமல் கண்காணித்ததில்.

அதோ பட்சி! தெருவின் இந்தக் கோடியிலிருந்து, அந்தக் கோடி வரை நடந்தான் அவன். ஒடிசலான உருவம், நீண்ட முகம், அதில் தாடி, மீசை வேறு. நீலக்கலர் ஜீன்ஸ் பேண்ட்டும், கட்டம் போட்ட வெளிர் மஞ்சள் கலர் சட்டையும் அணிந்திருந்தான்.

டீக்கடையில், சிகரெட் பற்ற வைத்தபடி சேது தங்கியிருக்கும் வீட்டைப் பார்த்தான்.

சேது விரைந்து சென்று வாசல் கதவைத் திறந்து மூடினான்.

பிரச்னையில்லை. உள்ளே வரலாம் என்பதற்கான சங்கேத அடையாளம் இது.

தாடிக்காரன் தெருவிலிருந்து மறைந்தான். இன்னும் சில நிமிடங்களில் சரக்கு வந்து விடும். சேது காத்திருந்தான்.

வாசல் கதவு தாழிடப்படாமல் வெறுமனே சாத்தியிருந்தது. கொல்லைப்புறக் கதவு திறந்திருந்தது. ஏதும் அவசரமென்றால், பின்புறமாய் ஓடி, தப்பிக்க இந்த ஏற்பாடு.

அரவம் ஏதுமின்றி வாசல் கதவு திறந்து மூடிக் கொண்டது.

அவனேதான். கையில் பார்சல் பெட்டி.

''மருதி'' என்றான் சேது.

''கோபீல்'' என்றான் வந்தவன்.

இருவரும் கைகுலுக்கிக் கொண்டனர், முகத்தில் ஊற்றெடுத்தப் புன்னகையுடன்.

''உள்ளே இரண்டு குண்டு இருக்கு.''

சேது வாங்கிக் கொண்டு போய் உள்



"நாளைக்கு குண்டு வெடித்ததும் அதனிடமே கேட்டுப் பார் முடிந்தால்."

இப்போது சேது சிரித்தான்.

"சக்தி எப்படிப்பட்டது?"

"மசூதியும், கோவிலும் இந்த ஊரின் வரைபடத்திலிருந்து மறைந்து விடும்."

சேது யோசனையுடன் அவனைப் பார்த்தான்.

"என்ன? ஏதும் குழப்பமா?"

"இந்த ஊரில் மூன்று மசூதிகளும், ஏழு கோவில்களும் உள்ளன."

"உன் சந்தேகத்துக்கான பதில் மாஸ்டரிம் மட்டுமே இருக்கும். மாஸ்டரின் திட்டங்களும் விசித்திரமானது. அவர் மனதும் அதை விட விசித்திரமானது."

"நீ மாஸ்டரைப் பார்த்திருக்கிறாயா நேரில்?"

உதட்டைப் பிதுக்கினான் தாடிக்காரன்.

"இந்த குண்டு வெடிப்பால் யாருக்கு லாபம்?"

"யாருக்கு லாபமோ தெரியாது. குண்டு வெடித்தால் மாஸ்டருக்கு லாபம். அவரால் நமக்கும் லாபம். அதிகமாய் கேள்வி கேட்டுக் குழம்பாதே. அதுவே ஆபத்து உனக்கு."

கிளம்பிப் போய்விட்டான் தாடிக்காரன்.

மாஸ்டருக்குப் பணம் கொட்டோ கொட்டு என்று குவிகிறது. முக்கியமாய் இதில் அரசியல் சம்பந்தப்பட்டிருக்கலாம்.

அரசியல் என்றால் உள் நாடா, வெளி நாடா? எதிர்க்கட்சிக்காரனா, ஆளுங்கட்சிக்காரனா?

எது எப்படியோ, குண்டு வெடித்தால் மதக் கலவரம் ஏற்படும். முதலமைச்சர் பாடு திண்டாட்டம்தான்.

இந்த மாநிலத்தின் தலையெழுத்தே இப்போது தன் கையில் என்ற நினைப்பில் அறையில் வைத்தான்.

"நாளை காலையில் ஒன்பது மணிக்கு ஒரு குண்டும், மதியம் இரண்டு மணிக்கு ஒரு குண்டும் வெடிக்கும்."

தாடிக்காரன் சொன்னதைக் காதில் வாங்கியபடி தலையசைத்தான்.

"பார்சல் உள்ளே காலை, மாலை என்று எழுதப்பட்டிருக்கும். காலை என்பது ஒன்பது மணிக்கு வெடிக்கும் குண்டு இருக்கும் பெட்டி. மாலை என்பது..."

சேது சைகையால் போதும் என்றான்.

"உன் பங்கு என்ன இதில்?" என்று கேட்டான் சேது.

"வெடிகுண்டின் அப்பா நான். அதாவது அதை உருவாக்கியவன்."

"அப்படியானால் அம்மா யார்?"

சேதுவின் கேள்விக்கு, பல் தெரிய சிரித்தான் தாடிக்காரன்.

கிருஷ்ணா

பூரிப்படைந்தான் சேது.

அவன் பூரிப்பே அவனுக்கு விசித்திர மாய் தெரிந்தது.

சட்டென அவனுக்குக் கண்ணம் மாவின் ஞாபகம் வந்தது. விசித்திரமான பெண்தான் அவள்.

அவள் கழுத்துச் செயின் டாலரில் தன் படத்தைப் பார்த்ததும் எப்படித் திடுக் கிட்டுப் போனான்?

"இவள் போலீஸ் உளவாளியோ?" என் றெல்லாம் விபரீத பயம் ஏற்பட்டது.

''ஏய், என் படம் உனக்கு எப்படிக் கிடைச்சது?''

தன் திகைப்பை மறைத்தபடி அதட்டிக் கேட்டான்.

"ஒத்துக்கறீங்களா, இந்தப் போட்டோ உங்களை மாதிரியே இருக்குன்னு?"

கண்ணம்மாவைப் புரியாமல் நோக்கி னான்.

"இது என் மாமன் போட்டோ. நான் பிறந்தப்பவே, நான் அவருக்குன்னும், எனக்கு அவருன்னும் முடிச்சுப் போட்டுட்டாங்க."

"இப்ப எங்கே அவர்?"

கண்ணம்மாவின் கண்கள் கலங்கி விட் டன உடனே.

"வேலை வெட்டி இல்லாத தண்டப் பயல்னு அவரை வீட்டுலே திட்டவும், ராணு வத்துல போய் சேர்ந்துட்டாரு. காஷ்மீர் பகுதியிலே இருக்கறப்ப, சண்டையிலே போயிட்டாரு. அது ஓடிப் போச்சு ரெண்டு வருஷம்."

குரல் தழுதழுக்கப் பேசியவளைத் தடுக்க முடியாமல் பார்த்தான்.

"என்ன பேசினீங்க? ஏன் இப்படி அலைய றேன்னுதானே கேட்டீங்க? ஆமா, உங்க பின்னாடி என் மனசு அலையத்தான் செய் யுது. நீங்க அப்படியே அச்சு, அசலாய் என் மாமனைப் போலவே இருக்கீங்க. உங்களை முதன் முதலா தெருவிலே பார்த்ததுமே என் மனசுக்குள்ளே இத்தனை நாளாய்த் தேங்கிக் கிடந்த துக்கம் பொங்கி வடிஞ்ச மாதிரி உணர்றேன். மனசோட ஆழத்துல பதுங்கிக் கிடந்த பாசமெல்லாம் பெருகி ஓடி வருது உங்களைப் பார்த்ததும். ஏன்னு எனக்கே தெரியலே. ஆனா ஒண்ணு மட்டும் கேட் டுக்கறேன். எந்தப் பொண்ணைப் பார்த்தும் இப்படி சுடு சொல்லை வீசாதீங்க மாமா."

"மாமாவா?"

சேது திடுக்கிட்டுப் போய் அவளைப் பார்க்க, அவள் முகத்திலும் ஒரு நொடி குழப்ப ரேகை ஓடி, தெளிந்து, அவள் முகம் வெட்கத்தில் சிவந்து, மயக்கும் நாணப் புன்ன கையை அவன் மேல் வீசி விட்டு ஓடியே போய் விட்டாள்.

இவளை ஒரேயடியாய் விரட்ட நினைத் தால், இவளென்ன இப்படி ஒரு மாமன் கதை சொல்லி ஈஷிக் கொள்ளப் பார்க்கிறாள்!

வேண்டாத பிரச்னை இது! தலையை உதறிக் கொண்டு வெளியே கிளம்பினான்.

சரக்கு வந்து சேர்ந்ததும் செய்தி சொல்ல வேண்டும் போனில்.

தெருவைக் கடந்து பஸ் ஸ்டாப்புக்கு வந்து, டவுன் பஸ் பிடித்தான். அடுத்த ஸ்டாப்பிலேயே இறங்கிக் கொண்டான். சாலையின் எதிர்ப்புறமிருந்த தனியார் தொலைபேசிக் கூண்டு கண்ணில் பட்டது. சாலையைக் கடந்து அதை நோக்கி நடந் தான்.

அவன் பயந்தது போலவே ஆகிவிட்டது. போனில் வந்த முதல் கேள்வியே அவனைத் திடுக்கிட வைத்தது.

"யார் அந்தப் பெண்? உனக்கும், அவ ளுக்கும் எப்படி திடீர் சிநேகம்?"

திட்டத்தின் இடையே ஏற்படும் எந்தக் குறுக்கீடுகளையும் மாஸ்டர் மன்னிக்க மாட்டார்.

சேது உண்மையை ஒப்பித்தான். மாஸ் டரின் காதுகளும், கண்களும் எங்கு வேண்டு மானாலும் நீளும். தன்னை யாரோ வேவு பார்ப்பது புரிந்தது. மாஸ்டரிடம் எப் போதும் உண்மையையே பேசுவதுதான் நல்லது. பேசினான்.

"அப்படியானால் அவளை அகற்றி விட வேண்டியதுதான்."

பாவம்! தன்னால் அவளுக்காகக் கொஞ் சம் இரக்கப்பட மட்டுமே முடியும்! விட்டில் பூச்சியாய் வந்து விழுந்து விட்டாள்.

''மாதா பிதா குரு யார் முதன்மையானவர்னு சொல்லு பார்ப்போம்!''

''ஆசிரியர்தான் சார். அம்மா ஒரு நேரத்துல ஒரு குழந்தையைத்தான் தூங்க வைக்கிறாங்க. ஆனா நீங்க 40 பிள்ளைகளையும் ஒரே நேரத்துல தூங்க வச்சிடறீங்களே!''

— வே. ஈஸ்வரன்



பஸ் பிடித்து நிறுத்தத்தில் இறங்கித் தன் தெருவுக்குள் நுழைந்தான்.

அதோ கண்ணம்மா! இவனைக் கண்டதும் முகமெல்லாம் மலர சிரித்தபடி தலை குனிந்து கொண்டாள்.

சட்டென ஜீப் சப்தம் கேட்டது. உறுமலாய் சீறி வரும் ஜீப்பைக் கண்டதும், சேதுவுக்கு விபரீதம் புரிந்து விட்டது.

வேகமாய் வந்த ஜீப், கண்ணம்மா அருகில் வந்து நின்றது. எங்கே அது மோதிவிடப் போகிறதோ என்று நெஞ்சில் கை வைத்தபடி ஒதுங்கி நின்றவளை, கண்ணிமைக்கும் நேரத்தில் தாக்கினான் ஜீப்பிலிருந்து இறங்கியவன்.

எல்லாமே ஒரு நிமிடத்துக்கும் குறைவான நேரத்திலேயே நடந்து முடிந்து விட்டது.

"மாமா" என்ற அலறலுடன் கண்ணம்மா கீழே சாய, புலியின் வேகத்தோடு ஓடி மறைந்து விட்டது ஜீப்.

ரத்த வெள்ளத்தில் சரிந்து விழுந்து கிடந்தவளை நோக்கித் தெருவே ஓடியது.

"பாவி, எவனோ இந்த அப்பாவிப் பொண்ணைக் கத்தியாலே குத்திட்டு ஜீப்புல ஏறி ஓடிப் போயிட்டான்யா."

தெருவே அரண்டு போனது. ஆட்டோ ஒன்றில் கண்ணம்மாவை ஏற்றிக் கொண்டு மளிகைக் கடை செட்டியார், டாக்டர் கிளினிக் நோக்கிப் போனார்.

கண்ணம்மாவின் வீட்டினருக்குச் செய்தி சொல்ல ஓர் ஆள் ஓடினான்.

திரைப்படம் பார்ப்பது போல உணர்ச்சியற்ற இதயத்துடன் நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தபடி நின்ற சேது, விரைவாய் நடந்து தன் வீட்டுக்குள் நுழைந்து மறைந்து கொண்டான்.

'அவளை அகற்றி விட வேண்டும்!'

'மாமா!'

போனில் கேட்ட மாஸ்டரின் குரலுக்கும், மாமா என்றழைத்தபடி துடிதுடித்து வீழ்ந்த கண்ணம்மாவின் குரலுக்கும்தான் எத்தனை வித்தியாசம்.


அது உயிரைப் பறிக்கும் அரக்கக் குரல். இது உயிரை இறைஞ்சும் அபயக் குரல்.

மாமா!

உயிர் போகும் நேரத்தில் கூட எத்தனை நம்பிக்கையுடன் அவன் தன்னை அழைத்தாள்?

அவள் அப்படி அழைத்தது தன்னைத் தான் என்பது வேறு யாருக்கும் தெரியுமா? தெரிய வாய்ப்பில்லை.

மாமா!



"தலைவர், பேசும்போது 'நீங்கள் சும்மா இருந்தது போதும். செயல்பட வேண்டிய நேரம் இதோ'ன்னு சொல்லி வகையா மாட்டிக் கிட்டார்."

"ஏன், என்ன ஆச்சு?"

"கூட்டத்தில் இருந்தவங்க எல்லாம் எழுந்து வீட்டுக்குப் போயிட்டாங்க!"

– வெ. ராஜாராமன்

காதுக்குள் கேட்ட ஒலியில் திடுக்கிட்டான். எத்தனை பரிவாய் கைகளின் சிராய்ப்புக்கு மருந்து வாங்கி வந்தாள்?

மாமா!

கண்ணை மூடித் தூங்க முயன்று, தோற்று, பிடிவாதமாய் முயற்சித்து, நினைவுகள் வழுக்கிக் கொண்டு செல்ல, வாசலில் சப்தம் கேட்டது.

"ஐயா!"

"என்ன வேணும்?" என்றான் போலிக் கடுமையாய்.

"நான் கண்ணம்மாவோட பாட்டிங்க. யார் செஞ்ச புண்ணியமோ பொண்ணு பொழைச்சுக்கிச்சு. உங்களைப் பார்க்கணுமாம். ஆசைப்படுது."

சேது கோபமாய் வெடித்தான்.

"நான் எதுக்கு? எதுக்கு என்னைப் பார்க்கணும் உன் பேத்தி? வர முடியாதுன்னு சொல்லு போ."

கிழவி அசையாமல் நின்றாள்.

"எமன் வாய்க்குப் போன உசிரு திரும்பி வந்திருக்கு. வாங்க தம்பி."

கிழவியின் குரல் பெரிதாய் ஒலிக்க, அக்கம் பக்கத்திலிருந்து தலைகள் எட்டிப் பார்த்தன. வேறு வழியில்லை.

"சரி கொஞ்ச நேரம் கழிச்சு வரேன் போ."

அவன் மனசுக்குள்ளும் சின்னதாய் ஒரு பூ. கண்ணம்மாவைப் போய்ப் பார்க்கும் ஆவல் எழுந்தது.

மனசுக்கும், புத்திக்கும் நடக்கும் யுத்தத்தில் எப்போதும் போல் மனசே ஜெயித்தது. ஆனால் அதுவே அவன் உயிருக்குத் தீங்காய் முடியப் போவது தெரியாமல் கிளம்பினான்.

(தொடரும்)

பரிசு வரிசையை பாரீர், பாரீர்.

ஜெயிக்க வாங்க!



1 ஹோண்டா சிட்டி கார்

11 கார்

(மாருதி 800 கார் -8, மாருதி வேன் -3)

1 கிலோ தங்கம்

(ஒருவருக்கு)

20 கிலோ வெள்ளி

(200 கிராம் வீதம் 100 பேருக்கு)

சிங்கப்பூர் - பாங்காக் டூர்

7 நாள் டூர் (ஒரு ஜோடிக்கு)

விலை ரூ. 65

- ஸ்ரீராம் டிரஸ்ட் மற்றும் அமுதசுரபி வழங்கும் - ஒரு ஹோண்டா சிட்டி கார்
- சென்னை சரவணா ஸ்டோர்ஸ் வழங்கும் - ஒரு கிலோ தங்கம்
- கல்யாணி கவரிங் வழங்கும் - ஒரு மாருதி கார்
- வி. ஜி. பி. வழங்கும் - ஒரு மாருதி கார்
- சென்னை ஜே. பி. வி. எஸ்டேட் வழங்கும் - ஒரு மாருதி கார்
- தீபம் கார் லேப் வழங்கும் - ஒரு மாருதி கார்
- வேலூர் டார்லிங் எலெக்ட்ரானிக்ஸ் வழங்கும் - ஒரு மாருதி வேன்
- ஏ. வி. எம். பவுன் தேங்காய் எண்ணெய் வழங்கும் - ஒரு மாருதி கார்
- காஞ்சிபுரம் பி. எம். சில்க்ஸ் வழங்கும் - ஒரு மாருதி வேன்
- வெங்காளியம்மன் ரியல் எஸ்டேட்சின் பேஜ்ஜோ வழங்கும் - ஒரு மாருதி கார்
- லயன் டேட்ஸ் வழங்கும் - ஒரு மாருதி கார்
- டெல்டாகிராம் வழங்கும் - ஒரு மாருதி வேன்
- மதுரை தங்கமயில் ஜுவெல்லர்ஸ் வழங்கும் - மாருதி கார்
- சென்னை எஸ். எம். சில்க்ஸ் வழங்கும் - பட்டு சேலைகள் (300 பேருக்கு)
- டைமெக்ஸ் வழங்கும் - கைக்கடிகாரம் (150 ஆண்களுக்கு + 150 பெண்களுக்கு)
- தூத்துக்குடி சத்யா ஏஜென்சீஸ் வழங்கும் - சிங்கப்பூர் - பாங்காக் 7 நாள் டூர் (ஒரு ஜோடிக்கு)
- திருச்சி ராசி பாலிக்சர்ஸ் வழங்கும் - ரூ. 1 லட்சத்திற்கு 'எல்லாம் நிறைந்த இல்லம்'
- வீடியோகான் வழங்கும் - 10 கலர் டி. வி., 10 வாஷிங்மெஷின், 10 ரெப்ரிஜிரேட்டர்
- ஸ்டாண்டர்ட் எலெக்ட்ரிக் கம்பெனி வழங்கும் - சுமீத் மிக்ஸி (101 பேருக்கு)
- சென்னை பிரதீப் & கோ வழங்கும் - ஜெயண்டு மிக்ஸி (50 பேருக்கு)
- சென்னை நாதெள்ள சம்பத்து செட்டி ஜுவெல்லர்ஸ் வழங்கும் - 200 கிராம் வெள்ளி குத்துவிளக்கு (100 பேருக்கு)
- உடுமலை ஜி. வி. ஜி. பேப்பர் மில்ஸ் வழங்கும் - ஒரு பவுன் தங்க காசு (25 பேருக்கு)
- சாஸ்தா கிரைண்டர்ஸ் வழங்கும் - டேபிள் டாப் வெட்கிரைண்டர் (30 பேருக்கு)
- பிரஸ்டிஜ் வழங்கும் - பிரஸ்டிஜ் நான் ஸ்டிக் பாத்திரங்கள் (60 பேருக்கு)
- தாம்சன் வழங்கும் - தாம்சன் மியூசிக் சிஸ்டம் (9 பேருக்கு), தாம்சன் ஸ்டீரியோ (30 பேருக்கு)
- வசந்த் & கோ வழங்கும் - வசந்த் மிக்ஸி (100 பேருக்கு), வசந்த் பேன் (100 பேருக்கு)
- நெல்லை டி. ஆர். பொன்னையா நாடார் வழங்கும் - மிக்ஸி (60 பேருக்கு)
- அடையார் லட்சுமி மோட்டார்ஸ் வழங்கும் - போராஜாஸ் மொபட் (10 பேருக்கு)
- திருவண்ணாமலை சாயார் மோட்டார்ஸ் வழங்கும் - சன்னி ஜிப் (8 பேருக்கு)
- கென்ஸ்டார் வழங்கும் - ஜூஸ் மேக்கர் (50 பேருக்கு), அவன்டாஸ்ட் (50 பேருக்கு), மினிகிரைண்டர் (12 பேருக்கு)
- சென்னை ராஜஸ்ரீ ஹோம் எக்யூப்மென்ட் வழங்கும் - ரைஸ் குக்கர் (75 பேருக்கு)
- சென்னை கே. என். இண்டஸ்ட்ரீஸ் வழங்கும் - 30 வாட்டர் ஹீட்டர்


இது தவிர, இன்னும் பரிசுகள் பல லட்சம்! பரவலாக கிடைக்க எளிய திட்டம்!

தினமலர்

தீபாவளி மலர் '98

◆ வருடம் முழுதும் படிக்கத்தக்க 3 புத்தகம், ◆ 8 கலர் படம், ◆ தாமரை இலவச பொருட்கள்

தீபாவளி மலரை... அருகிலுள்ள புத்தக கடையில் இன்றே முன்பதிவு செய்யுங்கள்





1998 ஆகஸ்ட் 23
வெகுதான்ய ஆவணி 7
மலர் : 57
இதழ் : 4

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ஜெயலலிதாவின் மிரட்டல்!


காவிரி நடுவர் மன்றம் 1991-இல் அளித்த இடைக்காலத் தீர்ப்பை அமுலுக்குக் கொண்டுவர ஏழு ஆண்டுகள் ஆகியிருக்கின்றன!

காவிரி கண்காணிப்புக் குழுவுக்கு இந்த இடைக்காலத் தீர்ப்பு வழங்கிய அதிகாரங்கள் கர்நாடக மாநிலத்துக்கு ஏற்புடையனவாக இல்லை. 205 டி.எம்.ஸி. தண்ணீர் தமிழகத்துக்குத் தந்தே ஆகவேண்டும்; அவ்வாறு தராவிட்டால், கண்காணிப்புக் குழு கர்நாடக மாநிலத்தில் பலவந்தமாகச் செயல்பட்டு, தண்ணீரைத் திறந்து விடச் செய்யலாம் என்கிற அளவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இடைக்காலத் தீர்ப்பின் இப் பகுதியைத்தான் கர்நாடகா அரசு பலமாக எதிர்த்தது. இதில் வியப்பில்லை.

ஆட்சேபணைக்குரிய இதுபோன்ற பகுதிகளை மாற்றி, காவிரி நதி ஆணையம் ஒன்றை நிறுவி, அதற்கு இந்தியப் பிரதமரைத் தலைவராக்க, சம்பந்தப்பட்ட நான்கு மாநிலங்களும் ஒப்புக் கொண்டுள்ளன. உச்சநீதிமன்றத்தின் தலையீட்டினாலும் அது நிர்ணயித்த ஆகஸ்ட் 12 கெடுவினாலும்தான் இக்காரியம் நிகழ்ந்திருக்கிறது.

காவிரி பிரச்னைக்குப் பிறந்துள்ள 'தீர்வை' பி.ஜே.பி. ஒரு வெற்றியாகவே கொண்டாடுகிறது; தமிழக முதல்வர் அதை நன்றியுடன் வரவேற்றிருக்கிறார்; எதிர்பார்த்தது போலவே ஜெயலலிதா புதிய காவிரி பகிர்வுத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்துச் சாடியிருக்கிறார்.

'ஜெயின் கமிஷன் இறுதி அறிக்கையினால் இமேஜ் பாதிக்கப்பட்டதுடன் குற்றவாளிக் கூண்டில் நிற்கும் நிலையைச் சந்தித்த கருணாநிதி, தமிழகத்தின் நலனை டெல்லியில்




விலை பேசி, தமது பதவியைக் காப்பாற்றிக் கொண்டு விட்டார்' என்பது ஜெயலலிதாவின் குற்றச்சாட்டு. தமிழ்நாட்டைக் 'கைவிட்ட' கருணாநிதியின் 'துரோகத்தை'ப் பறைசாற்றுகிறார் ஜெ. இந்தக் காரணத்தினால் 'பி.ஜே.பிக்கு ஆதரவை விலக்கிக் கொள்ளவும் தயங்க மாட்டோம்' என்ற அவர் மிரட்டலும் பலமாக எழுந்துள்ளது.

நடுவர் மன்றம் நிர்ணயித்த 205 டி.எம்.சி. நீர், பருவ மழை பொய்க்காத வரை தமிழகத்துக்கு உத்தரவாதமாகக் கிடைக்கும். ஆனால், பருவ மழை தவறும் ஆண்டுகளில் பிரதமர் தலைமையிலான ஆணையம் எப்படிச் செயல்பட்டு, என்ன முடிவு எடுக்கும் என்று சொல்லுவதற்கில்லை. தமிழகத்துக்குப் போதுமான அளவு தண்ணீர் வழங்கப்படலாம் அல்லது குறைத்தும் விடப்படலாம். ஆனால், ஜெயலலிதாவின் வாதம் இந்த அடிப்படையில் எழுவதற்குப் பதிலாக அரசியல் நோக்கில்தான் எழுகிறது.

நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அப்படியே அமுல்படுத்தியிருந்தால் என்ன ஆகியிருக்கும்...? இதற்கென்றே காத்திருந்தது போல் பிரச்னையை அரசியலாக்கி, உள்ளூர் தமிழர்களை 'உண்டு – இல்லை' என்று பண்ணிவிட கர்நாடகத்தில் வன்முறைக் கூட்டம் காத்திருக்கிறது. லட்சக்கணக்கான தமிழர்களின் உயிர், உடைமைக்கும் வேலை வாய்ப்புக்கும் பெரும் கேடு உண்டாகும்.

எவ்வகையில் அணுகித் தீர்க்கப்பட்டிருந்தாலும் காவிரிப் பிரச்னையானது ஏதேனும் ஒரு தரப்புக்கு அதிருப்தியையும் ஏமாற்றத்தையுமே அளித்திருக்கும். தற்போது கண்டுள்ள தீர்வு இருதரப்புக்கும் அதிருப்தியைக் குறைந்தபட்சமாக ஆக்கியிருக்கிறது என்று சொல்லலாம்.

எனவே, எதிர்க்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக இந்தத் திட்டத்தை ஜெயலலிதா எதிர்ப்பதென்பது அவருக்கு கௌரவத்தைச் சேர்க்கப் போவதில்லை, குறைக்கவே செய்யும். மேலும், மத்திய அரசின் அமைச்சரவையில் அ.தி.மு.க. அங்கம் வகிக்கும் நிலையில் பிரதமரின் முடிவை எதிர்ப்பதென்பது முரண்பாடான நிலை. தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகளில் அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. காவிரி தொடர்பான



பேச்சு வார்த்தைகள் குறித்துத் தமக்குத் தகவல் இல்லை என்றோ, சம்பந்தம் கிடையாது என்றோ விலகிக் கொள்வது அறியாமையையே உணர்த்தும்.

ஆட்சியில் அங்கம் வகிக்காமல் வெளியிலிருந்து ஆதரவு தருகிற நிலைக்கு அ.தி.மு.க. இறங்குமேயானால், வாஜ்பேயி அரசையும் அதன் முடிவுகளையும் எதிர்த்து விமர்சிக்கலாம். அந்தப் 'புரட்சிகரமான' முடிவை எடுத்து பல 'இழப்புகளுக்கு'த் தன்னை ஆட்படுத்திக் கொள்ள ஜெ. தயாரா என்பது கேள்விக்குறிதான்!

காசிக்குப் போயும் கருமம் தொலையாத கதையாக, உச்சநீதி மன்ற ஆணைக்குப் பிறகும், பிரதமரின் முயற்சிக்குப் பிறகும், நான்கு மாநில சமரசத்துக்குப் பிறகும் காவிரி நீர்ப் பகிர்வு குறித்து கேள்விக்குறிகள் நீடிக்கின்றன. பிரதமர் பதவிக்கு வருகிற அனைவருமே இப்பிரச்னையை நடுநிலையோடு அணுகுவார்களா...? தமிழகம் அல்லது கர்நாடகத்தைச் சேர்ந்த பிரதமர் காவிரி நதி நீர் ஆணையத்தின் தலைவராகும் போது என்னாகும்?... போன்ற கேள்விகள் அச்சுறுத்தவே செய்கின்றன.

இப்போதைய தீர்வு தாற்காலிகமானதுதான். நிரந்தரத் தீர்வு, தமிழக விவசாயிகள் காவிரியை மட்டுமே நம்பி விவசாயத்தில் ஈடுபடுவதைப் படிப்படியாக மாற்றிக் கொள்வதுதான். நதிகள் இணைப்புத் திட்டம் என்பது வெறும் கனவல்ல. இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் கைவரக் கூடிய காரியம் அது. இஸ்ரேல் முதலான நாடுகளிலிருந்து, பாலைவனங்களைச் சோலை வனங்களாக்கிய நவீன விவசாயத் தொழில்நுட்ப அறிவைப் பெற்று, அதை நமது சூழ்நிலைக்கேற்ப திருத்தியமைத்துக் கொள்ள முயற்சிகள் செய்யலாம்.

இவையெல்லாம் நடைபெற வேண்டுமானால் நிலைத்த நல்லாட்சி அவசியம். சந்தர்ப்பவாதக் கூட்டணியும் மிரட்டல் அரசியலும் நிலவும் சூழ்நிலை, வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் உதவ முடியாது. காவிரி விஷயத்தைக் காரணமாக்கி, ஜெயலலிதா மத்திய அரசுக்குத் தமது ஆதரவை விலக்கிக் கொள்வதனால் புதிய பிரச்னைகள்தான் முளைக்குமேயொழிய காவிரி பிரச்னை சர்வ நிச்சயமாகத் தீராது! ◎

ஆடம் டீசிங் செய்தால் சிறைவாசம்!

"அமைச்சருக்கு அழகு, வரும் பொருள் சுருட்டல்" என்று பழமொழியே மாறி விட்ட காலம் இது. ஆனால், நீங்கள் அமைச்சரானால் என்ன செய்வீர்கள் என்று மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவர்களிடம் கேட்டபோது கிடைத்த பதில்களோ... வேண்டாம்! படியுங்கள்!



1.பி.சங்கர் - பி.எஸ்ஸி இரசாயனம்

முதலில் எனக்கு ஒதுக்கப்பட்டுள்ள துறை பற்றிய முழு விவரங்களையும் அறிந்து கொள்ள முற்படுவேன். ஏனென்றால் இன்று நம் நாட்டில் பல அமைச்சர்களுக்குத் தத்தம் துறைகளைப் பற்றிய அறிவு போதுமான அளவு இல்லை. அதனால்தான் வளர்ச்சி இல்லாமல் பின்னடைவு ஏற்படுகிறது.

2.வி.சதீஷ் பிரபு - பி.ஏ. பொருளாதாரம்

அமைச்சராயாச்சு! அடுத்து என்ன...? முதல்வரைக் கவிழ்த்துட்டு நாம முதல் அமைச்சராய் ஆகும் முயற்சியை ஆரம்பிக்க வேண்டியது தான்!

3. ஏ. செல்வகுமாரி - எம்.ஏ தமிழ்

நம் நாட்டில் ஊழலை முழுமையாக ஒழிப்பதென்பது ஊசி முனையில் ஒட்டகங்களை நுழைக்க முயலும் செயல் தான். எனினும் என் கீழ் உள்ள துறையிலாவது அதை இல்லாமல் செய்ய முயல்வேன்.

4. ஏ. மலர்விழி - எம்.ஏ. தமிழ்

கிம்பளம், மாமூல் போன்றவையெல்லாம் வாங்க மாட்டேன். ஆனால் சம்பளத்தை முழுமையாக வாங்கிக் கொள்வேன். ஒரு ரூபாய் சம்பளம் என்ற 'ரீல்' சமாசாரமெல்லாம் நமக்கு ஆகாது.


5. V. ரூபன் பி.எஸ்ஸி, இரசாயனம்

(சற்று ஆவேசமாய்...) வீரப்பன்களைச் சுட்டு வீழ்த்துவேன். மசூதி இடிப்பவர்களை சிறையில் அடைப்பேன். 'குண்டு' பாஷாக்களைக் கொன்று குவிப்பேன். பூலான் தேவிகளை நாடு கடத்துவேன். உடன்பிறவா சகோதரிகளை நீதிமன்றங்களிலேயே குடியமர்த்துவேன். லல்லுக்களை மாடு மேய்க்க அனுப்புவேன்.(!!!!)

6. ஆர். கார்த்திகேயன், பி.எஸ்ஸி நுண்ணுயிரியல் இரண்டாமாண்டு

ஆடம் டீஸிங்கில் ஈடுபடும் பெண்களுக்கும் ஓராண்டு சிறைவாச சட்-

8



9



10



டம்! அரை குறை ஆடை யணியும் பெண்களுக்கு 'எவ்வளவு குறையுதோ, அவ்வளவு அபராதம்'!

7. எஸ். ஷீலா, எம்.ஏ தமிழ்

காவல் துறை ஒழுங்காக இருந்தாலே நாட்டில் பெரும்பாலான பிரச்னைகள் சால்வ் ஆயிடும். தீவிரவாதம், லஞ்ச, ஊழல், கலவரம்... இப்படி எல்லாமே போலீஸாரால் தவிர்க்கப்பட வேண்டிய பிரச்னைகள்தான். எனவே போலீஸைக் களையெடுத்து, அவர்களுக்கு நல்ல சம்பளமும், சுதந்தரமும் அளிப்பேன். தவறு செய்தால் மரண தண்டனை அளவுக்குப் பெரிய தண்டனை என்று சட்டம் போடுவேன். போலீஸ் திருந்தும்; நாடு நலம் பெறும். எனவே வந்தால், ஹோம் மினிஸ்டர்தான்!

8. ஸ்டான்லி ஜெபராஜ் பி.எஸ்ஸி. இரண்டாமாண்டு

மதுக்கடைகளை உடனடியாக மூடுவேன்.

9. வி. கிருஷ்ணமூர்த்தி - பி.எஸ்ஸி விலங்கியல்

காய்ச்சல், தலைவலி, சளின்னு சொல்லி என் பதவியை ராஜினாமா பண்ண மாட்டேன்னு உறுதி சொல்றேன். ஏன்னா எம் பேர் கருணாமூர்த்தி, ஆர்.கே. குமார் அல்ல.

10. எஸ். செந்தில் குமார், எம்.ஏ. தமிழ்

எதுக்கு ஸார் அமைச்சர் பதவியெல்லாம்? எனக்கே தெரியாம என் பதவியை ராஜினாமா பண்ண வேண்டியிருக்கும். இது தேவையா?

12



11



11. ஜெ. நிர்மலாதேவி எம்.ஏ. தமிழ்

இன்னா கண்ணு நீ...! தம்மாத்துண்டு மினிஸ்டர் போஸ்ட்ட வச்சுகினு இன்னாத்த பெருசா கிச்சிடப் போறேன்...?! ஏதோ நிலக்கரி, கலர் டி.வி, சுடு காட்டுக் கூரைன்னு நம்மால ஆனதை 'பாக்கெட்' போட்டு உஷார் பண்ணப் போறேன். இது புச்சா இன்னா? வயக்கமா நடந்துகினு கிற மேட்டர் தானே?

14



13



12. கே. திருமூர்த்தி, பி.எஸ்ஸி இரசாயனம்

ஈவ் டீஸிங் நடைபெற வாய்ப்பு இல்லாமல் ஆண், பெண் கல்லூரி நேரங்களை மாற்றியமைப்பேன். அந்தக் கல்லூரிகளுக்கென்று தனிப் பேருந்துகளையும் ஏற்பாடு செய்து விடுவேன்!

13. எம். கஸ்தூரி பாய் - எம்.ஏ. தமிழ்

அம்மாடி.... அமைச்சர்னதுமே நீதிமன்றக் கூண்டும், ஜெயில் கம்பிக் கதவும்தான் ஞாபகம் வருது. வேணவே வேண்டாம்ப்பா!

14. ச.கவிதா - எம்.ஏ. தமிழ்

நிச்சயமாய் வாயில்லா ஜீவன்களின் தீவனத்திலோ, மனிதன் சாம்பலாய் அடங்கும் சுடுகாட்டுக் கூரையிலோ ஊழல் செய்ய மாட்டேன். செய்து வைக்கும் இலவசத் திருமணங்களில் ஏற்கனவே திருமணமானவர்கள் இருந்தால் அவர்களுக்கு முறைப்படி விவாகரத்து வாங்கித் தந்து, அதன் பின்னர்தான் மறுமணம் செய்விப்பேன்!

15.எம். அருள்மங்கை - எம்.ஏ தமிழ்

அமைச்சர்களுக்குத் தரப்படும் இந்த வரவேற்பு மற்றும்

15



வழியனுப்பு வைபவங்கள் பெரிய எரிச்சல் தருது ஸார். நான் அமைச்சரானால் அதை முதல்ல ஒழிப்பேன்; அட்லீஸ்ட் நான் தவிர்ப்பேன்.

16. ஆர். கண்ணன், பி.எஸ்ஸி இரசாயனம்

அணு சக்தியை ஆக்கபூர்வமான பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்துவேன்.

17. கு. குறிஞ்சி செல்வன், பி.எஸ்ஸி இரசாயனம்

சமூகத்தில் ஆண், பெண் சம உரிமையை நிலை நாட்டுவேன். அதாவது ஆண் உரிமையை அதிகப்படுத்தி இந்நிலையை உருவாக்குவேன். போலீஸாரின் தொப்பையைக் கட்டாயமாகக் குறைக்க வழி வகை செய்வேன்.

18. ஜே. அமல்ராஜ் - பி.ஏ சமயம், தத்துவம், சமூகம்

மதுரையில் கடற்கரை அமைப்பேன். கிருஷ்ணா நதியை மதுரை வரை வர வைப்பேன். என்ன ஸார் அப்படிப் பார்க்கிறீங்க... நம்ம அரசியல்வாதிகள்னாவே இப்படி நடக்காத விஷயங்களைக்கூட வாக்குறுதியாய்த் தர்றது சகஜம் தானே? நிறைவேத்தவா போறோம்?

16



17



18



19



19. ஜே.ரூபி கிறிஸ்டி ராணி எம்.ஏ.தமிழ்

முதலில் நாடு முழுவதும் ஒரே மொழியைக் கட்டாயமாக்குவேன். இன்று கலவரம் வந்தால்கூட நாளை இன பேதம் இல்லாமற் போகுமே? அடுத்து, கணிப்பொறி, பொறியியல், மருத்துவம் போன்றவற்றில் உயர் கல்வி முடித்தவர்கள் குறைந்தது ஐந்தாண்டுகளாவது நம் நாட்டில் பணியாற்றிவிட்டே வெளிநாடு செல்ல வேண்டும் என்று உத்தரவிடுவேன்.

20



21



22



20. ஜி.வேல் முருகன் பி.எஸ்ஸி, இரசாயனம்

முடிந்தளவு லஞ்ச, ஊழலை ஒழிக்க முயற்சி செய்வேன். முடியவில்லை என்றால் 'இந்தியன் தாத்தா'வாக மாறிவிடுவேன். அதிலும் திருத்த முடியாவிட்டால்... ம்ஹூம், நோ சான்ஸ்!

21. எம். காமேஷ் பி.எஸ்ஸி நுண்ணுயிரியல்

என்னதான் சட்டம் போட்டாலும், குழந்தைத் தொழிலாளர்களை மீட்க முடியவில்லை. நான் அமைச்சரானால் அதை நிஜமாய் சாதித்துக் காட்டுவேன்.


22. பா. ஆனந்தகுமார், பி.எஸ்ஸி விலங்கியல்

இலவசத் திட்டம் அறிவிக்காமல் போனால் நான் என்ன மினிஸ்டர்?! இதோ பிடியுங்கள்... காதலர்களுக்குப் பூங்கா, தியேட்டர்களில் இலவச அனுமதி, கூடவே ஒரு இலவச கடலைப் பாக்கெட்!

23. ப.சரவணன், எம்.ஏ தமிழ்

சாதியின் அடிப்படை

23



25



24



யில் சலுகைகள் தருவதை நிறுத்தி, பொருளாதார ரீதியில் சலுகைகள் வழங்க உத்தரவிடுவேன். இதனால் முற்பட்ட வகுப்பில் பிறந்ததால் பாதிக்கப்படும் ஏழைகள் பயன் பெறவும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருள் வசதி படைத்தவர்கள் பலன் பெறுவதைத் தவிர்க்கவும் செய்ய முடியும்.

24. ஆர்.எம். ரூஸ்வெல்ட் தனராஜ், பி.எஸ்ஸி கணிதம்

எளிதாக ஊழல் செய்யக் கூடிய துறையை முதல்வரிடம் கேட்டுப் பெறுவேன். எளிதாக ஊழல் செய்வதற்கு இல்லை ஸார். அந்தத் துறையை ஊழல் செய்ய முடியாத துறையாக மாற்றுவதே என் நோக்கம்.

25. கே. ஷீபா, எம்ஏ. ஆங்கிலம்

இந்தியக் குடி மகன்கள் - எல்லோருமே ஒரு குறுகிய காலமாவது ராணுவத்தில் இணைந்து எல்லைகளில் நிற்கச் செய்யும் சட்டமியற்றுவேன். அப்போதுதான் தேசப் பற்றும், ஒருமைப்பாட்டு உணர்வும் ஏற்படும்.


26. என். பாலசுப்ரமணியன்- பி.ஏ சமயம், தத்துவம், சமூகம்.

பொதுக் கழிப்பறைகள் மற்றும் பொது இடங்களை எப்படிப் பராமரிப்பது என்பது பற்றிய அறிவை மக்களிடம் ஏற்படுத்துவேன். அதன் பிறகும் தவறாக நடப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை தரும் சட்டம் போடுவேன்.

27



26



27. ஜெ. அழகேஷ், பி.எஸ்ஸி இரசாயனம்

மாணவர்களைச் சுரண்டும் சுயநிதிக் கல்லூரிகளை இழுத்து மூடிவிட்டுத்தான் மறு வேலை!

29



28



28. பி.சுரேஷ் கண்ணன், பி.ஏ சமயம், தத்துவம், சமூகம்

பிற நாட்டுத் தொழில் நுட்பங்களை அறிந்து வரப் போகிறேன் என்று கூறி விட்டு, மனைவியோடு ஜாலியாய் வெளிநாடு சுற்ற ஃபிளைட் பிடிப்பேன்.

29. ஆர். அறிவுடைநம்பி, பி.ஏ பொருளாதாரம்

நிச்சயமாய் அதிகாரிகளிடம் நெஞ்சுக் கறி கேட்டு ரகளை பண்ண மாட்டேன் ஸார்.

30. எம். பெரியசாமி, எம்.ஏ தமிழ்

ராஜபாளையம் அருகிலுள்ள முகவூர் என்ற என் சொந்த கிராமத்தில் கடந்த ஒரு மாதமாக இரு சமூகத்தினரிடையே ஏற்பட்டுள்ள பகை நிலவரத்தை மாற்றி சுமூக சூழலை ஏற்படுத்த முயற்சி செய்வேன். அதன் மூலம் என் ஊர் சகோதர, சகோதரிகள் இழந்திருக்கும் உணவு, உறக்கம், நிம்மதி போன்றவற்றை அவர்களுக்குத் திரும்பக் கிடைக்கச் செய்ய முடியும். ●

30



சந்திப்பு: **கிரண் நியூஸ்,**
படங்கள்: **'நேஷனல்' சுந்தர்**

வட்டமேஜை

'O' கூடப் போடமாட்டார்!



✉ பகையாளியை குரு பலம் கேட்ட கதையாய், நிலையான அரசைப் பற்றி சந்திரசேகரிடம் போய்க் கேட்கிறீர்களே! தமக்கு மட்டுமே நூற்றுக்கு நூறு மார்க் போட்டுக் கொள்ளும் முன்னாள் (சிலநாள்) பிரதமர், வாஜ்பேயிக்கு பாஸ் மார்க் என்ன, ஜீரோ மார்க் கூடப் போட மாட்டார்!

பெங்களூர் - 16, அ. சங்கரன்

✉ சரிகாவின் மரணம் - காரணம் என்ன? தலையங்கம் அறிவார்த்தமான கருத்துகளை எடுத்து இயம்பியது. மனச்சாட்சிக்கு யாராக இருந்தாலும் காது கொடுத்தே தீரணும். ஈவ் டீசிங், ராகிங் போன்றவை மண்ணோடு மண்ணாக அழிய அரசும், காவல் துறையும் ஆவன செய்யுமா! சூடான, சுவையான, சூப்பரான தலையங்கம் எழுதிய கல்கிக்கு நன்றி மற்றும் பாராட்டுகள்.

விழுப்புரம் - 2. வை. வெங்கடேசன்.

✉ 'கல்கி + பாண்ட்ஸ்' இணைந்து வழங்கிய இலவச இணைப்பை, என் வருங்கால மனைவிக்காக அப்படியே பாதுகாத்து வைத்து விட்டேன்! மிக்க நன்றிங்க!

சேலம் - 3, ப. முரளி.

✉ அமரர் கல்கி நூற்றாண்டு விழாப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற "சாதா-ரணம் அல்ல" என்ற கதை மிகவும் அருமை. இது உண்மைச் சம்பவம் என்றே நம்புகிறேன். படைத்தவருக்குப் பாராட்டுகள்!

குன்றத்தூர், ஜெய. பொன்னரசு.

✉ இந்திய கிரிக்கெட்டில் புகுந்து விளையாடும் அரசியல், கிரிக்கெட் விளையாட்டையே அடியோடு பாதிக்கக்கூடியதாக உருவாகப் போகிறது.

திருமானூர், ஏ. ஆர். மார்ட்டின்.

✉ "சம்மர் சீசன் முடிந்து 'ஜில்' (குளிர்) சீசன் ஆரம்பமாவதை சிம்பாலிக்காக உணர்த்தத்தான் அட்டையில் சிம்ரன் ஸ்டில்லை வெளியிட்டீராக்கும்.

குடந்தை, ஆர். ஷண்முகம்.

✉ முழுமையான பகுத்தறிவுவாதியாக இன்னமும் திகழ்ந்து கொண்டிருக்கும், பேராசிரியர் அன்பழகனின் மனைவி, ஒரு பழுத்த ஆன்மீகவாதியாக இருந்து வருவது ஆச்சரியத்தை அளிக்கிறது.

கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

✉ பதவி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அம்மாவின் காலடியில் தலையை வெட்டி வைப்பதாகக் கூறி ஜோக்கடித்த காளிமுத்துவின் கட்டை விரல் பற்றிய பேச்சுக்குத் தராசு தந்த பதிலடியின் மறுபெயர்தான் நெற்றியடி என்பது.

அரவக்குறிச்சிப்பட்டி, எம். அசோக்ராஜா.

✉ அருந்ததிராய் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் சத்தியமான வார்த்தை. அணுகுண்டால் பாதிக்கப்பட்ட 'ஹிரோஷிமா'வைக் கண்கூடாகப் பார்த்த பிறகும், 'அணுகுண்டு மோகம்' தேவையா? யோசிக்க வேண்டும்.

நல்லத்துக்குடி, கே. வி. சூர்யா.

✉ சிந்ரனின் நாலு வாரத் தொடரான 'மனதில் உனது ஆதிக்கம்' ஹைக்கூ போல் மனத்தில் ஒட்டிக் கொண்டது. ஆமாம்! இப்போது எனது மனத்தில் அந்தக் கதையின் ஆதிக்கமே!

பூனாம்பாளையம்,

ஆர். பி. ஜெயச்சந்திரன்.

நாலு கோடி

இந்த வருட சுதந்தர தினத்தன்று, தூர்தர்ஷன் தேசிய ஒளிபரப்பில், சுவாமி விவேகானந்தருடைய வாழ்க்கை, மற்றும் தத்துவங்களை எடுத்துக் கூறும் 'சுவாமி விவேகானந்தா' திரைப்படத்தைப் பார்த்திருப்பீர்கள். நாலு கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட அற்புதப் படம். தேசிய விருது பெற்ற 'பகவத் கீதை' படத்தின் தயாரிப்பாளரான காங்கிரஸ் எம்.பி. டி.சுப்பிராமி ரெட்டியின் தயாரிப்பில், பல விருதுகள் பெற்ற இயக்குனரான ஜி.வி. அய்யர் இயக்கிய படம் இது! பகவத் கீதை, சுவாமி வினேகானந்தர் உட்பட ஜி.வி. அய்யரின் பல்வேறு திரைப்படங்களுக்கும், ஆர்ட் டைரக்டராய்ப் பணியாற்றிய கிருஷ்ணமூர்த்தி, 'சுவாமி விவேகானந்தா' படம் பற்றிப் பல விஷயங்களைக் கூறினார்:



• கிருஷ்ணமூர்த்தி

ஏற்கெனவே, பலரும், பல சமயங்களிலும் சுவாமி விவேகானந்தரைப் பற்றி சினிமா எடுக்க முயன்று, எடுக்க முடியாமல் போயிருக்கிறார்கள். ராமகிருஷ்ணா மடம் கூட அந்த முயற்சியில் ஈடுபட்டு, ஸ்கிரிப்ட் அளவோடு நின்று போனது. ஆனால், தயாரிப்பாளர் சுப்பிராமி ரெட்டியும், ஜி.வி. அய்யரும் வெற்றி பெற்றுள்ளனர்.

தேசிய விருது பெற்ற 'பகவத் கீதை' படத்துக்கு, ஒரு பாராட்டு விழா நடந்த போது, சுப்பிராமி ரெட்டி, அடுத்து விவேகானந்தரைப் பற்றி ஒரு படம் எடுக்கப் போகிறோம் என்று அறிவித்தார். ஆனால், ஜி.வி. அய்யர், பத்து வருடங்களுக்கு முன்பாகவே, பல வருடங்கள் உழைத்து, விவேகானந்தர் படத்துக்கான ஸ்கிரிப்ட்டை உருவாக்கி வைத்துவிட்டார்.

படத்தில், சுவாமி விவேகானந்தர் கேரக்டரில் யாரை நடிக்க வைப்பது என்ற கேள்வி எழுந்தபோது, உடனடியாக அய்யருடைய நினைவுக்கு வந்தவர் சர்வதமன் பானர்ஜிதான். ஏற்கெனவே அய்யருடைய 'ஆதி சங்கராச்சார்யா' என்ற படத்தில், ஆதி சங்கரராய் நடித்து, பாராட்டுப் பெற்றவர். அடுத்து, ராமகிருஷ்ண பரமஹம்சர் பாத்திரத்தில் யாரைப் போடுவது என்று யோசித்தபோது, முதலில் நசுருதின் ஷாவை நடிக்க வைக்கலாம் என்று நினைத்தார். அவர் நடிக்க இயலாமல் போனது. மிதுன் சக்ரவர்த்தியை அணுகிய போது அவர் சம்மதித்தார். சென்னையில்தான் மேக் அப் டெஸ்ட் நடந்தது. அவர், ராமகிருஷ்ணர் போலவே தத்ரூபமாய்த் தோற்றமளிக்க, அய்யருக்கு ஒரே மகிழ்ச்சி. இந்தி சினிமா உலகின் கமர்ஷியல் ஹீரோக்களில் ஒருவரான மிதுன், ஒரு பெங்காலி என்பதால், அவர் இந்தக் கதாபாத்திரத்தில் நடிக்க மிகுந்த ஆர்வம் காட்டினார்.



• விவேகானந்தராக சர்வதமன் பானர்ஜி



• ராமகிருஷ்ணராக மிதுன் சக்ரவர்த்தி



• ஜி.வி. ஐயர்

புதுமுகங்களை நடிக்க வைப்பதை விட, பிரபலமான நட்சத்திரங்களை நடிக்க வைத்தால், மக்களைக் கவருவது எளிதாக இருக்கும் என்ற நோக்கில் பல பிரபல நட்சத்திரங்களையும் அணுகியபோது, அவர்கள் ஒப்புதல் தெரிவித்தனர். ஹேமமாலினி, ராக்கி, தனுஜா, சசிகபூர், ஷம்மி கபூர், தபஸ்ரீ ராய், மீனாட்சி சேஷாத்ரி போன்றவர்களைத் தவிர நம் ஊர் மம்முட்டியும், ஜெயபிரதா, ஷோபனா ஆகியோரும் இந்தப் படத்தில் நடித்திருக்கிறார்கள்!

சுவாமி விவேகானந்தரை, உலக சமய மாநாடு முடிந்து, இந்தியா திரும்பும் போது கோலாகலமாக வரவேற்கிற ராமனாதபுரம் ராஜாவாய் மம்முட்டி நடித்திருக்கிறார். தமிழ் சினிமா உலகைச் சேர்ந்த சிவகுமார், நாசர் ஆகியோரை நடிக்கும்படிக் கேட்டும், அவர்கள் நடிக்கவில்லை. ரஜினி காந்த்தைக் கூட நடிக்க வைக்க முயன்றோம். அவரும் பெரிய அளவில் இதில் ஆர்வம் காட்டவில்லை!

●●

ரஜினி காந்த்தைக் கூட நடிக்க வைக்க முயன்றோம். ஆனால் அவர் பெரிய அளவில் இதில் ஆர்வம் காட்டவில்லை!

●●

விவேகானந்தர் படத்தின் ஷூட்டிங், பெங்களூர்,

அதிசயம்!



• படத்தில் ஒரு காட்சி

சென்னை, உடுப்பி, மும்பை, பூனா, ஜெய்ப்பூர், பெல்காம் ஆகிய இடங்களில் நடந்தது. விவேகானந்தர் வாழ்க்கையில், தட்சிணேசுவரம் கோவில் மிக முக்கியமானது. அங்கேதான் ராமகிருஷ்ணர் சம்பந்தப்பட்டக் காட்சிகளைப் படம் பிடித்திருக்க வேண்டும். ஆனால், தட்சிணேசுவரம் கோவில் தினம் ஆயிரக் கணக்கில் பக்தர்கள் வருகை தரும் இடம். தவிர, இப்போது, ஆங்காங்கே மின்சார விளக்கு, இரும்பு கிரில் போன்றவை பொருத்தப்பட்டு விட்டதால், பழைமையான பாரம்பரிய சூழல் அங்கு இல்லை. எனவே, தட்சிணேசுவரம் கோவிலை, முழுமையாக பெங்களூரில் செட்டாகப் போட்டோம்! அங்கே இருபது நாள் படப்பிடிப்பு நடைபெற்றது.

அதே போல, கல்கத்தா நகரில், விவேகானந்தர் பிறந்து வளர்ந்த வீடு, நெரிசல் மிகுந்த நகரின் மையப் பகுதியில் உள்ளது. அங்கேயும் படப் பிடிப்பு நடத்த ஏதுவான சூழ்நிலை இல்லை. எனவே, கல்கத்தாவிலிருந்து இருபது கி.மீ. தொலைவில் உள்ள ஓர் இடத்தில், அவர் பிறந்த வீடுபோலவே தோற்றம் கொண்ட ஒரு வீட்டைக் கண்டு பிடித்து அங்கே ஷூட்டிங்கை முடித்தோம்.

தவிர, விவேகானந்தர் படித்த பள்ளிக்கூடம், கல்லூரி இங்கெல்லாம் கூட, படப்பிடிப்பு நடந்தது. சென்னைக்கு விவேகானந்தர் வந்து சென்றதைக் குறிப்பிடும் வகையில், மெரினா கடற்கரையில் அவர் நடந்து செல்வது போலக் கூட ஒரு காட்சி வருகிறது.



• ஜெயப்ரதா

அமெரிக்காவுக்குச் சென்று, அவர் சிகாகோ மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய காட்சிகளை அமெரிக்காவுக்குப் போய் எடுக்க முடியாமல் போய்விட்ட காரணத்தால், மும்பை நகரில் அந்தக் காட்சிகளைப் படமாக்கினோம்.

அன்னிய நாட்டவர்கள் பலரையும் அரங்கிலே அமரவைத்து, சர்வதமன் பானர்ஜி பேசிய காட்சியைப் படம் பிடித்தோம்.

கன்யாகுமரியில் விவேகானந்தர் பாறையில் அமர்ந்து தியானம் செய்த காட்சியை இப்போது, அங்கே படம் பிடிப்பது சாத்தியமில்லை என்பதால், உடுப்பியை ஒட்டி அமைந்துள்ள ஒரு அழகான சிறு தீவில் படம் பிடித்தோம்.

படத்தில் ஜெயப்பிரதா, மீனாட்சி சேஷாத்ரி, ஷோபனா ஆகியோருக்குப் பாடல், நடனங்கள் உண்டு. அவை அனைத்துமே கிளாசிகல் டச்சுடன் அமைந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சிகாகோவில் உரை நிகழ்த்திவிட்டு, இந்தியா திரும்பும் சுவாமி விவேகானந்தருக்கு, ராமநாதபுரம் ராஜா அளிக்கும் வரவேற்பைத் தொடர்ந்து கன்யாகுமரி விவேகானந்தர் சிலை காட்டப்படுகிறது... அத்துடன் படம் நிறைவு பெறுகிறது. ஆனால், பார்ப்பவர் மனத்தில் ஆழமாய்ப் பதிந்து விடுகிறது!

— கௌதம்ராம்

2 மினிட்ஸ் ப்ளீஸ்!



• இளையராஜாவுடன்...

இளையராஜாவோடு 'போஸ்' கொடுக்கிற இந்தச் சுடிதார் ஜோடியின் முகத்தில் தெரிவது நியாயமான பெருமிதம்! இந்த லக்ஷ்மி- சரஸ்வதி சகோதரிகள் தயாரித்துள்ள படத்துக்கு ராஜா இசையமைத்திருக்கிறார் என்றால் சும்மாவா?!

துக்கினியூண்டு படம்தான்! இரண்டே நிமிடங்களுக்கு நீடிக்கிற ஒரு வண்ண விஷுவல் கவிதை. சுதந்தரப் பொன் விழா ஆண்டில் இந்தியப் பெண்களை கௌரவிக்கும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது 'மரியாதைப் பூக்கள்' என்ற தலைப்பிலான இப் படம். (சென்ற வாரம் சன் டீவியில் பலர் பார்த்திருக்கக் கூடும்)

கல் உடைக்கும் கிராமத்து மகளிர் தொடங்கி விண்ணில் பறந்த கல்பனா சாவ்லா வரை பல தரப்பட்ட இந்தியப் பெண்களை 'லயம்' என்ற ஒரு நுணுக்கமான நூல் கொண்டு இணைக்கிறது இப்படம்.

வாழ்க்கையின் தாள கதி பிசகாத ஓட்டத்தில் பெண்களின் பங்கு பெருமிதத்துக்குரியது என்பதை உணர்த்துகிற இந்த முயற்சியின் வெற்றிக்கு முக்கியக் காரணம் இளையராஜாவின் அர்த்தமுள்ள இசை; அடுத்தக் காரணம் சாமர்த்தியமான காமெரா வேலை (பி.ஸி.ஸ்ரீராமின் சிஷ்யர் பாலு); இன்னுமொரு காரணம் கச்சிதமான படத் தொகுப்பு.

முயற்சியும் உழைப்பும் பளிச்சிடுவதால், ஓரிரு கிராமப் பெண்களின் முகத்தில் தெரியும் 'மேக் அப்'பை மன்னித்துவிடலாம்.

லக்ஷ்மி-சரஸ்வதிக்கிடையே சண்டை வராதா...?

"தடபுடலாக வரும்...!" என்கிறார் லக்ஷ்மி!

யோசனைகளை மாறி மாறிப் பரிமாறிக் கொள்ளும்போது கடுமையான வாக்குவாதங்கள், மோதல்கள் உண்டு... ஆனால் அதையெல்லாம் நான்கு சுவர்களுக்குள் வைத்துக் கொள்வோம். செட்டுக்குப் போகும்போது ஒற்றுமையான ஒரே முடிவோடுதான் போவோம்..." என்றார் சரஸ்வதி.

'அர்த்தமுள்ள உறவுகள்'- (சன் டீவியில் வந்த தொடர்) இந்த உடன்பிறந்த சகோதரிகளின் தயாரிப்பு... சகோதரிகளின் அப்பா, எஸ்வி. ரமணன். ⚫

— மலர்



• மாதுரி தீக்ஷித்தும் உண்டு!

ராஜீவ் படுகொலை :

அதிர்ச்சி தரும் புதிய சந்தேகங்கள்!

— எழுப்புகிறார் முன்னாள் டி.ஜி.பி. மோகன்தாஸ்

ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, பரபரப்பாகியிருக்கும் இந்தத் தருணத்தில், தமிழகத்தின் முன்னாள் டிஜிபி மோகன்தாஸ், ராஜீவ் படுகொலை சம்பந்தமாய் சில சந்தேகங்கள் எழுப்புகிறார்...

"இப்போது இல்லை; 91-ம் வருஷத்திலிருந்தே இந்தச் சந்தேகங்களை நான் எழுப்பி வருகிறேன்" என்கிறார் மோகன்தாஸ்.

● *பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரான யாசர் அரஃபாத், ராஜீவ் காந்தியின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள இந்தியா வந்திருந்தபோது, அப்போதைய பிரதமர் சந்திரசேகரிடம், ராஜீவ்காந்தியைப் படுகொலை செய்ய சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்று தாம் அறிய வந்ததாகவும், ராஜீவிடமே அவர் படுகொலை செய்யப்படுவதற்குப் பத்து நாட்களுக்கு முன்பு, இது குறித்துச் சொல்லி அவரை எச்சரித்ததாகவும் கூறினார். யாசர் அரஃபாத்துக்கு, ராஜீவைக் கொல்ல சதித் திட்டம் தீட்டப்பட்டது குறித்து எப்படித் தெரியும்?*

● *1991 ஜூலை மாதத்தில், ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த (வேதாரண்யம்) மிராசுதாரர் சண்முகத்தை சிறப்புப் புலனாய்வுக் குழு கைது செய்தது. அவரது வீட்டுக்கு அருகில், பூமிக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஏராளமான ஆயுதங்களையும் கைப்பற்றியது. மிராசுதாரர் சண்முகம் விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமானவர் என்பது ஊரறிந்த விஷயம். அவரைக் கைது செய்து, சி.பி.ஐ. கஸ்டடியில் வைத்திருந்தபோது, சாப்பிட்டுவிட்டுக் கை கழுவ வெளியே சென்றவர், தப்பித்து விட்டார் என்றும், தூக்குப் போட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டு விட்டார் என்றும் சி.பி.ஐ. தரப்பில் கூறப்பட்டது.*

இதுகுறித்து ஏராளமான சந்தேகங்கள் எழுகின்றன. விருந்தினர் விடுதிக்குள்ளேயே வாஷ்பேசின் இருக்கிறபோது, சண்முகம் கை கழுவ விடுதியை விட்டு வெளியே போக வேண்டிய அவசியம் என்ன? சி.பி.ஐ. யிடமிருந்து தப்பிக்கிற சண்முகம், பத்து நிமிஷம் ஓடினால், வேதாரண்யம் கடற்கரையை அடைந்து, படகு மூலம் ஸ்ரீலங்காவுக்கே சென்று விட முடியும். அவர் அப்படிச் செய்யாமல், தற்கொலை செய்து கொள்ள வேண்டிய அவசியம் என்ன? அப்படியே தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்றாலும், தப்பிப் போன அவர், ஏன் விருந்தினர் விடுதிக்கு எதிரில் உள்ள தோப்பிற்கு வந்து ஒரு மரத்தில் தூக்குப் போட்டுக் கொள்ள வேண்டும்?

நடு இரவில், அவருக்கு எங்கேயிருந்து தூக்குப் போட்டுக் கொள்ளக் கயிறு கிடைத்தது?

உயரம் குறைவான, மரக்கிளையிலிருந்து பூமிக்கு மிக அருகே கால்கள் தொங்கும்படியாய் யாரும் தூக்குப் போட்டுக் கொள்ள மாட்டார்களே! சண்முகத்தால் மட்டும் அது எப்படி சாத்தியமானது?

வழக்கமாகத் தூக்கு மாட்டிக் கொண்டு இறந்தால் முக்கியமான கழுத்து எலும்பு

உடைபட்டிருக்கும். ஆனால் சண்முகத்தின் உடல் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்களில் ஒன்றில் எலும்பு உடையாமல் இருப்பதாகவும், அடுத்ததில் உடைந்திருப்ப தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. முரண்பாடாக இல் லையா?

சட்டை, வேட்டி அணிந்து தப்பித்துப் போன சண் முகம், வெறும் லுங்கி மட்டும் அணிந்து, பிணமாய்த் தொங்கியது விசித்திரமாக இல்லையா?

சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டவு டன் ஸ்தலத்துக்கு விரைந்த லோக்கல் போலீஸ் அதிகாரியான எஸ்.பி.யை விருந்தினர் விடுதிக்குள் அனுமதி மறுத்தது ஏன்?

இவையெல்லாம், மிராசு தாரர் சண்முகம் தற்கொலை



செய்து கொண்டாரா? கொலை செய்யப்பட்டாரா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறதா இல்லையா?

● ராஜீவ் படு கொலை சம்பந்தப்பட்ட, ஆனால் உயிரு டன் சி.பி.ஐ.யிடம் பிடிபடாமல் மரண மடைந்தவர்களுள் முக்கியமானவர் சிவராசன். நாடு முழுக்கப் படுதீவிர தேடுதலுக்குப் பின் பெங்களூரின் புறநகர்ப் பகுதியில் ஒரு வீட்டில் ஒற்றைக் கண் சிவராசன் பிணமாய்ப் பிடி பட்டான். ஏழெட்டு விடுதலைப் புலிகள், போலீசிடம் பிடிபட்ட கணமே சையனைடு அருந்தி மரணமடைந்தார் கள். ஆனால் சிவராசன், சயனைடு சாப்பிடாமல் துப்பாக் கியால் சுட்டுக் கொண்டான் என்ற கதையை நம்ப முடிய வில்லை. காரணம், சிவராசன் உடலில் இரண்டு புல்லட் கள் இருந்தன. தற்கொலை என்றால் இது எப்படிச் சாத்தியம்?

மனித வெடிகுண்டான தணுவின் உடலின் பகுதிகள், வெகு நாட்கள் வழக்கின் முக்கியத்துவம் கருதிப் பாது காக்கப்பட்டன. ஆனால், மத்திய உள்துறை இணை அமைச்சர், சி.பி.ஐ. இயக்கு நர் ஆகியோர், தில்லியி லிருந்து பெங்களூருக்கு விரைந்து வந்த சிறிது நேரத்திலேயே, சிவராசனின் உடலுக்கு எரியூட்ட அனுமதி தரப்பட் டது. ஏன் இந்த முரண்பாடு?

● ராஜீவ் படுகொலையில் உலகளாவிய சதித் திட்டம் இருக்கும் என்ற சந்தேகத்தின் பேரில் புலனாய்வு செய்ய, சிறப்புப் புலனாய்வுக் குழு வைச் சேர்ந்த டி.ஐ.ஜி. ஒருவர் லண்டனுக்கு அனுப் பப்பட்டார். அவர், லண் டனில் இருந்த போது, அவ ருடைய கைப் பெட்டி மர்ம மான முறையில் காணாமல் போனது. அந்தப் பெட்டி யிலிருந்த ஆவணங்கள் என் னென்ன? பொறுப்பில் லாமல் அதைத் தொலைத்த உயரதிகாரி மீது என்ன நட வடிக்கை எடுக்கப்பட்டது?

● ராஜீவ் படுகொலைக் குக் காரணமாய் அமைந்த பாதுகாப்புக் குறைபாடு கள் பற்றி விசாரணை நடத்த ஜஸ்டிஸ் வர்மா கமிஷன் நியமிக்கப்பட் டது. அதன் அறிக்கையின் பேரில், பாதுகாப்புக் குறை பாடுகளுக்குக் காரணமான அதிகாரிகள் மீது நட வடிக்கை ஏதும் எடுக்கப் படாதது ஏன்?

மத்திய அரசு, அமைக் கிற பன்முக கண்காணிப்புக் குழு, இந்தக் கேள்விகளுக் கெல்லாம் விடை கண்டு பிடிக்குமா? அல்லது, விசா ரணை, புலனாய்வு என்ற பெயரில் இன்னும் சில ஆண்டுகளையும், சில கோடி ரூபாய் வரிப் பணத்தையும் வீணாக்கிக் கொண்டு காலம் கடத்துமா?

சந்திப்பு: **எஸ்.சந்திரமௌலி**
படம் : **ஸ்ரீஹரி**



இடைவெளிகள்

இந்த மொட்டைமாடி போர்ஷனுக்கு வெளியேதான் டாய்லட். தூக்கக் கலக்கத்துடன் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார் கல்யாணராமன். நல்ல நிலா வெளிச்சம். அவசரமாய் டாய்லட் போய் விட்டு, வெளியே வந்தபோதுதான், மேலேயிருந்த தண்ணீர் டேங்க்மேல் யாரோ உட்கார்ந்திருப்பது போல் இருந்தது.

கொஞ்சம் பின்னொதுங்கி, எம்பிப் பார்க்க, யாரோ கண்டிப்பாக உட்கார்ந்திருந்தார்கள்.

"யாருப்பா அது மேல?"

அவர் குரல் அவருக்கே மெதுவாகத்தான் கேட்டது. யாராக இருக்கும்? இந்தப் பாதி ராத்திரியில் இங்கே வந்து உட்காருவானேன்?

ஆர். வெங்கடேஷ்

இம்முறை கொஞ்சம் குரலுயர்த்திக்

கூப்பிட்டார்.

லேசாய் அசைவு தெரிய, "நான் தான் சார்" என்றதொரு குரல். பின்னர் தலை தெரிய, விஜி! வீட்டுக்கார வீட்டுப் பையன்.

"என்னப்பா இங்கே ஒக்காந்திருக்க?"

"சும்மாதான் சார்!"

"படுத்துக்கலியாப்பா?"

"போணும் சார்," என்றவன் மீண்டும் வானம் பார்க்கத் திரும்பி விட்டான். வினோதமான பையன். பிஞ்சிப்போனால் பதினாறு, பதினேழு வயதிருக்கும். நெடுநெடுவென வளர்ந்தவன். இன்னும் அவனுடைய அப்பாவுக்கு, அவன் 'குட்டி'தான். விஜயகுமார் என்று எவரும் அவனை அழைத்ததில்லை. எல்லோருக்கும் சின்னப் பையன். அதுதான் பிரச்னையோ?

சாயங்காலம் ஆபீஸிலிருந்து வீடு வந்த போதே, வீட்டுக்காரரின் வீட்டில் இறைச்சல். வழக்கம்போல் வீட்டுக்காரரின் குரல், இரண்டு மாடிகளைத் தாண்டிக்கேட்டது.

"பொறுக்கிப் பையனா நீ? அறிவில்ல? முண்டம். முண்டம். ஒரு மரியாதை வேணாம்? என்னாடா முடி வெட்டிகினு இருக்க! பெரிய வார்டுனு நெனப்பா உனக்கு? இந்த மாதிரி முடிவெட்டிகினாதான் உள்ள உடுவாங்களா?"

வழக்கம் போல் விஜி என்னவோ எதிர்த்துச் சொல்ல, மேன்மேலும் பேச்சு. ராஜி கூட 'பாவம், அந்தப் பையன்', என்றாள்.

"என்னாச்சு?" என்றார் கல்யாணராமன்.

"காலைல போய் முடிவெட்டிட்டு வந்திருக்கான் விஜி. ஸ்டெப் கட்டிங்கோ, என்னமோ. அதுக்கு இவ்வளவு கத்தல்."

"ஏன், ஸ்டெப் கட் பண்ணிக்கக் கூடாதாமா?" என்றபடி கல்யாணராமனின் பெண் சரஸ் உள்ளே நுழைய, "உன் வேலையைப் பாரு" என்றாள் ராஜி.

குழந்தைகளால் விரும்பப்படும் அப்பாவாய் இருப்பது மிகவும் சிரமம் போலும். அதுவும் வீட்டுக்காரரைப் போல், அப்பாக்கள் சகஜமானவர்கள். இந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து, எல்லா விஷயங்களையும் அவர், கல்யாணராமனிடம் சொல்லியிருக்கிறார். வாழ்வின் நெருக்கடிகளையெல்லாம் முறியடித்து, அவர் உயர்ந்திருக்கிறார். இன்றைக்கு ராயப்பேட்டையில் ஒரு மூன்றடுக்கு வீட்டுக்குச் சொந்தக்காரர்.

கீழே ரொம்ப நேரம் வரை கூச்சல் இருந்தது.


"நான் என்னா கொறை வெச்சேன் சொல்லுங்க, இந்தப் பையனுக்கு? இவனுக்குக் கஷ்டம்னா இன்னான்னு தெரியுமா? சோத்துக்குத் தெருத்தெருவா அலைஞ்சிருக்கானா? என்னா தெரியும்? இன்னா பேச்சு பேசறான் தெரியுங்களா?"– வீட்டுக்காரர் உணர்ச்சிப் பிழம்பாய் இருந்தார்.

கல்யாணராமனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. சாப்பிட்டுவிட்டு, காற்றாட வெளியே வந்து உட்கார்ந்தால், இவர் வந்து விட்டார்.

"நான் என்னமா கஷ்டப்பட்டிருக்கேன்னு உங்களுக்கே தெரியும். படிக்கிறதுக்கு எவ்வளவு அலைஞ்சிருப்பேன்? இன்னிக்கு ஒரு மரியாதையான நெலைமை வந்துகிதுன்னா, அது படிப்பாலதான். இந்தப் பையனுக்கு எவ்வளவு செலவழிச்சிருப்பேன்? உங்களுக்கே தெரியும். இவன் பெயிலாபோனா கூடப் பரவாயில்லன்னு, திருப்பியும் திருப்பியும் படிக்கவெக்கறேன்."

அவரது ஆற்றாமை நியாயமாகவே தோன்றியது. இவர் பட்ட அவஸ்தைகளெல்லாம், அவன் அனுபவிக்கக் கூடாது என்று டியூஷனும், படிப்புமாய் செலவு செய்கிறார். ஆனால் விஜி, வினோதமான பையன்.

"இப்ப என்னா பண்ணிக்கிறான் தெரியுங்களா? கம்ப்யூட்டர் கிளாஸுக்கே போவலீங்களாம். மொத்தம் முப்பத்தஞ்சாயிரம் பீஸு! பதினேழாயிரம் கட்டிகிறேன். அது சம்பாதிக்க, நான் என்னமா நாய் படாத பாடு பட்டுருப்பேன்? இவன் கிளாஸுக்கே போவலியாம். இன்னிக்கு எனக்கு லெட்டர் வந்துகிது. என்னாபண்றது சொல்லுங்க! தோளுக்கு மேல வளர்ந்து நிக்கறான். அடிக்கவா முடியும்? ஏன்டான்னு கேட்டா, கிளாஸே புடிக்கலியாம்.



"டெம்பரேச்சர் எடுக்க வாயில வச்ச தர்மாமீட்டரை அந்த பேஷண்ட் முழுங்கிட்டாரு!"

"ஐய்யோ! அப்புறம் எப்படி எடுத்தீங்க?"

— சீர்காழி கே.ஆர்.வி

இப்படி ஒரு பையன் இருப்பானா?"

கல்யாணராமன் வெறுமனே கேட்டுக் கொண்டிருந்தார். இதில் யாரைக் குறை சொல்வது? இதே பையனை, இவர் 'குட்டி', 'குட்டி' என்று கொஞ்சாத குறையாக, அரவணைத்துப் பார்த்திருக்கிறார்.

"தங்கமான பையங்க. கடவுள் புண்ணியம். இந்த வயசுப் பசங்களெல்லாம், என்னா என்னாமோ செஞ்சுக்கினு இருக்குதுங்க. ஒரு பழக்கம் கெடையாது. ஒரு கெட்ட சகவாசம் கெடையாது. ஸ்கோலு வுட்டா நேரா ஊடு. இல்ல கோயிலு. சாமி. நடுவுல எங்கியும் போவ மாட்டானே."

'பல சமயங்களில், இந்த ஒரே மகனின் பிரதாபம், போர் அடிக்கும்வரை தொடரும். காலையில் எழுந்ததிலிருந்து, படுக்கும் வரை அவன் செய்யும் பக்திமார்க்கமான வேலைகளைப் புகழ்ந்து தள்ளிவிடுவார்.

வேறு சமயங்களில், கூச்சல், கத்தல், குறை.

"இந்த ரோதன போதாதுன்னு, போய் முடி வெட்டிகினு வந்துகிறான். பாத்திங்களா? கம்னாட்டி, பொறுக்கிப் பையன் மாதிரி. இதுல வேற முடிய இப்படியும் அப்படியும் சிலுப்பிக்கறான். இது எல்லாம் நமக்கு அடுக்குமா? நம்ம பொறப்பு என்னா, வளர்ப்பு என்னா, மரியாதை வேணா? அட்லீஸ்ட், நான் சம்பாதிச்ச மரியாதையாவது இவன் காப்பாத்த வேணா? இது மாதிரியெல்லாம் போனா, எவனாவது மதிப்பானா?"

கல்யாணராமனுக்கு இவரை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று தெரியவில்லை. பதில் சொல்லச் சொல்ல, அவர் இன்னும் பேசிக் கொண்டேதான் போவார். ஆனால், முடி போன்ற விஷயங்களில் மட்டு மரியாதை என்றெல்லாம் பேசுவது அபத்தம். வயசுக் காலங்களில் அழகு பண்ணிக் கொள்ளவில்லையென்றால், பின் எப்போதுதான் செய்து கொள்வது?

"இதுல மதிப்பு, மரியாதை எல்லாம் பாக்காதிங்க சார். அவன் இந்தக் காலத்து பையன். ப்ரெண்ஸுங்க நடுவுல புதுசு புதுசாய் ஏதாவது செய்யணும் இல்லியா?"

"ஐயே! நமக்கு அதெல்லாம் ஆவாதுங்க. நாம எவ்வளவு சுத்தமா, ஒழுங்கா இருக்கறமோ, அப்படித்தான் நம்ம வாழ்க்கையும் இருக்கும். பொறுக்கி மாதிரி இருந்தா, பொறுக்கியாவே தான் போவணும்."

கல்யாணராமனுக்கு இதிலெல்லாம் உடன்பாடு இல்லை. மேலே எதுவும் பேச வேண்டாம் என்று பொறுமை காத்தார். அவர் வீட்டுக்காரர். பிடிவாதக்காரரும் கூட. தம் நம்பிக்கைகளை



''அஞ்சாம் கிளாஸ் கூட படிக்காத அவரை எப்படி 'சட்ட மந்திரி' ஆக்கலாம்?''

அவர் மேலே இருக்கிற ஊழல் வழக்குகளுக்காக கோர்ட்டில் ஆஜராகி, ஆஜராகி, அவருக்கு சட்ட நுணுக்கமெல்லாம் அத்துபடி ஆயிருச்சாம்!''

— சம்பத் குமாரி

மாற்றிக் கொள்ள விரும்பாதவர்.

விஜிதான் இவரிடம் மாட்டிக் கொண்டிருக்கிறான். கல்யாணராமன் பார்த்து, விஜி சிகரெட் பிடித்திருக்கிறான். கூடவே, கோயில்களில் கண்மூடி மௌனமாய் அமர்ந்திருப்பதையும் பார்த்திருக்கிறார். அவனிடம் என்னவோ இருக்கிறது என்று மட்டும் தோன்றும்.

மொட்டை மாடி வந்தால், தொட்டியில் உள்ள பூக்களிடம் வெகுநேரம் பேசிக் கொண்டிருப்பான். எதிர்வீட்டுக் குழந்தைகளெல்லாம் அவன் தோழர்கள். நேரம் போவது தெரியாமல், அக்குழந்தைகளோடு சரிக்குச் சரி பேசிக் கொண்டிருப்பான்.

அவன் வயது நண்பர்கள் வெகு சிலரே.

ரொம்ப நேரம் புலம்பிவிட்டு, கீழே போனார் வீட்டுக்காரர். கல்யாணராமன் சமாதானம் சொல்ல முயற்சிக்கவில்லை. இது அவர் பிரச்னை. தன் கருத்துக்கு ஏற்ப தம்பிள்ளைகள் வரவேண்டும் என்பது அப்பாக்களின் அவா. இதில் யார் முந்திக் கொள்வார்கள் என்பது எப்போதுமே சிக்கல்தான்.

மறுநாள் தண்ணீர் பிடிக்க கல்யாணராமன் கீழே போனார். இரண்டு குடங்கள் வைத்துவிட்டு, மூன்றாம் குடம் எடுத்துவர கீழே போனபோது, நெற்றியில் விபூதியுடன், விஜி தண்ணீர் பிடிக்க நின்றிருந்தான்.

முகத்தில் என்னவோ வாட்டம் தெரிந்தது. தலைமுடியை ஒட்ட வெட்டியிருந்ததை அப்போதுதான் கவனித்தார் கல்யாணராமன். ●

தடுமாறுகிறதா த.மா.கா?

மூப்பனார் சிறப்புப் பேட்டி


கல்கி: காவிரிப் பிரச்னையில் உங்களின் நிலை என்ன? கலைஞர் செய்தது சரியா அல்லது ஜெயலலிதாவின் நிலைதான் சரியா? அரசியல் தலைவர் என்கிற முறையில் மட்டுமல்ல; தஞ்சை விவசாயி என்கிற முறையிலும் உங்கள் நிலை என்ன?

மூப்பனார்: காவிரிப் பிரச்னையைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் ஒரு நியாயம், கர்நாடகாவில் ஒரு நியாயம் என்கிற நிலைதான். காரணம், இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட விஷயம் அது. நமக்கு முக்கியமாகக் காவிரித் தண்ணீர் கிடைக்க வேண்டும். இப்போது 205 டி.எம்.சி. கிடைக்க ஆவன செய்யப்பட்டிருக்கிறது. 205டி.எம்.சியைக் கொடுப்பதாக இப்போது கர்நாடக அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. இனி அதிலிருந்து கர்நாடகா பின்வாங்க முடியாது. வறட்சியான சூழ்நிலையில்– கர்நாடகாவிலேயே காவிரியில் தண்ணீர் இல்லை என்கிற நிலையில் தண்ணீரைப் பகிர்ந்து கொள்வதில் பிரச்னைகள் வரத்தான் செய்யும். அப்போது அந்தந்த மாநிலத்திலுள்ள அரசியல் தலைமையும் மத்திய அரசும் சேர்ந்துதான் முடிவுகளை எடுக்க முடியும். இதுதான் நிலை. இந்த நிலையிலும் இந்த அளவுக்கு ஒரு தீர்வு கண்டிருப்பது வரவேற்கக் கூடிய ஒரு விஷயமே. இதுவே முழுமையான தீர்வு என்று சொல்ல முடியாவிட்டாலும் இதைவிடவும் சிறந்த தீர்வை வேறு யார் முதல்வராக இருந்தாலும் கண்டிருக்க முடியாது என்பது தான் எனது கருத்து. எனது சொந்தக் கருத்தாக இன்னொன்றையும் சொல்கிறேன். நமது முதல்வர், காவிரிப் பிரச்னை பற்றிப் பேசுவதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசிய நாள் ஆகஸ்டு 3. அன்றுதான் பதினெட்டாம் பெருக்கு; காவிரித் தாயை பூஜை செய்து நாம் வழிபடுகிற நாள்! அந்த வகையில் தெய்வச் செயலால்தான் இப்பிரச்னைக்கு ஒரு தீர்வு ஏற்பட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன்.

கல்கி: சரி, இப்போது த.மா.கா.வுக்கு வருவோம்...

மூப்பனார்: வாங்க.. (சிரிப்பு)

கல்கி: கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்பிருந்த நிலைக்கும் இப்போதுள்ள



நிலைக்கும் மிகுந்த மாற்றம் இருக்கிறது. கட்சியின் தலைவர் என்கிற முறையில் இம்மாற்றம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

மூப்பனார்: ஜனநாயகத்தில், தேர்தலில் வெற்றி பெறுகிறபோது அக்கட்சி பற்றிய மக்களின் கண்ணோட்டம் ஒரு மாதிரியாகவும் தோல்வியடைகிறபோது வேறு மாதிரியான கண்ணோட்டமும் வரத்தான் செய்யும். இப்போது த.மா.கா. தோல்வியடைந்து விட்டதாலேயே 'ஓ இது சரியாக வராது போல் இருக்கிறது' என்று சிலர் நினைக்கலாம். ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. தேர்தல் தோல்விக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. கடந்த முறை த.மா.காவுக்கு வாக்களிக்காத பலரும் என்னை இப்போது சந்திக்கும்போது, 'நாங்கள் தெரியாமல் தவறு செய்து விட்டோம். எப்படியாவது சரி பண்ணுங்க சார்' என்றுதான் சொல்கிறார்கள்.

கல்கி: எதை வைத்து அவர்கள் தவறு செய்துவிட்டதாகச் சொல்கிறார்கள்?

மூப்பனார்: இப்போது இருக்கிற சூழலை வைத்துத்தான்! கூட்டணி ஆட்சி என்பது மிகவும் கடினமான விஷயம். மாநில அளவில் இதை மிகவும் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருவது கேரளா மட்டும்தான். மத்தியிலும் இப்போது கூட்டணி ஆட்சி தவிர்க்க முடியாததாகிவிட்டது. காங்கிரஸுக்குப்



பிறகு ஒரு கட்சி ஆட்சி இல்லை. அது இப்போது பலவீனமாகிவிட்டது. பி.ஜே.பியால் தனி மெஜாரிடியோடு வர முடியவில்லை. இந்த நிலையில் ஒரு கட்சியோடு கூட்டணி வைத்துக் கொள்கிறோமென்றால் அதற்காகவே நமது கொள்கைகள் அனைத்தையும் விட்டுவிட முடியாது. ஆனாலும் எந்த அளவுக்கு ஒத்துப் போக வேண்டுமோ, அந்த அளவுக்கு ஒத்துப் போக வேண்டும். அந்த முயற்சி இந்தமுறை பலவீனமாகியிருக்கிறது என்பதுதான் இன்றைய நிலை. இதற்கு பி.ஜே.பியைக் குற்றம் சொல்வதை விட, அதனுடைய கூட்டணிக்கட்சிகளைத்தான் குற்றம் சொல்ல வேண்டும். இதைத்தான் என்னைச் சந்திக்கும் மக்கள் சொல்கிறார்கள்.

கல்கி: 96-ல் நீங்கள் த.மா.காவை ஆரம்பித்தபோது- அந்தத் தேர்தலில் வெற்றியின் உச்சிக்கே சென்றீர்கள். அடுத்தக் கட்டம் என்பது தனித்து ஆட்சியைப் பிடிப்பதுதான் என்கிற உயரம் அது. இப்போது ஒரு சரிவு ஏற்பட்டிருக்கிறது. இதற்கிடையில் கட்சியைத் தடுமாற்றமில்லாமல் நிலை நிறுத்துவதற்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

மூப்பனார்: எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, கட்சிக்கு என்று இருக்கிற வாக்குகள் என்பது வேறு. அது எப்போதும் இருந்து கொண்டேதான் இருக்கும். ஆனால் கட்சி சார்பில்லாமல்- பிரச்னைகளின் அடிப்படையில் வோட்டுப் போடுபவர்கள் இருக்கிறார்களே... அவர்கள் மாறி மாறித்தான் வோட்டுப்போடுவார்கள். இப்படிப் பட்டவர்கள், மாறி வோட்டுப் போட்டதால் ஏற்பட்டதுதான் எங்களுக்கு ஏற்பட்ட தோல்வி. சென்ற தேர்தலில்- அது சரியோ தவறோ, பி.ஜே.பிதான் மத்தியில் ஒரு நிலையான ஆட்சியைத் தரமுடியும் என்கிற உணர்வு மக்களிடம் நிறையவே வந்து விட்டது. இதனால் வந்ததுதான் இந்தச் சறுக்கல். இன்னும் சொல்லப்போனால், காங்கிரஸையும் பி.ஜே.பியையும்தான் அனைத்திந்தியக் கட்சியாக மக்கள் கருதினார்களே தவிர, ஐக்கிய முன்னணியை அப்படி அவர்கள் கருதவில்லை. இந்தச் சூழ்நிலையில்தான் மக்கள் பி.ஜே.பியைத் தேர்ந்தெடுத்து வாக்களித்தார்கள்.

கல்கி: உங்களுக்கிருக்கிற இந்தத் தெளிவான பார்வை உங்கள் கட்சித் தொண்டர்களுக்கு இருக்கிறதா? காங்கிரஸுடன் இணையப் போவதாகவெல்லாம் செய்திகளும் அனுமானங்களும் வருகிற சூழ்நிலையில் தொண்டர்கள் தெளிவாக இருக்கிறார்களா? இல்லை தடுமாறுகிறார்களா?

மூப்பனார்: தெளிவு என்பது எல்லோருக்கும் எல்லாக் காலத்திலும் இருந்துவிட முடியாது. தலைவர்களுக்கே கூடச் சில சமயங்களில் தடுமாற்றங்கள் வரத்தான் செய்யும். தொண்டர்கள் உணர்வு பூர்வமாக இருப்பவர்கள். உணர்வு பூர்வமாக மட்டுமே தீர்மானங்களை எடுத்துவிட முடியாது. அறிவு பூர்வமாகவும் பார்க்க வேண்டும். இருக்கிற யதார்த்த சூழ்நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். எனக்கிருக்கிற ஆசைகள்- எண்ணங்கள் பெரிதாக இருக்கலாம்; அவற்றில் நியாயங்களும் இருக்கலாம். ஆனால் அந்த நியாயங்களை நடைமுறைப் படுத்துவது சாத்தியமா என்பதையும் பார்த்தாக வேண்டுமல்லவா! பொதுவாகப் பார்த்தால் தொண்டர்கள் தெளிவாகவும் தடுமாறாமலும் இருப்பதாகவே நான் கருதுகிறேன்.

> **ஒரு கட்சியோடு கூட்டணி வைத்துக் கொள்கிறோமென்றால் அதற்காகவே நமது கொள்கைகள் அனைத்தையும் விட்டுவிட முடியாது. ஆனாலும் எந்த அளவுக்கு ஒத்துப் போக வேண்டுமோ, அந்த அளவுக்கு ஒத்துப் போக வேண்டும்.**

கல்கி: 96-ல் நீங்கள் தனியாக வந்ததே, அ.தி.மு.கவுடன் நரசிம்மராவ் ஏற்படுத்திக் கொண்ட கூட்டணியை எதிர்த்துத்தான். இப்போது அந்தச் சூழ்நிலை காங்கிரஸில் இல்லை. இந்த நிலையில் அறிவு பூர்வமாகப் பார்த்தாலும் நீங்கள் தாய்க் கட்சியான காங்கிரஸில் இணைவதில் தவறில்லையே!

மூப்பனார்: நீங்கள் கேட்பது நியாயமான கேள்விதான். நான் பத்து நாட்களுக்கு மேலாகத் தொண்டர்களிடம் கருத்துக் கேட்டேன். எம்.எல்.ஏ., எம்.பி. என்கிற நிலையில் உள்ளவர்களிடம் நான் கேட்கவில்லை. ஏனெனில் அவர்களுக்குப் பதவி,

சிட் என்று பல்வேறு காரணங்கள் இருப்பதால் சரியான கருத்தைச் சொல்ல மாட்டார்கள் என்பதால்தான், சாதாரணத் தொண்டர்களிடம் கருத்துக் கேட்டேன். அவர்களில் பெரும்பாலோர் த.மா.கா. தனது தனித்தன்மையைக் காப்பாற்ற வேண்டும் என்றுதான் சொன்னார்கள். த.மா.கா. தனிக்கட்சியான பிறகு, இதற்குக் கிடைத்திருக்கிற ஒரு மரியாதை இருக்கிறதே... நாங்கள் காங்கிரஸில் இணையும்போது இந்த மரியாதையையும் சேர்த்துக் கொண்டு போய் இணைத்துவிட முடியாது என்றுதான் அவர்கள் என்னிடம் கருத்துக் கூறினார்கள். எனவே, தனிக் கட்சியாக இருந்து கொண்டு, தேவையானால் காங்கிரஸை



ஆதரிக்கலாம் என்றுதான் அவர்கள் என்னிடம் சொன்னார்கள்.

கல்கி: த.மா.காவால் மூன்றாவது அணியாகத் தமிழகத்தில் வரமுடியும் என்று தொண்டர்கள் நினைக்கிறார்களா?

மூப்பனார்: ஆமாம். அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்றுதான் தொண்டர்களும் கருதுகிறார்கள். 'காமராஜர் ஆட்சி அமைப்போம்' என்று நாங்கள் சொல்வதே இன்னொரு லைன் அப் திங்கிங்தானே!

கல்கி: இப்படியொரு சூழ்நிலையில், திருச்சியில் அடைக்கலராஜ் விலகியதும் கோவையிலுள்ள பெண் கவுன்சிலர் ஹேமா ஜெயசீலன் உங்கள் கட்சியில் கருத்துச் சுதந்தரம் இல்லையென்று அறிக்கைகள் விட்டதும்... இது போன்ற சலசலப்புகள் உங்கள் கட்சியில் வரலாமா?

மூப்பனார்: இதையெல்லாம் பத்திரிகையாளர்கள்தான் ஊதிப் பெரிது படுத்துகிறார்கள். ஹேமா ஜெயசீலன் ஒரு கான்ட்ரோவர்ஷியல் பர்சன். அதனால்தான் நடவடிக்கை எடுத்தோம். அடைக்கலராஜ் போனதில் எனக்கொன்றும் ஆச்சரியமில்லை...

கல்கி: மற்ற கட்சிகளில் இப்படியிருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் த.மா.காவுக்கென்று ஒரு தனித்துவம் வேண்டாமா?

மூப்பனார்: நிச்சயமாக தனித்துவம் இருக்கிறது. அடைக்கலராஜுக்கு அப்புறம் யார் போனார்கள்? அதற்கடுத்து யாரும் போகவில்லையே!

கல்கி: போகப் போவதாகச் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள்...

மூப்பனார்: என்னையும் தான் வரப்போகிறேன்... போகப் போகிறேன் என்று பத்திரிகைக்காரர்கள் எழுதினார்கள்...(சிரிப்பு). ஒன்றும் ஆகவில்லையே! (சிரிப்பு)

கல்கி: உறுப்பினர் சேர்க்கையில் நல்ல ஆதரவு இருந்ததா?

மூப்பனார்: நல்ல ரெஸ்பான்ஸ் இருந்தது. நான் வெளிப்படையாகவே பேசுகிறேனே... உறுப்பினர் சேர்க்கும் இயக்கத்தை நான் ஆரம்பித்துப் பேசியபோது, 'நான் குவாலிடியைத்தான் விரும்புகிறேனே தவிர, குவான்டிடியை விரும்பவில்லை' என்று தான் சொன்னேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் வெறும் எண்ணிக்கைக்காகப் பொய் மெம்பர்களைச் சேர்க்கக் கூடாது என்று சொல்லி விட்டேன். கட்சியில் தேர்தல் இல்லை என்பதால் எதற்காக உறுப்பினராக வேண்டும் என்கிற சோர்வு இருக்கலாம். இது காலங்காலமாகக் காங்கிரஸிலிருந்தபோது ஊறிவிட்ட மனப்பான்மை.

கல்கி: இந்த மனப்பான்மை மாற வேண்டாமா?

மூப்பனார்: மாறும். நானே 65 வயதுக்கப்புறம் தனிக்கட்சி ஆரம்பித்து சிரமப்பட்டு, என்னை நானே மாற்றிக் கொண்டிருக்கிறேனே!

கல்கி: அப்படி எதை மாற்றிக் கொண்டிருக்கிறீர்கள்?

மூப்பனார்: பார்க்கிற நீங்கள்தானே

சொல்ல வேண்டும்? நானே எப்படிச் சொல்லிக் கொள்வது? (சிரிப்பு).

கல்கி: காங்கிரஸ் இயக்கத்திலிருந்து விலகி, தனியொரு இயக்கம் கண்டபோது, உங்களுக்குள் என்ன மாறுதல் ஏற்பட்டிருக்கிறது?

மூப்பனார்: காங்கிரஸில் இருந்தபோது, தலைமை எடுக்கிற முடிவை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும் என்கிற அளவில் பொறுப்புகள் முடிந்துவிடும். இப்போது அப்படியில்லை. முடிவையும் எடுக்க வேண்டிய சூழ்நிலை. அதனால் ஏற்படுகிற நல்லது-கெட்டது இரண்டையும் என் தலையிலேயே சுமக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது.

கல்கி: உங்களுடைய பொறுப்பு இப்போது மாநில அளவில் சுருங்கி விட்டதாக உணருகிறீர்களா?

மூப்பனார்: ரீஜனல் பார்ட்டி வித் நேஷனல் அவுட்லுக். இதுதான் முன்பிருந்ததற்கும் இப்போதிருப்பதற்கும் உள்ள வித்தியாசம். காவிரிப் பிரச்னையில் கர்நாடக மக்களின் நியாயத்தையும் நாங்கள் பார்க்கிறோமே, அதுதான் எங்களின் தேசியப் பார்வை. 'வளமான தமிழகம்; வலிமையான பாரதம்' என்பதுதான் எங்களின் அடிப்படைக் கொள்கை.

கல்கி: ஜெயின் கமிஷன் அறிக்கை பற்றிய நடவடிக்கை அறிக்கை (ATR)பற்றிய உங்கள் நிலை என்ன?

''ஏண்டி! தழுவல் ஸ்பெஷலிஸ்ட்னு உன் லவ்வரை சொல்றியே! எப்படிச் சமாளிக்கறே?''

''நான் யாரு! தழுவல் ஸ்பெஷலிஸ்ட் ஆச்சே!

– சி.பி. செந்தில்குமார்



மூப்பனார்: அது பொலிடிகலி மோடிவேடட் என்று முன்பே அறிக்கை விட்டு விட்டேனே! கொடூரமான முறையில் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டது மிகவும் கண்டிக்கத்தக்க ஒரு செயல். அப்படிப்பட்ட ஒரு விஷயத்தில் உண்மையைக் கண்டு பிடிப்பதைவிட்டு, அதற்கு அரசியல் சாயம் பூசுவது தவறு.

கல்கி: கலைஞரின் மேல் நேரடியாகவே FIR ஃபைல் செய்ய வேண்டுமென்று ஜெயலலிதா சொல்வது பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

மூப்பனார்: அதில் நியாயம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. சொல்லப்போனால் எல்லா அரசியல் கட்சிகளுமே-காங்கிரஸ் உள்பட- ஏதாவதொரு சமயத்திலாவது புலிகளை ஆதரித்த கட்சிகள்தாம். எனவே, நான் ராஜீவ் கொலைக்கு முன்பு, ராஜீவ் கொலைக்குப் பின்பு என்றுதான் பிரித்துப் பார்க்கிறேன். ராஜீவ் கொலைக்குப் பின்பு எந்தவொரு அரசியல் கட்சியுமே புலிகளை ஆதரித்ததாகவோ, ஆதரிப்பதாகவோ தெரியவில்லை. பணத்துக்காகத் தனிப்பட்ட சிலர் ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டிருக்கலாமே தவிர, அந்தத் தனிப்பட்டவர்களின் செயலுக்கும் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் தொடர்பிருக்குமென்று நான் கருதவில்லை.

கல்கி: த.மா.காவின்மேல் சொல்லப்படுகிற ஒரே குற்றச்சாட்டு இந்தியன் வங்கி விவகாரம்தான். இப்போதுகூட ஒரு பத்திரிகையில் இந்தியன் வங்கி சேர்மனை நீங்கள் மாற்ற முயற்சி செய்வதாக எழுதியிருக்கிறார்கள்!

மூப்பனார்: நானா ஆட்சியிலிருக்கிறேன்! நான் எப்படி மாற்ற முடியும்?

கல்கி: இப்படியெல்லாம் குற்றம் சாட்டப்படுவது உண்மைதானே!

மூப்பனார்: இந்தியன் வங்கி கோபாலகிருஷ்ணன் எல்லோருக்குமே வேண்டப்பட்டவர். அதுபோல்தான் எங்களுக்கும். காரணம் அவரது குடும்பத்தின் காங்கிரஸ் பின்னணி. அது பற்றிய எந்தவிதமான விசாரணைக்கும் நான் தயாராக இருக்கிறேன். என்மீது குற்றம் இருந்தால் நிரூபிக்கட்டும். அதற்கான தண்டனையை நான் ஏற்றுக் கொள்ளத் தயார்.

கல்கி: பி.ஜே.பி. கவிழ்ந்து காங்கிரஸ் ஆட்சியமைக்கிற ஒரு சூழ்நிலை வந்தால்

(தொடர்ச்சி–பக்கம் 57ல்.)



பத்தாம் அத்தியாயம்

அநிருத்தப் பிரமராயர்

இந்தக் கதையின் ஆரம்ப காலத்திலேயே நமக்கு நெருங்கிப் பழக்கமான ஆழ்வார்க்கடியான் நம்பியைக் கொஞ்ச காலமாக நாம் கவனியாது விட்டு விட்டோம். அதற்காக நேயர்களிடமும் நம்பியிடமும் மன்னிப்புக் கோருகிறோம். முக்கியமாக, நம்பியின் மன்னிப்பை இப்போது நாம் கோரியே தீர வேண்டும். ஏனெனில் ஆழ்வார்க்கடியான் இப்போது வெகு வெகு கோபமாயிருக்கிறான்! அவனுடைய முன் குடுமி இராமேசுவரக் கடற்கரையில் அடிக்கும் காற்றில் பறந்து கொண்டிருக்கிறது. அவனுடைய கைத்தடியோ தலைக்கு மேலே சுழன்று கொண்டிருக்கிறது. அவனைச் சுற்றி ஆதி சைவர்களும் வீர சைவர்களும் பலர் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆர்ப்பாட்டம் பலமாக இருப்பதால், ஆழ்வார்க்கடியானுடைய கதி யாதாகுமோ என்று நமக்குக் கொஞ்சம் கவலையாக





வுமிருக்கிறது. எனினும் நம்பியின் நரசிம்மாவதாரத் தோற்றமும் அவனுடைய கைத்தடி சுழலும் வேகமும் அந்தக் கவலையைப் போக்குகின்றன.

வந்தியத்தேவனும் இளையபிராட்டியும் பேசியதை ஒட்டுக் கேட்ட ஆழ்வார்க்கடியான் பழையாறையிலிருந்து அன்றைய தினமே புறப்பட்டான். வாயு வேக மனோவேகமாகத் தென் திசையை நோக்கிச் சென்றான். வழியில் எங்கும் அவன் சைவ வைஷ்ணவச் சண்டையில் இறங்கவில்லை. காரியத்துக்குக் குந்தகம் வரக் கூடாதென்று மனத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டு வலுவில் வந்த சண்டைகளைக் கூட வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளிவிட்டு, நடந்தான். மதுரையில் சிறிது நேரம் தங்கினான். அங்கு அவன் அறிய விரும்பிய செய்தியை விசாரித்து அறிந்து கொண்டு இராமேசுவரத்துக்குப் புறப்பட்டான்.

வந்தியத்தேவன் பூங்குழலியின் படகில் சென்று இலங்கைத் தீவில் இறங்கிய அதே நாள் மாலையில் ஆழ்வார்க்கடியான் நம்பி இராமேசுவரம் வந்து சேர்ந்து விட்டான்.

அந்தப் புண்ணிய பூமியை மிதித்த உடனே ஆழ்வார்க்கடியானுடைய மனத்தில் அத்தனை நாளும் அடங்கிக்கிடந்த வைஷ்ணவ ஆர்வம் கரையை உடைத்துக் கொண்டு பொங்கி விட்டது. இராமேசுவரத் தீவில் எங்கெங்கும் மொய்த்துக் கொண்டிருந்த வீர சைவ பட்டர்கள் அந்த ஆர்வத்துக்குத் தூபம் போட்டு விட்டார்கள். அந்தப் புண்ணிய ஸ்தலத்துக்கு வரும் யாத்ரீகர்களுக்கு வழிகாட்டி அழைத்துச் சென்று பற்பல தீர்த்தங்களிலும் ஸ்நானம் பண்ணி வைப்பதும், ஆலயத்தில் மூர்த்தி தரிசனம் செய்து வைப்பதும், அந்தந்தத் தீர்த்தம்-மூர்த்தி விசேஷங்களை எடுத்துச் சொல்லுவதுமே அவர்களுடைய அலுவல்கள். எனவே, புதிய யாத்ரீகர்களைக் கண்டதும் பட்டர்கள் பலர் சென்று சூழ்ந்து

கொள்வார்கள். அவ்விதமே ஆழ்வார்க்கடியானையும் சுற்றி மொய்த்துக் கொண்டார்கள்!

“அப்பனே! வா! வா! இந்த ஸ்தலத்திலுள்ள அறுபத்து நான்கு தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து உன் தேகத்தில் தரித்திருக்கும் வைஷ்ணவ பாஷாண்டச் சின்னங்களைக் கழுவித் துடைத்துக் கொள்! இராமரின் பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கிய ஸ்தலம் அல்லவா இது? வைஷ்ணவ பாஷாண்ட மதச் சின்னங்களை நீ அணிந்ததினால் ஏற்பட்ட பாவங்களையும் போக்கிக் கொள்ளலாம்!” என்று ஒரு பட்டர் விந்நியாசமாகப் பேசினார்.

இன்னொருவர் குறுக்கிட்டு, “இராம தீர்த்தம், லக்ஷ்மண தீர்த்தம், ஆஞ்சநேய தீர்த்தம், சுக்ரீவ தீர்த்தம் – இப்படி அறுபத்து நாலு தீர்த்தங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் அந்தந்தத் தீர்த்தத்தில் தலை முழுகி அவரவர்களுடைய தோஷத்தைப் போக்கிக் கொண்டார்கள். நீ என்னுடன் முதலில் ஆஞ்சநேய தீர்த்தத்துக்கு வா! வைஷ்ணவச் சின்ன தோஷத்துக்குச் சரியான சங்கல்பம் பண்ணி வைக்கிறேன்!” என்றார்.

மற்றொரு பட்டர் “அப்பனே! இவர்கள் சொல்வதைக் கேளாதே! இராமர் இராவணனைக் கொன்ற பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கிக் கொள்வதற்காகச் சமுத்திர மணலைப் பிடித்து வைத்துச் சிவலிங்கமாக்கிப் பூஜித்த இடத்துக்கு உன்னை நேராக அழைத்துப் போகிறேன்!” என்றார்.

ஆழ்வார்க்கடியான் கண்ணில் தீப்பொறி பறக்க எல்லாரையும் ஒரு தடவை விழித்துப் பார்த்து, “நிறுத்துங்கள் உங்கள் அபத்தப் பேச்சை! முதலில் நீங்கள் சொன்ன தீர்த்தங்களினால் உங்களுடைய நாவை அலம்பி உங்கள் பாவத்தைத் தீர்த்துக் கொள்ளுங்கள்!” என்றான்.

“ஓஹோ! இராமன், லக்ஷ்மணன் என்றெல்லாம் சொன்னதனால் எங்களுக்குப் பாவம் வந்திருக்கும் என்று நினைக்கிறாயா? அப்படி ஒன்றுமில்லை. இந்த க்ஷேத்திரத்துக்குப் பெயரே இராமேச்சுவரம். இராமர் ஈசுவரனாகிய சிவபெருமானைப் பூஜை செய்து பாவத்தைப் போக்கிக் கொண்ட இடம். அத்துடன் இராமர் என்ற பெயரில் இருந்த தோஷமும் போய் விட்டது!” என்றார் ஒரு வீர சைவ பட்டர்.

“ஓ, அஞ்ஞான சிரோன்மணிகளே!” ஏன் இப்படித் தலைக்குத் தலை உளறுகிறீர்கள்? இந்த ஸ்தலப் பெயரின் அர்த்தம் இன்னதென்பதையே நீங்கள் தெரிந்து கொண்டபாடில்லை!”

“நீதான் சொல்லேன், பார்ப்போம்!”

“பிரம்மாவினுடைய ஒரு தலையைப் பறித்ததினால் சிவனுக்குப் பிரம்மஹத்தி தோஷம் பிடித்து விட்டது. திருமாலின் பூரண அவதாரமாகிய இராமபிரானுடைய பாதம் பட்டுப் புனிதமான இந்த இடத்துக்குச் சிவன் வந்து அந்தப் பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கிக் கொண்டார். இராமரை ஈசுவரன் பூஜித்த இடமானபடியால் இராமேசுவரம் என்ற பெயர் ஏற்பட்டது! தெரிந்து கொண்டீர்களா, மூடசிகாமணி பட்டர்களே!” என்று ஆழ்வார்க்கடியான் கர்ஜித்தான்.

“யாரடா அவன் எங்களை மூட சிகாமணிகள் என்பது? அடே தடியா? நீ என்ன தலையில் கொம்பு முளைத்தவனா?” என்று ஒரு பட்டர் சீறினார்.

“இல்லை, ஐயா பட்டரே! என் தலையிலே கொம்பு முளைக்கவில்லை; கையிலேதான் இந்தக் கொம்பு இருக்கிறது! என்னை யார் என்று கேட்டீர் அல்லவா? சொல்லுகிறேன். திருக்குருகூரில் அவதரித்து வேதம் தமிழ் செய்த நம்மாழ்வாரின் அடியார்க்கு அடியான்!! மற்றவர்களை மண்டையில் நையப் புடைக்கும் கைத்தடியான்!” என்று தடியைத் தூக்கிக் காட்டினான்.

“ஆழ்வார்க்கடியார்க் கடியானே! நீ ஏன் உன் தலையில் முன்புறத்தில் குடுமி வைத்திருக்கிறாய்? அதையும் மழுங்கச்

சிரைத்து விட்டாயானால், உன் மண்டையின் உள்ளும் புறமும் ஒன்றாயிருக்கும்!" என்றார் ஒரு சைவர்.

"பட்டர்களே! இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்திலே வந்து என் முன் குடுமியை எடுத்து விடுவதாகவே எண்ணியிருந்தேன். அதற்குள் நீங்களே ஞாபகப்படுத்தினீர்கள்!..."

"அடே! நாவிதர் தெருவுக்குச் சென்று ஒரு நாவிதனை அழைத்து வாருங்களடா! கத்தியை நன்றாய்த் தீட்டிக் கொண்டு வரச் சொல்லுங்கள்! இவனுடைய சிகையை ஆணி வேரோடு களைந்தெறியச் சொல்லாம்!" என்றார் ஒரு பட்டர்.

"இதற்கு நாவிதனைக் கூப்பிடுவானேன்? நாமே அந்தக் கைங்கர்யம் செய்து விடலாமே? நல்ல கூர்மையான கத்தியாகக் கொண்டு வாருங்கள்!" என்றார் இன்னொரு சைவர்.

"கொஞ்சம் பொறுங்கள்; இன்னும் ஒரு விஷயம் பாக்கியிருக்கிறது. ஒரு காலத்தில் என் தலை முழுதும் சிகை அடர்த்தியாக இருந்தது. ஒரு சைவனுடைய மண்டையை உடைத்து விட்டு என் சிகையிலிருந்து ஒரு ரோமத்தை வாங்கி விடுவதென்று விரதம் எடுத்துக் கொண்டேன். அதன்படி முக்காலே அரைக்கால்வாசி சிகை தீர்ந்து விட்டது. இந்த ஊரில் என் முழு விரதத்தையும் நிறைவேற்றிக் கடலில் ஒரு முழுக்குப் போடப் போகிறேன். எங்கே ஒவ்வொருவராக உங்களுடைய மண்டையைக் காட்டுங்கள், பார்க்கலாம்!" என்று ஆழ்வார்க்கடியான் கைத்தடியை ஓங்கினான்.

"அடேடே! இந்த வைஷ்ணவன் என்ன துடுக்காகப் பேசுகிறான்?" என்று சொன்னார் ஒருவர்.

"எங்கள் எல்லோருடைய மண்டையையும் உடைத்து விடுவாயா? உன்னால் முடியுமா?" என்று கூறினார் இன்னொருவர்.

"முடியாமலா முக்காலே அரைக்கால் பங்கு சிகையை எடுத்து விட்டிருக்கிறேன்?" என்று கூறி ஆழ்வார்க்கடியான் தடியை வேகமாகச் சுழற்றத் தொடங்கினான்.

"அடியுங்கள்! பிடியுங்கள்! கட்டுங்கள்! வெட்டுங்கள்!" என்று தலைக்குத் தலை கத்தினார்களே தவிர, அக்கூட்டத்தில் யாரும் ஆழ்வார்க்கடியானுக்கு அருகில் நெருங்கவில்லை.

அச்சமயம் வெகு சமீபத்தில் எழுந்த ஒரு கோஷம் அவர்கள் எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்தது.

"திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தர சோழ பராந்தகரின் மகா மான்ய முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மாதிராஜர் வருகிறார்! பராக்! பராக்!"

எல்லாரும் திகைத்துப் போய்க் கோஷம் வந்த திசையை நோக்கினார்கள். ஆழ்வார்க்கடியான் எல்லாரிலும் அதிகமாகத் திகைத்துத் தனது கைத்தடியைக் கக்கத்தில் வைத்துக் கொண்டு பார்த்தான்.

அவர்கள் நின்று சண்டையிட்ட இடம் இராமேசுவரக் கோயில் மதிலின் ஓரமான ஒரு முடுக்கு. அந்த முடுக்குத் திரும்பியதும் எதிரே விரிந்து பரந்த கடல். அக்கடலின் காட்சியோ கண்கொள்ளாத அற்புதக் காட்சியாயிருந்தது. பெரிய பெரிய மரக் கலங்கள், நாவாய்கள், சிறிய கப்பல்கள், படகுகள், ஓடங்கள், வள்ளங்கள், வத்தல்கள், கட்டுமரங்கள் ஆகியவை நெடுகிலும் வரிசை வரிசையாகக் கண்ணுக்கெட்டிய தூரம் காணப்பட்டன. பாய்மரங்களிலிருந்து படபடவென்று காற்றில் அடித்துக் கொண்டு பறந்த வெண்ணிறப் பாய்கள், கடலையும் வானத்தையும் தூரத்திலே திட்டுத் திட்டாகத் தோன்றிய பல தீவுகளையும் பெரும்பாலும் மறைத்துக் கொண்டிருந்தன.

மேலே சொன்னவாறு கட்டியங் கூறிக் கொண்டு காவல் வீரர்கள் முன்னும் பின்னும் தொடர, சோழ சாம்ராஜ்யத்தின் புகழ்பெற்ற முதன் மந்திரி அன்பில்



அநிருத்தப் பிரமராயர் ராஜ கம்பீரத்துடன் ஒரு படகில் வந்து கொண்டிருந்தார். கரையில், கோயில் மதில் ஓரமாக நடந்து கொண்டிருந்த சச்சரவை அவர் கவனித்தார். கூட்டத்தின் நடுவில் சக்கத்தில் தடியுடன் பரம சாது வைப் போல நின்ற ஆழ்வார்க்கடி யானைக் கையினால் சமிக்ஞை செய்து அருகில் அழைத்தார். ஆழ் வார்க்கடியான் பயபக்தியுடன் கையைக் கட்டிக் கொண்டு கடற்கரை யோரம் சென்று நின்றான்.

"திருமலை! இது என்ன தெருக்கூத்து?" என்றார் அநிருத்தர்.

"குருவே! எல்லாம் கபட நாடக சூத்திர தாரியான அந்தக் கண்ணனின் திருக் கூத்துதான்! என் கண்களில் காண்பதை நான் நம்புவதா, இல்லையா என்றே தெரியவில்லை. நான் காண்பது கனவா? அல்லது எல்லாம் வெறும் மாயையா?..."

"திருமலை! உன்னைப் பரம வைஷ்ண வன் என்று நினைத்தேன். எப்போது பிரபஞ்சத்தை மித்தை என்று சொல்லும் மாயாவாதியானாய்?"

"குருவே! பரம வைஷ்ணவ பரம் பரையில் அவதரித்த தாங்கள் சைவ சமயி ஆகும்போது நான் ஏன் மாயாவாதி ஆகக் கூடாது? என்னுடைய பெயரை மாற்றிக் கொண்டு ஸ்ரீ சங்கர பகவத் பாதாச்சார் யாரின் அடியார்க்கடியன் ஆகிவிடு கிறேன்..."

"பொறு! பொறு! நான் சைவ சமயி ஆனதாக யார் சொன்னது?"

"தங்கள் திருமேனியில் உள்ள சின்னங் கள் சொல்கின்றன!"

"ஆகா! திருமலை! நீ இன்னும் முன் போலவே இருக்கிறாய்! புறச் சின்னங் களுக்கே முக்கியம் கொடுக்கிறாய்! நெற்றி யில் இடுகிற சந்தனத்தைச் சாய்த்து இட் டால் என்ன? நிமிர்த்தி இட்டால் என்ன?"

"குருவே! நான் ஒன்றும் அறியாதவன்; எது முக்கியம், எது அமுக்கியம் என்று அறியாதவன். தாங்கள்தான் என்னைத் தெளிவித்து ஆட்கொள்ள வேண்டும்."

"எல்லாம் தெளிவிக்கிறேன். நான் தங்கும் இடத்துக்கு வந்து சேர்! அதோ கடலில் ஒரு சிறிய தீவு தெரிகிறது பார்த் தாயா? அங்கேயுள்ள மண்டபத்துக்கு வா!"

"குருவே! இதோ இந்தச் சண்டைக் காரச் சைவர்கள் என்னை வரவிட வேண்டுமே?" என்று ஆழ்வார்க்கடியான் சொல்லிக் கையினால் அவர்களைச் சுட் டிக்காட்டினான்.

அதுவரை சும்மாயிருந்த வீர சைவர் கள் உடனே நெருங்கி வந்தார்கள்.

"பிரம்மாதி ராஜரே! இந்த வைஷ்ண வன் எங்கள் மண்டைகளை உடைத்து விடுவானாம்! இவனைத் தக்கபடி தண் டிக்க வேண்டும்!" என்று ஒருவர் ஆரம் பித்தார். மற்றவர்கள் தலைக்குத் தலை பேசலானார்கள்.

"இவனுக்குத் தண்டனை நான் கொடுக்கிறேன். நீங்கள் போகலாம்" என்றார் அநிருத்தர்.

இதனால் அவர்கள் திருப்தி அடைய வில்லை. "நாங்களே இவனுக்குத் தண் டனை கொடுக்கக் கூடாதா? இவனுடைய முன் குடுமியைச் சிரைத்து, இவனுடைய ஊர்த்வ சின்னங்களையெல்லாம் அழித்து, இவனைக் கிணற்றில் போட்டு முழுக் காட்டி..." என்று அடுக்கினார் ஒருவர்.

"என்ன சொன்னீர்கள்?" என்று ஆழ்வார்க்கடியான் கண்களில் தீ எழத் திரும்பி நோக்கினான்.

அநிருத்தப் பிரமராயர் அப்போது "பட்டர் மணிகளே! இவன் பெரிய முரடன். இவனைத் தண்டிக்க உங்களால் ஆகாது. நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார்.

பிறகு தம்மைத் தொடர்ந்து வந்த படகில் இருந்த அகப்பரிவார வீரர்களைப் பார்த்து, "உங்களில் எட்டுப் பேர் இறங்கி இவனை நம் இடத்துக்குக் கொண்டு வாருங்கள்!" என்றார்.

அவ்வளவுதான். மறுகணம் வீரர்கள் எட்டுப் பேர் கரையில் குதித்தார்கள்; ஆழ்வார்க்கடியானைச் சூழ்ந்து கொண்டு நின்றார்கள்.

படகு மேலே சென்றது.

படை வீரர்கள் புடைசூழ ஆழ்வார்க்கடியானும் போனான்.

பட்டர்களும் மற்றவர்களும் அந்த வைஷ்ணவனுடைய முரட்டுத்தனத்தைக் குறித்துப் பலவாறு பேசிக் கொண்டு கலைந்து போனார்கள்.

பதினொன்றாம் அத்தியாயம்

தெரிஞ்ச கைக்கோளப் படை

இராமேசுவரப் பெருந் தீவை யடுத்த சிறிய தீவுகளில் ஒன்றில், ஒரு பழைமையான மண்டபத்தில், அநிருத்தப் பிரம்மாதிராயர் கொலு வீற்றிருந்தார். அவருடைய அமைச்சர் வேலையை நடத்துவதற்குரிய சாதனங்கள் அவரைச் சூழ்ந்திருந்தன. கணக்கர்கள், ஓலை எழுதும் திருமந்திர நாயகர்கள், அகப்பரிவாரக் காவலர்கள் முதலியோர் அவரவர்களுடைய இடத்தில் ஆயத்தமாக இருந்தார்கள்.

அநிருத்தர் படகிலிருந்து இறங்கி வந்து அம்மண்டபத்தில் அமர்ந்து சிறிது நேரம் ஆனதும், தம்மைப் பார்க்க வந்திருந்தவர்களை அழைக்குமாறு கட்டளையிட்டார்.

ஐந்து பேர் முதலில் வந்தார்கள். அவர்களைப் பார்த்தால் செல்வச் செழிப்புள்ள வர்த்தகர்கள் என்று தோன்றியது.

ஒரு தட்டில் நவரத்தின மாலை ஒன்றை வைத்துச் சமர்ப்பித்தார்கள். அதை அநிருத்தப் பிரமராயர் வாங்கிக் கணக்கரிடம் கொடுத்து, "செம்பியன் மகாதேவியின் ஆலயத் திருப்பணிக்கு என்று எழுதி வைத்துக் கொள்க!" என்றார்.

பிறகு, வந்தவர்களைப் பார்த்து "நீங்கள் யார்?" என்று கேட்டார்.

"நானா தேச திசையாயிரத்து ஐந்நூற்றுவர்* சார்பில் நாங்கள் வந்திருக்கிறோம்" என்று அவர்களில் ஒருவர் கூறினார்.

"சந்தோஷம்; பாண்டிய நாட்டில் உங்களுடைய வாணிபம் செழிப்பாயிருக்கிறதல்லவா? பாண்டிய நாட்டு மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்?"

"பாண்டிய வம்ச ஆட்சியைக் காட்டிலும் சோழகுல ஆட்சியே மேலானது என்று பேசிக் கொள்கிறார்கள். முக்கியமாக, இளவரசர் அருள்மொழிவர்மரின் வீர தயாளங்களைக் குறித்துச் சிலாகிக்கிறார்கள். இலங்கையில் நடப்பதெல்லாம் இந்தப் பக்கத்து மக்களிடையில் பரவியிருக்கிறது...."

"கீழ்க்கடல் நாடுகளுடன் உங்கள் கப்பல் வாணிபம் இப்போது எப்படியிருக்கிறது?"

"சுந்தர சோழச் சக்கரவர்த்தியின் ஆளுகையில் ஒரு குறைவும் இல்லை. சென்ற ஆண்டில் அனுப்பிய எங்கள் கப்பல்கள்

* **இந்த நீண்ட தொடர் பெயர் கொண்ட வர்த்தகக் கூட்டத்தார் சோழப் பேரரசின் கீழ், கடல் கடந்த நாடுகளுடன் வாணிபம் நடத்தி வந்தார்கள்.**

எல்லாம் திரும்பி வந்து விட்டன. ஒன்று கூடச் சேதமில்லை."

"கடல் கொள்ளைக்காரர்களினால் தொல்லை ஒன்றுமில்லையே?"

"சென்ற ஆண்டில் இல்லை. மானக்கவாரத் தீவுக்கு அருகில் இருந்த கடற் கொள்ளைக்காரர்களை நம் சோழக் கப்பற் படை அழித்த பிறகு கீழைக் கடல்களில் கொள்ளை பயம் கிடையாது."

"நல்லது; நாம் கொடுத்தனுப்பிய ஓலை சம்பந்தமாக என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?"

"கட்டளைப்படி செய்திருக்கிறோம். இலங்கைச் சைன்யத்துக்கு அனுப்ப ஆயிரம் மூட்டை அரிசியும், ஐந்நூறு மூட்டை சோளமும், நூறு மூட்டை துவரம் பருப்பும் இந்த இராமேசுவரத் தீவில் கொண்டு வைத்திருக்கிறோம். இலங்கைக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்ய வேணும்."

"உங்களுடைய கப்பல்களிலேயே ஏற்றி அனுப்ப முடியுமா?"

"கட்டளையிட்டால் செய்கிறோம். இலங்கை யுத்தம் எப்போது முடியும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறோம்."

"ஆ! அது யாருக்குத் தெரியும்? உங்களுடைய வர்த்தக சபைக்கு ஜோதிடக்காரன் இருக்கிறான் அல்லவா? அவனைக் கேட்டு எனக்கும் சொல்லுங்கள்!"

"பிரம்மராஜரே! எங்கள் ஜோதிடக்காரன் சொல்வதையெல்லாம் எங்களாலேயே நம்ப முடியவில்லை."

"அப்படி அவன் என்ன சொல்லுகிறான்?"

"இளவரசர் அருள்மொழி வர்மர் போகுமிடமெல்லாம் வெற்றிதான் என்று சொல்லுகிறான். அவருடைய ஆட்சியில் சோழக் கப்பல் படை கடல் கடந்த தேசங்களுக்கெல்லாம் சென்று வெற்றி கொள்ளும் என்று சொல்லுகிறான். தூரத்தில் உள்ள தேசங்கள் பலவற்றில் புலிக் கொடி பறக்கும் என்று சொல்லுகிறான்."

"அப்படியானால் உங்கள் பாடு கொண்டாட்டம்தான்!"

"ஆம்; எங்கள் கடல் வர்த்தகம் மேலும் செழித்து ஓங்கும் என்றும் சொல்லியிருக்கிறான்."

"மிகவும் சந்தோஷம். ஸ்ரீ ரங்கநாதருடைய அருள் இருந்தால் அப்படியே நடக்கும். இலங்கையில் யுத்தம் நடக்கும் வரையில் மாதம் ஒரு தடவை நீங்கள் இப்படியே அரிசி முதலியவை அனுப்பி வர வேண்டும். போய் வாருங்கள்."

"அப்படியே செய்கிறோம், போய் வருகிறோம்."

ஐந்நூற்றுவர் சபையின் பிரதிநிதிகள் போன பிறகு, ஒரு காவலன் வந்து, "தெரிஞ்ச கைக்கோளப் படைச் சேனாதிபதிகள் காத்திருக்கிறார்கள். பார்க்க விரும்புகிறார்கள்" என்று சொன்னான்.

"வரச் சொல்லு!" என்றார் முதல் அமைச்சர் அநிருத்தர்.

மூன்று கம்பீர புருஷர்கள் பிரவேசித்தார்கள். அவர்களுடைய முகங்களிலும் தோற்றத்திலும் வீர லக்ஷ்மிவாசம் செய்தாள். அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்டையாளர் என்று பார்த்தவுடனே தெரிந்தது.

"சுந்தர சோழ தெரிஞ்ச கைக்கோளப் படையார்* தானே?" என்று அநிருத்தர் கேட்டார்.

"ஆம், ஐயா! ஆனால் அப்படிச் சொல்லிக் கொள்ளவும் எங்களுக்கு வெட்கமாயிருக்கிறது."

"அது, ஏன்?"

"சக்கரவர்த்தியின் சோற்றைத் தின்று கொண்டு ஆறு மாத காலமாக இங்கே வீணில் காலங்கழித்துக் கொண்டிருக்கிறோம்."

---

* இன்று தமிழ்நாட்டில் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டு நூலின்றித் திண்டாடும் கைக்கோள வகுப்பார் சோழப் பேரரசின் காலத்தில் புகழ்பெற்ற வீரவகுப்பாராயிருந்தனர். அவர்களில் பொறுக்கி எடுத்த வீரர்களைக் கொண்டு சோழ சக்கரவர்த்தி 'அகப் பரிவாரப் படை'யை அமைத்துக் கொள்வது வழக்கம். அப்படிப் பொறுக்கி எடுக்கப்பட்ட படைக்குத் 'தெரிஞ்ச கைக்கோளர் படை' என்ற பெயர் வழங்கியது. அந்தச் சக்கரவர்த்தி அல்லது அரசரின் பெயரையும் படைப் பெயருக்கு முன்னால் சேர்த்துக் கொள்வதுண்டு.



''உங்கள் படையில் எத்தனை கை? எத்தனை வீரர்கள்?''

''எங்கள் சேனை மூன்று கைமா சேனை. இவர் இடங்கை சேனைத் தலைவர்; இவர் வலங்கை சேனைத் தலைவர்; நான் நடு விற்கைப் படைத் தலைவன். ஒவ்வொரு கையிலும் இரண்டாயிரம் வீரர்கள். எல்லோரும் சாப்பிட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறோம். வேலும் ஈட்டியும் வாளும் தோளும் சோம்பிக் கிடக்கின்றன. போர்த் தொழிலே எங்களுக்கு மறந்து விடும் போலிருக்கிறது.''

''உங்களுடைய கோரிக்கை என்ன?''

''எங்களை இலங்கைக்கு அனுப்பி வைக்கக் கோருகிறோம். இளவரசர் அருள்மொழிவர்மர் மாதண்ட நாயகராயிருக்கும் சைன்யத்திலே சேர்ந்து யுத்தம் செய்ய விரும்புகிறோம்.''

''ஆகட்டும்; தஞ்சைக்குப் போனதும் சக்கரவர்த்தியின் சம்மதம் கேட்டு விட்டு உங்களுக்கு அறிவிக்கிறேன்.''

''பிரம்மராஜரே! அதற்குள்ளே இலங்கை யுத்தம் முடிந்து விட்டால்?''

''அந்தப் பயம் உங்களுக்கு வேண்டாம். இலங்கை யுத்தம் இப்போதைக்கு முடியும் என்பதாகத் தோன்றவில்லை.''

''ஈழத்துச் சேனா வீரர்கள் அவ்வளவு பொல்லாதவர்களா? எங்களை அங்கே அனுப்பி வையுங்கள். ஒரு கை பார்க்கிறோம்!...''

''ஒரு கை என்ன? நீங்கள் மூன்று கையும் பார்ப்பீர்கள். தெரிஞ்ச கைக் கோளரின் மூன்று கை மாசேனை யுத்த களத்தில் புகுந்து விட்டால் பகைவர்களின் பாடு என்னவென்று சொல்ல



வேண்டுமோ? நடுவிற்கை வீரர்கள் பகைவர் படையின் நடுவில் புகுந்து தாக்குவீர்கள். அதே சமயத்தில் இடங்கை வீரர்கள் இடப்புறத்திலும் வலங்கை வீரர்கள் வலப்புறத்திலும் சென்று இடி விழுவது போலப் பகைவர்கள் மீது விழுந்து தாக்குவீர்கள்..."

"அப்படித் தாக்கித்தான் பாண்டிய சைன்யத்தை நிர்மூலம் செய்தோம்; சேரர்களை முறியடித்தோம்."

"பாண்டியர்களும் சேரர்களும் போர்க்களத்தில் எதிர்த்து நின்றார்கள்; அதனால் அவர்களைத் தாக்கி முறியடித்தீர்கள். பகை வீரர்களை முதலில் கண்ணால் பார்த்தால்தானே அவர்களை நீங்கள். ஒரு கையும் பார்க்கலாம், மூன்று கையும் பார்க்கலாம்?"

"இராவணர் காலத்து அசுரர்களைப் போல் இந்தக் காலத்து இலங்கை வீரர்களும் மாயாவிகளாகி விட்டார்களா? மேக மண்டலத்தில் மறைந்து நின்று போரிடுகிறார்களா?"

"மாயாவிகளாய் மறைந்துதான் விட்டார்கள்; ஆனால் போர் செய்யவில்லை. போரிட்டால்தான் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து விடலாமே? இலங்கை அரசன் மகிந்தனையும் காணவில்லை; அவனுடைய சேனா வீரர்களையும் காணவில்லை. காடுகளிலே, மலைகளிலே எங்கே போய் ஒளிந்து கொண்டார்களோ, தெரியவில்லை. ஆகையால், ஆறு மாதமாக இலங்கையில் யுத்தமே நடைபெறவில்லை. உங்களையும் அங்கே அனுப்பி என்ன செய்கிறது?"

"மகா மந்திரி! எங்களை அனுப்பிப் பாருங்கள்! மகிந்தனும் அவனுடைய வீரர்களும் காடு மலைகளிலே ஒளிந்திருக்கட்டும்; அல்லது மேக மண்டலத்திலே ஒளிந்திருக்கட்டும். அவர்களைக் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டு வந்து இளவரசரின் காலடியில் சேர்க்கிறோம். அப்படிச் சேர்க்காவிட்டால், 'தெரிஞ்ச கைக்கோளர் படை' என்ற பெயரை மாற்றிக் கொண்டு, 'வேளாளரின் அடிமைப் படை' என்ற பட்டயத்தைப் பெற்றுக் கொள்கிறோம்!"

"வேண்டாம்; வேண்டாம்! அப்படி ஒன்றும் இப்போது சபதம் செய்ய வேண்டாம்! தெரிஞ்ச கைக்கோளர் படையின் வீர பராக்கிரமம் இந்த ஜம்புத்வீபத்தில் யாருக்குத் தெரியாது? தஞ்சாவூர் சென்றதும் சக்கரவர்த்தியைக் கேட்டுக் கொண்டு உங்களுக்குக் கட்டளை அனுப்புகிறேன். அதுவரை பொறுமையாக இருங்கள். பாண்டிய நாட்டில் பகைவர்களை அடக்கி அமைதியை நிலைநாட்டி வாருங்கள்!"

"மகாமந்திரி! பாண்டிய நாட்டில் இனி அடக்குவதற்குப் பகைவர் யாரும் இல்லை. குடிமக்கள் யுத்தம் நின்றது பற்றி மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். அவரவர்களும் விவசாயம், வாணிபம், கைத்தொழில்களில் ஈடுபட்டு அமைதியான வாழ்க்கை நடத்துகிறார்கள். பாண்டிய மன்னர் குலமோ நாசமாகி விட்டது..."

"அவ்விதம் எண்ண வேண்டாம்! வீர பாண்டியனோடு பாண்டிய வம்சம் அற்று விட்டதாக நினைக்கிறீர்கள். அது தவறு. பாண்டிய சிம்மாசனத்துக்கு உரிமை கோருவோர் இன்னும் இருக்கிறார்கள். அவர்களுக்காகச் சதி செய்வோரும் இருக்கிறார்கள்...!"

"ஆகா! எங்கே அந்தச் சதிகாரர்? தெரியப்படுத்துங்கள்!"

"காலம் வரும்போது உங்களுக்கே தெரியும். பாண்டிய குலத்தின் பழைமையான மணிக்கிரீடமும் இந்திரன் அளித்த இரத்தின மாலையும் வைரமிழைத்த பட்டத்து உடைவாளும் இன்னும் இலங்கையில் இருந்து வருகின்றன. ரோஹண மலைநாட்டில் எங்கேயோ ஒளித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை மீட்டுக் கொண்டு வரும் வரையில் பாண்டியப் போர் முற்றுப் பெறாது."

"ஆபரணங்களை மீட்டுக் கொண்டு வரவேண்டும்;. இளவரசர் அருள்மொழிவர்மரை மதுரைச் சிம்மாசனத்தில் அமர்த்திப் பாண்டிய மணிமகுடத்தையும் பட்டாக் கத்தியையும் அணிவிக்கும் நாளும் வர வேண்டும்!"

"ஆகா! இது என்ன வார்த்தை சொல்கிறீர்கள்?"



"குடிமக்களின் நாவிலும் போர் வீரர்களின் உள்ளத்திலும் இருப்பதைச் சொல்கிறோம்.''

"அதெல்லாம் பெரிய இராஜரீக விஷயங்கள். நாம் பேச வேண்டாம். உங்களுக்குச் சந்தோஷமளிக்கக்கூடிய வேறு ஒரு முக்கிய விஷயம் சொல்லப் போகிறேன்..."

"கவனமாய்க் கேட்டுக் கொள்கிறோம், மகா மந்திரி!"

''இலங்கை யுத்தத்தோடு யுத்தம் முடிந்து விடும் என்று நினைக்க வேண்டாம். இளவரசர் அருள்மொழிவர்மர் இலங்கைப் போர் முடிந்த பிறு நாலா திசைகளிலும் திக்விஜயம் செய்யப் புறப்படுவார். ஆயிரம் கப்பல்களில் வீரர்களை ஏற்றிக் கொண்டு கிழ்த்திசைக் கடல்களிலே செல்வார். மாநக்கவாரம், மாபப்பாளம், மாயிருடிங்கம், கடாரம், இலாமுரி தேசம், ஸ்ரீவிசயம், சாவகம், புட்பகம் ஆகிய நாடுகளை அந்த மகா வீரர் வெற்றி கொள்வார். தெற்கே முன்னீர்ப் பழந் தீவு பன்னீராயிரமும் கைப்பற்றுவார். மேற்கே கேரளம், குடமலை, கொல்லம் ஆகிய நாடுகள் அவருடைய காலடியில் வந்து பணியும். பிறகு வடதிசை நோக்கிப் புறப்படுவார். வேங்கி, கலிங்கம், இரட்டபாடி, சக்கரக்கோட்டம், அங்கம், வங்கம், கோசலம், விதேகம், கூர்ஜரம், பாஞ்சாலம் என்னும் நாடுகளுக்குப் படையெடுத்துச் செல்வார். காவியப் புகழ்பெற்ற கரிகால் வளவனைப் போல் இமய மலைக்கும் சென்று புலிக் கொடியை நாட்டுவார். வீர சேனாதிபதிகளே! இப்படியெல்லாம் நமது தென்திசை மாதண்ட நாயகர் திட்டம் இட்டிருக்கிறார். தமிழகத்தில் வீர ரத்தமும் வயிர நெஞ்சமும் படைத்த அனைவருக்கும் வேண்டிய வேலை இருக்கும்; தத்தம் வீர பராக்கிரமங்களை நிலைநாட்டச் சந்தர்ப்பம் கிடைக்கும். ஆகையால் நீங்களும் உங்கள் தெரிஞ்ச கைக்கோளப் படையும் பொறுமை இழக்க வேண்டாம்!"

சேனாதிபதிகள் மூவரும் ஏக காலத்தில் 'சுந்தர சோழ சக்கரவர்த்தி வாழ்க! இளவரசர் அருள்மொழிவர்மர் வாழ்க! மகா மந்திரி அநிருத்தர் வாழ்க!' என்று கோஷித்தார்கள்.

பிறகு அவர்களில் ஒரு படைத் தலைவன் கூறினான்:- "மகா மந்திரி! இன்னும் ஒரே ஒரு விண்ணப்பம் செய்து கொள்ள விரும்புகிறோம். எங்கள் படையின் பெயர் 'சுந்தர சோழ தெரிஞ்ச கைக்கோளப்



படை என்பது தாங்கள் அறிந்ததே."

"தெரிந்த விஷயந்தான்."

"சுந்தர சோழச் சக்கரவர்த்தியின் திருப்பணியில் உயிரையும் விடுவோம் என்று பகைவர்களின் இரத்தம் தோய்ந்த சிவந்த கையினால் அடித்துப் பிரமாணம் செய்து கொடுத்தவர்கள்."

"அதுவும் நான் அறிந்ததே."

"ஆகையால் சக்கரவர்த்தியைத் தவிர வேறு யாரையும் நாங்கள் சேர மாட்டோம்; வேறு யார் சொல்வதையும் கேட்க மாட்டோம்."

"உங்களிடம் நான் எதிர்பார்த்ததும் இதுவேதான்!"

"முன்னொரு காலத்தில் பழுவேட்டரையர்களின் மாபெரும் சேனையில் ஒரு பகுதியாக இருந்தோம். அது காரணம் பற்றி எங்கள் பேரில் யாருக்கும் யாதொரு சந்தேகமும் ஏற்படக் கூடாது..."

"ஆகா! இது என்ன வார்த்தை? யாருக்கு என்ன சந்தேகம்?"

"தஞ்சாவூரில் நடப்பது பற்றி ஏதேதோ வதந்திகள் காற்றிலே வருகின்றன."

"காற்றிலே வருகிறது காற்றோடு போகட்டும்! நீங்கள் அதையெல்லாம் நம்பவும் வேண்டாம்; திரும்பிச் சொல்லவும் வேண்டாம்."

"கொடும்பாளூர் வேளாளர்கள் ஏதாவது எங்களைப் பற்றிச் சந்தேகத்தைக் கிளப்பக்கூடும்..."

"கிளப்ப மாட்டார்கள்; கிளப்பினாலும் யாரும் கேட்க மாட்டார்கள்."

"மனித காயம் அநித்தியமானது..."

"அதனால் சுத்த வீரர்கள் உயிருக்குப் பயப்பட மாட்டார்கள்."

"திரிபுவனச் சக்கரவர்த்தியானாலும் ஒருநாள்..."

"இறைவன் திருப்பாதங்களை அடைய வேண்டியதுதான்."

"சக்கரவர்த்திக்கோ உடல்நிலை சரியாக இல்லை..."

"வானத்தில் வால் நட்சத்திரம் பிரகாசிக்கிறது!"

"சக்கரவர்த்திக்கு அப்படி ஏதாவது நேர்ந்து விட்டால், எங்கள் படை வீரர்கள் அருள்மொழி வர்மரின் அகப்பரிவாரமாக விரும்புகிறார்கள்!"

"சக்கரவர்த்தியின் ஆக்ஞையின்படி நடப்பது உங்கள் கடமை!"

"சக்கரவர்த்தியின் ஆக்ஞையை எங்களுக்குத் தெரிவிப்பது தங்களுடைய கடமை. தாங்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லது தஞ்சைக்குப் போய்ச் சக்கரவர்த்தியைத் தரிசிக்க எங்களுக்கு அனுமதி கொடுங்கள்!..."

"வேண்டாம்; நீங்கள் தஞ்சை போவது உசிதமல்ல; வீண் குழப்பம் ஏற்படும். சக்கரவர்த்தியைக் கண்டு உங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்துவதை நானே ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் நிம்மதியாக இருங்கள்!"

"தங்களிடம் தெரியப்படுத்தியதுமே எங்களுடைய மனத்திலிருந்த பாரம் நீங்கி விட்டது! போய் வருகிறோம்!"

தெரிஞ்ச கைக்கோளப் படைத் தலைவர்கள் மூவரும் அங்கிருந்து அகன்று சென்றார்கள்.

அநிருத்தப் பிரமராயர், "ஆகா! பொன்னியின் செல்வரிடம் அப்படி என்னதான் ஆகர்ஷண சக்தி இருக்குமோ, தெரியவில்லை! அவரை ஒருமுறை பார்த்தவர்கள் கூடப் பைத்தியமாகி விடுகிறார்களே!" என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டார்.

பிறகு, உரத்த குரலில், "எங்கே? அந்த முரட்டு வைஷ்ணவனை இங்கே வரச் சொல்லுங்கள்!" என்று கட்டளையிட்டார்.

(தொடரும்)

கஞ்சியும் இனியது!

கல்கி கலெக்ஷன்

இந்தியா அடைந்த சுதந்தரத்தைப் பற்றி அவ்வப்போது சில அபஸ்வரப் பல்லவிகள் பாடப்படுவதைக் கேட்கிறோம். அர்த்தமில்லாத வார்த்தைகளும் மௌடீகமான பேச்சுக்களும், பேசப்படுவதைக் கேட்கிறோம்.

"சுதந்தரம் வந்து என்ன பயன்? அரிசி ரேஷன் அதிகமாகவில்லையே?" என்று சிலர் சொல்கிறார்கள்.

"சுதந்தரம் வந்து என்ன பயன்? கடலைப் பிண்ணாக்கு விலை குறையவில்லையே?" என்று சிலர் புகார் கூறுகிறார்கள்.

"சுதந்தரம் வந்து விட்டதனால் என்ன ஆயிற்று? வீட்டு வாடகை குறைந்ததா? குமாஸ்தா சம்பளம் உயர்ந்ததா? தொழிலாளருக்கு வேலை செய்யாமல் கூலி கிடைக்கிறதா?" என்று சிலர் சம்பந்தமில்லாமல் கேள்விகளைப் போடுகிறார்கள்.

"அரசியல் சுதந்தரம் வந்துவிட்டால் போதுமா? பொருளாதார சுதந்தரம் இல்லையே? பேசச் சுதந்தரம்





இல்லையே? சாகச் சுதந்தரம் இல்லையே? கள்ளுக் குடிக்கக் கூடச் சுதந்தரம் இல்லையே?'' என்று சில சாம்பிராணிகள் 'சுதந்தரம்' என்னும் வார்த்தைக்கே பொருள் தெரியாமல் பேசுகிறார்கள்.

நம்முடைய திடமான கொள்கை-அசைக்க முடியாத நம்பிக்கை இந்த விஷயத்தில் என்னவென்றால்:-

ஒரு நாட்டுக்கும் அந்த நாட்டு மக்களுக்கும் அரசியல் சுதந்தரம் மற்ற எந்த நன்மையைக் காட்டிலும் மேலானது.





வறுமையும் பஞ்சமும் நாட்டில் தாண்டவமாடினாலும் சுதந்தர ஆட்சிதான் மேலானது.

அன்னியர்களின் ஆட்சியில் குபேரச் சீமானாயிருப்பதை விடச் சுதந்தர ஆட்சியில் பரம தரித்திரனாக வாழ்வதே விரும்பத்தக்கது.

அன்னிய ஆட்சியின் கீழ், தினம் நாலு வேளை வயிறார உண்பதைக் காட்டிலும், நம்முடைய சொந்த சுதந்தர ஆட்சியில், நாம் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளின் ஆட்சியில், பஞ்சத்தினால் செத்துப் போவதே மேலானது.

சுதந்தரத்துக்காக இந்த நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களையெல்லாம் மூடிவிட வேண்டும் என்று சொன்னால் அதற்கும் நாம் தயாராயிருக்க வேண்டும்.

சுதந்தரத்துக்காக இந்த நாட்டிலுள்ள வீடுகளை எல்லாம் இடித்துப் போட வேண்டும், மக்கள் அனைவரும் இறந்த வெளியிலோ மலைக் குகையிலோ வசிக்க வேண்டும் என்றால் அதற்கும் தயாராயிருக்க வேண்டும்.

வீட்டுக்கு ஒரு பிள்ளையை நாட்டுக்காகப் பலி கொடுக்க வேண்டுமென்றால் மக்கள் அவ்விதம் செய்யப் போட்டியிட்டுக் கொண்டு முன் வரவேண்டும்.

இப்படியெல்லாம் சுதந்தரத்துக்காகத் தியாகம் செய்யத் தயாராயிருக்கும் மக்கள் தான் சுதந்தரத்துக்கு லாயக்கானவர்கள். அவர்கள் தான் சுதந்தரமாய் வாழ முடியும். இவ்விதமெல்லாம் தியாகம் செயயத் தயாராயிருந்ததினாலேதான், இங்கிலாந்து, பிரான்ஸு, அமெரிக்கா, ருஷியா, சீனா முதலிய நாடுகள் இன்று சுதந்தர தேசங்களாயிருக்கின்றன. இல்லாவிடில் அந்த நாடுகள் எல்லாம் இந்த நேரத்தில் ஜெர்மனிக்கும்

ஜப்பானுக்கும் அடிமை பூண்டு வாழ வேண்டி நேர்ந்திருக்கும்.

"சுதந்தரம்" என்று சொல்லும் போது ஒரு நாட்டின் அரசியல் சுதந்தரத்தைத்தான் நாம் முதன்மையாகக் குறிப்பிடுகிறோம்.

அரசியல் சுதந்தரந்தான் மிக முக்கியமானது. மற்றப் பொருளாதார சுதந்தரம், வியாபார சுதந்தரம், தொழில் சுதந்தரம், படிக்கும் சுதந்தரம், படியாமலிருக்கும் சுதந்தரம், அம்மை குத்திக் கொள்ளுகிற சுதந்தரம், குத்திக் கொள்ளாமலிருக்கும் சுதந்தரம், கண்டதைப் பேசி எழுதும் சுதந்தரம்- இவையெல்லாம் இரண்டாம் பட்சமானவைதான். இந்தச் சுதந்தரங்கள் எல்லாம் இல்லை என்பதற்காக அரசியல் சுதந்தரத்தைப் பற்றி அலட்சியமாகப் பேசுவது மடமையிலும் மடமை. அரசியல் சுதந்தரம் ஒன்று இருந்தால் மற்றச் சுதந்தரங்கள் எல்லாம் நாளடைவில் கட்டாயம் பின் தொடர்ந்து வரும். அரசியல் சுதந்தரம் இல்லாவிட்டால் வேறு எந்தச் சுதந்தரமும் ஒரு நாளும்



கிட்டாது. ஆகையால் ஒரு நாட்டின் அரசியல் சுதந்தரத்துக்குக் கேடு சூழும் காரியத்தை அந்த நாட்டுப் பிரஜை எவனும் செய்யக் கூடாது. எந்தக் காரணத்துக்காகவும் செய்யக் கூடாது. செய்கிறவன் தாய் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகியாவான்.

தாய் நாட்டின் சுதந்தரத்துக்காக மற்றத் தேச மக்கள் செய்திருக்கும் தியாகங்களை நோக்கும்போது இந்திய மக்கள் செய்த தியாகங்கள் ஒன்றுமேயில்லை என்று சொல்ல வேண்டும்.

பாரதத் தாய் செய்த பாக்கியத்தினால், நமது முன்னோர் செய்த தவத்தினால், லோகமான்ய திலகர், தாதாபாய் நவுரோஜி, லாலா லஜபதிராய்,தேச பந்து தாஸ், வ.உ.சிதம்பரம் பிள்ளை, மோதிலால் நேரு, சத்தியமூர்த்தி, அஜ்மல்கான், அன்ஸாரி முதலிய தேச பக்தத் தலைவர்கள் தோன்றினார்கள். அவர்களுடைய மகா தியாகங்களினாலும் காந்தி மகாத்மாவின் ஆத்ம சக்தியினாலுமே இந்தியா இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வளவு குறைவான கஷ்டங்களுடன் பரிபூரண அரசியல் சுதந்தரம் அடைந்திருக்கிறது.

அப்படி நாம் பெற்ற சுதந்தரச் செல்வத்தைக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாக்க வேண்டும். அலட்சியமாகயிருப்பதும், அசட்டையாய்ப் பேசுவதும் தற்கொலைக்கொப்பான காரியங்கள்.

நமது முன்னோர்கள் செய்த பூஜா பலத்தினால் இன்று புதுடில்லியில் வீற்றிருந்து இந்தியாவை ஆளுகிறவர்கள் மகா புருஷர்களாயிருக்கிறார்கள். ஜவாஹர்லால், ராஜாஜி, சர்தார் வல்லபாய், ராஜேந்திர பிரஸாத் போன்றவர்கள் தியாக வாழ்க்கைக்கும் தாய் நாட்டின் தொண்டுக்கும் தங்களையே அர்ப்பணம் செய்தவர்கள். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் ஒவ்வொருவரும் பெரிய



வருமானங்களையும் சுக போகங்களையும் அத்தனை காலம் செய்த தொழிலையும் உதறித் தள்ளிவிட்டுச் சுதந்தரப் போரில் இறங்கியவர்கள். ஒரு காலத்தில் இந்திய சர்க்காரின் மந்திரிகளாய் விளங்கி இந்தியாவை ஆளப் போகிறோம் என்று இவர்கள் கனவிலும் கருதியிருக்க மாட்டார்கள். தாய் நாட்டின் தொண்டில் உயிரை அர்ப்பணம் செய்யவும் சித்தமாக முன் வந்தார்கள்.

நம்முடைய பாக்கியம், பாரதத் தாய் செய்த தவம், ஜவாஹர் முதலியவர்கள் இன்னும் உயிரோடிருக்கிறார்கள்.

இவர்களைப் போல் நாட்டை ஆளுவதற்குரிய சகல குணங்களும் பொருந்தியவர்களைப் பெறுவது எளிதல்ல. தற்சமயம் உலகத்தில் எந்த நாடும் இத்தகைய மாபெருந் தலைவர்களைப் பெற்றிருக்கவில்லை.

ஆயிரம் ஆண்டு அடிமைப்பட்டுக்கிடந்த பிறகு, நூற்றைம்பது வருஷம் அன்னியராகிய பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழே இருந்த பிறகு, சென்ற 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15ந் தேதி இந்தியா பூரண அரசியல் சுதந்தரம் அடைந்தது.

அந்த மகத்தான சம்பவம் நிகழ்ந்து இன்றைக்கு ஓராண்டு ஆகிறது.

இந்த ஓராண்டிலும் இந்திய சுதந்தரம் என்னும் குழந்தைக்கு எத்தனையோ பாலாரிஷ்டங்கள் வந்தன. அவற்றையெல்லாம் நம் தலைவர்கள் அரும்பாடுபட்டுப் போக்கினார்கள்.

ஓராண்டு நிரம்பிய சுதந்தரக் குழவியை இன்றைக்கும் பல அபாயங்கள் சூழ்ந்திருக்கின்றன. அந்த அபாயங்களை நம் தலைவர்கள் போக்கி நாட்டின் சுதந்தரத்தை இரட்சிப்பார்கள் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

பாரதத் தாயை வாழ்த்துகிறோம். பாரதத் தாயின் உத்தமப் புதல்வர்களை வணங்குகிறோம். பாரத தேசத்தின் சுதந்தரத்தைப் போற்றுகிறோம்.

சத்தியத்தினாலும் அஹிம்சையினாலும் ஆத்ம தபோ பலத்தினாலும் இந்தியா அடைந்த சுதந்தரம் ஊழி ஊழிகாலம் நிலை பெற்று விளங்குமென்று நம்புகிறோம்; விரும்புகிறோம்; பராசக்தியைப் பிரார்த்திக்கிறோம்.

தூண்டுமின்ப வாடைவீசு துய்ய தேன்கடல்
சூழநின்ற தீவிலங்கு ஜோதி வானவர்
ஈண்டுநமது தோழராகி
எம்மோடமுதம் உண்டு குலவ
நீண்ட மகிழ்ச்சி மூண்டு விளைய
நினைத்திடும் இன்பம் அனைத்தும் உதவ
வேண்டுமடி எப்போதும் விடுதலை
– அம்மா!

(கல்கி, ஆகஸ்டு 15, 1948)

(40ம் பக்கத் தொடர்ச்சி...)

நீங்கள் ஆதரிப்பீர்களா?

மூப்பனார்: அனுமானங்களுக்கு நான் பதில் சொல்ல முடியாது. அப்படியொரு சூழ்நிலை வரட்டும். பார்க்கலாம்.

கல்கி: அப்படியானால் பி.ஜே.பியை ஆதரிப்பீர்களா?

மூப்பனார்: அனுமானங்களுக்கு நான் பதில் சொல்ல முடியாது என்றேனே... ஒன்று சொல்லுகிறேன். ஜெயலலிதா வாபஸ் பெற்றுக் கொண்டாலும் பி.ஜே.பி. அரசு கவிழாது என்றுதான் கருதுகிறேன். கவிழக் கூடாது என்றும் நினைக்கிறேன். ஏனெனில், தேர்தல் முடிந்த ஐந்து மாதங்களுக்குள் மறுபடியும் ஒரு தேர்தல் வருவதென்பது அக்கிரமம் இல்லையா?



இந்தியன் வங்கி விவகாரம் பற்றிய எந்தவிதமான விசாரணைக்கும் நான் தயாராக இருக்கிறேன். என்மீது குற்றம் இருந்தால் நிருபிக்கட்டும். அதற்கான தண்டனையை நான் ஏற்றுக் கொள்ளத் தயார்.

கல்கி: கடந்த தேர்தலின்போது, தி.மு.க.-த.மா.கா. கூட்டணி ஏற்படுவதில் ஒரு வேகம் காட்டப்படாததற்கு என்ன காரணம்?

மூப்பனார்: சில நடைமுறைச் சிக்கல்கள்தாம் காரணமே தவிர, வேறு எதுவும் இல்லை.

கல்கி: தமிழகத்தைப் பொறுத்தவரை இன்னும் கொஞ்சம் அழுத்தமாகக் குரல் கொடுக்கிற எதிர்க்கட்சியாகத் த.மா.கா. செயல்படுமா?

மூப்பனார்: செயல்படணும். ஒப்புக் கொள்கிறேன். பாராட்ட வேண்டியதைப் பாராட்ட வேண்டும்! கண்டிக்க வேண்டியதையும் அழுத்தமாகக் கண்டிக்கத்தான் வேண்டும். இதில் ஒன்றும் எனக்குக் கருத்து மாறுபாடு இல்லை.

கல்கி: செயல்படணும் என்று சொல்கிறீர்களே தவிர 'செயல்படுவோம்' என்று சொல்ல மாட்டேன் என்கிறீர்களே?

மூப்பனார்: செயல்படுவோம்; செயல்படலாம் என்று சொல்லி விட்டால், அதுவே எதற்கெடுத்தாலும் குற்றம் சொல்லலாம் என்கிற எண்ணத்தைக் கட்சிக்காரர்களுக்கு ஏற்படுத்தி விடலாம் இல்லையா! விமர்சனமும் எல்லை மீறியதாக இருந்து விடக் கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன்.

கல்கி: தமிழகத்தில் திராவிடக் கட்சிகளை மீறி ஒரு மூன்றாவது சக்தியாகத் தமாகாவால் வர முடியும் என்பதில் முழு நம்பிக்கை கொண்டிருக்கிறீர்களா?

மூப்பனார்: அதற்கு வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாமல், அதற்கான முழு முயற்சியில் இறங்க வேண்டும். ஆனால் அத்தகைய முயற்சியே இதுவரை செய்யப்படவில்லையே!

கல்கி: இப்போது முழு முயற்சி செய்வீர்களா?

மூப்பனார்: செய்தால் நிச்சயம் வர முடியும்.

கல்கி: 'செய்தால்' என்றுதான் சொல்லுகிறீர்களே தவிர, 'செய்வோம்' என்று சொல்ல மாட்டேன் என்கிறீர்களே... அப்படியானால் நீங்கள் ஏதோ பொடி வைத்துப் பேசுவது போல் இருக்கிறதே!

மூப்பனார்: பொடி இதுதான்! (சிரிப்பு). எனக்கு மாத்திரம் அந்த உணர்வு வந்தால் போதாது. கட்சியிலுள்ள அனைவருக்கும் அந்த உணர்வு வரவேண்டும். அந்த உணர்வோடு அனைவரும் செயல்படவும் வேண்டும். இப்படிச் செய்தால் வர முடியும் என்றுதான் சொல்லுகிறேன்!

அட்டை வண்ணப்படமும், பிற படங்களும்: **பிரவீண்குமார்**

மலர்விழியின் இருபத்தேழாவது வயதில்தான் அவளுக்குத் திருமணம் செய்விக்க வேண்டும் என்கிற யோசனையே அவள் பெற்றோர்களுக்குத் தோன்றிற்று. அதுவரை அவர்கள் அதுகுறித்து அதிகம் அலட்டிக் கொண்டதில்லை. எவரேனும் விசாரித்தால் கூட, "பாத்துட்டுதான் இருக்கோம். வேளை வரணும்! எல்லாத்துக்கும் மேல 'பிராப்தம்னு' ஒண்ணு இருக்கே?" என்பார்கள் கூசாமல்.

மலர்விழியின் இருபத்தேழாவது பிறந்த நாளன்று பாலாஜியிடம் இருந்து ஒரு பூங்கொத்து வந்திருந்தது. பாலாஜி அவளுடன் ஒன்றாக அலுவலகத்தில் வேலை பார்ப்பவன். அவள் பிறந்த தேதியை பயோடேட்டாவில் இருந்து சேகரம் செய்திருக்க வேண்டும். அவளுக்கு ஒரு சர்ப்ரைஸாக இருக்கட்டுமேயென முன்னறிவிப்பின்றி வாழ்த்து அனுப்பி இருந்தான்.

அந்தப் பூங்கொத்து மலர்விழியின் வீட்டில் பூகம்பம் கிளம்பிற்று.

"என்னடியிது புது வழக்கம்?"

"எதைச் சொல்றம்மா?"

"பூங்கொத்து வந்திருக்குது உனக்கு. இதுவரை இப்படி யாரும் அனுப்பினதில்லையே?" யாரு அனுப்பினது?"

"பாலாஜி!"

"பாலாஜியா? யாருடி அந்தக் கடங்காரன்?"

"கடங்காரன்தான்! மாசக் கடைசில அவசரமா காசு வேணும்னு அல்லாடுவியே, அப்போ நமக்குக் காசு தந்துதவுற கடங்காரன். கூட வேலை செய்றாரு."

அம்மா ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவள் கலவரமடைந்திருக்கிறாள் என்பதை முகம் காட்டிக் கொடுத்தது. அம்மா மனதுக்குள் தன்னையும், பாலாஜியையும் இணைத்து யோசிக்கிறாள் என்பதை மலர்விழியால் உணர முடிந்தது. 'விவரம் சொல்லலாமா. பாலாஜி யார்? எப்படிப்பட்டவர் என விவரிக்கலாமா' – யோசித்தாள். 'வேண்டாம். எதற்குச் சொல்ல வேண்டும்? அம்மா யோசிக்கட்டும். யோசித்துக் குழம்பட்டும். மகள் தப்பு வழி போய் விடுவாளோ என்று கலங்கட்டும். அப்போதாவது தன் திருமணம் குறித்த எண்ணங்கள் தோன்றுகிறதா பார்க்கலாம்' என்றெண்ணி, பேசாதிருந்து விட்டாள்.

அவள் நினைத்தது வீண் போகவில்லை.

அடுத்த வாரமே அவள் ஜாதகக்கட்டு தூசி தட்டி எடுக்கப்பட்டது. கல்யாணமானால், அவள் சம்பளம் வீட்டிற்குக் கிடைக்காதே என்கிற கவலையையும் மீறி கல்யாண ஏற்பாடுகளில் தீவிரம் ஆயினர் அவள் பெற்றோர்.

மலர்விழியின் திருமணத்திற்கு அவள் அலுவலகத்தில் இருந்து அனைவரும் தவறாது வந்திருந்தார்கள். அம்மாவுக்கு அவர்களை அறிமுகம் செய்வித்தாள், மலர்விழி. ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்த, அறிமுகப்படுத்த அம்மா வணக்கம் வைத்துக் கொண்டே வந்தாள்.

"இவரு பாலாஜி. எங்க ஆபீஸ் அக்கவுன்டன்ட்."

அம்மா நிமிர்ந்து பார்த்தவள், அதிர்ந்து போனாள். முன் தலை நரைத்த முப்பத்தெட்டு வயது ஆசாமியாய் பாலாஜியை அவள் கற்பனை செய்திருக்கவில்லை.

மாறு மாட்டார்கள்

அம்மாவின் முகத்தைப் பார்க்கப் பாவமாய் இருந்தது மலர்விழிக்கு. 'அம்மாவைத் தான் நோகப் பண்ணி விட்டோமோ, என்று ஒரு உறுத்தல் உண்டாயிற்று.

ஒரு வியாழக் கிழமையின் பிற்பகல் நேரம். அம்மா வந்தாள், மலர்விழியின் அலுவலகத்துக்கு.

"என்னம்மா இது? இங்கல்லாம் வர மாட்டியே? எதுனாச்சும் முக்கியமான விஷயமா...

"ஆமா."

"சொல்லு."

"வந்து.. உங்கப்பா கூட வந்திருக்கார்."

"எங்கே?"

"வெளிய நிக்கறார்!"

"உள்ளே வரவேண்டியதுதானே. எதுக்கு நிக்கணும் வெளில."

"நீ தப்பா நினைச்சுக்குவேன்னுதான்.. அது வந்து.. அவசரமா ஒரு இருநூறு ரூபா

தேவைப்படுது. நாளைக்கு ஒரு கல்யாணம் இருக்கு. கண்டிப்பா போகணும். உங்கப்பாவுக்கு ரொம்ப வேண்டப்பட்டவர் வீட்டு விசேஷம். போகாட்டி கௌரதையா இருக்கா துன்னு நினைக்கறார்."

கல்யாணமாகிப் போய் விட்ட மகளிடம் காசுக்கா கக் கையேந்துவது மட்டும் கௌரவமாக்கும் என்று நினைத்துக் கொண்டாள் மலர்விழி.

"மாசக் கடைசில வந்து கேக்கறியேம்மா! எங்கிட்ட காசு இல்லே!"

"சம்பளப் பணத்தை என்ன பண்றே?"

"என் மாமனார்ட்ட கொடுத்துருவேன். என் னோட பஸ் சார்ஜ்... அப் புறம் வேற செலவுகளுக் குன்னு மொத்தமா ஒரு தொகையை என்கிட்ட தந்துருவாரு."

"அதுல ஏதும் மிச்சமில் லையா?"

"மாசக் கடைசில ஏதும்மா?"

"என்ன பண்றது..? ம்..? ஆபீஸ்ல யார்ட்டயாவது கை மாத்தா வாங்கிக் கொடேன்."

"அது நல்லாருக்கா தும்மா."

"பாலாஜின்னு சொன் னியே... கூட வேலை செய்றவருன்னு. உங்கல்யா ணத்துக்குக் கூட வந்திருந் தாரே. உன் பிறந்த நாளுக் குப் 'பூங்கொத்து' அனுப்பிச் சிருந்தாரே! அவர்கிட்ட கேளேன். கல்யாண வீட்ல அவரைப் பார்க்கும்போதே தோணுச்சி, நல்ல மாதிரின்னு."

மலர்விழி அம்மாவை உற்றுப் பார்த்தாள். எரிச் சலை மீறி, சிரிப்பு வரவே செய்தது அவளுக்கு. ●



ஆர்யபட்டா



4

ஜமதக்னியின் வாக்கு மூலத்தை அவர்கள் எழுதிக் கொள்ளவில்லை. மற்றொரு அறையில் அது பதிவாகிக் கொண்டிருந்தது. தேவைப்பட்டால் அவரிடமிருந்து ஸ்டேட்மெண்ட் வாங்கிக் கொள்ளலாம்; இப்போதைக்கு அவர் இயல்பாகப் பேசட்டும் என்று ப்ரபாகர் ராவ் விட்டிருந்தார்.

ஜமதக்னி தம்ளர் தண்ணீரை மடக்கென்று விழுங்கிவிட்டு, உதட்டைத் துடைத்துக் கொண்டு தொடருமுன், "பாக்கு இருக்குமா? பாக்கு போட்டுப் பழக்கம்."

"என்ன பாக்கு? எதாவது பேர் இருக்கும் இல்லை?"

"மாணிக்சந்த். ஆபீஸ்ல போடுவேன். என் பெண்டாட்டி கிட்ட சொல்லிடாதீங்க".

"அப்படி என்னப்பா அதில்?"

"ஜர்தா ஸார்" என்றார் சங்கர்.

"வாங்கிட்டு வரச் சொல்றேன், சொல்லுங்க."

"டைரக்டர், ஆனந்த் கிட்ட என்ன

சொன்னர்னா, பாருப்பா உனக்கு ஏன் அவார்டு கிடைக்கலைன்னு கேக்க உரிமை இருக்கு. சோமசுந்தருக்கு ஏன் கொடுத்தீங்கன்னு கேக்க உரிமை இல்லை."

ஆனந்த் பளிச்சுன்னு கேட்டுட்டார்! "ஆல்ரைட் எனக்கு ஏன் கிடைக்கலை?"

டைரக்டர் அதுக்கு சொன்ன காரணம் நியாயமானதாத்தான் பட்டது.

"உன்னுடைய மிதப்பு, அர்ரகன்ஸ்தான் காரணம்! உனக்குத்தான் எல்லாம் தெரியும், மற்றவருக்கு எதுவுமே தெரியாதுன்னு கர்வம். அதான் காரணம்."

ஆனந்த், "கர்வமில்லை ஸார்! அதான் உண்மை"ன்னார்.

"பாத்தியா? லாப்ல மத்தவங்க எல்லாரும் புடுங்கிங்களா?"

ஆனந்த், "ஆனஸ்டா சொன்னா அதான் உண்மை. இந்த லாப்ல விஷயம் தெரிஞ்சவங்க யாரும் இல்லை, என்னைத் தவிர."

டைரக்டர் "இதுக்குப் பேர்தான் ஆணவம்"ணார்.

ஆனந்த், "உண்மைக்கு ஆணவம்னு ஒரு பேர் இருக்கா என்ன"ன்னு க்ராஸ் பண்றார் டைரக்டரை, அவர் இவருக்கு மூணு ராங்க் மேல இருக்கறவர்.

அதான் ஆனந்துடைய அழிவுக்குக் காரணம். புத்திசாலிதான்! ஆனா தற்பெருமை. யாராவது அவரை கொன்னு போட்டுருவாங்கன்னு எதிர்பார்த்தேன்."

"தன்னம்பிக்கைன்னு சொல்லலாமில்லையா?"

"அப்படி யாரும் கவர்மெண்ட் லாப்ல ஒத்துக்க மாட்டாங்க. அங்க நிறைய பேசணும்! குழாயடிக்கணும், நெஞ்சை நக்கணும். ஜோ ஜோ பண்ணணும்."

ஆனந்த் விடமாட்டேங்கறார், "ஸார் நான் கவுன்சிலுக்கு எழுதப் போறேன் நியாயம் கேட்டு! அவார்டு பங்ஷன்ல வந்து கலாட்டா பண்ணப் போறேன் ப்ளீஸ்ஃபுல்லா"ன்னார்.

டைரக்டர் அவரை சமாதானப்படுத்தற விதத்தில், "இந்த மாதிரி அசட்டுக் காரியம் பண்ணாம இருந்தா, அடுத்த வருஷம் உனக்கு அவார்டு வாங்கித் தரேன்"ன்னார்.

ஆனந்த் மிகுந்த கோவத்தோட, "அடுத்த வருஷம்! ஆறு வருஷத்துக்கு முன்னால கிடைச்சிருக்க வேண்டியது ஸார்! நான் உங்களை முகஸ்துதி பண்ணலை, வீட்ல வந்து உங்க மனைவிக்கு சேவகம் பண்ணலை, டாட்டருக்கு பாடம் சொல்லித்தரலை! கிளப்ல உங்க கூட ப்ரிட்ஜ் ஆடலை... அதுக்கெல்லாம்தானே பழி தீர்த்துக்கறீங்க? சோமசுந்தர் இதெல்லாம் பண்ணிருக்கார்."

"டைரக்டர் ரொம்ப கோபம் வந்து கெட் அவுட்"ணார்.

"ஆனந்த் சொன்னதில் நியாயம் இருந்தது, உண்மை இருந்தது. ஆனா உண்மை பலருக்குக் கசப்பானது. ஆனந்த் எல்லாரையும் தூக்கி எறிஞ்சு பேசுவார். இவனுக்கு என்ன தெரியும், இவனுக்கு என்ன தெரியும்'னு வெளிப்படையா பேசுவார். அதனாலேயே அவருக்கு ஆபீஸில் விரோதிகள் அதிகம்! அவருக்கு சாதாரணமா கிடைக்க வேண்டிய ப்ரமோஷனைக் கூட குட்டிச்சுவர் பண்ணிட்டாங்க. இதை விடக் கொடுமை, ஆனந்துக்கு சோமசுந்தரை உயர் அதிகாரியா போட்டது. 'லாஸ்ட் ஸ்ட்ரா'ன்னு சொல்வாங்களே அதான்! ஒட்டகத்தின் முதுகை ஒடிச்ச கடைசி பளு! ஆனந்துக்கும் சோமசுந்தருக்கும் பகைங்கறது வெளிப்படையா வந்துருச்சு. அவார்டு தினத்தன்று அது வெடிச்சுடுத்து. அனந்த நாராயணன்னு சோமசுந்தரத்தோட பிஏ இருக்கார். அவரைக் கேளுங்க! ரெண்டு பேருக்கும் அந்த காபின்ல நடந்த ரோஷமான சண்டையை விவரமா சொல்வார்."

"தாங்ஸ். இப்ப நீங்க சொன்னதையெல்லாம் ஸ்டேட்மெண்டா எழுதிக் கொடுத்தா கையெழுத்துப் போடுவீங்களா?"

"சொன்னது உண்மைதானே? அதிலென்ன தயக்கம்."

"மிஸ்டர் ஜமதக்னி, ஆஃப் தி ரிகார்ட் உங்களை ஒண்ணு கேக்க விரும்பறேன். ஆனந்தை சோமசுந்தர் கொலை செய்திருப்பாரா?"

"ஆபீஸ்ல அப்படித்தான் பேச்சு! அவார்டு பங்ஷனுக்கு லேட்டா வந்தார். ரெண்டு பேருக்கும் விரோதம், பகை இருந்திருக்கு. பாஸ்ங்கற முறையில ஆனந்த் அவருக்கு சரியாவே மரியாதை கொடுக்கலை! எத்தனையோ காரணம் இருக்கு. அது கொலை பண்ணும் அளவுக்குப் போச்சாங்கறது நீங்க கண்டுபிடிக்க வேண்டியது."

"நல்ல பதில்."

சுஜாதா

"ஆனந்த் இறந்து போன அன்னிக்கு பிற்பகல் டாக்டர் சோமசுந்தர் கார் அவர் வீட்டுவாசல்ல நின்னுகிட்டு இருந்தது."

ப்ரபாகர் ராவ் "எத்தனை மணி இருக்கும்?" என்றார்.

"இரண்டு மணி! ஆனா பாருங்க சார், ரெண்டு பேருக்குள்ள அந்த தினத்தில நடந்ததை முழு விவரமும் தெரிஞ்சாத்தான் சொல்ல முடியும்! அது அனந்த நாராயணனுக்குத்தான் தெரியும்."

அனந்த நாராயணன் முகத்தை அடிக்கடி துடைத்துக் கொண்டார்.

"எனக்கு எதுவுமே தெரியாது ஸார்! ஐ எம் ஒன்லி ஆர்டினரி நான் கெஜட்டட் பிஏ."

"பயப்படாதீங்க அனந்தநாராயணன். பேர் ரொம்ப பெரிசா இருக்கு. அனந்த்ன்னு கூப்பிடலாமா?"

"என்ன வேணா கூப்பிடுங்க! என்னை போலீஸ், கொலை, வெட்டுபழி, குத்துபழி கோர்ட்டுன்னு மாட்டிவிடாம இருந்தா செரி! எங்க அப்பா சஷ்டியப்தபூர்த்திக்கு நான் கொச்சின் போயே ஆகணும்."

"நாங்க கேக்ற ஒன்னு ரெண்டு கேள்விக்கு பதில் சொல்லிட்டு எங்க வேணா போங்க ஸார்."

கனமான மலையாள உச்சரிப்பில் அனந்த நாராயணன் வாழ்வு முழுவதும் எச்பி பென்சிலில் டிக்டேஷன் எழுதி, இப்போதுதான் வர்ட்ஸ்டாரின் அரண்மனை ரகசியங்களைக் கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு வாழ்க்கையில் மிக முக்கியம் குருவாயூர் கிருஷ்ணனும் பையனின் ஐஐடி அட்மிஷனும்தான். இவரே ஒரு பிரிலியண்ட் நடத்தும் அளவுக்கு அத்தனை ஐஐடி ஜேஇஈ அனுமதிப் பரீட்சை பற்றிப் படித்து விட்டார். பையனுடன் சேர்ந்து கொண்டு கடந்த பத்து வருடங்களின் அத்தனை பேப்பர்களையும் அவரே விடுவித்து, கரைத்துக் குடித்து விட்டார். வயதை நிராகரித்து இப்போது அவரைப் பரீட்சை எழுத விட்டால் ஆல் இண்டியா முதல் ராங்க் வாங்கி விடுவார். எப்போதும் நெற்றியில் ஒரு சந்தன - குங்கும - விபூதிப் பொட்டு. தினம் ஒரு வேளைதான் சாயா.

"எனக்கு ஒன்னும் ஆகாதே."

"ஆகாது ஆகாது."

"ஆனந்த் அன்னிக்கு லேசா தண்ணி போட்டிருந்தார்னு நினைக்கிறேன். தள்ளாடிட்டுதான் வந்தார்."

"என்னிக்கு?"

"அவார்டு தினத்தின் போது காலைல. 'டாக்டர் சோமசுந்தர் உங்களுக்கு ஆர்யபட்டா அவார்டு கொடுக்கற ஃபங்ஷன் போது உங்க குட்டை வெளிப்படுத்தத்தான் போறேன்; இந்தக் கண்டு பிடிப்பைப் பற்றி ஒரு அட்சரம் தெரியாத ஆளு நீங்கன்னு ப்ரஸ், டீ.வி பொதுமக்கள் எல்லார்கிட்டயும் சொல்லப் போறேன்! என்னைப் பத்தி தெரியாது உனக்கு'ன்னு பயம் காட்டினார். சோமசுந்தர் "போடா என்னைப் பத்தியும் உனக்குத் தெரியாது. முட்டாள்தனமா எதும் செய்யாதே! அப்படி ஏதாவது செய்தே உனக்கு நேரப் போறதுக்கு நீதான் பொறுப்பு."

"அதே வார்த்தைகள்ள சொன்னரா?"

"ஆமாம்! ஆனந்த், 'என்ன செய்வே? என்னடா செய்வே? கொன்னுடுவியா? நீ என்னைக் கொன்னாலும் உண்மை அழியாது."

சோமசுந்தர் "என்ன? டாவா? நான் உனக்கு பாஸ் தெரியுமா" இப்படி போவுது



"அளவு தெரியாம இந்த மானேஜருக்கு அதிகமா லஞ்சம் குடுத்துட்டேன்!"

"திருப்பி வாங்கித் தர்றது என் பொறுப்பு. எனக்கு எவ்வளவு தருவீங்க?"

– அம்பை தேவா

சண்டை.

"எனக்கு பாஸா இருக்க இந்த ஆபீஸ்ல யாருக்கும் தகுதி இல்லை! பாரு சோமசுந்தர்! ப்ரமோஷன்ல என்னை சுப்பர்ஸீடு பண்ணாங்க. அது தப்பு. அது கூட என் மனசைப் புண்படுத்தலை! ஆனா ஐடியாவைத் திருடறது குழந்தையை திருடறாப்பலப்பா! நான் உன் குட்டை ஃபங்ஷன்ல வெளிப்படுத்தியாகணும்'னார்."

சோமசுந்தர் "நீ மட்டும் ஃபங்ஷன்ல வந்து எதாவது கலாட்டா பண்ணே! உன்னைக் கொன்னுடுவேன்'னார். அப்படியே சொன்னார்."

ப்ரபாகர் ராவ் "மிஸ்டர் அனந்த், நீங்க சொல்றது மிக முக்கியமான விஷயம். சோமசுந்தர் ஆனந்தை ஃபங்ஷன்ல வந்து கலாட்டா செய்தா கொன்னுடுவேன்னு சொன்னதை நீங்க கேட்டீங்களா?"

"ஆமாம்."

"இதே வார்த்தையைப் பயன்படுத்தினாரா – கொன்னுடுவேன்".

"ஆமாம்."

"இதை கோர்ட்ல சாட்சி சொல்வீங்களா?"

"அ... ஆனா என் பையன் என்டரன்ஸ் எக்ஸாம் ஆனப்புறம்.. என்ன பயம்? நடந்ததை சொல்றேன்."

ப்ரபாகர் ராவ் சுறுசுறுப்படைந்தார். கேஸ் இவ்வளவு சீக்கிரம் முடிவடையும் என்று அவர் எதிர் பார்க்கவில்லை.

"ஃபங்ஷன்ல என்ன ஆச்சு?"

சோமசுந்தர் லேட்டா வந்தார். மைக்ல ரெண்டு மூணு தடவை கூப்பிட்ட அப்புறம்தான் வந்தார்."

"தாங்ஸ்! நாங்க உங்களை அப்புறம் வந்து பார்க்கறோம்."

அனுமந்த நகரில் அந்த வீட்டை விட்டு வெளியே வரும்போது மார்வாரி கல்யாணத்துக்கு பட்டாசு விட்டுக் கொண்டிருந்தார்கள்.

"சரியான சகுனம் சார்! செலிப்ரேஷன் தான், கேஸ் இஸ் ஓவர்" என்றார் சங்கர்.

"என்ன நடந்திருக்கும்ங்கறீங்க."

"ஃபங்ஷன் ஆரம்பிக்கறதுக்கு முந்தி சோமசுந்தர் மெல்ல நழுவிருக்கலாம். விதான் சௌதாவிலிருந்து ஆனந்த் வீடு கால் மணி தூரம் கூட இல்லை. அங்க போய் ஆனந்தைக் கொன்னுட்டுத் திரும்ப வந்திருக்கலாம்."

"அப்படியா" ப்ரபாகர் ராவின்



"நான் அறிவிச்ச மாபெரும் கவிதைப் போட்டிக்கு ஒரு கவிதைகூட வரலையே! ஏன் அமைச்சரே!"

"இதுக்குத்தான் சொன்னேன் சிறந்த கவிதைக்குப் பரிசாக இளவரசியை மணமுடித்துக் கொடுப்பேன்னு அறிவிக்காதீங்கன்னு!"

— உ. ராஜாஜி

மனத்தில் அந்தக் காட்சி விரிந்தது. 'டோண்ட் சோமு டோண்ட் சோமு!'

சங்கர், "ஸார் ஆனந்த் இறந்து போறதுக்கு முந்தி 'சோமு'ன்னு சொன்னது?"

"சோமசுந்தராத்தான் இருக்கணும்."

"கேஸ் முடிஞ்சு போச்சு! ஓப்பன் அண்ட் ஷட்! நேரப் போய் சோமசுந்தரத்தை அரஸ்ட் பண்ணி லாக்அப்ல வெச்சு கேள்வி கேட்டுரலாம். க்ளோஸ் பண்ணிரலாம்!"

ப்ரபாகர் ராவ், "நாட் ஸோ ஃபாஸ்ட் சங்கர்! சோமசுந்தரம் பெரிய சைன்டிஸ்ட். சந்தர்ப்ப சாட்சியத்தை வெச்சு அரஸ்ட் பண்ண முடியாது. கான்க்ரீட்டா எவிடன்ஸ் வேணும். அவரை முதல்ல சந்திக்கலாம்."

ப்ரபாகர் ராவ் சொன்னார், "மேலும் என் நண்பர் கணேஷ் அடிக்கடி சொல்வார், 'மிஸ்ட்ரஸ்ட் தி ஆப்வியஸ்'னு. வெளிப்படையா தெரியறதை நம்பாதேன்னு."

"வா சோமுவை சந்திக்கலாம்."

(தொடரும்)

பணத்தை ஓரளவாவது சேமித்திருப்பீர்கள். ஆயுள் இன்ஷூரன்ஸ் கொஞ்சமாவது எடுத்திருப்பீர்கள். உயில் எழுதி வைத்ததுண்டா? உங்களது சேமிப்பும் சொத்துகளும் உங்களுக்குப் பிறகு பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்றால் உயில் எழுதுவது அவசியம்.

உயிலே!

● தங்களது மத முறைப்படி திருமணம் செய்து கொள்ளாமல், 'ஸ்பெஷல் மேரேஜஸ் ஆக்ட்'படி திருமணம் செய்து கொண்டவர்களின் சொத்துகள்கூட, அவர்கள் இறந்தபிறகு அவர்களது மதச் சட்டத்தின் படிதான் பங்கு பிரிக்கப்படும். அப்படிக் கூடாது என்று கருதுபவர்கள் உயில் எழுத வேண்டியது அவசியம்.

● உயில் என்பது



மிகவும் விளக்கமாக எழுதப்பட வேண்டும் என்று அவசியமில்லை. "எல்லாம் என் மனைவிக்கே" என்று 1967ல் ஒருவர் எழுதிய மிகச் சுருக்கமான உயில்கூட சட்டப்படி செல்லுபடி ஆகியிருக்கிறது. என்றாலும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கு உங்கள் சொத்துகள் பிரிக்கப்பட வேண்டுமென்றால் உயிலில் முழு விவரங்களையும் எழுதுங்கள்.

● ஸ்டாம்ப் பேப்பரில்தான் உயில் எழுத வேண்டுமா? அவசியமில்லை. வெள்ளைத் தாளே போதுமானது.

● வழக்கறிஞரை தேடிப் போக வேண்டும் என்றும் அவசியமில்லை. இந்தப் படிவத்தில்தான் உயில் இருக்க வேண்டும் என்றெல்லாம் அரசு எதையும் குறிப்பிடவில்லை. நினைத்ததை உயிலில் தெளிவாகக் குறிப்பிட்டாலே போதும்.

● இவ்வளவு வயதுக்கு மேல்தான் உயில் எழுதலாம் என்று எந்தச் சட்டமும் இல்லை. ஆனால் புத்தி சுவாதீனம் உள்ளவராகவும் பதினெட்டு வயதைத் தாண்டியவராகவும் இருக்க வேண்டும்!

● உயில் எழுதிய பிறகு, உங்களுக்குத் திருமணமாகியிருந்தால் மீண்டும் ஓர் உயிலை எழுதவும். (அப்படியேவோ மாற்றியோ) ஏனென்றால் கிறித்தவர், பார்ஸி, யூதர்கள் போன்ற பல மதங்களைப் பொருத்தவரை ஒருவருக்குத் திருமணம் ஆனவுடனேயே அதற்கு முன் எழுதப்பட்ட உயில் செல்லுபடி ஆகாது.

● ராணுவ சிப்பாயாக இருந்தால் உயிலின் கீழ் அவரது கையெழுத்துக்கூட இருக்க வேண்டிய அவசியமில்லை என்கிறது சட்டம். ஆனால் பொதுவாக உயிலில் உங்கள் கையெழுத்து மட்டுமல்ல; அதற்குக் கீழே இருவரின் சாட்சிக் கையெழுத்தும் தேவை. "உயில் விவரங்கள் யாருக்கும் தெரியக் கூடாதே" என்று பதற வேண்டாம். சாட்சிக் கையெழுத்துப் போடுபவர்களுக்கு உயில் விவரங்கள் தெரிய வேண்டும் என்பது அவசியமில்லை. "யாருடைய கட்டாயத்தின் பேரிலும் நீங்கள் இந்த உயிலை எழுதவில்லை. உயிலில் உள்ள கையெழுத்து உங்களுடையதுதான்" என்கிற இரண்டு விவரங்களுக்குத்தான் சாட்சிக்காரர்கள் உத்தரவாதம் அளிக்கிறார்கள்.


● உங்களுக்குப் பிறகு உங்கள் வாரிசுதாரர்கள் எந்தத் தகராறும் இல்லாமல் உங்கள் விருப்பப்படியே சொத்துகளைப் பிரித்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருந்தால், அவற்றை உங்கள் மனைவி அல்லது மகன் பெயருக்கு எழுதுங்கள். (அவர்கள் பிறகு பிரித்துக் கொடுக்கட்டும்) ஏனென்றால் பல ஆயிரங்கள் வரை செல்லக்கூடிய நீதிமன்றக் கட்டணத்திலிருந்து பெண் வாரிசுதாரர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

● உயிலைப் பதிவு செய்ய வேண்டும் என்பது கட்டாயம் இல்லை. என்றாலும் பதிவு செய்து கொண்டால் "இது நீங்கள் எழுதிய உயிலா? சுய நினைவுடனா?" போன்ற ஆராய்ச்சிகளிலெல்லாம் பிறகு நீதிமன்றம் இறங்காது.

● உங்கள் உயிலை சீல் செய்து ஒரு வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டு, நீங்கள் இறந்தவுடன்தான் அதைப் பிரித்துப் படித்து, செயல்படுத்த வேண்டும் என்று கண்டிப்பாகத் தெரிவிக்கவும் சட்டத்தில் இடம் இருக்கிறது.

— ஜி.எஸ்.எஸ்

நடக்குமென்பார்




விருச்சிக ராசிக்காரரான நடிகர் விவேக், உடல் நலத்துல ரொம்ப கவனமா இருக்கணும்! நைட் கால்ஷீட் எதுவும் இந்த வாரம் தர வேணாம்!



மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

பக்திப் பழமா இந்த வாரம் காட்சி தருவீங்க. தெய்வப் பணிகளிலும் தரும காரியங்கள்லேயும் அதிகமா ஈடுபட்டா மத்தவங்க கண்ணுக்கு அப்படித்தாங்க தெரிவீங்க. தொழிலாளர்களுக்கு நல்ல வாரம். கோர்ட் விவகாரங்கள் ஏதும் இருந்ததுன்னா உங்களுக்குச் சாதகமான திருப்பம் வர சான்ஸ் இருக்கு. வீட்டுல சுபகாரியங்கள் நடக்கறதுக்கான ஏற்பாடுகள் நடக்கும். டீ.வி. மிக்ஸின்னு ஏதாவது வாங்குவீங்க. வியாபாரிகளும் விவசாயிங்களும் எச்சரிக்கையா இருக்கறது நல்லது. பயணத்துலயும் கவனம் அவசியம். பணப் புழக்கம் இருக்கும்னாலும் சிக்கனத்தை மறந்துடாதீங்க.



ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

ரொம்ப நாளா நீங்க போட்டு வெச்சிருக்கிற திட்டங்கள் இந்த வாரம் அரங்கேற்றமாவதற்கு சான்ஸ் இருக்குங்க. நீங்களே ஃபாரின் போகலாம். இல்லேன்னாலும் ஃபாரின் தொடர்பால நல்லது நடக்கும். கலைத் துறையில், வியாபாரத் துறையிலுள்ளவங்க ஓரளவுக்குத்தான் ஆதாயத்தை எதிர்பார்க்கலாம். தொழிலதிபர்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் முன்னேற்றம் உறுதி. பொருளாதாரத்துல பிரச்னை இல்லாததால குடும்பத்துல சந்தோஷம் பெருகும். ஃபிரண்ட்ஸுங்க, ரிலேஷன்ஸ் எல்லாமே உதவியா இருப்பாங்க.



மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

இந்த வாரம் எல்லாமே உங்களுக்கு மந்த கதிதாங்க. ஏராளமா குறுக்கீடுகள் வரும். வியாபாரிங்க கூட ரொம்பவும் உஷாரா இல்லேன்னா முதலுக்கே மோசம் வந்திடும். கூடப் பிறந்தவங்களால பொருட் செலவு வரும். இல்லேன்னா மனக் கஷ்டமாவது வர சான்ஸ் இருக்கு. இத்தனைக்கும் நடுவுல எதையும் சமாளிக்கிற மனப்பக்குவம் உங்களுக்கு இருக்கறதால பொருளாதார விஷயம் திருப்தியாவே இருக்கும். எதிலும் அவசரப்பட்டு முடிவெடுக்காம இருந்தாலே போதும், பிரச்னைகளைச் சுலபமா சமாளிச்சிடலாம்.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

முதல் மூணு நாள்ல நல்ல பலன் தெரியுதேன்னு அகலக் கால் வெச்சிடாதீங்க. பிரச்னையாயிடும். வீடு, மனை விஷயங்கள்ல எச்சரிக்கை அவசியம். பத்திரம் பதிவு பண்றது, ஜாமீன் கையெழுத்தெல்லாம் இந்த வாரம் வேண்டாம். கொடுக்கல் வாங்கலும் இப்ப வேண்டாம். சாப்பாட்டு விஷயத்தில ஜாக்கிரதையா இல்லேன்னா வயித்து வலி, வாயுத் தொல்லைன்னு அவஸ்தைப்படுவீங்க. பழக்கமான தெரு நாய்தானேன்னு கொஞ்ச ஆரம்பிச்சுடாதீங்க. அது கூட உங்களை இந்த வாரம் கடிச்சு வெக்கலாம்! செலவு அதிகமா இருக்கும்! பயணத்தில ஜாக்கிரதையா இருங்க. தாத்தா, பாட்டி உடல் நலத்துலயும் அக்கறை காட்டுங்க.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

நீங்க எதிர்பார்க்காத மாதிரி திடீர் மாற்றங்கள் வந்து, உங்களை நிலைகுலையச் செய்யும். அரசாங்க விஷயத்தில எச்சரிக்கையா இல்லேன்னா பிரச்னைகள் வந்து சேரும். அரசியல்வாதிகளுக்குத் தங்கள் நற்பெயருக்கு பங்கம் வர்ற மாதிரியான காரியங்கள் நடக்கலாம். பயணம் வேண்டாம்; தள்ளிப் போட்டுடுங்க. பொருளாதாரமும் ஒரு நிலையில் இருக்காது. கொடுக்கல் - வாங்கலும் இந்த வாரம் வேண்டாம். குடும்பத்திலயும் சின்னச் சின்ன சலசலப்பு வரும். அமைதியா அணுகினா சமாளிச்சிடலாம். கூடப்பிறந்தவங்களும் நண்பர்களும் உங்களுக்குப் பக்க பலமா இருப்பாங்க.




கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

எட்டுல சனி சஞ்சரிக்கறான்னா... உங்களோட காரியங்களுக்கு ஸ்பீட் பிரேக்கர்களைப் போடுவான்னு அர்த்தம். பொருளாதாரமும் சீரா இருக்காது. செலவும் கட்டுக்கடங்காம இருக்கும். ஆரோக்கியத்திலும் கவனமா இருக்கணும். இந்தச் சூழ்நிலையிலும் செவ்வாயும் கேதுவும் உங்களுக்கு அனுகூலமா இருக்

நடக்கும்!

கறதால எதையும் சமாளிக்கக் கூடிய தன்னம்பிக்கை வரும். சூரியன் சிம்மத்தில் சஞ்சரிக்கறதால அரசாங்க விஷயத்தில சில அனுகூலங்களுக்கு சான்ஸ் இருக்கு. சில திட்டங்கள் ஈடேறி உங்களைச் சந்தோஷப்படவும் செய்யும். கூடப் பிறந்தவங்களும் ஓரளவுக்கு உதவுவாங்க.



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

இதுவரைக்கும் பேஜார் பண்ணிக்கிட்டிருந்த பணக் கஷ்டம் இந்த வாரம் அம்பேல் ஆயிடும். நீங்க சந்தோஷப் படற மாதிரி பணப்புழக்கம் இருக்கும். திடீர்ப் பண வரவு கூட இருக்கலாம். எடுத்த காரியங்கள் தடங்கலில்லாம நடக்கும். பிறருடைய பாராட்டும் எக்கச்சக்கமாக கிடைக்கும். வி.ஐ.பிகள் தொடர்பால நல்லது நடக்கும். வேலையில்லாதவங்களுக்கு வேலை கிடைக்கும். மத்தவங்களுக்கு புரமோஷன் கிடைக்கலாம். குடும்பத்துல சந்தோஷத்துக்குக் குறைவிருக் காது. இருந்தாலும் கூட்டுத் தொழில் பண்றவங்க, கூட்டாளிங்ககிட்ட எச்சரிக்கையா இருங்க. பயணத்திலும் உஷாராயிருங்க.



விருச்சிகம் : *(விசாகம் 4 - ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

நீங்க திட்டமிட்டபடி எதுவும் இந்த வாரம் நடக்காதுங்க. எல்லாத்துலயும் குறுக்கீடுங்க வந்துக்கிட்டே இருக்கும். உங்க தேக ஆரோக்கியத்திலும் கவனம் காட்டணும். வாழ்க்கை சாதாரணமாத்தான் இருக்கும்கிறது மட்டுமில்லே, மறைமுகமான எதிர்ப்புகளும் உருவாகும். ஆபீஸ்ல உங்களைப் பத்தி யாராவது கோள் சொல்லத் தயாரா இருப்பாங்க. ஆனாலும் கூட்டுத் தொழில் பண்றவங்களுக்கு லாபமே சாத்தியம். மத்தவங்க ஜாக்கிரதையா செயல்பட்டா பிரச்னை இருக்காது. பண விஷயத்துல பிரச்னை இருக்காது.



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

சிறப்பான பலனை இந்த வாரம் எதிர்பார்க்காதீங்க. மனசுல குழப்பம், சஞ்சலம் எல்லாம் சர்வ சாதார ணமா வரும். குடும்பத்துலயும் சிறு சிறு பிரச்னைங்களும் தொல்லைகளும் தலை தூக்கும். பொருளாதாரமும் சீரா இருக்காது. சிலருக்கு வேண்டாத இடத்துக்கு மாற்றல் கிடைக்கும். பிரண்ட்ஸுங்க வற்புறுத்தறாங் களேன்னு... இன்னிக்கு மட்டும் தானேன்னு எந்தக் கெட்ட பழக்கத்தையும் செஞ்சுடாதீங்க. அப்புறம் அது உங்களை கப்புனு புடிச்சிக்கும்! பெற்றோர் பொருட்டு ஏதாவது செலவும் வரலாம். ஜாக்கிரதையா இருங்க.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

ஆகா ஓகோன்னு இல்லேன்னாலும் எதிலும் அளவா பயனடைவீங்க. புது ஆளுங்ககிட்ட எச்சரிக்கையாப் பழகணும். குடும்பத்துல சந்தோஷம் இருக்கும்னாலும் ஒருத்தருக்கொருத்தர் அனுசரிச்சுப் போக லேன்னா பிரச்னை வந்துடும். கொடுக்கல் வாங்கலில் ரொம்பவே உஷாராயிருக்கணும். தாத்தா - பாட்டி உடல் நலன்ல ரொம் பவும் அக்கறை எடுத்துக்கங்க. கூடவே உங்களுக்கும் பிரயாணமெல்லாம் இந்த வாரம் வேண்டவே வேண்டாம். அவசரம், பதற்றம் இந்த இரண்டுக்கும் இந்த வாரம் டாடா சொல்லியே ஆகணும். இல்லேன்னா சிக்கல் வலைல சிக்கித் தவிக்க வேண்டியிருக்கும்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

உங்க யோசனைகள் எதுவானாலும் அது மத்தவங்க பாராட்டைப் பெறும். அப்புறம் என்ன! பெயர், புகழ் எல்லாம் ஓகோன்னு உயரும். புதிய பதவியும் பொறுப்புகளும் கிடைக்கும். வெளிநாட்டுத் தொடர்புள்ளவங்களுக்கு அங்கிருந்து நல்ல சேதி கிடைக்கும். பண விஷயம் தாராளம்கிறதால், பழைய கடனெல்லாம் ஒழியும். விருந்து, கேளிக்கைன்னு குடும்பத்திலும் சந்தோஷமே நிலவும். இருந்தாலும் கொடுக்கல் வாங்கலையும் பயணத்தையும் தள்ளிப் போடறதுதான் நல்லது. பெண்களுக்கும் இது நல்ல வாரம் இல்லை.



மீனம் : *(பூரட்டாதி 4 -ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

எதுவா இருந்தாலும் எச்சரிக்கையா செயல்படணும். அலட்சியமும், அசிரத்தையும் கூடவே கூடாது. அலைச்சலைத் தவிர்க்கணும். ஆரோக்கியத்திலும் அக்கறை காட்டணும். மனசுல சிறு சிறு கவலைகள் வரலாம். சிலருக்குக் கண் சம்பந்தப்பட்ட வியாதிகளும் வரலாம். 2-ல் சனின்னா அது நாக்குல இருக்கற மாதிரி. எனவே, பேச்சுல இனிமை காட்டறது அவசியம். வீண் விவாதமெல்லாம் வேண்டாம். அது வீண் சண்டைல போய் முடியலாம். கொடுக்கல் வாங்கலும் வேண்டவே வேண்டாம்.

காதல் என்ன கொடாக் ஃபிலிமா?

தமிழ்ல ஒரு பக்கக் கதைகளைப் பத்தி ஒரு பெரிய ஆய்வுக் கட்டுரையே எழுதலாம்னு நினைக்கறேன். (யாராவது எழுதியிருக்காங்களா?) வாசகனுக்கு சிரமம் தராத இந்த கேப்ஸ்யூல் கதைகள் இதுவரைக்கும் சுமார் ஒரு லட்சம் வந்திருக்குமா? பாமா கோபாலன், பி.ஆர். பார்த்தசாரதி மாதிரி சில ரைட்டர்ஸ் ஒரு காலத்துல இதை யாகம் மாதிரி செஞ்சிட்டிருந்தாங்க. பெரும்பாலான ஒரு பக்கக் கதைகள், அடுத்தப் பக்க அம்ருதாஞ்சன் விளம்பரத்தைத் தாண்டினதுமே மறந்து போயிடும்! ஆனா ரொம்ப வருஷம் முன்னால நான் படிச்ச 'ரிக்ஷா', 'இப்போது வெடித்தது' (அசோகமித்திரன்) 'விகடன்' (இரா. முருகன்) இந்த மூன்று கதைகளும் இப்பவும் எனக்கு ஞாபகமிருக்கு!

புதுமைப்பித்தன்லேருந்து எத்தனையோ ஏ கிளாஸ் ரைட்டர்ஸ் ஒரு பக்கக் கதை முயற்சி பண்ணிப் பார்த்திருக்காங்க. 'பளிச்'சுனு பல நல்ல கதைகள் வந்திருக்கு. But, பரவலாகலை. காரணம்? எல்லாம் சிறு பத்திரிகைகள்ல வந்தவை!

ரீஸண்ட்டா 'விருட்சம்' சிறு பத்திரிகைல ஒரு பக்கக் கதை ஸ்பெஷல் கொண்டு வந்திருக்காங்க. சுமார் ஒரு டஜன் கதைகள்ல ஏழெட்டு பிரமாதம்! பெரும்பாலும் தேடி, தூசி தட்டிப் போடப்பட்டிருக்கும் கதைகள். சில புதுசும் இருக்கு.

இன்னிக்கு, ஒரு பக்கக் கதை எழுத விரும்பற புது ரைட்டர்ஸ் எல்லாரும் இந்த கலெக்ஷனை ஒரு தரம் படிச்சிட்டு ட்ரை பண்றது பெட்டர்.

வடக்குப் பக்கம் எங்கேயோ போயிருந்த சிவசங்கர்பாபா, (புதுசா தாடியோட) மெட்ராஸ் திரும்பிட்டார்னு 'தேவநிலாவுக்கு ஒரு தேவாரம்' மூலமா தெரிஞ்சுது. (இந்த டைட்டில் குடுத்தது யாரு? வலம்புரி ஜானா? இளந்தேவனா?) பார்ட்டி ஆபீஸுக்கு ஜெயலலிதா வர்றது மாதிரி அப்படி ஒரு கோலாகலம், கொண்டாட்டம், அவரோட பக்தர்களுக்கு. வழியேற கூடி நின்று, பூமாரி பொழிஞ்சு, கையைப் பிடிச்சி, கண்ணீர் மல்கி... "நம்ம நாட்டுல ரஜினிகாந்துக்கும் சிம்ரனுக்கும் கூட இப்படிப்பட்ட ரசிகர்கள் இருக்காங்க"ன்னு சொன்னான் என் ரிப்போர்டர் ஃப்ரெண்ட் ஒருத்தன்.

மலேஷியா வாசுதேவன் பாட்டுப் பாடறார். பாபா குதிச்சி, குதிச்சி டான்ஸ் ஆடறார்! (அது என்ன வகை டான்ஸ்னுதான் தெரியலை.)

ரெண்டு நாள் சவுத் ஸைட் போக வேண்டியிருந்தது, ஒரு வேலையா. ட்ரெயின்ல படிக்க ஒரு நாவல் எடுத்துட்டுப் போயிருந்தேன். இலங்கைத் தமிழ் எழுத்தாளர் தேவகாந்தனோட 'கனவுச் சிறை'.

அரசியல் ஆர்வமோ, அறிவோ துளியும் இல்லாத அப்பாவித் தமிழர்கள், இலங்கைக் கலவரங்களால எப்படிப் பாதிக்கப்படறாங்கன்றதைச் சொல்ற நாவல் இது!



இலங்கையைச் சேர்ந்த நயினாத்தீவுங்கற குட்டித் தீவுல வசிக்கற ஒரு வயசுப் பொண்ணுக்குக் கொழும்புல ஒரு கம்பெனில இண்டர்வியூ வருது. தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால துணைக்கு ஒரு வயசுப் பையனைக் கூட்டிட்டுப் போறா. (தப்பு எதுவும் நடக்கலை.) அந்த ஒரு சின்ன சம்பவம், அவளோட தனி வாழ்க்கையை எத்தனை தூரம் உருக்குலைச்சுடுதுன்னு ஆரம்பிக்குது நாவல்.

என்னடா இது, சாதாரண பெண்கள் பிரச்னை சமாசாரமா இருக்கேன்னு முதல்ல தயக்கமாத்தான் படிச்சேன்.

சட்டுனு ஒரு கலவரம், வாழ்க்கை பற்றின பிரச்னைன்னு வரும் போது,

சுமி சூப்பர் மார்க்கெட்!



• ப்ரியமுடன்:
எக்ஸ்போஸ் ஆன காதல்!

தனிமனித சோகங்கள், தோல்விகள், அவலங்கள் எல்லாம் எப்படி தூள் தூளாகிப் போய், ஒரு சமூகத்தோட 'இருப்பு' பத்தின கேள்வி பூதாகாரமா எழுந்து, மத்த எல்லாமே அடிபட்டுப் போறதுங்கறதை எக்ஸலன்டா காட்டியிருக்கார் தேவகாந்தன். ரொம்ப கனமான நாவல். (சைஸ்ல இல்லை!) அவசியம் படிச்சுப் பாருங்க. (இளம்பிறை பதிப்பகம், 375/8, ஆற்காடு சாலை, சென்னை - 24.)

தமிழ் சினிமா வசனங்கள்ல கொஞ்ச நாளா சகட்டுமேனிக்கு இங்கிலீஷ் வாசனை. மணிப்பிரவாள மசாலா. ('உன்னை மாதிரி'ன்னார் கல்கி எடிட்டர்.) எனக்கொன்னும் அது தப்பா தெரியலை. ஆனா, சில வசனங்கள் தவறான சொற் பிரயோகங்களால அபாயகரமான அர்த்தம் தர்ற சான்ஸ் நிறைய இருக்குங்கறதை ரீஸன்டா கண்டுபிடிச்சேன்.

'ப்ரியமுடன்' படத்து சீன் ஒண்ணு ஏதோ ஒரு சாடிலைட் சானல்ல வந்தது. அதுல ஒரு டயலாக் :

''வேலன்டைன்ஸ் டே அன்னிக்கு காதலர்கள் அவங்க லவ்வை 'எக்ஸ்போஸ்' பண்ணுவாங்க.''

'திக்'குனு ஆயிடுச்சு எனக்கு. 'எக்ஸ்போஸ்' பண்ண காதல் என்ன கொடாக் ஃபிலிமா? (தனியா, இதுக்கு மேல ஜோக் எதுவும் வேணாம்னு நினைக்கறேன்.) ●

— சுமி

பிரபலங்களின் மறுபாதி

பெர்னத் பிரமீளா ரபி பெர்னார்ட்

வகுப்பிலே பாடம் நடக்கும்; என் வயிற்றிலே குழந்தை உதைக்கும்!

"எனக்கு மருத்துவக் கல்லூரியில் சேர ஆசை. ஆனால் சீட் கிடைக்கவில்லை. எனவே மதுரை பாத்திமா கல்லூரியில் பி.எஸ்ஸி பிசிக்ஸ் சேர்ந்தேன். ஆனால் ஒரு வருடத்துடன் படிப்பை நிறுத்திவிட்டு, மறுபடி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.எஸ்ஸி - நர்சிங் சேர்ந்தேன். என் ராசியோ என்னவோ தெரியவில்லை. அதையும் நான் முடிக்கவில்லை! அதற்குள் எனக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டது. நிச்சயமான பின் ஒரு வருடம் கழித்துத் திருமணம் என்பதால், அதுவரை காலேஜ் போய்க் கொண்டிருந்தேன். திருமணமானவுடன், படிப்புக்கு குட்பை சொல்லிவிட்டு, பிலிபைன்ஸ் போய் விட்டேன்" என்கிறார் விஜய் டி.வி. ரபி பெர்னார்டின் மறுபாதியான பெர்னத் பிரமீளா.

சொந்த ஊர் மதுரை. (சாருக்குக் கும்பகோணம்) அப்பாவுக்கு ரயில்வேயில் டிக்கெட் பரிசோதகராக வேலை.

"எனக்கு நாட்டியத்தில் ஆர்வம் அதிகம் என்பதால், 'சதங்கை' என்ற அமைப்பில் சேர்ந்து நடனம் பயின்றேன். பைபிள் சம்பந்தப்பட்ட நாட்டிய நிகழ்ச்சிகள் பலவற்றில் பங்கேற்றிருக்கிறேன்!"

"உங்கள் திருமணம் காதல் திருமணமா?"

"நான் நடந்ததைச் சொல்லுகிறேன். பின் அது காதல் திருமணமா? இல்லை பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட ஒன்றா என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். அப்போது, ரபியும் அவரது தந்தையாரும் பிலிபைன்ஸ் நாட்டில், மணிலாவிலிருந்து ஒளிபரப்பான வெரிதோஸ் வானொலியின் தமிழ்ப் பிரிவில் பணியாற்றிக் கொண்டிருந்தனர். ஒரு செமினாருக்காக, அவர் மதுரை வந்திருந்தபோது, சதங்கை அமைப்பு வழங்கிய நாட்டிய நிகழ்ச்சியில் நானும் இடம் பெற்றிருந்தேன். அப்போது என்னைச் சந்தித்த ரபி, என்னைப் பற்றி, பேராயரிடம் விசாரித்துத் தெரிந்து கொண்டு, மணிலா சென்று தம் தந்தையாரிடம் பேசியிருக்கிறார். அதன்பின் அவர் குடும்பத்தினர், பேராயரின் உதவியுடன் என் குடும்பத்தை அணுகிப் பேச, திருமணம் முடிவானது."

"பிலிபைன்ஸ் வாழ்க்கை எப்படி இருந்தது?"

"முற்றிலும் புதிய சூழ்நிலை என்றாலும், அங்கே நான் சென்றபோது, என் கணவருடைய சகோதரிகள் இருவர் இருந்தது எனக்குச் சௌகரியமாக இருந்தது. இவரது அலுவலக நண்பர்கள் அளித்த விருந்துக்கு நான் பட்டுப் புடைவை அணிந்து சென்றபோது, விருந்துக்கு வந்திருந்த பல நாட்டுக்காரர்களும், என் புடைவையைத் தொட்டுப் பார்த்து, இதை எப்படிக் கட்டிக் கொள்ளுவது என்று கேட்டது, விசித்திரமாய் இருந்தது எனக்கு. மணிலாவில் அடிக்கடி கடும் புயல், மழை இருக்கும். ஆனால் மக்கள் அது பற்றிக் கவலையே படாமல், குடைபிடித்துக் கொண்டு, தம்வேலையைப் பார்க்கப் போவார்கள். ஆச்சரியமாக இருக்கும். நம் ஊர் போல, கொஞ்சம் அதிகமாய் மழை பெய்தால், ஸ்கூல் லீவு விடும் பிசினஸ் அங்கு இல்லை. மீன், இறைச்சிக் கடைகளில் கூட ஈயைப் பார்க்க முடியாது. அத்தனை சுத்தம்!

"இரண்டாண்டு கால மணிலா வாழ்க்கைக்குப் பின், நாங்கள் இந்தியா திரும்பினோம். மறுபடி படிக்க வேண்டும் என்கிற ஆசை எனக்கு ஏற்பட்டது. ரபி, அப்போது தினமணியில் நிருபராய்ச் சேர்ந்திருந்தார். ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரிக்குப் போய், கல்லூரி அட்மிஷன் முடிந்து விட்ட சூழ்நிலையில், அப்ளிகேஷன் பாரம் வேண்டும் என்று கேட்க, அவர்கள் 'யாருக்காக?' என்று கேட்டிருக்கிறார்கள். 'என் மனைவிக்காக' என்று இவர் சொன்னதும், அவர்

களுக்கு இனிய சர்ப்ரைஸ். எனக்கு பி.ஏ. சோஷியாலஜியில் சீட் கிடைத்துவிட்டது!"

"கல்லூரியில் படித்துக் கொண்டு குடும்ப வேலைகளையும் பார்ப்பது சிரமமாக இருந்ததா?"

"அவ்வளவாக இல்லை. காலையில் சீக்கிரமே இரண்டு பேரும் எழுந்து விடுவோம். வீட்டு வேலைகளை இரண்டு பேருமாகச் சேர்ந்து செய்து முடித்து விட்டு, நான் கல்லூரிக்குப் புறப்பட, அவர் ஆபீசுக்குப் போய் விடுவார். வகுப்புகள் முடிந்தவுடன் லைப்ரரியிலேயே உட்கார்ந்து, புத்தகங்கள், பாடங்கள் படித்துவிட்டு, சாயந்திரம் கணவர் வீடு திரும்பும் வேளையில் நானும் வீடு வந்து சேருவேன்.

"முதலாமாண்டு படிக்கிற போதே நான் கருவுற்றேன். தொடர்ந்து வகுப்பில் உட்கார சிரமமாக இருக்கும். வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருப்பார் லெக்சரர். என் வயிற்றுக்குள்ளே குழந்தை உதைத்துக் கொண்டிருக்கும். பிப்ரவரியில் வகுப்புகள் முடிய ஓரிரு நாட்கள் இருந்த சூழ்நிலையில், லீவு போட்டேன். அப்புறம் கரெக்டாய் பரீட்சைக்கு முன்னால் டெலிவரி முடிந்தது! அதன் பின் பரீட்சையை எழுதி முடித்தேன்.

"பரீட்சையின் போது, கைக் குழந்தையுடன் கல்லூரிக்குப் போவேன். இடையில் சில நிமிடங்கள், குழந்தைக்குப் பால் புகட்டுவதற்காகச் செலவிடுவேன்.

"டிகிரி முடித்த பிறகு, வீட்டில் சும்மா இருக்கப் பிடிக்கவில்லை. கேட்டரிங் இன்ஸ்டிடியூட்டில், 'ஹவுஸ் கீப்பிங்' பயிற்சியில் சேர்ந்தேன். படிப்பின் ஒரு பகுதியாக அடையார்கேட் ஓட்டலில் ஆறுமாதம் பயிற்சிக்கு அனுப்பப்பட்டேன். அவர்களுக்கு என் பணி பிடித்துவிட, படிப்பை முடித்து விட்டதும், அங்கேயே வேலைக்குச் சேர்த்துக் கொண்டார்கள். நான் வேலைக்குப் போனதால், என் குழந்தைகள் அம்மாவின் அன்புக்காக ரொம்ப ஏங்க ஆரம்பித்தனர். வேலையை விட்டு விட்டேன்!"

இப்போது, ரபி பெர்னார்ட் தம்பதிக்கு மூன்று பெண் குழந்தைகள்: மதலேன் நிறைமதி, ஆனி ஆரோக்கிய செல்வி, கேதரீன் சிறுமலர்.

"மூன்றும் பெண்ணாகிவிட்டதில் கொஞ்சமேனும் வருத்தமுண்டா?"

"மூன்றாவதாகப் பெண் பிறந்தபோது, ஏமாற்றமும், வருத்தமும் ஏற்பட்டது உண்மை. ஆனால் சீக்கிரம் அது தவறு என்று புரிந்து கொண்டு விட்டேன். இன்றைக்கு பையன்களைவிட, பெண்களை வளர்த்து ஆளாக்குவது சுலபம் என்று நினைக்கிறேன். எனவே, இப்போது அது பற்றி வருத்தப்படுவதில்லை.

"ரபியின் நேருக்கு நேர், இந்த வாரம் சந்தித்தேன் பற்றி உங்கள் கருத்து?"

"முன்கூட்டியே, யாரை பேட்டி காணப் போகிறார் என்று என்னிடம் சொல்வது அவரது வழக்கமில்லை. ஆபீஸ் விஷயங்கள் ஆபீசுடன் சரி! வீட்டுக்கு வந்து விட்டால், குடும்ப விஷயங்கள்தான். ஆனால், அதற்கும் இப்போதெல்லாம் ரேஷன் வந்து விட்டது!"



சந்திப்பு : **எம். பாரதி**

படம் : **ஸ்ரீஹரி**

● எல்.எம். மங்கை, திருவண்ணாமலை.

? வாகனப் பதிவு எண்ணைத் தமிழில் எழுதலாம் என அரசு அறிவித்தது சரிதானா?

! டிராஃபிக் கான்ஸ்டபிள்களுக்குத் தனித் தமிழ் வகுப்பு ஏற்பாடுகள் எப்போது தொடங்கும்?

● க. சந்தானம், பவித்திரமாணிக்கம்.

? வாஜ்பாய் அரசு வெளியுறவுக் கொள்கையில் சிறப்பாகச் செயல்படுகிறது என்று வைகோ கூறியுள்ளாரே?

! அணுகுண்டோடு சேர்த்து அயல்நாட்டு நல்லுறவும் வெடித்துச் சிதறிப் போச்சே! வைகோவுக்குத் தெரியாதா என்ன!

● எல். கோபாலகிருஷ்ணன், வேலூர் - 6.

? தமிழக சட்டசபை உறுப்பினர்களுக்குக் கார் வாங்க அரசு 'கடன்' தரப்போகிறதாமே? கார் இல்லாத எம்.எல்.ஏக்கள் கூட உண்டா?

! இன்னொரு கார் வாங்கக் கூடாதா என்ன? அதுவும் அரசுப் பணத்தில் மலிவாகக் 'கார்' கிடைக்கும்போது...

● பா. வடிவேல், தேவனாங்குறிச்சி ❑

? கர்நாடக சங்கீதத்துக்கும் 'கல்கி'க்கும் ஒரு பிரிக்க முடியாத தொடர்பு இருப்பதாக நினைக்கிறேன். உண்மைதானே...?

! உண்மைதான். இரண்டு காரணங்கள்: பத்திரிகையின் ஸ்தாபகர்களுள் ஒருவர் தன்னிகரற்ற இசையரசி எம்.எஸ்; அதன் முதல் ஆசிரியர் அமரர் கல்கி, கர்நாடக இசைக் கச்சேரிகளுக்கு முதன் முதலில் விமர்சனங்கள் எழுதியவர். அதன் மூலம் அக்கலையையும் பல கலைஞர்களையும் ஊக்குவித்து, பரவலாக அறியப்படச் செய்தார். அந்தப் பணியை கல்கி பத்திரிகை தொடரவே விரும்புகிறது.

● எம். பிச்சைக்கனி, கீழ்வெண்பாக்கம்.

? முன்பு காந்தியடிகள் இருந்த உண்ணாவிரதத்துக்கும் இப்போது அரசியல்வாதிகள் இருக்கும் உண்ணாவிரதத்துக்கும் இடையே என்ன வேறுபாடு?

! உண்ணாவிரதத்தின் இலக்கண இலக்கியங்களை உணர்ந்தவர்களுக்குத் தெரியும்... முன்னது அசல், பின்னது போலி. அதனால் மதிப்பும் இல்லை!

● என். பாலகிருஷ்ணன், மதுரை - 1.

? தமிழ்நாட்டிலுள்ள காங்கிரஸ் சொத்துக்களைப் படிப்படியாக மீட்பாராமே திண்டிவனம் ராமமூர்த்தி?

! அப்போதும், மக்களிடம் இழந்த செல்வாக்கை மீட்டுத் தருவேன் என்று சொல்லுகிற துணிச்சல் வரவில்லை பாருங்கள்!

● ச.ஆ. கேசவன், கோயில்பட்டி - 2.

? கல்கி தீபாவளி மலர் வாங்குவோருக்குத் தங்கம், கார், டூ-வீலர், கலர் டீ.வி., ஃப்ரிட்ஜ், வாஷிங் மெஷின், டேப் ரிகார்டர் என ஏராளமான பரிசுப் பொருட்கள் வழங்கும் திட்டம் ஏதும் உண்டா...?



• துணி வில்லையே!

! இல்லை. இந்த விஷயத்தில் கல்கி தீபாவளி மலர் தனது சம்பிரதாயத்தை இழக்காது.



• தீர்வு அல்ல...

● ஜி.ஜி. கிருஷ்ணன், விசூர்.

? எல்லா பிரச்னைகளுக்கும் நிரந்தரத் தீர்வு ஜனாதிபதி ஆட்சிமுறைதான் என்கிறாரே ஹெக்டே...?

! எந்த முறையானாலும் ஊழல் இல்லாவிட்டால்தான் சிறக்கும். பிரச்னைகளுக்கு அடிப்படை ஊழலே தவிர இன்றைய ஆட்சிமுறை அல்ல.

● வைகை வளவன், மதுரை - 17.

? குடியரசுத் தலைவரின் சம்பளத்தை ஐம்பதாயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்களே.... அந்த அளவுக்கா அவர் வறுமையில் வாடுகிறார்...?

! பதவிக்கு ஏற்ற செலவும் இருக்கும்; அதை விடுங்கள். ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, எம்.பிக்கள் முதலிய பலருக்கும் சம்பள உயர்வு வழங்கிக் கொள்வதில் சர்வ கட்சி எம்.பிக்களும் நாடாளுமன்றத்தில் காட்டிய ஒற்றுமையை, நாட்டை எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்னைகளிலும் காண்பித்தால் தேவலாம். தங்களை முன்னேற்றிக் கொள்ள முனைவதுபோல் அவர்கள் தேசத்தை முன்னேற்ற முயற்சி செய்வதில்லை என்பதுதான் குறை.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? குழந்தை பெறுவது ஓர் இனிமையான அனுபவம். குழந்தை, ஒருவரது வாழ்வின்

• உத்தரவு!



பிரதமரிடம் நம்பிக்கை

• இரண்டு...





• ...காரணங்கள்

முக்கியமான அம்சம் என்று ஜப்பான் அரசு பிரசாரத்தைத் துவக்கியுள்ளதே?

! அந்நாட்டுப் பெண்கள் தீவிரமான career women ஆகி, திருமணமே வேண்டாம் என்று முடிவு செய்கிறார்களாம். தப்பித் தவறி மணம் செய்து கொண்டால் 'குழந்தை எதற்கு?' என்கிறார்களாம். அதன் விளைவு தான் இந்த அறிவிப்பு!

● **கே.வி. ராமன், சென்னை - 73.**

? காவிரிப் பிரச்னையை முடிவுக்குக் கொண்டு வந்த நமது பிரதமர், நாட்டில் ஒவ்வொரு பிரச்னைக்கும் சமரசம் மூலம் தீர்வு காண்பார் என்பதில் மக்களுக்கு நம்பிக்கை எழுந்துள்ளதே, இதைப் பற்றி உங்கள் கருத்து?

! இது சரியான மதிப்பீடோ நம்பிக்கையோ அல்ல. உச்சநீதி மன்றத்தின் உத்தரவு இல்லாதிருந்தால் வாஜ்பாயி காவிரி பிரச்னைப் பக்கமே தலை வைத்துப் படுத்திருக்கமாட்டார்! ஆட்சிக்கே ஆபத்தை விளைவிக்கக் கூடிய மிரட்டல் குண்டு வெடிக்கும் என்பதால் ஆறப் போடவே விரும்பி இருப்பார்.

• தெரியாத உண்மை!



● **ஜி. செல்வராஜன், ரிஷிவந்தியம்.**

? இதய கமலத்தில் மணம் வீசிக் கொண்டிருக்கும் கல்கிக்கு அஞ்சல்தலை கௌரவத்தைக் கோரிப் பெறுவது அகௌரவமில்லையா?



• குழப்பம் தவிர்க்க

! இல்லை. நம் இதய கமலத்தில் அவர் வீற்றிருக்கிறார் என்பதை உலகறியச் செய்து, கௌரவிப்பதாகும். அஞ்சல் தலை வெளியீடு. இதை ஒப்புக் கொண்டால், பின்னர் அஞ்சல் துறை கவனத்துக்கு விஷயத்தைக் கொண்டு போவதும் தபால் தலைக்கு விண்ணப்பிப்பதும் தவிர்க்க முடியாதது. அரசின் நடைமுறைக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டது.

● **எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.**

? அரசியல்வாதிகளின் பதவி + பணவெறி, அதிகார வர்க்கத்தின் சுயநலம், மக்களின் அலட்சியம் போன்ற இன்றைய இந்தியாவின் அவலங்களைக் காணும் போது, ஒரு நல்ல சர்வாதிகாரியின் கீழ் வாழ்ந்தால் தவறில்லை என்று தோன்றுகிறது... உங்களுக்கு...?

! சர்வாதிகாரத்தில் இந்த அவலங்கள் இராது என்று எண்ணுவது அறியாமை. சர்வாதிகாரி ஆண்டால் நீங்கள் இப்படி ஒரு கேள்வி கேட்க முடியுமா? நான் பதில் சொல்ல முடியுமா?! எல்லாம் மூடி மறைக்கப்படும் என்பதுதான் உண்மை. எனவே, ஜனநாயகமே மேலானது. தவறுகள் திருத்தப்படவும் குற்றங்கள் தண்டனை பெறவும் ஜனநாயகத்தில்தான் வாய்ப்பு உண்டு.

❑ ரூ. 50 பரிசு பெறுபவர்:
பா. வடிவேல்
7/39, CSI தெரு,
தேவணாங்குறிச்சி - 637 209
திருச்செங்கோடு தாலுகா, நாமக்கல் மாவட்டம்.

● **பி.ஆர். பார்த்தசாரதி, திருச்சி - 6.**

? 'Madras Medical College என்ற பெயரே நீடிக்கும். சரித்திரப் புகழ் பெற்ற அம்மருத்துவக் கல்லூரிக்கு Chennai Medical College என்ற பெயர் வேண்டாம்' என டாக்டர் பி. ராமமூர்த்தி கருத்து கூறியிருக்கிறாரே?

! டாக்டர் ராமமூர்த்தி சொல்வது நியாயம் தான். உலகளாவிய அளவில் Madras Medical College சரித்திரப் புகழ் பெற்றுள்ளது. பெயரை மாற்றுவதால் அது வேறு புதுக் கல்லூரி என்று எண்ணிவிட வாய்ப்பு உண்டு என்பது அவர் வாதம். திருமணத்துக்கு முன்பே தனிப் பெயர் எடுத்த பெண்கள் தங்கள் பெயரை மாற்றிக் கொள்வதில்லை. அதுபோல்தான் இதுவும். மேலும் CMC என்னும்போது வேலூர் ஆஸ்பத்திரி என்று எண்ணக் கூடும். ஒரு குழப்பத்தைத் தவிர்க்கலாம்.

● **ஜஹ்பர் காதர், வினாத்திருளம்.**

? மனைவியை நேசிக்கும் பாடத்தைக் கணவர்களுக்கு நடத்த மலேசிய அரசு திட்டமிட்டுள்ளதாமே?

! பரிதாபம்! இனி சாப்பிடவும் தூங்கவும் மூச்சுவிடவும் கூடப் பாடம் நடத்த வேண்டியது தான்!

எழுந்துள்ளதே...?



எனது சொந்த நிறுவனம் இரண்டாயிரம் சதுர அடி கொண்ட ஒரு வாடகைக் கட்டடத்தில்தான் துவங்கியது. முன்னால் என் அலுவலகம், உள்ளே ஒரு சோதனைக்கூடம். சோதனை செய்து பார்த்து, புதிய பொருளைத் தயாரிக்கும் ஆர்வம் என்னை விடவில்லை. மற்றபடி விற்கும் பொருட்களை மூட்டையாகவும் பீப்பாயாகவும் அடுக்கி வைக்கப் பெரிய இடம்.

இப்படிப்பட்ட இடத்தை எடுத்ததுகூட நிர்ப்பந்தம்தான். நான் நெருக்கப்பட்டதுதான் காரணம்! 'அமகோ' என்ற இரண்டாவது பெரிய எண்ணெய் நிறுவனத்தார் என்னைக் கூப்பிட்டார்கள். எண்ணெய் எடுப்பதில் உபயோகிக்கப்படும் களிமண் போன்ற கூழை நீர்க்க வைக்கும் ஒரு பொருளைக் குறிப்பிட்டு அதை சப்ளை செய்ய முடியுமா என்று கேட்டார்கள். நான் உடனே ஒப்புக்கொண்டேன். யார் இதை உற்பத்தி செய்கிறார்கள் என்பது அங்கே பலருக்குத் தெரியாது. அது ஒரு ரசாயனப் பொருள். அந்த நிறுவனத்தை நான் அறிவேன். எனவே நான் அவர்களைக் கூப்பிட்டேன். அப்போது என் வீடுதான் என் அலுவலகம். போன் என் பெயரில்தான் இருந்ததே தவிர, கம்பெனி பெயரில் இல்லை. ஆகவே என் கம்பெனி பெயரைச் சொல்லி தகவல் விசாரித்தால் கிடைக்காது. அப்படிப்பட்ட கம்பெனியே இல்லை என்று சொல்லி விடுவார்கள்.

மற்றுமோர் விஷயம், எங்கள் தொழிலில் இருக்கும் எந்தப் பெரிய நிறுவனமும் சரி, எந்தக் கலவை வேண்டுமோ அதற்கான மூலப் பொருட்களையும் கலவை விகிதத்தையும் இதை செய்து கொடுக்கும் ஒரு தொழிற்சாலைக்கு அனுப்பி விடுவோம். அவர்கள் அந்தக் கலவை விகிதத்தையும் என்ன பொருள் தயாரிக்கப்படுகிறது



என்பதையும் ரகசியமாக வைத்துக் கொள்வார்கள். அவர்களே அங்கே அதை கை இருப்பாக வைத்துக் கொண்டு எங்களுக்கு ஆர்டர் வரும்போது நாம் சொல்கிற கம்பெனிக்கு அனுப்பி வைப்பார்கள்.

இதனால் இந்தத் தொழிலில் இருக்கும் எந்தப் பெரிய நிறுவனங்களுக்கும் சொந்தத் தொழிற்சாலை என்று ஏதும் இருப்பதில்லை. உடனடி தேவைப்படும் பல பொருட்களையும் விற்பனைக்கு வைத்திருக்கும் 'கோடோன்' எனப்படும் ஸ்டோரேஜ் இடம் மட்டும் அலுவலகத்துடன் இணைந்து இருக்கும்.

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

அமெரிக்காவின் வடமேற்கு மாநிலமான வாஷிங்டனி

லிருந்து ஒரு ''ரெயில் பெட்டி'' அளவு பொருளை வரவழைக்க ஆர்டர் கொடுத்தேன். பொருள் தயாராயிற்று. ஆர்டர் கொடுத்த இடத்தில் என் போன் நம்பரைத் தொலைத்து விட்டார்கள்! ஏதோ சில விவரங்களை அறிய என் கம்பெனி பெயரைச் சொல்லி என் போன் நம்பரைத் தேடி இருக்கிறார்கள். இந்த ஊரில் அப்படிப் பட்ட கம்பெனியே இல்லை என்று டெலிபோன் இலாகா கூறிவிட்டது! அவர்களுக்குச் சந்தேகம் வந்தது! விசாரித்துக் கொண்டு வந்து, ஒரு வழியாக என்னைப் பிடித்தார்கள். ''உன் கம்பெனியே இல்லை என்கிறார்களே! உன்னை நம்பி எப்படிப் பொருளை அனுப்ப முடியும்?'' என்று 'டோஸ்' விட ஆரம்பித்ததும்தான் எனக்கு 'இது பொருளை வாங்கி விற்கிற சாதாரண விஷயமல்ல. பெரிய அலுவலகம், அதற்கென்று பெண் காரியதரிசி மற்ற எல்லா பந்தாக்களும் தேவை என்பது எட்டியது.

உடனடியாக நான் இன்னும் பெரிய இடத்திற்கு மாற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மாறினேன்.

தொழில் வேகமாக வளரவே, எனது விற்பனையாளர்களுக்கும் காரிய தரிசிக்கும் கணக்கெழுதுபவருக்கும் மீட்டிங் ஹால் என்றும் பெரிய இடம் மீண்டும் தேவைப்பட்டது.

அருகிலுள்ள தொழில்பேட்டையில் ஒரு பெரிய இடம் பூட்டப்பட்டுக் கிடந்தது. விசாரித்ததில் அது வங்கியின் வசம் இருக்கிறதென்றார்கள். ''உங்களுக்குப் போதுமா? பிடித்திருக்கிறதா பாருங்கள்!''

லாபமோ லாபம்!



என்று சாவியைக் கொடுத்தார்கள்.

நானும் என் மனைவியும் காரில் சென்று நிறுவனத்திற்கு சொந்தமான பெரிய 'கார்பார்க்' செய்யுமிடத்தில் நிறுத்தினோம். இறங்கினேன். காலடியில் புத்தம் புதிய காசு ஒன்று கிடந்தது. எடுத்துக் கொண்டேன். அலுவலகத்தைத் திறந்தேன்.

'**அ**மகோ' நிறுவனத்தின் தலைமை நிர்வாகி ஒருநாள் என்னைக் கூப்பிடனுப்பினார். ''நீங்கள் ஏன் இன்னொரு கம்பெனி மூலம் உங்கள் பொருளை விற்க வேண்டும்? நேராக எங்களுக்கே சப்ளை செய்தால் என்ன? பொருளை ஏற்றி வர டிரக்குகள் எல்லாம் நாங்கள் ஏற்பாடு செய்து தருகிறோம்'' என்றார். என் கண்கள் ஆனந்தத்தால் அகல விரிந்தன. எனினும் நாங்கள் முதலில் யார் மூலம் அமகோவுக்கு விற்று வந்தோமோ அந்த நிறுவனத்தின் தலைவரிடம் ஒப்புதல் பெற்று, அந்த மன நிறைவோடுதான்

புதிய பணியை மேற்கொண்டேன். அவர்களை விட நாங்கள் அதிகம் வளர்ந்தது உண்மை. எனது படிப்பும், தொழில் நுட்பமும் அதற்குக் காரணம் எனினும் இன்னும் அவர்களுக்கு நான் நன்றி சொல்கிறேன்; சந்திக்கிறேன்.

அடுத்த சில ஆண்டுகளில் மற்றோர் சம்பவம் நிகழ்ந்தது.

நாங்கள் இருந்த ஊர் லாபயெட் எனப்படும் நகரம். மெக்சிகோ வளைகுடாவில் எண்ணெய்க்காகத் தோண்டும் எல்லா பெரிய நிறுவனங்களுக்கும் தலைமை அலுவலகம் லாபயெட்தான். சில சமயம் 140 இடங்களில் வளைகுடாவில் எண்ணெய் தோண்டும் வேலை நடக்கும். இது எங்கள் வளைகுடாப் பகுதியில் மட்டும். அகில இந்தியாவிலும் அப்போது 90 'ரிக்'குகள் இருந்தன.

எண்ணெய் எடுக்கும் துரப்பண யந்திரம், டி.வி டவர் போன்றிருக்கும் யந்திரத்தை உபயோகிக்க ஒரு நாளைக்கு 64000 டாலர் வாடகை. குறைந்த பட்சம் 11 பேர் தொழில் நுட்ப ஆசாமிகள் அங்கு வேலை செய்கிறார்கள். அவர்களது சம்பளம், பூமியைத் தோண்டுவதற்குத் தேவையான ரசாயனப் பொருட்கள் - இப்படி ஏராள செலவு.

'அமகோ'வின் தலைமை நிர்வாகி என்னைக் கூப்பிட்டனுப்பினார். ''எண்ணெய் கம்பெனி சம்பந்தமாக நாங்களே தயாரிக்கும் பல்வேறு ரசாயனக் கலவைகள் இருக்கின்றன. அவை பெரும்பாலும் நீங்கள் விற்பதிலிருந்து வேறுபட்டவை. இந்த எங்களுடைய பொருட்களை விற்கும் உரிமையை உங்களுக்குக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறோம். எங்கள் தேவைக்கும் பிறர் தேவைக்கும், நீங்கள் விற்கலாம். இதை நாங்கள் நிர்வகிக்க விரும்பவில்லை'' என்று சொல்லி கை குலுக்கினர்.

எப்படி கதை?

இவை எல்லாம் என்னை மீறிய சம்பவங்கள். எனது தரமான சேவையும், நாணயமும், பொறுப்பான நடவடிக்கைகளும் காரணமாயிருந்திருக்கலாம். ஆனாலும் இவை என்னை மீறிய சம்பவங்கள். எனக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

எங்கள் நிறுவனத்தின் மேலாளர் - எனக்கு அடுத்தபடி இருந்த நிர்வாகி 'ரான்' என்பவருக்கு நான் மூன்று மாதத்திற்கொரு முறை சம்பளத்தை ஏற்றிக் கொண்டே போனேன். இது இப்படி சகஜமாக நடைபெறும் விஷயமல்ல. பெருமையுடன் இதை என் மனைவியிடம் தெரிவித்தபோது அவள் சொன்னாள். ''என்ன இது? ரானுக்கு நல்ல சம்பளம்தானே கொடுக்கிறோம். ஏன் இப்படி அடிக்கடி ஏற்றிக் கொண்டே போகிறீர்கள்?'' என்றாள். ''இதோ பார்! ஆற்றிலே வெள்ளம் போகிறது! அய்யா குடி! அப்பா குடி!'' அதுதான் விஷயம்!'' என்றேன்! எங்கள்



நிறுவனம் அப்படி வளர்ந்தது.

நிறுவனம் துவங்கிய உடனேயே நான் ஓர் ஆடிட்டரை - தணிக்கையாளரை - மாதாந்திர கணக்கு வழக்கு பார்க்கவும், வருமான வரி, சம்பள வரி பிடித்தம் போன்றவற்றைச் செய்ய வைத்திருந்தேன்.

ஆடிட்டர் போலவே ஒரு வழக்கறிஞரையும் எங்கள் நிறுவனத்திற்காக வைத்திருந்தேன். வேலை செய்யும் மணிக்கேற்ப அதற்குப் பணம் கொடுக்க வேண்டும்.

எந்தப் பணியாளருடன் ஒரு வேலை ஒப்பந்தம் செய்தாலும் நான் வழக்கறிஞர் விவரமான ஒப்பந்தம் எழுதிக் கொடுத்த பிறகுதான் கையெழுத்திடுவேன்.

''அமெரிக்கா எதற்கும் வழக்கு மன்றங்களுக்குப் போகும் சமுதாயம்'' என்று ஜப்பானிய 'சோனி' நிறுவனத்தின் தலைவர் சொல்வார். அங்கே ''சட்டத்தை மீறலாம்; செல்வாக்கை உபயோகிக்கலாம், லஞ்சம் கொடுத்து அதிகாரியை வாங்கி விடலாம்'' என்கிற விஷயமே இல்லை. எனவே எல்லோரும் அங்கே சட்டத்தைப் பெரிதும் மதிப்பார்கள்.

வருமான வரி அதிகாரிகள்கூட அன்புடன், மரியாதையுடன் நம்மை நடத்துவார்கள். ஒருமுறை நமது கணக்கு தணிக்கை செய்யப்படுமானால் அதன் பின் ஒரு மூன்றாண்டுகளுக்கு நம் பக்கமே வரமாட்டார்கள்.

முதல் தடவை என்னைத் தேடி வந்தபோதும் சில சந்தேகங்களைக் கேட்டு தெளிவு படுத்திக் கொள்வதற்காகவே வந்தார்கள். 'எப்படி செலவினங்களை அவ்வப்போது குறித்துக் கொள்ள வேண்டும்' என்பதை எனக்குக் கூறி விட்டுப் போனார்கள், அவ்வளவுதான். அங்கே பொதுவாக எல்லோரையும் நல்லவர்கள், யோக்கியமானவர்கள் என்றே பார்க்கிறார்கள்.

எனது மூத்த மகன் சித்தார்த்தன், அங்கே வங்கிகளைத் தணிக்கை செய்யும் அரசாங்க நிதி கட்டுப்பாட்டு இலாகாவிலே பணிபுரிகிறான். அந்த இலாகாவிலே அவன் சேர்ந்து 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் நல்ல உயர்ந்த உத்தியோகம்.

ஒருநாள் காலையில் நான் செய்தித்தாளைப் புரட்டியபோது நகரத்திலுள்ள ஒரு வங்கி மூடப்பட்டதாகப் படித்தேன். என் மகனைக் கேட்டேன். ''ஏன் மூடினார்கள்?'' என்று. அதன் காரணங்களை எல்லாம் எடுத்துக் கூறிவிட்டு, ''நேற்று மாலை, எனது குழுவுடன் சென்று நான் மூடிவிட்டு வந்தேன்'' என்றான். எனக்கு வியப்பாக இருந்தது. எப்படி அங்கே நிர்வாகிகளுக்குப் பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பது எனக்கு வியப்பாக இருந்தது. எல்லாம் அங்கே நேரடி விஷயம்; எதுவும் வாய்தா வாங்கும் விஷயமல்ல; தள்ளிப் போடும் விஷயமல்ல. வேகமாக, அதே சமயம் நியாயமாக, அங்கே காரியங்கள் நடைபெறுகின்றன. அரசாங்கம் என்பது எங்கே இருக்கிறது என்று தேட வேண்டும். நீங்கள், உங்கள் குடும்பம், உங்கள் தொழில் இதுதான் அங்கே முக்கியத்துவம் பெறுகின்றன. நமக்கு உதவியாக அரசாங்கம் அங்கே இயங்கிக் கொண்டிருக்கிறது.

ஒரு தொழில் துவங்கினால் நமது நிறுவனத்தின் பெயரையும் தொழிலையும் ரிஜிஸ்டர் செய்ய வேண்டும். அவ்வளவுதான். நிறுவனத்தின் பெயர்ப் பலகையை மாட்டி விட்டு நீங்கள் தொழிலை நடத்தலாம். தொழிலுக்கு உதவி செய்வதற்காகவே அங்கே அரசாங்கம் இருக்கிறது. இங்கே தொழிலையும் தொழிலதிபர்களையும் என்ன செய்கிறார்கள், எப்படி உபயோகிக்கிறது அரசாங்கம் என்று நான் சொல்லத் தேவை இல்லை.

சொந்தத் தொழிலில் நாட்டமுடையவர்களாகத்தான் அங்கே இளைஞர்களை சமுதாயமும் கல்விக்கூடங்களும் பக்குவப்படுத்துகின்றன. படிப்பை முக்கியமாக வேலைக்காகப் படிப்பதில்லை; அறிவிற்காக, அந்த அறிவை வாழ்வில் உபயோகிக்கலாம் என்கிற நோக்கில் இளைஞர்கள் கல்விக்கூடத்தை அணுகுகிறார்கள். பாடத்தை எடுத்துக் கொள்கிறார்கள்.

என் தணிக்கையாளர் என்னைவிட வயதில் மூத்தவர். அவருடைய மனைவியும் ஒரு தணிக்கையாளர்தான். பார்க்லே கெமிக்கல்ஸ் என்ற எங்கள் நிறுவனம் அபரிமிதமாக லாபம் சம்பாதித்துக் கொண்டிருந்தபோது நிறுவனத்தின் மாதாந்திர வரவு செலவைப் பார்த்து விட்டு அவர் சிரித்துக் கொண்டே கூறினார்.

''இவ்வளவு பணத்தையும் வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்றார்.

நான் சிரித்துக் கொண்டேன்.

மனத்தில் ஓடிய எண்ணம்: இனி நாம் ஊருக்கு - தமிழ்நாட்டுக்குக் கிளம்புகின்ற வேலையைப் பார்க்க வேண்டியதுதான்.''

(தொடரும்)

சென்னை உயர்நீதி மன்றத்தில் உள்ள பெண் வழக்கறிஞர்களிடையே, இப்போது "கருத்துச் சுதந்தரம்" பற்றிய விவகாரம் ஒன்று விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது. இதன் காரணமாக, 600 உறுப்பினர்களைக் கொண்ட பெண் வழக்கறிஞர்கள் சங்கம் இரண்டாக உடைந்து விடுமோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. விஷயம் இதுதான் : இளம்பெண் வழக்கறிஞர்கள் தங்கள் தொழிலில் சந்திக்கும் பிரச்னைகள் பற்றி வார இதழ் ஒன்றிற்கு பேட்டி கொடுத்ததுதான் பிரச்னையின் துவக்கம்!



நளினி சிதம்பரம், அருள்மொழி, சிதா ராம சேஷன், சுதா ராமலிங்கம், வைகை, சுமதி, பாதர்சயித் என்று மக்களுக்குக் கொஞ்சம் அறிமுகமான வழக்கறிஞர்கள் வக்காலத்து வாங்கியதோடு சங்கத்தை விட்டு விலகியும் விட்டார்கள். இவர்களைத் தொடர்ந்து இருபதுக்கும் மேற்பட்டோர் விலகியிருக்கிறார்கள். விலகியவர்கள் தனிச் சங்கம் அமைக்க இருப்பதாக உயர்நீதிமன்ற வட்டாரங்கள் கிசுகிசுக்கின்றன. இந்த நிலையில் விவகாரத்தின் பின்னணியைத் தெரிந்து கொள்ள சங்கத்தின் இப்போதைய தலைவியான பீபிஜான், செயலாளர் சாந்தகுமாரி, செயற்குழு உறுப்பினர் பரமேஸ்வரி ஆகியோரைச் சந்தித்தோம். கோபம் கொப்பளிக்க நம்மிடம் கூட்டாகக் குமுறினார்கள் அவர்கள்.

"ஏதோ ஒருசிலர், தாங்கள்தான் முற்போக்குவாதிகள், கருத்துச் சுதந்தரத்தின் காவலர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டு திரிகிறார்கள். பத்திரிகைகளிடம் அவர்களுக்கு உள்ள தொடர்பின் காரணமாக, அடிப்படை உண்மைகளை மறைத்து விட்டு பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் யாரும் கருத்துச் சுதந்தரத்திற்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் ஒருவரது கருத்துச் சுதந்தரம் என்பது மற்றவர்களுடைய மூக்கு நுனியைத் தொடக் கூடாது. இன்று எல்லாத் துறைகளிலுமே பணிபுரியும் இடங்களில் பாலியல் ரீதியான பிரச்னைகள் உட்பட பலவற்றைப் பெண்கள் சந்திக்கிறார்கள். மறுக்கவில்லை. ஆனால் பத்திரிகைக்கு பேட்டி கொடுத்த பெண் வழக்கறிஞர்கள் தாங்கள் ஏதாவது

பிளவுபட்டு நிற்கும்

பாதிக்கப்பட்டிருந்தால் அதைச் சொல்லியிருக்கலாம். அதை விட்டு விட்டு, 'சில பெண் வழக்கறிஞர்கள் தங்களின் ஸீனியர் ஆண் வழக்கறிஞர்களால் பாதிக்கப்படுவதாகச் 'சொல்லப்படுகிறது', 'கேள்விடுகிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். கொஞ்சம் வசதி குறைந்த பெண் வழக்கறிஞர்கள் மிகச் சுலபமாக exploit செய்யப்படுகிறார்கள். என்றெல்லாம் பேசி, கற்புத் தன்மையோடு ஒருவர் இருப்பதற்கு பொருளாதார அடிப்

"அவர்கள் அளித்த பேட்டி மற்ற பெண் வழக்கறிஞர்களை அவமானப்படுத்துவது போலிருக்கிறது" என்று பெரும்பான்மையோர் குரல் கொடுக்க, ஜெனரல் பாடி மீட்டிங்கில் ஒரே கசமுசா. "அவர்கள் பேட்டி கொடுக்க உரிமை உண்டு; கருத்துச் சுதந்தரத்தில் யாருமே தலையிடக் கூடாது" என்று இளம் ஜூனியர்களுக்கு ஆதரவாக

படையும் ஒரு காரணம் என்று கேவலப் படுத்தியிருக்கிறார்கள். உயர்தரப் பெண்கள் (elite) கற்பு நெறி தவற மாட்டார்களாம்... ஏழை என்றால் இளக்காரமா?

"மற்றவர்கள் பாதிக்கப்பட்டால் அவர்களுக்காகக் குரல்கொடுக்க வேண்டியவர்கள் வழக்கறிஞர்கள். அப்படிப்பட்டவர்கள் இப்படிப் பொத்தாம் பொதுவாகப் பேட்டியளித்ததன் விளைவு என்ன ஆயிற்று? பெண் ஸீனியர்கள் குறைவாக உள்ள நிலையில் பல ஆண் ஸீனியர்கள் பெண் ஜூனியர்களே வேண்டாம் என்று சொல்லத் துவங்கியிருக்கிறார்கள். கல்யாணமான பல ஜூனியர் பெண்களிடம், அவர்களது மாமியார்களும், கணவர்களும் "உன்னோட ஸீனியர் எப்படி?" என்று சந்தேகத்துடன் கேள்வி கேட்கிறார்கள். அந்தப் பேட்டி இதுபோன்ற பல பாதிப்புகளை உண்டாக்கியிருக்கிறது. இதன் காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட பெண் வழக்கறிஞர்களின் வேண்டுகோள்படி ஜெனரல் பாடி மீட்டிங் போடப்பட்டு, பேட்டி கொடுத்த பெண்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அந்த வகையில் தீர்மானமும் நிறைவேறிற்று. 'அந்தப் பெண்களும் மற்றவர்களுடைய உணர்வை பாதித்து விட்டோம் போலிருக்கிறது' என்று உணர்ந்து மன்னிப்புக் கேட்கும் தருவாயில், இப்போது வெளியேறி உள்ளார்களே– அவர்கள் கொடுத்த உற்சாகத்தின் பேரில் தடாலடியாக மாறி விட்டார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் பேட்டியளித்த ஐந்து பேரும் "தாங்கள் சொல்லாத விஷயங்கள் பல அந்தப் பேட்டியில் வந்திருக்கின்றன" என்று வாரப் பத்திரிகைக்கு மறுப்பும் எழுதியிருக்கிறார்கள். மறுப்புக் கடிதத்தின் நகல் எங்களிடம் இருக்கிறது. இந்த நிலையில் உண்மையை விளக்கி, தங்களது பேட்டிக்கு ஸிம்பிளாக ஸாரி என்று சொல்லியிருந்தாலே பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கும். அதை விட்டு விட்டு, ஏதோ கொள்கை வீராங்கனைகள் போல இப்போது கொந்தளிக்கிறார்கள். 600 உறுப்பினர்களில் 27 பேர்தான் விலகியிருக்கிறார்கள்.

''மற்ற தொழில்களைப் போலல்ல வழக்கறிஞர் தொழில். ஸீனியர் வழக்கறிஞர் ஜூனியர் பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்டால், 'குட்பை' சொல்லிவிட்டு உடனே வெளியேறி விடலாம். இது வரை தமிழ்நாடு பார் கவுன்ஸிலிடமோ அல்லது எங்களிடமோ எந்தப் பெண் வழக்கறிஞரும் தாங்கள் பாலியல் ரீதியாகவோ அல்லது வேறு வகையிலோ ஸீனியர் ஆண் வழக்கறிஞர்களால் பாதிக்கப்பட்டோம் என்று புகார் கொடுத்ததில்லை. சங்கத்தை யாரும் பிரிக்க முடியாது. ஆட்கள் வருவார்கள்; போவார்கள். 1961லிருந்து இயங்கிக் கொண்டிருக்கும் இந்தச் சங்கத்திற்கு எந்த ஆபத்தும் வராது. காகிதக் கணைகள் மழுங்கிப் போகும்...'' என்றார்கள்.



• கீதா ராமசேஷன்

பெண் வழக்கறிஞர்கள்!

பெண் வழக்கறிஞர் சங்கம் கருத்துச் சுதந்தரத்துக்கு 'தடை' போடுவதாகக் கூறி விலகியவர்களில் ஸீனியர் வழக்கறிஞர் கீதா ராமசேஷனும் ஒருவர். அவரைச் சந்தித்த போது...

"அந்த ஐந்து இளம்பெண் வழக்கறிஞர்களின் பேட்டி, பரபரப்பைக் கூட்டுவதற்காக, கொஞ்சம் மிகைப்படுத்தப்பட்டு பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கலாம். ஆனால் அதில் சொல்லப்பட்டுள்ள அடிப்படைப் பிரச்னைகளை யாராவது மறுப்பார்களா? உதாரணமாக பெண் ஜூனியர் வழக்கறிஞர்கள் குமாஸ்தா போன்று நடத்தப்படுகிறார்கள் என்பதும் அவர்களுக்கு பேமண்ட் கூடச் சரியாகக் கொடுக்



"அடாடா! இந்த அளவுக்கு உங்க வாய் எப்படி வெந்துடுச்சு?"

"இப்பத்தான் ஒரு மீட்டிங்குல தீப்பொறி பறக்கப் பேசினேன், டாக்டர்!"

– அ. க. கிருஷ்ணன்.



"அந்த ஸ்கூல் எல்.கே.ஜி. அட்மிஷன் இண்டர்வியூல என் பையன்கிட்ட கேட்ட கேள்வியைக் கேட்டு நானே ஆடிப் போயிட்டேன்!"

"அப்படி என்னதான் கேள்விங்க?"

"முதலில் தீர்வது காவிரிப் பிரச்னையா அல்லது இலங்கைப் பிரச்னையா?"

– புளியரை கணேசன்.



"பில்டிங் ஃபண்ட்'னு டொனேஷன் வசூல் பண்றாங்களே, எப்ப பில்டிங் கட்டப் போறாங்க?"

"மூணு மாடி வீடு ஒண்ணு பிரின்சிபால் கட்டிக்கிட்டிருக்காரே. தெரியாதா உங்களுக்கு?"

– சீர்காழி. வி. ரேவதி

கப்படுவதில்லை என்பதும் யதார்த்த நிலையைப் பிரதிபலிப்பதுதானே! பாலியல் தொல்லைகளை இன்று எல்லாத் துறைகளில் பணிபுரியும் பெண்களும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு இந்த வழக்கறிஞர் தொழிலும் விதிவிலக்கல்ல. இதைச் சொல்வதற்காக நாம் வெட்கப்பட வேண்டியதில்லை. பார் கவுன்ஸிலில் இதுபோன்ற எந்த ஒரு புகாரும் பெண் வழக்கறிஞர்களால் கொடுக்கப்பட்டதில்லை என்பதற்காக, "எல்லாம் நன்றாக இருக்கிறது" என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு காரணங்களுக்காகப் புகார் கொடுக்காமல் இருக்கலாம் அல்லவா! அந்தப் பேட்டியின் காரணமாக ஸீனியர் ஆண் வழக்கறிஞர்கள் பெண்களை ஜூனியர்களாக ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டுகிறார்கள் என்பதும் சரியல்ல! உதாரணமாகச் சொல்வதனால் எங்கள் சேம்பரிலேயே ஜூனியர்களுக்கான தேவை இருக்கிறது. ஜூனியர்களுக்குத் தற்சமயம் தட்டுப்பாடு உள்ளது. ஆனால் சில ஸீனியர் ஆண்கள், தனிப்பட்ட கொள்கை ரீதியாகப் பெண்களை ஜூனியர்களாக வைத்துக் கொள்வது கிடையாது. அவர்களை நாம் கட்டாயப்படுத்த முடியாது.

"மிகவும் வருத்தமான விஷயம் என்னவென்றால் பேட்டி கொடுத்த பெண்களிடம், சங்கம் மன்னிப்புக் கடிதம் எழுதித் தரச் சொன்னதுதான். மற்றவர்கள் மனம் புண்பட்டிருந்தால், தாங்கள் வருத்தம் தெரிவிப்பதாக அந்தப் பெண்கள் சொல்லியும், சங்கம் மன்னிப்புக் கடிதம் தர வற்புறுத்தக் கூடாது. மற்றவர்கள் உரிமை பாதிக்கப்படும் போது, உதவிக்குச் செல்லும் வழக்கறிஞர்கள் தங்களின் கருத்துரிமைக்குத் தாங்களே தடைபோட்டுக் கொள்வதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? அந்தப் பேட்டியில் sensationனுக்காக, சில வாக்கியங்கள் மிகைப்படுத்தப்பட்டும், சொல்லாத சில கருத்துகளும் வந்திருப்பதாக அந்தப் பெண்களே பத்திரிகைக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இதற்கு மேல் வேறென்ன வேண்டும்?

"நாங்கள், சங்கத்தின் தலைவர் பாதர் சயீது உட்பட இருபத்தைந்துக்கும் மேற்பட்டவர்கள் விலகியிருக்கிறோம். எதிர் காலத்தில் எப்படிச் செயல்படுவது என்பதை கூடிப் பேசித் தீர்மானிப்போம்." ●

பேட்டி : **ப்ரியன்**





வீட்டு வரியா? வழிப்பறியா?

மாபெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகி இருக்கிறார்கள், தமிழக மக்கள். 1920லிருந்து நடைமுறையிலுள்ள வீட்டு வரிச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து, கடும் வரி உயர்வு செய்திருப்பதன் மூலம் நடுத்தர வர்க்க மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது தமிழக அரசு.

முனிசிபல் சட்டம், பிரிவு 81லிருந்து 91 வரை சொத்து வரி பற்றிப் பேசுகிறது. எழுபத்தெட்டு ஆண்டுகளாக நடைமுறையிலுள்ள இந்தச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வந்த தமிழக அரசு, அதை கவர்னரின் ஒப்புதலுக்குச் சில மாதங்கள் முன்பு அனுப்பியது. சம்பிரதாயமான இந்த ஒப்புதல் வேண்டுதல் 17.11.97 அன்று கவர்னரின் கையெழுத்து கிடைக்கப் பெற்று ஜனாதிபதியின் ஒப்புதலுக்கும் அனுப்பப்பட்டது. ஆனால், இந்தச் சட்டத் திருத்தத்துக்கு இன்றைய தினம் வரையில் ஜனாதிபதியிடமிருந்து அங்கீகாரம் வரவில்லை என்று பல நகராட்சி மற்றும் மாநகராட்சி கவுன்சிலர்களே சொல்கிற நிலையில், தமிழ்நாடு முழுவதிலுமான அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் இதனை ஆதரித்துத் தீர்மானம் போட வைத்துள்ளது தமிழக அரசு.

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை வீட்டு வரி செலுத்துவதில் சிறு மாறுதல்கள் இருக்கும்தான். ஆனால் தற்சமயம் கொண்டு வரப்பட்டுள்ள சட்டத்திருத்தத்தின் அடிப்படையில், சொந்த வீடு வைத்துள்ள ஒவ்வொருவரும் குறைந்தது நான்கு முதல் ஐந்து மடங்கு அதிகமாக வரி செலுத்த வேண்டி வரும்!

இந்த வரி சீர்திருத்தம் பற்றிய விளக்கங்களை, தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் என்கிற கோவையைச் சேர்ந்த அரசுத் துறை அமைப்பு, ஒரு சிறு கையேடாக வெளியிட்டிருக்கிறது. மிகவும் குழப்பம் தரக்கூடிய இந்தக் கையேட்டிலுள்ள விளக்கங்கள், பொது மக்களை மட்டுமல்ல; நகராட்சி மற்றும் மாநகராட்சி கவுன்சிலர்கள், சேர்மன்களையே சிண்டைப் பிய்த்துக் கொள்ளச் செய்யும் விதமாக அமைந்துள்ளது.

ஒரு வீடு அல்லது கட்டடத்தின் பரப்பளவுக்கேற்ப, பயன்பாட்டின் தன்மைக்கேற்ப அடிப்படை வரி (சதுர அடிக்குப் பதினைந்து பைசாவிலிருந்து இரண்டு ரூபாய் வரை) விதிக்கப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக, கட்டடங்களை நான்கு விதமாகப் பிரிக்கிறார்கள்.

1. குடியிருப்புப் பகுதிக் கட்டடங்கள் (வீடுகள்)

2. கமர்ஷியல் கட்டடங்கள் (கடைகள்)

3. தொழிற்சாலைகள்

4. அலுவலகங்கள்.

இதில் கட்டடம் அமைந்துள்ள இடத்துக்கேற்ப, 'location tax'என்று கூடுதல் வரி விதிப்பு. இந்த location taxஐ நகராட்சி மற்றும் மாநகராட்சிகள் தம் விருப்பப்படி நிர்ணயித்துக் கொள்ளலாம்.

வீடுகளுக்கு-15பைசாவிலிருந்து இரண்டு ரூபாய் வரையிலும் (சதுர அடிக்கு), அலுவலகங்களுக்கு 25 பைசாவிலிருந்து மூன்று ரூபாய் வரையிலும் தொழிற்சாலைகளுக்கு 40 பைசாவிலிருந்து நான்கு ரூபாய் வரையிலும் கமர்ஷியல் கட்டடங்களுக்கு 50 பைசாவிலிருந்து ஐந்து ரூபாய் வரையிலும் அடிப்படை வரி விதிக்கப்படுகிறது.

இதில், கமர்ஷியல் கட்டடம் என்று குறிப்பிடப்படுவதில் உட்பிரிவுகள் ஏதுமில்லை. 200 சதுர அடியில் ஒரு சின்ன டீக் கடை இருந்தாலும் அது கமர்ஷியல் இடம்தான்; ஆயிரம் சதுர அடியில் மளிகைக்கடை இருந்தாலும் கமர்ஷியல் இடம்தான்!

தாம்பரம், பல்லாவரம், ஆலந்தூர் நகராட்சி சேர்மன்கள் ஒன்று கூடித் தம் நகராட்சிகளுக்குட்பட்ட வீடுகளுக்கு அடிப்படை வரியாக 50 பைசா என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இதற்கு location tax என்று வீடுகள் அமைந்துள்ள இடத்துக்கேற்ப (சந்தா? தெருவா?மெயின் ரோடா! மெயின் ரோடை இணைக்கும் பிரதான சாலையா என்பதற்கேற்ப) கூடுதல் வரி விதிப்பு.

கட்டடத்தின் தன்மைக்கேற்ப (கூரை வீடா, தளமா, சிமெண்ட் தரையா, மொஸைக்கா) தனிவரி.

தவிர, கட்டடத்தில் காலி மனை இருந்தால் அதற்கும் தனி வரி. அந்த காலி இடத்துக்கும் தனியே location tax.

இந்த வரிகளைக் கூட்டி வரும் தொகைக்கு மேலே பத்து சதவீதம் நூலகவரி; கல்விவரி தனியாக என்று கூடுதல் வரிகள்.

ஒரே ஓர் உதாரணம் பார்க்கலாமா?

நீங்கள் ஒரு கிரவுண்டு நிலத்தில் 600 சதுர அடி பரப்பில் ஒரு வீடு வைத்திருக்கிறீர்கள். இந்த வீட்டிற்கு இதுநாள் வரை நீங்கள் செலுத்தி வந்திருக்கும் வரி என்ன? சராசரியாக ரூ.150 இருக்கும்.

இனி, புதிதாக வந்திருக்கும் வரி சீர்திருத்தத்தின்படி நீங்கள் கட்டப் போகும் தொகையைப் பாருங்கள்.

600 சதுர அடி வீட்டில், கார்ப்பெட் ஏரியா என்று சொல்லப்படும் தரை போட்ட இடம் 510 சதுர அடி என வைத்துக் கொண்டால்:

அடிப்படை வரி	- 510 x 0.50	—	225.00
கட்டடம் அமைந்துள்ள இடத்துக்குக் கூடுதல் வரி	50%	—	127.50
கட்டடத்தின் தன்மைக்கேற்ப கூடுதல் வரி	25%	—	190.25
காலிமனை வரி		—	180.00
நிலம் அமைந்துள்ள இடத்துக்கான கூடுதல் வரி	50%	—	90.00
மொத்தம்		—	842.75
நூலக வரி	10%	—	84.27
கல்விவரி	20%	—	168.54
ஆக மொத்தம் செலுத்த வேண்டிய வரி		—	ரூ. 1,095.00

150 ரூ வரி செலுத்திய இடத்துக்கு இனி 1,095 ரூ செலுத்தப்போகிறீர்கள். இதே 600 சதுர அடி ஃப்ளாட்டாக இருந்தால், காலி மனைக்கான வரி 180+90 =270 கழித்து, ரூ. 825 கட்ட வேண்டி வரும்!

உங்கள் வீடு, சற்றுப் பழையதாக இருந்தால் (குறைந்தது 20 வருடங்கள்) வரி விதிப்பில் சிறு சலுகை உண்டு.

இத்தனை கடும் வரி உயர்வு சட்டத்திருத்தம் கொண்டு வரும்போது, அது பரவலாக முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு, விவாதிக்கப்பட்டு, மக்கள் பிரதிநிதிகளின் அங்கீகாரத்துக்கு விடப்பட்டு, மக்களின் கருத்தையும் கேட்டுச் செயல்படுத்தப்பட வேண்டியது தானே முறை?...

ஆனால் நடந்தது என்ன? நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து அனைத்து நகராட்சிகளுக்கும் 1.7.98 தேதியிட்ட ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது.

"1.10.98லிருந்து இந்த சொத்து வரிச் சீர்திருத்தம் நடைமுறைக்கு



• குடிசைகளுக்கும் வரி

வரப்போகிறது. அதனால் அதற்கு முன்னதாக இதை நகராட்சி சபைகளில் கவுன்சிலர்கள் 'பாஸ்' செய்து அனுப்பவும்" என்று உத்தரவு.

இந்த சுற்றறிக்கை, பெரும்பாலான நகராட்சிகளுக்கு 8.7.98 அல்லது 9.7.98 அன்றுதான் கிடைத்திருக்கிறது.

கவுன்சிலர்கள் கூடி விவாதிக்கப் போதிய அவகாசம் இல்லாத நிலையில், பல்லாவரம் நகராட்சியில் 13.7.98 அன்று ஓர் அவசரக் கூட்டம் ஏற்பாடாகி, சட்டத்திருத்தத்தைக் கவுன்சிலர்களில் பெரும்பாலோர் படித்து அறியாமலே கூடி, 'பாஸ்' பண்ணி விட்டார்கள்! பல்லாவரம் நகராட்சி ஓர் உதாரணம்தான்!

பல்லாவரம் நகராட்சி 40வது வார்டு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் எஸ். நரசிம்மன் இதிலுள்ள அபாயங்களை விளக்கிச் சொல்லி, "எப்படி நீங்கள் இந்தத் தீர்மானத்தை அங்கீகரித்தீர்கள்?" என்று சக கவுன்சிலர்களைக் கேட்க,

"எங்களுக்கு என்ன தெரியும்? ஆதரிப்பதாக எல்லாரும் கை உயர்த்தினார்கள். நானும் உயர்த்தினேன்!" என்றே பெரும்பாலோர் பதில் சொல்லியிருக்கிறார்கள்!


பல நகராட்சி உறுப்பினர்களிடம் விசாரித்த போது, கவுன்சிலர்களில் பலருக்கே இதில் பலத்த குழப்பம் இருப்பது தெரியவந்தது.

இதுவரை மார்க்ஸிஸ்டுகள் தவிர, வேறெந்த அரசியல் கட்சியும் (அ.இ.மு.க. உட்பட!) இந்த அநியாய வரி உயர்வு பற்றி ஏன் கேள்வியே எழுப்பவில்லை என்பது புரியாத புதிர்.

7.8.98 அன்று மதுரை மாநகராட்சியில் இந்தச் சட்டத்திருத்தம் வோட்டெடுப்புக்கு விடப்பட்ட போது இதே மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள்தான், இதனை எதிர்த்து, கோஷமெழுப்பி தீர்மானம் நிறைவேற இயலாதபடி செய்திருக்கிறார்கள்.

"மக்களின் கருத்தைக் கேட்டறிந்த பின்பு சட்டத் திருத்தம் சபை ஏறும்" என்று ஒத்திவைத்திருக்கிறார் மதுரை மேயர்.

இது எல்லாவற்றைவிட கேலிக்கூத்து, இந்தச் சட்டத்திருத்த விளக்கங்களில் உள்ள சில அபார 'சலுகை'கள்.



• நரசிம்மன்

'சட்ட விதிகளுக்குப் புறம்பாகக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களுக்கு வரி விதிப்பு கிடையாது!' என்று கூறப் பட்டுள்ளது.

காரணம்?

அத்தகைய கட்டடங்களை இடித்து விடுவார்களாம்.

"இடிக்கப் போகிறோம் என்று கூறுவதெல்லாம் வெறும் கண் துடைப்பு. இதோ, அதோ என்று டபாய்த்து விடுவார்கள். காரணம், அத்தகைய கட்டடங்களுள் பெரும்பான்மையானவை அரசியல்வாதிகள் அல்லது அவர்களது உறவினர்களுடையதாக இருக்கும்! நேர்மையாளர்களாக இருந்தால், இடிக்கும்போது இடித்துக் கொள்ளட்டும்; இடிக்கிறவரை வரி கட்டச் சொல்ல வேண்டியதுதானே?" என்றார்கள் விஷயம் தெரிந்த சில நகராட்சி கவுன்சிலர்கள்.

தமிழகத்தில் இதுவரை தொண்ணூறு சதவீத நகராட்சி, மாநகராட்சிகளில் இச் சட்டத்திருத்தம் தாக்கலாகி, 'பாஸ்'ஆகி விட்டது. சென்னை மாநகராட்சியில் இதுவரை இச்சட்டத்திருத்த மசோதா தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் "வெகுவிரைவில் தாக்கலாகிவிடும்" என்று சொல்கிறார் மாநகரத் தந்தை ஸ்டாலின்.

"ஜனாதிபதியின் ஒப்புதல் கிடைத்தாலொழிய சட்டத்திருத்தங்களை அமுல்படுத்த முடியாது. இதுநாள் வரை அவரது அங்கீகாரம் வந்திராத நிலையில் இப்படி அதிரடியாக சட்டத்திருத்த மசோதா தாக்கலாகிக் கொண்டிருப்பதே சட்ட விரோதம். இப்படி அபாரமான வரி உயர்வைச் செய்திருப்பது தமிழக அரசுதான் என்ற போதிலும் இந்த வரிச்சுமையின் தீவிரத்தைத் தமிழக முதல்வர் அறிந்திருப்பாரா என்பதே சந்தேகமாக இருக்கிறது. 30 பைசா பஸ் கட்டண உயர்வுக்கே முப்பது எம்.பி. சீட் போயிற்று. இப்போது ஐந்து மடங்கு, ஆறு மடங்கு வரி உயர்வு செய்திருக்கிற நிலையில் முதல்வர் யோசிக்க வேண்டும்... அவரது ஆட்சி நிலைக்க வேண்டுமல்லவா?" என்றார் நாம் சந்தித்த நகராட்சி கவுன்சிலர்களுள் ஒருவரான நரசிம்மன். ○

— ஔரங்கசீப்



72

ரொம்ப முக்கியமான வேத வாக்யம் - வேதத்திலே நாலாம் காண்டத்திலே வருகிறது. அஷ்ட வாக்யம் என்று சொல்வார்கள். 'பகவான்தான் நமக்கு பலத்தைக் கொடுக்கிறவன்...' என்று அதிலே வருகிறது. அவன் நமக்கு பலத்தைக் கொடுக்கவில்லையானால், நமது பலமே நமக்குப் பயன்படாது!

அதே மாதிரி, தன்னையே கொடுக்கின்ற கற்பகமும் அவனே. அவன் ரூபத்தை நம் ஊனக் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் அவனை எங்கும் பார்த்து நாம் மகிழும்படியாகத் தன்னைத் தாழ இட்டுக் கொள்கிறான் அவன். தாழிட்டு, நமக்கு

குறையொன்றுமில்லை

பலத்தையும் கொடுத்து அனுபவிக்கும் படி பண்ணுகிறான். இல்லையென்றால் அவனை நாம் நெருங்க முடியுமா...?

வேத பாஷ்யாதிகாரி வித்யாரண்யர் எழுதுகிறார்:

ஒரு பரம ஏழை இருந்தானாம். அவன் ஒரு தனிகருடைய வீட்டு வாசலில் போய் 'பவதி பிக்ஷாம் தேஹி' என்று கேட்டானாம். அந்த தனிகனோ பரம காருண்யன். மாரி போல் வர்ஷிக்கக் கூடிய உதார குணம் மிக்கவர். அவர் என்ன பண்ணினார், ஏழையினுடைய கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு தன் வீட்டுப் புழக்கடை பக்கமாகப் போனார். அங்கே பார்த்தால் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பு - விஸ்தீரணமான இடம். அங்கே கிட்டத்தட்ட இரண்டாயிரம் யானைகள் கட்டியிருக்கிறது! இரண்டாயிரம் யானைக்கும் உரியவர் அந்த வீட்டுக்காரர்! உதார குணத்துக்கேற்ப ஏழையைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய், "அப்பனே! இந்த யானை மொத்தத்தையும் உனக்கே கொடுப்பேன். ஏற்றுக் கொள்" என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டார்!

அந்த ஏழை இத்தனை யானையை வைத்துக் கொண்டு என்ன பண்ணுவார்?! ஒரு யானையை அவரால் தொட முடியுமா?! என்ன பண்ணுவதென்றே தெரியவில்லை அவருக்கு! உடம்பு வெட வெடவென்று நடுங்குகிறது. கடைசியில், அர்ஜுனன் பண்ணியதைத்தான் அவர் பண்ணினார். அர்ஜுனன் என்ன பண்ணினான்? பரமாத்மா விச்வரூபம் எடுக்கிறபோது என்ன செய்தான்? பிரதக்ஷணம் பண்ணி விழுந்து விழுந்து வணங்கினான்! இவர் என்ன பண்ணினார்? இந்த ஏழை ஆயிரம் யானைகளையும் பிரதக்ஷணம் பண்ணிவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்!

இவருக்கே ஒன்றுமில்லை; திண்டாட்டமாயிருக்கிறது என்னும் போது யானையைக் கொண்டு கட்டி அவரால் என்ன பண்ண முடியும்? அதற்கு எங்கேயிருந்து தீனி போடுவது?

ஆகையினால் ஒரு பரம ஏழைக்கு ஆயிரம் யானை கிடைத்தால் எப்படித் திண்டாடுவாரோ, அப்படி சர்வ விதத்திலேயும் ஏழைகளாயிருக்கிற நமக்கு பகவான் கிடைப்பதென்பது ஆயிரம் யானைகள் கிடைத்த மாதிரிதான். என்ன பண்ணுவதென்று தெரியாமல் முழிப்போம்.

ஆனால் நம் 'யானை' என்ன பண்ணுகிறது...? தன்னைப் பிடித்துக் கட்டுவதற்குத் தானே கையிலே கயிற்றை எடுத்துக் கொடுக்கிறது! காலையும் தூக்கிக் காட்டி 'கட்டு' என்கிறது! தன் முதுகிலே ஏறி உட்காருவதற்கு வசதியாகப் படுத்துக் கொள்கிறது. பரமாத்மா இந்த யானை மாதிரி... எவ்வளவு பெரியவனாயிருந்தாலும் யானை போன்று பவ்யப்பட்டு தன்னைக் கட்டுவதற்குக் கயிற்றையும் கொடுத்து, நம் மனந்தன்னைக் கட்டி, பக்தியுடையவர்க்கு எளியவனாகக் காட்சி தருகிறான். அவ்வளவு தூரம் அவன் தன்னைத் தாழ இட்டுக் கொண்டு கட்டு என்று கேட்ட பிறகும் கட்டவில்லையானால் அது யாருடைய குற்றம்?

ஆக, அவனை அனுபவிக்கும்படியாக அவனே பண்ணுகிறான். எல்லாவற்றிலும் நிறைந்து சர்வ வியாபியாக இருக்கிறான். வடிவுடன் வந்து அனுக்கிரஹமும் பண்ணுகிறான். அதனாலேதான் அவன் போக்தா, போக்யம், பிரேரிகன் என மூன்றும் ஆகிறான். ஆகையாலேதான் விஷ்ணு சப்தத்துக்கு அந்த மூன்று அர்த்தங்கள்.

உலகில் எல்லாமே சௌக்கியமாக இருந்தால்தான் மனிதன் சௌக்கியமாக இருக்க முடியும். அதனால்தான் வேதங்கள் ஒவ்வொன்றையும் தனித் தனியாகச் சொல்லிப் பிரார்த்திக்கின்றன.

தாவர வர்க்கங்கள் சௌக்கியமாகயிருக்க வேண்டும்; மிருகங்கள் சௌக்கியமாக இருக்க வேண்டும்; மலைகள், மடுவுகள், நதிகள், சமுத்திரம் எல்லாம் சௌக்கியமாக

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

அருள்வாக்கு

பூசாரி உடுக்கடித்து பாரதம் சொல்லிக் கொண்டு வருகிறானா? அப்படியானால் அதுவும் ஒரு கலை. அதுவும் ஒரு சாஸ்த்ரம். அது இந்தத் தலை முறையோடு போகாமல் அவன், பிள்ளைக்கோ, இன்னொருத் தனுக்கோ சொல்லித் தருவதற்கு சாச்வதமாக திரவிய உதவி ஏற்பாடு பண்ணுங்கள் என்கிறேன். இப்படியே கரகம், பொம்மலாட்டம் எதுவானாலும் கோவில், தெய்வம், புராணம் ஸம்பந்தப்பட்டதாக இருக்கிற அந்த கிராமக் கலை (நம் தேசத்தில் கிராமக்கலை, நகரக் கலை எதுவா னாலும் ஈச்வரனை மையமாகக் கொண்டதுதான்) நம் காலத்தோடு நசிக்காமல் அடுத்த தலைமுறைக்குப் போகும்படியாகச் செய்யுங் கள் என்று சொல்லி வருகிறேன்.

இன்னம் எத்தனையோ சாஸ்த்ரங்களிருக் கின்றன. இப்போதைய ஃபிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, ஜுவாலஜி, ஜியாலஜி, என்ஜி னீரிங், முதலியவற்றுக்கு நம் தேசத்திலேயே மூல சாஸ்த்ரங்கள் இருக்கின்றன. வராஹ மிஹிரரின் ''ப்ருஹத் ஸம்ஹிதை''யையும், போஜராஜனின் ''ஸமராங்கண ஸூத்ரதார''த் தையும் பார்த்தால், இவற்றைப் பற்றி அறிய லாம். ஆனால் இவற்றில் மேல்நாட்டு ஸயன்ஸ்களே இங்கேயும் ப்ரசாரமானபின் நம் ஸ்வதேச விஞ்ஞான சாஸ்த்ரம் தெரிந்த வர்களே இல்லாமல் போய்விட்டார்கள். அத

இருக்க வேண்டும். ஆகையினாலே, மனித வர்க்கத்துக்கு மட்டும் சௌக்கியம் தனித்து ஏற்படாது. அதனால்தான் 'லோகாசமஸ்தா சுகினோ பவந்து' என்று பிரார்த்தித்தார்கள் பெரியவர்கள்.

சர்வத்திலும் பகவான் இருந்து ரக்ஷிப்பத னாலே எதையும் நாம் சாமான்யமாக நினைக்கக் கூடாது. சர்வ பூத தயை வேண் டும். எல்லாவற்றிடமும் அன்பு காட்ட வேண்டும்.

எம்பெருமான் எங்கும் வியாபித்திருப்ப தால்தான் அவரவர்கள் தங்களை நேசிப் பதும் பிற வர்க்கங்களை நேசிப்பதும்...'

விஷ்ணு என்கிற நாமம் அவனுக்கே ரொம்பப் பிடித்த நாமமாம்! ஒவ்வொருத் தருக்கு ஒவ்வொரு நாமம் பிடிக்கும்.

ஆஞ்சனேயனுக்கு அவனை 'ஆஞ்ச னேயன்' என்று அழைத்தால் அவ்வளவாகப் பிடிக்காதாம்!

"ராம தூதன் நான்..." என்கிறான். "கோச லேந்திரனுடைய தாஸன் நான்..." என்கிறான். ஆகவே 'ராமதாஸ்' என்று அழைத்தால்தான் அவனுக்குப் பிடிக்குமாம்.

'ராமதாஸ: ஆஞ்சனேய:' என்று சொன் னால் எகிறிக் குதிப்பானாம் அவன்! நாம் என்ன கேட்கிறோமோ அதை உடனே கொடுத்துவிடுவானாம்.

ஒவ்வொருத்தருக்கும் பிடித்த பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால்தான் சந்தோஷம் ஏற் படும். பகவான் நாராயணனுக்கு ரொம்பப் பிடித்த பெயர் விஷ்ணு.

விஷ்ணு சப்தத்தால் அழைக்கப்படுகிற வன் போக்தா, போக்யம், பிரேரகன் என்று சொன்னேன். இதை இன்னொரு உபநிஷத் விளக்கிக் காட்டுகிறது. சுக்ல யஜுர் வேதத்தி னுடைய உபநிஷத்தாக விளங்கக்கூடிய அந்த சம்ஹிதையிலே முடிவிலே வருகிறது - பதி னெட்டு மந்திரங்கள். ஈசாவாஸ்ய உபநிஷத் என்று பெயர் அதற்கு. அந்தப் பதினெட்டு மந்திரங்களின் விசேஷத்தை விவரிக்க வந்ததுதான் பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்ட பகவத் கீதை. ஈசாவாஸ்ய உபநிஷத் தின் சாரம்தான் கீதை என்று ஆசார்யர்கள் சொல்கிறார்கள்.

எதை ஈசாவாஸ்யம் வலியுறுத்துகிறது என்று பார்த்தால், 'பகவானால் எங்கும் இந்த உலகம் வியாபிக்கப்பட்டிருப்பதால் - அது பகவானால் வசிக்கப்படுகிறது' என்பதை வலியுறுத்துகிறது.

ஈசன் வாசம் பண்ணுகிற விஷயத்தைச் சொல்வது ஈசாவாஸ்யம்.

'கண்ணில் படுகிற, படாத எல்லா வஸ்துக்களிலும் அவன் உறைவதனாலே, இதெல்லாம் அவனுடையது என்று உணர்ந்து, இதில் அதிகம் பற்றை வைக் காதே!' என்று எச்சரிக்கிறது இந்த உபநிஷத்.

ஈருலகைப் படைத்தவன் தேவாதிராஜன் என்று சுவாமி தேசிகன் திருச்சின்னமாலை யிலே சொல்கிறார்.

ஈருலகு என்றால் சேதனம், அசேதனம் என இரண்டு பொருள்களாலும் நிரம்பியிருக் கின்ற உலகம் என்று ஒரு அர்த்தம். ஈர்க்கின்ற உலகம் என்று இன்னொரு அர்த்தம்.

உலகியல் பொருள்களெல்லாம் நம்மை ஆகர்ஷிக்கின்றன; அப்படியே இழுக்கின்றன. இந்த பூமிக்கு ஆகர்ஷண சக்தி இருக்கிறது என்பது விஞ்ஞான முறையிலே விளக்கப்பட் டிருப்பதை நாம் பார்க்கிறோம். இது சர்வத் தையும் இழுக்கிறது! ஒவ்வொரு பதார்த்தத்

னால் இவற்றில் வாத்யார்கள் கிடைப்பதே ஸாத்யமில்லாததாகத் தோன்றுகிறது.

ஆனால் அறிவாளிகளாக, ஆராய்ச்சித் திறன் உள்ளவர்களாக இருப்பவர்கள் பழைய புஸ்தகங்களைப் பார்த்து, இன்னும் பல பழைய சுவடிகளைத் தேடிக் கண்டு பிடித்து இவற்றையும் அறிய முடியும்.

அறிந்தவர்கள் அப்புறம் வாத்யாராகி சிஷ்யர்களைத் தயாரிக்க வேண்டும்.

இப்படியாகச் சில வித்யைகளை இன்று கற்றுக் கொள்ளச் சிஷ்யர்கள் மட்டுந்தான் இல்லை என்றில்லாமல், அவற்றைக் கற்றுக் கொடுக்க ஆசிரியர்களும் இல்லாமலிருக்கிறது. இப்படிப்பட்டவற்றில், நல்ல புத்தி வன்மை உள்ளவர்களுக்குப் பழைய நூல்களைத் தேடி எடுத்துக் கொடுத்து, அல்லது அவர்களே தேடிப் பெறுவதற்கு எல்லா வசதியும் செய்து கொடுத்து, அவற்றை அவர்கள் படித்து ஆராய்ந்து அறியச் செய்ய வேண்டும். இப்படி ஆசிரியரை முதலில் ஸ்ருஷ்டி செய்துவிட்டு, அப்புறம் இவரிடம் மாணவர்கள் சேர்ந்து இவர் புதிதாகத் தெரிந்து கொண்ட பழைய வித்யையைக் கற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்



தினாலும் நம்மை ஈர்ப்பதினாலே இந்த உலகமே நம்மை ஈர்க்கின்ற உலகம் என்றாகிறது.

இந்த உலகத்திலே நீ இருந்து கொண்டு, அது உன்னை ஈர்க்காவண்ணம் அதில் ஈடுபட வேண்டும். இவ்வுலகிலே நாம் வாழ வேண்டாம் என்று சாஸ்திரம் சொல்லவேயில்லை... வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும். பூர்ணாயுளோடு இருக்க வேண்டும். ஆனால் இது – இந்த உலகம் – நம்மை ரக்ஷிக்கும் என்று நினைக்கலாகாது. பற்றற்ற நிலையிலே தாமரை இலை மேல்! இதனோடு அதிகம் சேராதே; பற்றை வைக்காதே, பற்றை வைத்தால் இது உன்னை இழுத்துவிடும்!

தேன் ஒழுகுகிற தாமரை புஷ்பத்திலே அழகாய் வந்து நடுவிலே உட்கார்ந்து ஒரு வண்டு... தேனை உறிஞ்சி சாப்பிட்டுக் கொண்டே மயங்கிப் போய் விட்டது அதிலேயே... அஸ்தமித்தபோது தாமரை புஷ்பம் மூடிக் கொண்டு விட்டது! வண்டினால் வெளியே வரமுடியவில்லை.... இந்த வண்டின் கதையை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். நிர்ப்பந்தமாக உள்ளுக்குள் அகப்பட்டுக் கொண்டதும் 'ஐயோ கொஞ்சம் நேரம் முன்னால் விழித்துக் கொள்ளாது போய்விட்டோமே... இந்தத் தேன் என்ன வேண்டிக் கிடக்கிறது...' என்று நினைத்ததாம் வண்டு!

விவேகமெல்லாம் எப்போது வருகிறது பாருங்கள்! அகப்பட்டுக் கொண்ட பிறகுதான் வரும்! முதலிலேயே வந்துவிட்டால் நன்றாக இருக்குமல்லவா! வரமாட்டேன் என்கிறதே!

சரி! அகப்பட்டுக் கொண்ட வண்டு நினைத்ததாம்: 'காலையிலே பொழுது விடிந்தால், சூரியன் உதிப்பான்; தாமரை புஷ்பமானது மலரும்... நாம் ஓடிப் போய்விடலாம் வெளியே... இந்த ஒரு ராத்திரி மட்டுமே இந்த பந்தனம் - இதற்குள்ளே இருக்க வேண்டிய நிலைமை...'

– இப்படி எண்ணி பிராதஹ் காலம் எப்போது வரும் என்று காத்திருந்ததாம்.

ஆனால், என்ன ஆயிற்று...? அர்த்த ராத்திரியிலே ஒரு மத்த கஜம், பத்னிகளோடு கூட வந்து வேகமாகக் குளத்திலே இறங்கியது. இறங்கி, எல்லாம் அமர்க்களமாக விளையாடுகிறது! ஜலக் கிரீடை பண்ணுகிறது. ஒன்றோடொன்று துதிக்கையைப் பிடித்துக் கொண்டு உடம்பு தேய்க்க ஆரம்பித்து விட்டது! அப்போது என்ன பண்ணியது ஒரு யானை... வண்டு உட்கார்ந்திருந்த தாமரை புஷ்பத்தை அப்படியே தண்டோடு பிடித்து இழுத்து, உடம்பிலே தேய்த்து, இருக்கிற இடம் தெரியாமல் பண்ணிவிட்டது!

'பொழுது விடியும், நாம் போய்விடலாம்' என்று நினைத்த வண்டின் கதி என்ன!?

அதே கதைதான் நம் கதையும்.

நாம் கொஞ்சம் கூட யோசனை பண்ணாமல், விவேகமில்லாமல், உலகத்தின் தன்மை அறியாமல் அதிலே இருந்து விட்டோமானால், இதுதான் சாஸ்வதம் என்று நினைத்துக் கொண்டு விடுவோம். அதற்கப்புறம் மிருத்யூ என்கிற யானை வந்து இழுத்து ரகளை பண்ணும். அப்புறம் என்ன கதியை நாம் அடைவோமோ? மறுபடியும் மனுஷ ஜன்மா வரும் என்று நினைக்க முடியுமா? ஆகையினாலே நாம் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

(தொடரும்)



ஆயிஷா பேகம்

'ஆண்டவனே என்னோட பையனுக்கு ஒண்ணும் ஆகியிருக்கக் கூடாது' - மனம் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே வந்தாலும் இன்னொரு மூலையில் வேண்டாத காட்சிகள் விரிந்து கொண்டே போயின. நகக்க நகக்க, பின்னும் தேவையற்றவைவே நின்று நிஜத்தைக் காட்டிலும் பயமுறுத்தி, படபடப்புக்குள்ளாக்கின.

இந் நேரம் பார்த்து நஸீர் பையா எங்கு போனார்?

அவர் இருந்தால் பஸ் ஏறிப் போய், எங்காவது தேடி நிச்சயம் ஏதாவது செய்து ரஃபியைக் கூட்டி வந்து விடுவார். அல்லாவே இந்த ஏழையைக் கைவிட்டு விடாதே, ஆண்டவனே... என் இதயமே வெடித்து விடும் போலிருக்கிறதே? எம் மகனுக்கு என்னாச்சு? என முன்னால் நடந்து போகும் ஹரியைக் கேட்டால் திரும்ப அதையே தான் சொல்வான். 'அம்மா ரஃபிக்கு ஒண்ணும் ஆகலை, என்னை நம்புங்க.'

ஹரியின் வேகத்திற்கு நடக்க முடியாததால் கொஞ்ச தூரம் நடந்த பின்னர் அவன் ஒவ்வொரு முறையும் நின்று காத்திருக்க நேரிட்டது. சட்டையைக் கொத்தாகப் பிடித்து, "டே... மகனே, சொல்லுடா! எம் மகனுக்கு என்னாச்சு... என்னாச்சு?" எனக் கதற வேண்டும் போலிருந்தது.

ஏராளமான ஏழை முஸ்லீம்கள் குடியிருக்கும் பெரியார் நகர்ப் பகுதி. வாகன நெரிசல், சிறுவர்களின் சாலை கிரிக்கெட், திண்ணை

ரூ. 3,000

மூன்றாம் பரிசு பெறும் கதை - 2

ஒரு உறவும் சில நிகழ்வுகளும்...

பலராம் செந்தில்நாதன்

அரட்டை, உரத்த ரேடியோவின் திரை காணம் என வழக்கமாக இல்லாமல் ஒரு வாரமாகத் துப்பாக்கி ஏந்திய போலீசாரின் ரோந்துடன் இருந்தது. திடீரென முளைத்த தென்னை ஓலை வேய்ந்த செக்போஸ்ட்டில் எல்லோரையும் சோதனை செய்து அனுப்பினார்கள். இந்த ரோந்தும் செக்போஸ்டும் இல்லாவிட்டால் இந் நேரத்திற்கு இரண்டு அடசல் இட்லியும், நாலு குழாய்ப் புட்டும் இருபது ஆப்பமும் விற்றிருக்கும். நான்கு நாட்களாக அதுவுமில்லை. நேற்றே இட்லி பாத்திரத்தையும் வடசட்டியையும் எரு சாம்பல் போட்டு தேய்த்துப் பளபள வென கவிழ்த்து வைத்திருந்தாள் தில்ஷாத்.

முந்தின இரவு மழை பெய்திருந்ததால் ஒன்பது மணிக்கே வெயில் உக்கிரமாக ஏறிக் கொண்டிருந்தது. ஓடிய ஓரிரண்டு பஸ்களிலும் கூட்டம். சாவின் எண்ணிக்கையை ஆளுக்கு ஒவ்வொரு விதமாகக் கூட்டியும் குறைத்தும் பேசிக் கொண்டார்கள். இதில் செய்தித்தாள்கள் வேறு ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கி விற்றுத் தீர்த்தன. புதுத் தகவல் கொண்டு வந்தவர்களை ஆச்சர்யமாகப் பார்த்து வாய் பிளந்து கேட்டுக் கொண்டார்கள், இன்னொரு இடத்திற்கு அதைப் புதிதாகக் கொண்டு செல்ல!

ஒருவேளை அவரை மாதிரியே ரஃபீயும் மௌத்தாகிப் போயிருந்தால் தில்ஷாத்தை எப்படி இன்னொருவன் கையில் பிடித்துக் கொடுப்பது? ச்சி.. இம் மாதிரி நினைக்கக் கூடாது. ஒருவேளை அந்த மனிதன் இருந்திருந்தால் இந்த நிலை வந்திருக்காதோ? இதையெல்லாம் கண்ணால் பார்க்க வேண்டியிருக்குமே என மௌத்தாகிப் போனானோ? இரும்பிக் கொண்டே, அன்று காலை தான் விற்கும் பிளாஸ்டிக் சாமான்கள் வண்டியை தள்ளிக் கொண்டு போன மனிதன்தான்...

காகிதங்களில் கையெழுத்து வாங்கிக் கொண்டு உடலைத் துணியில் சுற்றிக் கொடுத்தார்கள். நஸீர் பையா எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டார். ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடாமல் அத்தனையும் தாங்கிக் கொண்டார். தில்ஷாத்தும் ரஃபீயும் 'வாப்பா வாப்பா' எனக் கதறிய போது தழுவிக் கொண்டார்.

நஸீர் பையா இருந்திருக்காவிட்டால்?

லாரிக்காரன் மீது வழக்கு நடந்தபோது பையா நடையாக நடந்தார். கோர்ட்டுக்குப் போகுமுன், காலை வீட்டிற்கு வந்து ஏதாவது நாலு வார்த்தை தைரியமாக பேசி சாயா குடித்து விட்டுப் போவார். அவருடைய சந்திப்புதான் வாழ தைரியமே.

இத்தனைக்கும் பையா – அவருக்கு உறவுமில்லை. பால்யத்தில் ஆர்.எஸ்.புரம் பள்ளியில் ஒன்றாகப் படித்தவர்கள். பையாவுக்கிருந்த ஒரே வாரிசும் நண்பர்களுடன் திருமூர்த்தி மலை போனவன் தான்... மூன்று நாட்கள் கழித்து உப்பலாக எடுத்து வந்தார்கள்!

வாப்பாவும் நஸீர் பையாவும் அதிகமாகப் பேச மாட்டார்கள். சொந்த அண்ணன் தம்பி மாதிரியேதான்! ஏதாவது கேட்டால் பதில் என்ற அளவுக்கே இருந்தாலும், வாப்பா எப்போதும் தன் வறுமையைப் பிரகடனப்படுத்தியதில்லை, பையாவும் தன் பணத்தைக் காண்பித்துக் கொண்டதில்லை.

மூன்று வருடங்கள் கழித்துக் கிடைத்த நஷ்டஈட்டுப் பணத்தில் ரஃபீயை பாலிடெக்னிக்கில் சேர்த்தார்கள். மீதமிருந்த பத்தாயிரத்துடன், தன் பங்காக ஐந்தாயிரத்தையும் தில்ஷாத் பேரில் போட்டு 'இத தில்லோட நிக்காவுக்குத்தான் எடுக்கணும்' என சொல்லியிருந்தார்.

ரம்ஜான் பண்டிகையின் போது புதுத் துணி, இனிப்பு என வாங்கி வந்து 'ரஃபீ இது உனக்கு, தில் இது உனக்கு, இந்தாம்மா உனக்கு எனக் கொடுத்து விட்டு, கடைசியாக 'இந்தாடா இது உனக்கு' என ஆஸ்துமா அவஸ்தையால் மூச்சு வாங்கிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் தன் நண

பனுக்குக் கொடுக்கும் போது, வாப்பா தன் நண்பனின் முகம் பார்ப்பதைத் தவிர்த்து, உதடு கடித்து புத்தாடையோடு கையைப் பிடித்துக் கொள்வார். பையா கையை இயல்பாக விடுவித்துக் கொள்வார்.

"அம்மா ஏதாச்சும் சாப்பிடறீங்களா?" என்று கேட்டான் ஹரி. விசுக்கென நெஞ்சையடைத்து, கண்களில் நீர் முட்ட 'ச்சே... இவுனுக்கெல்லா என்ன வந்தது? ரஃபியின் கூடப் படிக்கும் நண்பன்தான், நல்ல வசதியான வீட்டுப் பிள்ளை வேறு...' வயிற்றில் எதுவுமில்லாமல் தலை சுற்றி மயக்கமாக வந்து ஒரு சாயா குடித்தால் என்ன எனத் தோன்றிய வினாடி - ரஃபியின் நினைவு வந்து கையசைத்து, மறுப்பே பதிலாக வந்தது.

நிறைய பேனர்கள், போர்டு உடைக்கப்பட்டு ரோடின் ஓரத்தில் வீசப்பட்டிருந்தன. எரிந்து கருகிய ஸ்கூட்டர் ஒன்று அப்புறப் படுத்தாமல் கிடந்தது.

சாயிபாபா கோவில் பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்த கூட்டத்தில் மறுபடியும் கந்தராபுரத்தில் பிரச்னை; அதனால் காந்திபுரம் வரைக்கும்தான் பஸ் எனப் பேசிக் கொண்டார்கள்.

கூட்டமாக காந்திபுரம் பஸ் ஒன்று வந்தது.



"நான் மற்ற பத்திரிகைகளிலிருந்து எடுத்து எழுதற விஷயம் எப்படியோ வெளியே லீக்காகிப் போச்சு!"

"ஏன்... அப்படிச் சொல்றீங்க?"

"இப்ப எல்லாம் என்னை எல்லோரும் 'எடுத்தாளர்'ன்னு கூப்பிடறாங்க!"

- எஸ். மீனலோசனி

முகமது ரஃபி

எப்படி யோசித்தாலும் நஸீர் பெரியப்பாவை குண்டு வெடிப்போடு சம்பந்தப் படுத்தி யோசிக்கவே முடியவில்லை. பழைய இரும்பு கண்டா முண்டா சாமான்களுக்கு நடுவே எப்போதும் வின்சென்ட் ரோடில் தம் கடையில் உட்கார்ந்திருப்பார். சாயா, பீடியோடு செய்தித்தாளில் மூழ்கியிருப்பார். 'இந்த நெல்மணி இன்னாருக்கு என்பது, அது விளையும் போதே கடவுளின் தீர்மானம்' என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை அவருக்கு... ஒருபோதும் அவர் வியாபாரத்தைப் பற்றிக் கவலைப்பட்டதில்லை.

"அஞ்சும் பத்தும் அடிச்சிட்டு இவுனுக கிட்ட அடிபட்டு உள்ள வர்றதுக்கு பேசாம உன்னை மாதிரி ஒரு நாலு இடத்துல குண்டு வெச்சிட்டு வந்தர்லாம்... ராஜ மரியாதை கிடைக்கும், பணத்துக்கு பணமும் ஆச்சு."

கனகராஜ் ஆரம்பித்து விட்டான்.

கனகராஜ் பிக்-பாக்கெட்டில் பிடிபட்டவன், பதினைந்து இருபது நாட்கள் இருந்து விட்டு வெளியே போவான் மீண்டும் வருவான்... உள்ளே - வெளியே வாழ்க்கை.

"ஆமா ஒரு இடத்துல குண்டு வைக்க எத்தனை பணம் தருவாங்க?"

"..............."

"அட சும்மா சொல்லு ரபி, நானென்ன அவுனுககிட்ட சொல்லவா போறன்... ரபி வெளீல போனதுக்கப்புறம் என்னையும் இதுல சேத்தி வுடு; நானும் ஏதோ உம் புண்யத்துல நாலு காசு பாக்கறேன்."

"சத்தியமா எனக்கு எதுவும் தெரியாதுங்க..." கண்களில் கண்ணீரோடு அழ ஆரம்பித்து விட்டான் ரஃபி.

அவனைத் தேற்ற ஏதாவது ஆறுதல் சொல்வான். நேற்று காலையிலிருந்தே குழந்தையைக் கிள்ளுவதும் - தொட்டிலை ஆட்டுவதும் அவனுக்கு நல்ல வேடிக்கை தான்!

ஒரு அபத்தமான தமிழ் சினிமா காட்சி போலவே இந்த மூன்று நாட்களும் இருந்தன. பிரின்ஸ்பால் அறையில் 'உன்னை விசாரிக்க வந்திருக்கிறார்கள்' என்றதும், அவர்களுடன் ஜீப்பில் வந்த போது, 'ஜஸ்ட் ஒரு என்கொயரி' முடிச்சிட்டு அங்கிருந்து பஸ்ல அப்படியே போயிர்லாம்.' என்றதும் ஒரு மணி நேரத்திற்கு முன்னால் நடந்த மாதிரி இருந்தது.

'பதினாலு இடத்துல குண்டு வெடிச்சிருக்கு, நூத்துக் கணக்குல செத்திருக்காங்க, எல்லாம் அப்பாவி ஜனங்க... இருவது வயசு நர்ஸ் ஒண்ணு, சின்னப் பொண்ணு எங் கண்ணு முன்னால சுக்கு சுக்கா செதறினா... எங் கண்ணால பாத்தேன்! சொல்லுடா சொல்லு சொல்லு சொல்லு...' முடியை கொத்தாகப் பிடித்து ஆட்டி, சுவரில் இடித்தான். ஜீப்பில் பூனையாய் வந்த இன்ஸ்பெக்டர். நஸீர் பெரியப்பா ஏதோ நிக்காவில் மற்றவர்களுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும் போட்டோவை காண்பித்துக் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

எவ்வளவு மன்றாடியும் அவருக்கு நம்பிக்கை வரவில்லை.

ஹியரிங் எய்ட் வைத்திருந்த ஒருவர், பெயர், வயது விலாசம், கல்லூரி இன்ன பிற தகவல்களை எழுதிக் கொண்டார். அழுதவனை ஏட்டு கண்டித்தார்.

இரவு, கடையிலிருந்து சாப்பாடு வரவழைத்துக் கொடுத்தார்கள். கால தாமதமாகும் சில வேளைகளிலும் மழை வலுக்கும் சில நாட்களிலும் ஓரிரு நாட்கள் நண்பனின் அறையில் தங்க நேரிட்டதுண்டு. அதனால் உம்மா தேட மாட்டார்கள் என்ற எண்ணம் மனத்தின் ஓரத்தில் இருந்தது. நாளை எப்படியும் வீட்டுக்குப் போய் விடலாம் என்ற நம்பிக்கையில், படுத்தவுடனே தூங்கி விட்டான்.

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு ''சார் வீட்டுக்குங்களா?'' என்று கேட்டதை பொருட்படுத்தாமல் ஜீப்பில் ஏறச் சொன்னார் இன்ஸ்பெக்டர்.

ஜீப் கோர்ட் முன்னால் நின்ற போது, 'சார் வீட்டுக்குப் போறேன்' என்றதற்கு, 'போலாம் போலாம்' என்பது போல் தலையசைத்தார். நிறைய வக்கீல்கள் கறுப்பு கவுனைக் கையில் வைத்துக் கொண்டு பெரிய சிவப்பு பிரிட்டிஷ் கட்டட சிமெண்ட் பாதையில் குரோட்டன்ஸ் ஓரம் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந்தார்கள். பக்கவாட்டுப் பெட்டிக் கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தார்கள்.

குற்றவாளிக் கூண்டில் ஏற்றி, பெயர், விலாசம், படிப்பு பற்றிக் கேட்டார்கள். இன்ஸ்பெக்டர் கையிலிருந்த பேப்பர்களைக் கொடுத்தார். என்னவோ பேசிக் கொண்டார்கள். ஜீப்பில் ஏற்றி மத்திய சிறைக்குக் கொண்டு வந்து விட்டார்கள்.

கனகராஜ் சுவரில் சாய்ந்து தூங்கிப் போயிருந்தான். இவனுக்கு யாருமில்லையா?



''ஆனாலும் தலைவர் இவ்வளவு அப்பாவியா இருக்கக் கூடாது!''

''ஏன் அப்படிச் சொல்றே?''

''வோட்டு வங்கி, வோட்டு வங்கின்னு சொல்றீங்களே, அதுல பணம் போட்டா கூடுதலா வட்டி கிடைக்குமான்னு கேட்கிறாரு!''

– கீழை. அ. கதிர்வேல்

விழித்தவுடன் கேட்க வேண்டும். அம்மா அப்பா தங்கை அனைவரையும் பற்றி.

'அய்யோ... உம்மா இந்த நிலையில் என்னைப் பார்த்தால்...' உம்மாவின் முகத்தில் எப்படி விழிப்பது? வாப்பா போன பின் உம்மாவின் உயிர் வாழ்தலே என்னையும் தில்ஷாத்தையும் நம்பி... உம்மாவும் தில்லும் தவித்திருப்பார்கள். உம்மாவால் தாங்கவே முடியாது. ஒருவேளை விஷயம் தெரிந்து உம்மாவும் தில்ஷாத்தும் தூக்குப் போட்டுக் கொண்டால்? அல்லாவே அம்மாதிரி எதும் விபரீதமாகி விடக் கூடாது?

இந்த ஒரு வாரமாக உம்மாவுக்கு வியாபாரமும் இருந்திருக்காது. வருமானத்திலும் மண்!

ஒருவேளை நஸீர் பெரியப்பாவுக்கு நிஜமாகவே... ச்சே இருக்காது. இனிமேல் இம்மாதிரி யோசிக்கவே கூடாது.

'டே ரஃபி, இத்தனை நாள் நீ சின்னப் பையன். இனிமே அப்படியெல்லா இருக்கக் கூடாது. நீதா உம்மாவையும் தில்லையும் பாத்துக்கணும். சிகரெட் புடிச்சிட்டு ஜாலியா மத்த பசங்களை மாதிரி படிக்காம குடும்பத்தை மறந்துடாதே... நீ அந்த மாதிரியெல்லா நடந்துக்க மாட்ட. இருந்தாலும் சொல்றது என் கடமை... நானும் இருக்கேன், அதனால நீ கவலைப்படாம படிச்சு மேல வா, அது போதும்' – வாப்பாவின் மௌனத்திற்குப் பின் கண்கலங்கி, கல்லூரியில் சேர்க்க வந்திருக்கும் போது நஸீர் பெரியப்பா சொன்ன வார்த்தைகள்.

நஸீர் பெரியப்பா ரொம்ப உயர்ந்தவர். எத்தனை வேலைகளைச் சிரமப்பட்டு

ஏற்பாடு செய்து தந்தார்? சுலபமாகப் பணம் கிடைத்தது. ஒரு குடியிருப்பில் நாலு வீடு ஏறி என்ன டீத்தூள் உபயோகிக்கிறார்கள் எனக் கேட்டு எழுதிக் கொண்டு, கொண்டு போயிருக்கும் சாம்பிள் பாக்கெட்டுகளை அவர்களிடம் கொடுத்து உபயோகிக்கச் சொல்லி – நான்கு தினங்கள் கழித்து அவர்களிடம் சுவை, திடம், முந்தைய டீ – சாம்பிள் டீ என்ன வித்தியாசம்? எவ்வளவு விலை தரத் தயாராயிருக்கிறார்கள்? அவர்களுடைய கருத்து எனக் கேட்டு எழுத வேண்டும். ஒவ்வொரு படிவத்துக்கும் ஒரு தொகை கிடைத்தது. அம் மாதிரியே குடும்ப நபர்கள், பஸ்ஸில் பயணம் செய்யும் நபர்கள் என பஸ்ஸுக்கான சர்வே.

செமஸ்டர் ஃபீஸ் கட்ட சிரமமில்லாமல் இருந்தது. வேலை இல்லாத நேரங்களில் பெரியப்பா மேஜை டிராயரை நிறைக்க, பக்கத்துக் கடையிலிருந்தும் ஏற்பாடு செய்து தந்தார். சென்ற விடுமுறையில் ஒரு குளிர்ப்பான வண்டியில் டெலிவரி செய்யும் வேலை.

கடந்த இரண்டு மாதமாகச் செய்து கொண்டிருந்த வேலை எந்தப் பிடுங்கலும் இல்லாத எளிதான ஒன்று. மாலை, கல்லூரி முடிந்தவுடன் நேராக வந்து விட வேண்டும். ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் கடையில் டிஃபனும் டீயும். வேலை இரவு எட்டரை மணிக்கு முடியும். அவசியமானால் அப்போதும் சாப்பிட்டுக் கொள்ளலாம். ஓரிரு கல்லூரி மாணவர்களும் இருந்தார்கள். வேலையும் ரொம்ப எளிதானது. எலக்டிரிக் கேப்பசிட்டர் அசெம்ப்ளி மற்றும் வேறு சில எலக்ட்ரானிக் சாதனங்களை சோதனை செய்வது என. வேலையில் சேரும் முன்பே இரண்டாயிரம் அட்வான்ஸ் கொடுத்து, வேலை பற்றி யாரிடமும் பேசவும் – சொல்லவும் கூடாது என்று கேட்டுக் கொண்டார்கள். நிறைய பேர் வந்து வேலை கேட்கக்கூடும். எனவேதான் ரகசியம் எனக் காரணம் சொல்லப்பட்டது.

பெரியப்பா இரண்டாயிரத்துடன் நூறு ரூபாயையும் போட்டு வங்கிக் கணக்குத் துவங்கிக் கொடுத்திருந்தார்.

கனகராஜ் கண் விழித்தவுடன் தூக்கு மேடைக் கதையை ஆரம்பித்து விட்டான்.

"யோவ் இதுல யாருய்யா முகமது ரஃபி? உங்க அம்மா பார்க்க வந்திருக்கு... எந்திரி போலாம்" எனக் கதவை லத்தியால் தட்டி விட்டுத் திறந்தான் போலீஸ் ஒருவன்.

'அம்மாவா?' பயமாகவும் சந்தோஷமாகவும் இருந்தது.

நடந்த எல்லாவற்றையும் பதற்றப்படாமலும் அழாமலும் தைரியமாக உம்மாவிடம் சொல்ல வேண்டும். 'உம்மா, நஸீர் பெரியப்பா எம் மேல தப்பில்லைன்னு நிரூபிச்சு என்னை வெளில கூட்டிட்டு வந்துடுவாரு.. நீங்க தைரியமா இருங்க! தில்ஷாத்தை அவினாசிலிங்கம் சிரமிக் வித்யா பீடத்துல டெய்லரிங் சேர்க்க அப்ளிகேஷன் வாங்கி வைக்க, நா வந்து ஃபில்-அப் பண்ணி அனுப்சிடறேன்...' மெல்ல நடந்து அந்த அறைக்குள் நுழைந்தபோது கம்பி வலைக்குப் பின்னால் முக்காடிட்ட உம்மாவும் பக்கத்தில் ஹரியும் நின்று கொண்டிருந்தார்கள்.

முகமது நஸீர்

காலை பத்து மணி இருக்கலாம். வீட்டின் முன்புறமும் சற்று தள்ளியும் கூட்டங் கூட்டமாக ஆண்களும் முக்காடிட்ட பெண்களும் நின்றிருக்கிறார்கள். சோதனையிடுகிறோம் என வீட்டுக்குள் புகுந்திருந்த அத்தனை போலீஸ்காரர்களும் பாத்திரம் துணி என எல்லாவற்றையும் தாறுமாறாக இறைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"யாரு நஸீர் பாய் வீட்லயா?... அட, தப்பு பண்ணினவனையெல்லாம் வுட்டுட்டு எவன் இளிச்சவாயனோ அவன்கிட்ட வந்திருக்கானுக பாரு..." கூட்டத்தில் பெரும்பாலானோர் ஆதங்கப்பட்டனர்.

"சொல்லுமா உம் புருசன் வெடிகுண்டெல்லா எங்க வெச்சிருக்கான்? யார் யார் உங்க வீட்டுக்கு வருவானுக?"

"அய்யோ அவரு அப்படிப்பட்ட ஆளு இல்லீங்க ஐயா... எனக்கு எதுவுமே தெரியாதுங்க."

பளாரென அறை விழுந்தது.

"அய்யா வேண்டா, அடிக்காதிங்க! சதுயமா எனக்கு எதுவும் தெரியாது அல்லாவே.

"இப்டி கேட்டா நீ சொல்ல மாட்டே இப்ப சொல்லுவ பாரு" என லத்தியை ஓங்கி மண்டையில் இறக்கினான்.

"அம்மாாாாாா..."

திடுக்கிட்டுக் கண் விழித்தார் நஸீர் பையா. நல்லவேளை கனவுதான். நிஜமில்லை. இறைவனை பிரார்த்தித்துக் கொண்டார். வியர்வையால் உடைகள் தொப்பலாக நனைந்திருந்தன.

நல்லவேளை குருசாமி பார்க்கவில்லை. கண்களை மூடி புத்தர் மாதிரி உட்கார்ந்திருந்தான். குருதான் தைரியம் கொடுத்தவன். திருச்சிக்குப் பக்கத்தில் ஏதோ ஒரு

கிராமம். அவனைப் பற்றி – உள்ளே வந்த காரணம் பற்றி விசாரித்திருக்கவில்லை. நஸீர் தனக்கு நடந்ததை அப்படியே அவனிடம் சொல்லியிருந்தார். 'பாய், இது திருச்சி! உங்களை கோயமுத்தூர்லருந்து இங்க கொண்டு வந்திருக்கானுவ' என்று தகவல் சொன்னவனும் அவனே.

ஒரு பீடி தேவைப்பட்டது. சாயா குடிக்க வேண்டுமாயும் இருந்தது. புதன் கிழமை வெண்ணிலா பேக்கரியில் சாயா குடித்துக் கொண்டிருக்கும் போதுதான் ஜீப் வந்து நின்று போலீஸ் தபதபவென குதித்துக் கைது செய்தார்கள்.

'அல்லாவே, நூர்ஜஹானுக்கு எதுவும் ஆகி விடக் கூடாது, ஆத்துப் பாலத்திலிருக்கும் அவள் தம்பி முஸ்தபா கவனித்துக் கொள்வான் என்றாலும்... கனா கண்ட மாதிரி விபரீதம் ஆகி விடக் கூடாது.'

எந்தத் தவறும் செய்யவில்லையே நான்... ஒருவேளை ஷெரீஃப் பாய்க்கு, கடையில் இடம் இருக்கிறது என 'அவருடைய 'சாதனங்கள் வைக்க இடம் கொடுத்தது தப்பா? அவரால்தானே ரஃபிக்கு வேலையும் கிடைத்தது? '

'நஸீர் பாய், யாராவது தெரிஞ்சவங்க நம்ம பசங்க வேலைக்கு இருந்தாச் சொல்லுங்க' என்று கேட்டபோது ரஃபியின் குடும்ப நிலை குணம் அனைத்தையும் சொல்லி பகுதி நேரமாகச் சேர்த்தும் விட்டார். கணிசமாகப் பணமும் கொடுத்தாரே?...

கொஞ்ச நாள் கழித்து, 'நஸீர்பாய் சின்ன மரப்பெட்டி பத்து இருவது இருக்கு... ஒரு வாரம் உங்க கடைல வெச்சுகிடட்டுமா? அங்க எடமில்ல...' என்று கேட்டார்.

"ஓ அதுக்கென்ன தாராளமா வெச்சுக் கோங்க பாய், இதுக்கெல்லா நீங்க கேக்க வேண்டிய அவசியமே இல்லை."

"ஏங்க பாய், நீங்க புகை பிடிப்பீங்களோ" என்று கேட்ட போது கூட சந்தேகம் வராமல், "சரி... இனி நீங்க சாதனத்தை எடுத்துட்டு போற வரைக்கும் கடைக்குள்ள புகை பிடிக்கலை சரியா?" என முற்றுப்புள்ளி வைத்தது ரொம்பத் தப்பாகி விட்டது. "எலக்ட்ரானிக் சாதனம் என குண்டை கடையில் ஒளித்து வைத்து விட்டானோ... சண்டாளப் பாவி!"

"பாய் ரொம்ப யோசிக்காதிங்க. ஆண்டவன் மேல பாரத்தை போட்டுட்டு அமைதியா எதைப் பத்தியும் நெனைக்காம இருங்க. உங்களுக்கு ஒண்ணும் ஆகாது" என்றான் குருசாமி.

திரும்பிப் பார்த்தார். குருசாமி சௌகர்யமாகக் காலை நீட்டி சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தான்.


"நா தைரியமாத்தான் இருக்கேன்! என்னோட பையன் ரஃபி எப்படியும் வந்து நா குற்றவாளி இல்லைன்னு நிரூபிச்சு என்னை வெளில கூட்டிட்டுப் போகத்தான் போறான் பாரு..." சொல்லிவிட்டு நம்பிக்கையோடு நிமிர்ந்து உட்கார்ந்து காத்திருக்க ஆரம்பித்தார். ●



VVJJ என்றால் என்ன?

சானல் வி. எம்.டி.வி., மியூஸிக் ஏசியா போன்ற மியூஸிக் சானல்களில் தோன்றி 'ஃபிலிம்' காட்டுகிற அழகிகளை VJ என்று குறிப்பிடுவது வழக்கம். ஆனால், படத்தில் உள்ள மாயா, ஈரா இருவரும் தங்களை VVJJ என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். என்ன காரணம்? இவர்கள் இரட்டையர்கள். வயது பதினெட்டு. சானல் 'வி'யில் இவர்களது 'வால்யூம் டபுள்' நிகழ்ச்சி ரொம்ப பிரபலம். மாயா, மலையேற்றம், நதியைக் கடத்தல் இவற்றில் பயிற்சியளிக்கும் இன்ஸ்டிரக்டர். ஈராவுக்குப் பிடித்தவை பாஸ்கட் பால், நீச்சல் மற்றும் ஓட்டம். சாடிலைட் சானல்களில் தோன்றும் முதல் இரட்டையர்கள் மாயா, ஈரா என்பதால், மற்ற சானல்காரர்கள் இவர்களை வளைத்துப் போடும் முயற்சியில் இறங்கியுள்ளனர் என்று காற்றுவாக்கில் ஒரு சேதி.

– சி.எம்.



கவிதை வனம்

அன்று வெள்ளிக் கிழமை.

மாலை நான்கு மணி. – தாம்பரத்திலிருக்கும் சென்னை கிறித்துவக் கல்லூரி வளாகத்தின் உள்ளடங்கிய மரங்களின் நிழலில் இருபது பேர் வட்டமாய் உட்கார்ந்திருக்கிறார்கள். அப்துல் ரகுமானின் 'நீ' என்கிற கவிதையை ஒருவர் வாசிக்க, 'வனம்' துவங்கியது. 'வனம்' என்பது கவிஞர்கள் சந்திப்பு அல்லது கவிதை குறித்த கலந்துரையாடல் என்று எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். விடுமுறை நாட்கள் தவிர்த்த ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இந்தக் கவிஞர்கள் சந்திப்பு நிகழ்கிறது. எட்டு வருடமாக நடந்து கொண்டிருக்கும் இந்த 'வனம்' நிகழ்ச்சிக்குப் பிரபலமான பல கவிஞர்கள் உட்படப் பலர் வாடிக்கையாளர்கள்.

நாம் சென்றபோது.

கிறித்துவக் கல்லூரி மாணவர் சரவணன் வாசித்த ஒரு கவிதை நெஞ்சை நெருடுவதாயிருந்தது.

மேல வீட்டுகாரவுக
கொஞ்சம் வசதி தான்
காப்பிக்கே வழியில்லாத
எங்கட்ட
எம்மவனுக்கு பூஸ்ட்
பிடிக்கல
மாத்தி வேற வாங்கனும்பாக
அவனும் அவுக ஆத்தாளுக்கு
சலிச்சவனில்ல,
நான் பூஸ்ட் குடிக்கிறேனாக்கும்னு
பெருமையா கைய மடிச்சு காமிப்பான்
வகுறு எரியும்
அடியேய் நீ என்னத்த பூஸ்ட்
குடிச்சாலும்
எங்க வெளையாட்ல நீதாண்டி
ஒப்புக்குச் சப்பாணி.

ஒவ்வொரு கவிதைக்கும் விமர்சனமும் தொடர்ந்தது.

இந்த 'வனம்' நிகழ்ச்சிக்கு பின்னாலிருந்து வலு ஊட்டும் பேராசிரியர்கள் நிர்மல் செல்வமணி, பாரதிபுத்திரன், ஜார்ஜ் மற்றும் பலர். பல்வேறு கல்லூரியிலிருந்து மாணவர்களும், ஆசிரியர்களும்,

டெண்டுல்கர், கேப்டன் அசார், கபில்தேவ், ஹாக்கி தன்ராஜ் பிள்ளை, பெக்கர், பி.டி. உஷா என தாம் இணைந்து புகைப்படம் எடுத்துக் கொண்டோர் பட்டியலை நீட்டி முழக்குகிறார் முகம்மது ஜமீல். அப்படி அவர் இணைந்து படம் எடுத்துக் கொண்ட விளையாட்டு வி.ஐ.பி.களின் எண்ணிக்கை முந்நூற்றைம்பதை 'கிராஸ்' செய்தாகி விட்டது.

புரசைவாக்கத்தில் ஜமீல் வைத்திருக்கும் 'சில்ரன்ஸ் பாரடைஸ் ஸ்போர்ட்ஸ் சென்டரி'ல் இவருடன் கூடிய கிரிக்கெட் ஸ்டார்களின் ப்ளோ அப்புகள் கடை முழுக்கச் சிரிக்கின்றன.

எப்படி வந்தது இந்தப் புகைப்பட வெறி?

''பத்து வருஷம் முன்னாடிங்க! இந்தியாவுக்கும் வெஸ்ட் இண்டீஸுக்கும் சேப்பாக்கம் கிரவுண்டுல மேட்ச்... பார்க்க போயிருந்தேன். அந்த மேட்ச்ல கவாஸ்கர் 240 ரன் எடுத்தாரு. ரன் அடிச்ச பேட்டை விக்கெட் கீப்பர் லோகிக்குக் கொடுத்துட்டார். எனக்கு சந்தோஷம் தாங்க முடியாம பெரிய கேக் ஒண்ணு வாங்கி கவாஸ்கர்கிட்ட கொடுத்தேன். 'என்ன'ன்னு கேட்டவரு, உடனே அதை எல்லோருக்கும் கொடுத்தார். அப்ப ஆரம்பிச்சதுதான்... தொடர் கதையாயிடுச்சு!'' என்று ப்ளாஷ்பேக் சொல்லும் ஜமீல், இந்திய அணி இந்தியாவிற்குள் எங்கு ஆடினாலும் அங்கே ஆஜராகி விடுவாராம். சிங்கப்பூர், ஷார்ஜா இலங்கை போன்ற நம் அக்கம் பக்க நாடுகளுக்கும் கிரிக்கெட்டை ரசிக்கச் சென்று வருகிறார்!

''இலங்கை, பாகிஸ்தான் போல சில நாட்டு ரசிகர்களுக்கு அந்தந்த நாடுகளே சலுகை அளிக்கின்றன. அந்த நாட்டு அணிகள் எங்கெங்கே செல்கின்றனவோ, அவர்களுடன் சில விசேஷ ரசிகர்களையும் தங்கள் செலவிலேயே அனுப்பி வைக்கின்றன. அவர்களின் வேலையே, தங்கள் நாட்டுக் கொடியை அசைப்பதும், தங்கள் அணிக்கு சப்போர்ட் செய்வதும்தான். அதைப் போன்ற

வெளி நபர்களும் பங்கு பெறும் இந்த 'வனம்' மாதிரியே சென்னை மாநிலக் கல்லூரியில் 'நெய்தல்' என்கிற அமைப்பும், திருத்தணி கல்லூரியில் 'குறிஞ்சி' என்கிற அமைப்பும், பச்சையப்பன் கல்லூரியில் ஒரு அமைப்பும் உருவாகியுள்ளன. சென்னை புதுக் கல்லூரியில் கவிஞர் இன்குலாப் இந்த ஆண்டு ஒரு அமைப்பை ஏற்பாடு செய்திருக்கிறார். வனத்தில் கவிதைகள் மட்டும் பேசப் படாமல் ஓவியக் கல்லூரி மாணவர்களைக் கொண்டு ஒரு கலந்துரையாடலும், ஒரு ஓவியக் கண்காட்சியும் நடத்த ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

''வனம்' மாணவர்களோட ஒத்துழைப்போட இரண்டு புத்தகம் கொண்டு வந்திருக்கிறது. கவிஞர் கள் மத்தியில பல்வேறு ஐடியாலஜி இருக்குது. அவங்களோட தனித்தன்மை கெட்டும் போயிராம கவிதைகளை விமர்சனம் செய்ய வேண்டி இருக்கு. பொதுவா காதல் கவிதைகள் குறைவாத்தான் வருது. பெண்ணடிமை, ஜாதி, மதம் குறித்த முற்போக்கான கவிதைகள் பரவலா வருது. கவிதைகள்ள தீவிரத் தன்மை இருக்கு'' என்றார் பாரதிபுத்திரன்.

கிறித்துவக் கல்லூரி மாணவர் வீரமணி வாசித்த 'கலை' என்கிற கவிதைகூட கலையானது தான்.

விதவிதமான மீன்கள்
கண்ணாடிச் சுவரோடு
கதை பேசின.
ஆளுயர மீன்கள்
அடித்துப் புரண்டு
அலை மோதின
வண்ண வண்ண மீன்கள்
வானவில் துண்டாய்
விளையாடின.
'என்ன அழகு'
வெளிநாட்டுப் பெண்கள்
விழி உயர்த்தினர்.
எவனோ சொன்னான்
'அம்புட்டையும்
ஆக்கினா
அஞ்சு நாளைக்கு
அலுக்காம திங்கலாம்!'

-கே. பாலசுப்ரமணியன்

படம்: **சி.பி. ராமச்சந்திரன்**

• சச்சினுடன் ஜமீல்



ரசிகர் ஜமீல்!

சலுகை இங்கே இல்லையென்றாலும், எனக்கு அச்சலுகை வேண்டி முயற்சி செய்திருக் கிறேன்... கிடைத்து விடும்'' என்று நம்பிக் கையுடன் பேசுபவர், கிரிக்கெட் மற்றும் பிற விளையாட்டுகளை ரசிப்பதற்காக ஆயிரக் கணக்கில் செலவு செய்திருக்கிறார். சமீபத்தில் அசார் சுதந்தரக் கோப்பையை கைப்பற்றிய போது இலங்கை ஸ்டேடியத்தில்தான் இருந்திருக் கிறார் இந்த ரசிகர்!

"**வீ**ரர்கள் தங்கி இருக்கும் ஹோட்டல் கள்ல போலீஸ், செக்யூரிட்டின்னு ஆயிரம் தடைகள் வந்தாலும் அவங்களுடைய துரத் தல், மிரட்டலுக்கெல்லாம் டிமிக்கி கொடுத் துட்டு, உள்ளே போனா, ஸ்டாருங்களைப் பார்க்கறதுக்குள்ள போதும், போதும்னு ஆயிடும். பல சமயம் கதவுக்கு அந்தப் பக்கம் நிற்கும் ரசிகர்களிடமிருந்து ஆட்டோ கிராப்புக்குகளை வாங்கி வந்து ஸ்டாருங்க கிட்ட கொடுத்து கையெழுத்து வாங்கித் தருவேன். சில நேரம் ஸ்டார்கள் உதவிக்கு ஆள் இல்லாமல் தவிப்பார்கள். உடனே ஓடிப் போய் என்ன வேண்டுமென கேட்டு, தண்ணீர், டீயெல்லாம் சப்ளை செய்திருக் கிறேன். அப்படி நான்கு மணி நேரத்திற்கு மேலே கால்கடுக்கக் காத்திருந்து பெக் கருடன் படம் எடுத்துக் கொண்டது மறக்க முடியாது. ஆஸ்திரேலிய வீரர் ஷேன் வார்னேவும் காக்க வைத்துத்தான் போஸ் கொடுத்தார்.'' என்பவருக்கு, கபிலும் அசாரும் டெண்டுல்கரும் தங்கள் நினைவாகப் பரிசு கொடுத்திருக்கிறார்கள். அப்படி கபில் கொடுத்த கிட் பேக்கை எட்டு ஆண்டுகளாக பத்திரமாக வைத்திருக் கிறார்.

படம், செய்தி :
ஞானசேகர்.

கோட்ஸிலா



ஏற்கெனவே கோட்ஸிலாவை அடிப்படையாகக் கொண்டு 23 திரைப்படங்கள் வெளியாகிவிட்டன. ''பத்தோடு பதினொன்று (23யோடு 24!)'' என்று முழுவதும் ஒதுக்க முடியாதபடி இந்தப் படத்தை ஆக்கியிருப்பது ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ்! மிக உயர்ந்த கட்டடத்தைக் கட்டித் தழுவுவது போன்ற ஓரிரு காட்சிகளைத் தவிர, கோட்ஸிலாவை முழுவதுமாகத் திரையில் காட்டாமலேயே (அதைப் பகுதிகளாகக் காண்பித்தே) திகிலை உண்டாக்கும் உத்தி, சாமர்த்தியம். கடலே பிரம்மாண்டமாகப் பொங்கி வந்து (உள்ளே கோட்ஸிலா) ஒரு கிழவரை வீழ்த்துவது, கோட்ஸிலாவை அழித்த களிப்பில் நியூயார்க் மேயரும், பிறரும் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் இருக்க, அது இட்ட முட்டைகளிலிருந்து பல கோட்ஸிலாக்கள் வெடித்துக் கிளம்பி மனித வதம் செய்யக் கிளம்பும் காட்சி, க்ளைமாக்ஸில் இடம் பெறும் சேஸிங் ஆகியவை பரபரப்பு ஏற்படுத்துவது உண்மை.

என்றாலும், கற்பனையில்தான் கோட்ஸிலாவை உருவகப்படுத்திக் கொள்ள வேண்டும். (முழுக்க கம்ப்யூட்டர் கைவண்ண மாச்சே) என்பதாலோ என்னவோ, தியேட்டரில் ரசிகர்களுக்கு ஏற்படும் அதிர்ச்சியில் பாதியைக் கூடக் கதாபாத்திரங்களின் முகத்தில் காணோம். ஒரு எஃபெக்டுக்காக என்று படம் முழுவதும் மழைக்காலத்தில் நடப்பதாகக் காட்டியிருப்பதால் அங்கங்கே லேசான மசமசப்பு. ''மெகா டன்னில் காதில் பூ சுற்றுவார்கள்'' என்று தெரிந்து கொண்டே போனாலும் கோட்ஸிலா காரை வாயில் போட்டுக் கொள்வதும், உள்ளிருந்து மின் சாரத்தை கார்ப் பயணி பாய்ச்ச, காரை கோட்ஸிலா வெளியே துப்புவதும், விழுந்த கையோடு எந்த சேதமும் இல்லாமல் பயணிகள் தொடர்ந்து காரை ஓட்டுவதும் – அப்பப்பா! 'பூ'பாரம் தாங்க முடியவில்லை!

இது போன்ற படங்களுக்குப் பின்னணி இசை பெரிதும் கைகொடுக்க வேண்டும் – கொடுத்திருக்கிறது.

த்ரில்களுக்குக் குறைவில்லை. என்றாலும் ''அடுத்து எப்படி ஹாலிவுட்காரர்கள் நம்மை பிரம்மாண்டமாக பயமுறுத்தப் போகிறார்கள்?'' என்ற சுவாரஸ்யம் கொஞ்சம் குறைந்து, ''கொஞ்சம் வேற மாதிரியும் படம் எடுங்கப்பா'' என்று சொல்லவும் தோன்றுகிறது. ●

— ஜி.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi

Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.

Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621

Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1600/- (Air Mail)

Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 800/- (Air Mail)


இலவச
இணைப்பு!
கல்கி
JOGGING
'ஹா'ரோக்கியம்!
KALKI 23.8.98

இந்த இலவச இணைப்பை கல்கியுடன் இணைந்து அன்பளிப்பாக வழங்குபவர்கள்:

Apollo Hospitals Chennai - 600 006.

ஆயுள் முழுக்க ஆரோக்கியமாய் இருக்க...!

சென்ற வாரம் ஒருநாள். மாலை நேரம்.

சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஓர் இளைஞர், தம் ஆபீசிலிருந்து கிளம்புகிற சமயம். திடீரென்று நெஞ்சு வலி வந்து, இதயத்தைப் பிசைவது மாதிரி உணர்ந்தார். மாடிப்படிகளில் கடகடவென இறங்கி வந்து, ஓர் ஆட்டோ ரிக்ஷாவைப் பிடித்து அமர்ந்து கொண்டார். "நேரே அப்போலோ போப்பா!" என்று சொல்லி விட்டுச் சாய்ந்து விட்டார்.

ஆட்டோ டிரைவர் படு வேகமாக ஓட்டிக் கொண்டு போனார். க்ரீம்ஸ் சாலை வந்து, அப்போலோ மருத்துவமனை இருக்கும் தெருவுக்குள் நுழைந்தார். பின்னால் திரும்பிப் பார்த்தால் –

இளைஞரின் தலைசாய்ந்திருந்தது!

ஆட்டோ டிரைவர் பதறாமல், அப்போலோவில் நுழைந்து, டாக்டரிடம் இளைஞரை விட்டு விட்டுத்தான் போனார்.

இளைஞரை உடனடியாகக் கவனிக்க ஆரம்பித்தார்கள் டாக்டர்கள். இளைஞரின் இதயத் துடிப்பு அப்போது தான் நின்றிருந்தது. மருத்துவர் ஒருவர் அவருக்கு அவசர அவசர மாகச் சிகிச்சை அளிக்கத் தொடங்கினார். எலக்ட் ரிகல் ஷாக் முறையில் 30, 32 தடவை அதிர்ச்சி தர வைத்ததில், இதயம் மறுபடி இயங்க ஆரம் பித்தது!



டாக்டர்கள் அவரைத் தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்திருந்து, அவருடைய இதயத்துக்கு இரத்தம் எடுத்துச் செல்லும் குழாயில் உள்ள ஓர் அடைப்பை நீக்கினார்கள்.

இளைஞர் பிழைத்துக் கொண்டார்.

தம் இதயத்தில் இருக்கும் கோளாறை இளைஞரால் ஏன் முன்னதாகவே தெரிந்து கொள்ள முடியவில்லை? எப்போதாவது ஒரு தடவை மெடிக்கல் செக்-அப் செய்து கொண்டிருந்தால், அவர் தெரிந்து கொண்டிருக்கக்கூடும்.

கடைசி நிமிடம் வரை உயிருக்குப் போராடி, அதிர்ஷ்டவசமாகப் பிழைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

இதைத்தான் பிரிவென்டிவ் ஹெல்த் கேர் என்கிறார்கள். வந்தபின் தவிப்பதை விட, வருமுன் காப்பதே மேல் என்று டாக்டர்கள் இப்போதெல்லாம் வலியுறுத்துகிறார்கள். ஆனால் வலி வந்த பிறகுதான், வலியுறுத்துவதே நமக்கு நினைவுக்கு வருகிறது!


கம்ப்யூட்டர் ஹாரஸ்கோப்

கம்ப்யூட்டரில் ஜாதகம் கணித்துக் கொடுப்பது இப்போது புதிதாகப் பரவி வருகிறது. உங்கள் பிறந்த தேதி, இடம் எல்லாம் சொன்னவுடன், பக்கம் பக்கமாக உங்கள் ஜாதகத்தை பிரின்ட் செய்து கொடுத்து விடுகிறது கம்ப்யூட்டர். நாற்பதாவது வயதில் பதவி உயர்வு. (ஆ!) நாற்பத்தைந்தாவது வயதில் புதிய வாகன யோகம். (ஆகா!) சொந்த வீடு. (ஆகாகா!)

அப்போலோவில் ஒரு கம்ப்யூட்டர் இருக்கிறது. அதன் ஆபரேட்டர், அதில் கேள்விகளாகக் கேட்பார். உங்கள் வயது, வாழ்க்கை முறை, வேலை, உணவுப் பழக்கம் என்று கேள்விகள் அடுத்தடுத்து வரும். பொறுமையாக நீங்கள் சொல்லும்

பதிலை கம்ப்யூட்டரில் பதிவு செய்து விடுவார் ஆபரேட்டர்.

மளமளவென்று, அதிவிரைவில் கம்ப்யூட்டர் உங்கள் உடல் நிலையைக் குறித்த ஜாதகத்தை அச்சடித்துக் கொடுத்து விடும்! கட்டணம் நூறு ரூபாய் தான். ஆனால் 'உடல் நிலை ஜாதகத்தை'ப் பார்த்தவுடனேயே, நாம் என்னென்ன செக்-அப் செய்து கொள்ள வேண்டும் என்று அது எச்சரிக்கை தந்து விடுகிறது!



எந்த ஜாதகம் பெட்டர் என்று நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்!

ஆனால், 'உங்கள் BP அதிகமாய் இருக்கிறது. குறைக்கிற வழியைப் பாருங்கள்' என்றோ;

'உங்கள் இதயம் பலவீனமாக

இருக்கிறது. நீங்கள் சாப்பிடும் உணவு வகைகளும், உங்கள் வாழ்க்கை முறையும் உங்களுக்குப் பிரச் னையை உண்டாக்கலாம்; என்றோ –

இருபது பக்கங்களுக்கு ஒரே எச்சரிக்கைமயமாக இருப்பதை சின்ஸியராக எடுத்துக் கொண்டு, (இதென்ன ஹாரஸ் கோப்பா, ஹாரர்ஸ் கோப்பா? என்று கிண்டலடிக்காமல்!) தேவையான டெஸ்டுகளைச் செய்து கொண்டால், பின்னால் ஆயிரக்கணக்கிலும், லட்சக்கணக்கிலும் செலவு செய்து கொண்டு, மருத்துவமனையின்



மின்விசிறியைப் பார்த்துக் கொண்டு படுத்திருக்க வேண்டாம் அல்லவா?

"எனக்கு ஒண்ணும் வராது!"

"ஆர்த்ரைடிஸ்ஸா?"

"அதொண்ணும் எனக்கு வராது!"

"ஹார்ட் அட்டாக்கா?"

"அதெல்லாம் எனக்கு வர சான்ஸே இல்லே!"

"டயபடீஸா? எனக்கா? பேசப்படாது!"

இப்படி எந்த வியாதியின் பெயரைச் சொன்னாலும் 'எனக்கு எங்கே வரப் போகிறது?' என்று படு அலட்சியமாக ஒதுக்கித் தள்ளுபவர்கள் நிறையவே உண்டு.

உடம்புக்கு வந்தால்தான் டாக்டரிடம் போக வேண்டும் என்று பிடிவாதமாக இருப்பார்கள் இவர்கள். 'அப்படி இருக்காதீர்கள்' என்று இங்கே சொல்லி வைப்பது நம் கடமை.

'கைவசம் ஆயிரம் ரூபாய் வைத்திருங்கள். உங்களுக்கு நீரிழிவு நோய் வடிவில் நான் வருவேன்!' என்று எந்த நோயும் முன்கூட்டியே சொல்லிவிட்டு வருவதில்லை.

நோய் நம்மைத் தாக்க நேரம், காலம் எல்லாம் பார்ப்பதும் இல்லை. (தாக்கினால், நாம் நம் பர்ஸைத் தவிர வேறு எதையும் பார்ப்பதுமில்லை!)

துணிந்து முடிவு எடுங்கள்!

முதலில் ஒரு சின்ன விஷயத்தையே எடுத்துக் கொள்ளுவோம் :

சிகரெட்.

சிகரெட் பிடிக்கும் பொழுது இதயம் அதிகமாகத் துடிக்கிறது. இதனால் இரத்த அழுத்தம் கூடுகிறது. இரத்தத்தில் கொழுப்புச் சத்து கூடுகிறது. இதயத் தமனிகள் உள் சுவர் பாதிப்பு அடைகிறது.



நுரையீரல் பழுதாகிறது. நுரையீரல் புற்றுநோய் வருகிறது.

முதலில் சிகரெட் பாக்கெட்டைச் சட்டைப் பையிலிருந்து வெளியேற்றுங்கள்.

சிகரெட் பிடிக்கத் தூண்டும் சந்தர்ப்பங்களைத் தவிர்க்கப் பாருங்கள்.

நாளையிலிருந்து சிகரெட்டைத் தொடப் போவதில்லை என்று தீர்மானம் செய்து கொண்டு விட்டால், அதில் உறுதியாக இருங்கள். அன்றிலிருந்து ஒரு சிகரெட் என்றால், சுத்தமாக ஒன்று கூடத் தொடாமல் கட்டுப்பாட்டோடு இருங்கள்.

ஒரு விமானப் பயணத்தின் போது, ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் மானேஜிங் டைரக்டரிடம் அவரது செயலர் கேட்டார்: "இத்தனை துணிச்சலான முடிவுகள் எடுக்கிறீர்கள் - கம்பெனி விஷயத்தில். உங்கள் உடலுக்கே கேடு விளைவிக்கக்கூடிய இந்த சிகரெட்டை விட மாட்டேன் என்கிறீர்களே?"

கையில் புகைந்து கொண்டிருந்த

சிகரெட்டை ஒரு தடவை பார்த்தார் எம்.டி. தம்மிடம் துணிந்து புத்திமதி சொன்ன செயலாளப் பெண்மணியை ஒருமுறை பார்த்தார். சிகரெட்டை அணைத்து விட்டு, "தாங்க்யூ. இந்த நிமிடத்திலிருந்து நான் சிகரெட் பிடிக்கப் போவதில்லை!" என்றார். அதற்குப் பிறகு தாம் சிகரெட்டையே தொடவில்லை என்றார், ஒரு சந்திப்பின் போது.

சிலர் அந்த சிகரெட் நினைப்பு வருகிற போது ஓர் ஆரஞ்சு மிட்டாயை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு மெல்ல ஆரம்பிப்பார்கள். சிலர் ஜூஸ் அருந்துவார்கள். சிலர் ஒரு தம்ளர் தண்ணீரைக் குடிப்பார்கள்.

ஆரம்பத்தில் கொஞ்சம் எரிச்சலாக இருக்கும். யார் எது கேட்டாலும் எரிந்து விழுகிற மாதிரி பதில் சொல்லத் தோன்றும். ('நான் இன்று முதல் சிகரெட்டை விடப் போகிறேன். என்னிடம் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இரு!' என்று செயலாளரை எச்சரிக்கை செய்த அதிகாரி கூட ஒருவர் இருக்கிறார்!) ஆனால் இந்த ஆசை உணர்வுகளை, டெம்ப்டேஷன்களை, அடக்கி வெற்றி கொள்ளும்போது உங்கள் ஆரோக்கியம் கூடுகிறது; ஆயுள் கூடுகிறது.

"சிகரெட் பிடிப்பதை நிறுத்துவது ரொம்ப ஈ.ஸி. நான் பல தடவை நிறுத்தியிருக்கிறேன்!" என்று அதி புத்திசாலித்தனமாகக் கிண்டலடிப்பவர்களிடம், மேற்படி உபதேசம் எல்லாம் எடுபடாதுதான். 'குட்பை' சொல்லி விட்டு அடுத்த வேலையைப் பார்க்கப் போகலாம்!

சிகரெட்டுக்கு அண்ணன் ஒருவர் இருக்கிறார். அவர் பெயர் ஆல்கஹால். (லிக்கர், மது, இன்னும் கடைசி லெவலில் சாராயம் சரக்கு என்று கூட, இன்னும் பல நாமகரணங்கள் உண்டு!)

குடி, குடியைக் கெடுக்கும் என்பது

உண்மைதான். முதலில் உங்கள் உடம்பையே கெடுக்கும்!

முதலில் மூளையைப் பாதிக்கும். அப்புறம் கீழே மெல்ல மெல்ல இறங்கி வந்து, லிவரைப் பாதிக்கும். அப்புறம் வேலையில் கவனம் குறையும், வேலை போகும், குடும்பம் தவிக்கும். பணம் கையில் இருக்காது. சமூகம் கேவலமாகப் பார்க்கும். கடைசியில் மனநிலையே பாதிக்கப்படும்!

குடிப்பதை நிறுத்தினால் தவிர, மதுபானம் பருகுபவரின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டேதான் போகும்.

சமீபத்திய ஆராய்ச்சிகளின்படி, ஆல்கஹாலிசமும் ஒரு நோய்தான்; அதை மருந்துகள் மூலமாகவும், மனநல மருத்துவச் சிகிச்சை மூலமாகவும் மட்டுமே குணப்படுத்த முடியும் என்று முடிவு எடுத்திருக்கிறார்கள்.

பி.பி., ஷுகர் போல் சில நோய்கள் வருவது நம் கட்டுப்பாட்டில் இல்லை. எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தாலும் மரபுக் கூறுகள் மூலமாக வர வாய்ப்பிருக்கிறது. ஆனால், ஆல்கஹாலிஸம் நாமே வலியப் போய் வரவழைத்துக் கொள்ளும் நோய்!

இருக்கிற பணத்தை எடுத்து விக்கர் அருந்திவிட்டு, பிறகு உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் பணம் இல்லாமல், சிகிச்சை பெற முடியாமல், ஏன் தவிக்க வேண்டும்?

இரத்த அழுத்தம் — ஜாக்கிரதை!

சமீபத்தில் நடந்த நிகழ்ச்சி இது :

வெகு நார்மலாக இருந்த ஒரு 45 வயதுக்காரர், ஒருநாள் காலை திடீரென்று தலைவலிக்கிறது என்று


'ப்ளட் ப்ரஷர்' எவ்வளவுன்னு தெரிஞ்சுடுச்சு!

மனிதர் டயட்டில் இருக்கிறார்!



சொன்னார். டீவியில் 'ரங்கோலி' பார்த்துக் கொண்டிருந்த தம் மகளிடம் வால்யூமைக் குறைக்கச் சொன்னார். படுத்தார். வயிற்றைப் புரட்டிக் கொண்டு வாந்தி எடுத்தார்.

அவர் மகளும், மனைவியும் பதறிப் போனார்கள். அருகில் இருந்த நண்பரிடம் போய்ச் சொன்னார்கள். அவர் உடனே ஒரு காரில் அவரைத் தூக்கிப் போட்டுக் கொண்டு ஹைப்பர் டென்ஷன் கிளினிக்கில் அவரை அட்மிட் செய்தார்.

டாக்டர் B.P. பார்த்தார்.

280/140!


தூக்கிவாரிப் போட்டது அவருக்கு.

அதற்குள், மயக்கமாய் இருந்த நோயாளியின் மூளைப் பகுதியில், இரத்த நாளம் ஒன்று வெடித்து, ஹெமரேஜ் ஆகிவிட்டது!

ஸ்கேனிங் எடுத்துப் பார்த்ததில், இரத்தம் மூளையின் பல பாகங்களில் பரவியிருந்தது.

இரண்டாவது வாரத்தில், அவருக்கு

நடைபெற்ற மூளை அறுவைச் சிகிச்சையில், தேவைப்பட்ட இரத்தம் கொடுக்கப்பட்டது. ஆனாலும் அவருடைய இரத்த அழுத்தம் ஏறி, இறங்கி அலைக்கழித்ததில், அறுவைச் சிகிச்சை பயன் படாமல், அவர் உயிர் பிரிந்தது.



இத்தனை அதிக இரத்த அழுத்தம் உள்ளவர், ஒருமுறை கூட B.P. செக்-அப் செய்து கொள்ளாமல் இருந்தது எப்படி?

அலட்சியம்!

தமக்கு உயர் இரத்த அழுத்தம் இருக்காது என்ற தீர்மானமான நம்பிக்கை. இத்தனைக்கும் முன்கோபி அவர். எப்போதும் கடுகடுப்பும் சிடுசிடுப்புமாகவே இருப்பார். நாற்பதைத் தாண்டிய பிறகு. காஷுவலாகச் செய்து

கொள்ளும் சாதாரண செக்-அப் செய்து கொண்டிருந்தால் கூட அவரது உயர் இரத்த அழுத்தம் தெரிந்திருக்கக்கூடும். அதற்கான பரிகாரங்களாக உட்கொள்ளப்படும் மாத்திரைகளைச் சாப்பிட்டிருக்கலாம். கட்டுப்பாட்டுக்குள் உயர் இரத்த அழுத்தத்தைக் கொண்டு வந்திருக்கலாம்.

பிளட் பிரஷர் அதிகமாகி, உடலின் முக்கிய உறுப்புகள் பாதிக்கப்பட்ட பிறகே சிலர் உயர் இரத்த அழுத்த அறிகுறிகளை அறிவார்கள். எனவே, இந்த நோயை சைலண்ட் கில்லர் என்றும் கூடச் சொல்லுவார்கள்.

பிளட் பிரஷர் அதிகமாவதால், உடலின் முக்கிய உறுப்புக்கள் பாதிக்கப்படும் போது, நாளளவில் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். எனவே, இவ்வாறு உறுப்புகள் பாதிக்கப்படும் வரை காத்திராமல், பிளட் பிரஷருக்கான அறிகுறிகள் ஏதும் தோன்றாவிட்டாலும், அவ்வப்போது B.P. செக் செய்து கொள்ளுவது நல்லது. நார்மல் ஆக இருந்தால் ரொம்ப நல்லது. அதிகம் இருந்தால், உடனேயே சிகிச்சை மேற்கொள்ளலாம் அல்லவா?

நார்மல் என்றால் 120/80.

140/90 இருந்தால் ஆபத்து ஏதும் இல்லை. என்றாலும் எச்சரிக்கையாய் இருங்கள் என்று சொல்லும் அளவுகோல்!

B.P. அதிகமாக இருக்கிறதே என்று அரண்டு போய் மிரண்டு விடாதீர்கள். (அப்புறம் அதன் காரணமாக இன்னும் கூடி விடப் போகிறது!)

பயத்தைக் கைவிட்டு, ரிலாக்ஸ்ட் ஆக இருங்கள்.

● அதிக உப்பைச் சேர்த்துக் கொள்ளாதீர்கள்.

● ஊறுகாய், அப்பளம் முதலிய அதிகபட்ச உப்பு உள்ளவற்றை தயவு தாட்சண்யம் பார்க்காமல் ஒதுக்குங்கள். (ஒரு கல்யாணச் சாப்பாட்டுப் பந்தியில், 'பிக்கிள்... பிக்கிள் போடட்டுமா?' என்று

பரிமாறுகிறவர் கேட்டுக் கொண்டே வந்தார். அடுத்து இருந்தவர், இலைக்கு முன் இரண்டு கையையும் வைத்து மறித்து, 'பிக்கலும் வேண்டாம், பிடுங்கலும் வேண்டாம்!' என்று சத்தம் போட்டார். ஹை B.P. மனிதராம்!)

● உடல் எடையைக் கவனியுங்கள். அதிக எடை, B.P.ஐ அதிகரிக்கும். இதயத்துக்குப் பளு அதிகமாகும்.

● குறைந்தபட்சக் கொழுப்பு உள்ள உணவு உட்கொள்ளுங்கள்.

● தினசரி எளிமையான உடற்பயிற்சி செய்யுங்கள்.

● நல்ல திறந்த வெளியில் நாற்பத்தைந்து நிமிடங்களாவது வாக்கிங் போய்விட்டு வாருங்கள்.

● சொல்லவே வேண்டாம், நோ ஸ்மோக்கிங்; நோ ஆல்கஹால்!



● டாக்டர் சொல்கிறபடி கேட்டு, சமர்த்தாக மருந்துகளைச் சாப்பிடுங்கள்!

அப்போலோ ஹெல்த் செக்

கொறிக்காவிட்டால் தூக்கம் வராது!



தினசரி வாழ்க்கையில் பரபரப்பு (ஸ்ட்ரெஸ்), சத்தில்லா உணவு, உடற்பயிற்சிகளே எதுவும் இல்லாத நிலை இவை எல்லாம் பிரச்னைகளுக்கு வழிவகுக்கும்.

தொடர்ந்து வரும் தலைவலி, சளி – இருமல், மலச்சிக்கல், காய்ச்சல் எல்லாம் எச்சரிக்கைகள். இவற்றில் சிலவற்றை ஒரு மாத்திரையை விழுங்கிவிட்டு, அப்போதைக்குச் சமாளித்து விடலாம்.

ஆனால் இவை தொடர்ந்து வந்து பாடாய்ப் படுத்தும்போது? ஒரு தடவை சருமத்தில் அரிப்பு ஏற்படும் போது, ஒரு அலர்ஜி மாத்திரையை விழுங்கி விட்டு மறந்து விடலாம். ஆனால் அதுவே தொடர்ந்து இருந்தால்? பெரிதாக எதுவோ வருவதற்கான அறிகுறி என்று சற்று சீரியஸாக எடுத்துக் கொள்ளுவது நல்லது.

ஒரு முழுமையான ஹெல்த்-செக், உங்கள் உடல்நிலையைப் படம் பிடித்துக் காட்டி விடும். உலகின் பல பாகங்களில் கையாளப்படும் மிக உயர்ந்த, வெற்றிகர மான பரிசோதனை முறைகளை அடிப் படையாகக் கொண்டு உருவாக்கப் பட்டிருக்கும் **'அப்போலோ மாஸ்டர் ஹெல்த் செக்'** உங்கள் உடலின் ஒவ் வொரு பாகத்தையும் துல்லியமாக ஊடுருவிப் பார்த்து, தகவல்களைச் சொல்வதற்காகவே வடிவமைக்கப் பட்டிருக்கிறது.

பின்னால் வந்து பயமுறுத்தப் போகும் அறிகுறிகள் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து விட்டால் தகுந்த சிகிச்சை மேற்கொண்டு விடலாம் அல்லவா?

ரொம்பப் பயப்படாதீர்கள். ஓர் உதாரணத்துக்குச் சொல்லுகிறோம் :

எட்டு பேரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் வரும்.

நாலு பேரில் ஒருவருக்கு கொலஸ்ட் ராலும், ட்ரைக்ளிசரைடுகளும் அதிகமாக இருக்கும்.

பதினைந்து பேரில் ஒருவருக்கு இதயத் தமனி எனப்படும் கொரோனரி ஆர்ட்டரியில் அடைப்புகள் உண்டாகும்.

பெரும்பாலான பெண்களுக்கு மார் பகப் புற்றுநோய், கருப்பை வாய்ப் பகுதி புற்று நோய் - இரண்டையுமே ஆரம்பத் தில் கண்டுபிடித்து விட்டால் முழுமை யாகக் குணமாக்கி விடலாம்.

நோய் முழுவதுமாக முற்றி விடுவதற்கு முன்பே கண்டறிந்து, குணப்படுத்தி விட

லாம் என்பது இப்போதைய நிலை. அதற்கு உதவும் வகையில் அமைக்கப்பட்டதுதான் இந்த செக் அப்.

ஹீமோகிராம் பரிசோதனையில், இரத்தத்தில் உள்ள ஹீமோக்ளோபின், சிவப்பு அணுக்கள் - வெள்ளை அணுக்கள் எண்ணிக்கை, ஈ.எஸ்.ஆர்., ஜி.டி.டி. பரிசோதனைகளின் மூலம் டயாபிடீஸின் நிலை தெரிந்து விடுகிறது.

பயோகெமிகல் குறிப்பளவுச் சோதனையில் யூரியா, (உரம் இல்லே!), யூரிக் ஆசிட், க்ரியாடினைன் அளவுகள் தெரியவரும்.

லிபிட் ப்ரொஃபைலில் கொலஸ்ட்ரால் அளவுகள் தெளிவாகி விடும்.

லிவர் டெஸ்ட்டில் ஆல்புமின், ஆல்கலைன் ஃபாஸ்ஃபடேஸ் செய்வதன் மூலம் ஈரலின் நிலை தெரிந்துவிடும்.



வேகமான நடை உத்தமம்!

மேலும் இரத்தம், சிறுநீரக, மலப் பரிசோதனைகள், ஈஸிஜி, எக்ஸ்ரே, அல்ட்ரா சோனாகிராம் போன்ற பரிசோதனைகள் செய்வதன் மூலம் கிட்னி, லிவர், சிறுநீரகக் கல் ஆகியவற்றின் நிலை தெரிந்து விடுகின்றது.

இந்தப் பரிசோதனைகள் எல்லாம் முடிந்ததும், உங்கள் 'மெடிகல்

ஜாதகத்தைத் தந்து விட்டு, ஒரு சீனியர் மருத்துவர் உங்களுக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்குவார்.

இதிலேயே பல வகை 'ஹெல்த்-செக்' இருக்கின்றன :

எக்ஸிக்யூடிவ் ஹெல்த் செக்

ஹார்ட் செக்

ஹோல் பாடி செக்

லைஃப் ஸ்டைல் அஸ்ஸெஸ்மென்ட்

சைல்டு ஹெல்த் செக்

வெல் விமன் செக்.

ஹெல்த் இன்ஷ்யூரன்ஸ்

மேற்கத்திய நாடுகளில் ஹெல்த் இன்ஷ்யூரன்ஸ் சர்வ சாதாரணம். மருத்துவமனைகளில் செலவு அதிகம் என்பதை உணர்ந்தே, அங்கே இருப்பவர்கள் ஹெல்த் இன்ஷ்யூரன்ஸ் செய்து கொள்ளுகிறார்கள்.

நம் நாட்டில் இன்னும் அத்தகைய நிலை உருவாகவில்லை. 90 சதவிகிதம் பேர் தங்கள் சொந்தப் பணத்தை எடுத்துத்தான் சிகிச்சை தேடிக் கொள்ளுகிறார்கள். பத்து சதவிகிதம் பேருக்கே மெடிக்கல் இன்ஷ்யூரன்ஸ் ஆதரவு இருக்கிறது. அல்லது சில கம்பெனிகள், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வழங்கும் சலுகையாக, ஊழியர்களுக்கு இது வழங்கப்படுகிறது.

இனி வரும் நாட்களில், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் பெருக்கம் காரணமாக, ஹெல்த் இன்ஷ்யூரன்ஸ் துறை விரிவடையும். அப்போது, ஹெல்த் இன்ஷ்யூரன்ஸ் ஆதரவு பெற்ற மக்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயரும்.

நோய் தாக்கும்போது, கையில் பணம் ஏதும் இல்லையே என்ற கவலை இன்றி, மருத்துவமனைகளுக்குச் செல்லும் வாய்ப்புகள் அதிகமாகும்.



ஒரு நோயாளி, ஒரு டாக்டரிடம் போனார்.

டாக்டர் அவரைப் பரிசோதித்து விட்டு, சீட்டில் மருந்துகளை எழுதிக் கொடுத்தார்.

"சாப்பாட்டுக்கு முன்னால ஒரு வேளையும், சாப்பாட்டுக்கு அப்புறமா ஒரு வேளையும், இந்த மருந்துகளைச் சாப்பிடுங்க!" என்றார்.

"முன்னால, சாப்பாட்டுக்கு ஒரு அஞ்சு ரூபா கொடுங்க டாக்டர்!" என்றாராம் நோயாளி!

இது ஒரு ஜோக்குதான் என்றாலும், பலருக்கு மருத்துவச் செலவு என்பது தாங்கிக் கொள்ள முடியாததாகவே இருந்து வருகிறது.

சமுதாயத்தின் அடித்தட்டு மக்களிடையே காச நோய், புற்று நோய், இதய நோய்கள், நீரிழிவு, மகளிர் நோய்கள் இவற்றின் பாதிப்பை அறிய இலவச முகாம்களும், இலவச

காடராக்ட் பரிசோதனை முகாம்களும் அப்போலோ தனது மருத்துவ மனைக்கு வெளியே வந்து, கிராமப்புறப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அவ்வப் போது நடத்தி வருகிறது. தனது சமுதாயக் கடமையாக அப்போலோ இதைச் செய்து வருகிறது. குறிப்பாக, காசநோய் ஒழிப்பில் முழு அக்கறையுடனும், ஈடுபாட்டுடனும் உழைத்து வருகிறது. இதன் அடுத்த கட்டமாக, புற்று நோய் விஷயத்தில் பல முகாம்களை நடத்தி, தடுப்பு முறைகளையும், சிகிச்சை முறைகளையும் எடுத்துச் சொல்லி விளக்கி வருகிறது.



குடும்ப டாக்டர்

முன்பெல்லாம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் நன்கு அறிமுகமான டாக்டர் என்று ஒருவர் இருப்பார். குடும்பத் தலைவருடன், குடும்பத்தினருடன் அவருக்கு ஒரு தொடர்பு இருக்கும். எந்த உபாதை வந்தாலும் உடனே அவரைப் பார்த்து, மருந்துகள் வாங்கிக் கொண்டு வந்து, நிம்மதியாகச் சாப்பிடலாம்.

இப்போது குடும்ப டாக்டர் முறை என்பதே கிட்டத்தட்ட மறைந்து

விட்டது. இதனால் வீட்டிலேயே இருந்து கொண்டு மேற்கொள்ளப்படும் சிகிச்சைகளுக்குக் கூட மருத்துவமனைகளைத் தேடிப் போக வேண்டியிருக்கிறது!

அப்போலோவின் **'யுனீக் ஹோம் ஹெல்த் கேர்'** இந்த வகையில் ஒரு புதிய வழிமுறையை அறிமுகப்படுத்தியிருக்கிறது :

- வீட்டிலேயே வந்து மருத்துவ ஆலோசனை ;
- அறுவைச் சிகிச்சை முடிந்தும் மருத்துவமனையிலேயே படுத்திருக்க அவசியம் இல்லாமல், தினசரி டிரஸ்ஸிங்குக்கு வீட்டுக்கே வரும் உதவியாளர்;
- தொடர்ந்து படுத்திருப்பதால் வரும் புண்களை மருந்திட்டுச் சுத்தமாக்க நர்சிங் உதவி ;
- ஐ.வி. திரவம் வீட்டிலேயே கொடுக்க வசதி;
- சிறுநீர் கழிக்க உதவும் கத்திட்டர் பொருத்தி உதவி அளிப்பது எல்லாம் இதில் அடங்கும்.

ஆஸ்பத்திரிச் சூழலும், 'வாசனை'யும பிடிக்காமல், தங்கள் சொந்த வீட்டிலேயே, கூடுமான வரை மருத்துவ வசதிகளைப் பெற விரும்புவோரை மனத்தில் கொண்டே இந்த 'யுனீக் ஹோம் ஹெல்த் கேர்' உருவாக்கப்பட்டிருக்கிறது.

மதுப் பழக்கத்திலிருந்து விடுபட மனநல மருத்துவரின் ஆலோசனை, பிஸியோதெரபி, இவையும் வீட்டுக்கே வந்து தர ஹோம் ஹெல்த் கேர் வகை செய்திருக்கிறது.

பிரிவென்டிவ் ஹெல்த் செக்-அப் பரிசோதனைகளையும் வீட்டுக்கே வந்து நடத்திக் கொடுக்கவும் இதில் வசதி இருக்கிறது!

மறுபடி, பின்னோக்கி....

நீரிழிவு - அதாவது டயபடீஸ்,

குடல் புண் - அதாவது அல்சர், இவை பற்றியும் இங்கே கொஞ்சம் குறிப்பிடுவது நல்லது அல்லவா?

நீரிழிவைப் பொறுத்தவரை, நீங்கள் சாப்பிடும் மருந்துகளைத் தவறாமல் உட்கொள்ளுங்கள். அதே போல, டாக்டர் சொல்லியிருக்கிறபடி உணவுக் கட்டுப்பட்டைக் கடைப்பிடியுங்கள்.



இன்சுலின் அல்லது நீரிழிவு மாத்திரை சாப்பிட்ட பிறகு, உணவு உட்கொள்ளுவதைத் தாமதப்படுத்தாதீர்கள்.

ஹைப்போகிளிசிமிக் என்பார்களே, சர்க்கரை அளவு குறைந்து போகும் நிலை வரும் போது, மயக்கமாய் இருக்கும். பலவீனமாய் உணருவீர்கள். நாடி படபட என்று அடித்துக் கொள்ளும்; பயங்கரமாகப் பசி எடுக்க ஆரம்பிக்கும். உடனே, சிறிது இனிப்பு உணவு எதையாவது உட்கொள்ளுங்கள். பழரசம் கூடச் சாப்பிடலாம்.



சிறுநீர்ப் பரிசோதனை தவறாது செய்து வாருங்கள்.

ப்ளட் ஷுகர் பரிசோதனைக்கு எப்போது வர வேண்டும் என்று டாக்டரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

அதிகம் அலட்டிக் கொள்ளாமல், சிறிய உடற்பயிற்சிகளைச் செய்யுங்கள்.

பாதங்களைச் சுத்தமாக, ஈரம் இன்றி வையுங்கள்.

வெறுங்காலுடன் நடக்காதீர்கள்.

காயங்களைத் திறந்து விட்டு வைக்காதீர்கள். கீறல்கள் இருந்தால் ஊசி முனையால் கிளறாதீர்கள்.


ஆல்கஹாலை அறவே தவிர்த்து விடுங்கள். குறிப்பாக பீர்.


அடுத்தது, அல்சர் :

வயிற்றின் உட்புறச் சுவரில் அல்லது குடலின் பகுதிகளில் உருவாகும் புண்தான் அல்சர். இதன் வலி வயிற்றின் மேற்புறத்திலும், நெஞ்சுக்குக் கீழேயும் கூடத் தெரியும்.

வயிற்றில் இயற்கையாக உற்பத்தி ஆகும் அமிலம், ஜீரணத்துக்குத்தான் முக்கியமாக உதவுகிறது. வயிற்றின் உள்ளே பாதுகாப்புக்காக உள்ள 'லைனிங்' பாதிக்கப்படும் அளவுக்கு அமிலம் சுரந்து ஒருவிதமாக எரிக்கத் தொடங்கும் போது, அல்சர் உருவாகிறது.

பெண்களை விட ஆண்களுக்குத்தான்





அல்சர் அதிகமாக வரும். காரணம் புகை பிடிப்பதும், ஸ்ட்ரெஸ் எனப்படும் படபடப்பான சூழ்நிலையும்தான். ஆரம்பத்திலேயே கண்டறிந்து விட்டால், அறுவைச் சிகிச்சை செய்யாமலே அல்சரை விரட்டி விடலாம்!


ஆனால் வலிதான் போய் விட்டதே, என்று உடனடியாக மருந்தை நிறுத்தி விடுவது ஆபத்தானது. மறுபடி தலைகாட்டும்! எனவே டாக்டர் அறிவுரைப்படி 4 முதல் 6 வாரங்களுக்காவது மருந்தைத் தொடர வேண்டும்.


சுறுசுறு என்றிருக்கும் 'ஸ்பைசி' உணவு வகைகளைத் தவிர்த்து விடுங்கள். கப் கப்பாக டீயோ, காப்பியோ ஊற்றிக் கொண்டே இருக்காதீர்கள். அதிக நேரம் வயிற்றைக் காயப் போடாதீர்கள்.

ஸ்ட்ரெஸ் - எதனால் என்று கண்டுபிடித்து, அதற்கான தடுப்பு முறைகளை மேற்கொள்ளுங்கள். சுறுசுறுப்பாக இருங்கள். கூடுமானவரை, வலி நிவாரணிகளை விழுங்காதீர்கள். ஓகே?

ஸ்ட்ரெஸ் - படபடப்பு, மன உளைச்சல், டென்ஷன் காரணமாக வருகிறது. இன்ன வேலையை இன்ன நேரத்தில் முடிப்பது என்று ஒரு திட்டம் வைத்துக் கொள்ளுங்கள். எதை முதலில் செய்வது, எதைக் கடைசியில் செய்வது என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். டென்ஷனே இருக்காது. அதற்கென்று வேலையைத் தள்ளிப் போடாதீர்கள். அதுவே டென்ஷனை உண்டாக்கி விடும். அப்புறம் என்ன - ஸ்ட்ரெஸ்தான்!

நல்ல பொழுதுபோக்கு எதையாவது வளர்த்துக் கொள்ளுங்கள். இசை, ஆர்ட், லிட்டரேச்சர் (ஷேக்ஸ்பியர், மில்டன் என்று கூட வேண்டாம். சுவாரசியமாக இருக்கிற நாவல், நாவல் அல்லாதது என்று எதுவும் சரிதான்!) ஏதாவது ஒரு விளையாட்டு. எதுவும் இல்லை என்றால், வீட்டைச் சுற்றியோ, ஃப்ளாட்டைச் சுற்றியோ 'கார்டனிங்கில் கூட மனசைத் தோய்க்கலாம்....







எல்லாவற்றையும் செய்து விடுகிறேன் என்று கிளம்பி விடாதீர்கள். அப்புறம் குழப்பம்தான். குழப்பத்துக்கு அடுத்தபடி ஸ்ட்ரெஸ்! தேவையா?

என்ன சாப்பிடலாம்?

நம் உணவில் புரதம், கொழுப்புச் சத்து, கார்போஹைட்ரேட் எல்லாம் இருக்க வேண்டும் என்பது நமக்குத் தெரியும். ஆனால் இவை தவிர, நார்ச் சத்து மிகுந்த காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதிகமாகக் காய்கறி வகைகளைச் சேர்த்துக் கொண்டு, அரிசியைக் குறைத்துக் கொண்டால் இன்னும் நல்லது!



சரியான சாப்பாடு, அளவான தூக்கம், ஒழுங்கான உடற்பயிற்சி, முடிந்தால் யோகாசனம் - இதுபோதும். வியாதியெல்லாம் இதுமாதிரி மூஞ்சியை மூடிக்கிட்டு ஓடியே போயிடும்!

முடிக்கும் முன்னால்...

நாற்பது வயதுக்குப் பிறகு, வருடா வருடம் ஹெல்த் செக் செய்து கொள்ளுங்கள். கண், காது – மூக்கு – தொண்டை, பல் – எல்லாம்.

அதிக எடை இருந்தால், கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்க முயலுங்கள்.

மனத்தளவில் சுறுசுறுப்பாக இருங்கள்.

புதிதாக (நல்ல) ஹாபிகள் கற்றுக் கொண்டால், அவற்றையும் தொடருங்கள்!

அப்போலோவின் அக்கறை


பதினைந்து வருடங்களாக, மருத்துவச் சிகிச்சையில் ஒரு குறிப்பிடத்தக்க திருப்புமுனையை அறிமுகப்படுத்தி, அதில் வெற்றியும் கண்டிருக்கிறது அப்போலோ மருத்துவமனை. நவீன தொழில்நுட்பக் கருவிகள், தேர்ந்த மருத்துவர்களின் திறமையான சேவை இரண்டும் இணைந்த ஒரு மருத்துவ மையமாக விளங்குகிறது அப்போலோ.

இனி வரும் ஆண்டுகளில், அப்போலோவின் குறிக்கோள், வருமுன் காத்துக் கொள்ளும் வகையைச் சேர்ந்த 'பிரிவென்டிவ் ஹெல்த் கேர்' உணர்வு மக்களிடையே வெகுவாகப் பரவ வேண்டும் என்பதுதான்.

அதற்குத் தேவையான முன்னெச்சரிக்கை வசதிகளை முறையாக வழங்க அப்போலோ ஹாஸ்பிடல் தயாராக இருக்கிறது என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்த இணைப்பை, 'கல்கி' வாயிலாக உங்களுக்கு வழங்குகிறோம்.

சந்திப்பு, கட்டுரை : **சாருகேசி**

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS(S)M4392/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS/(S) 161 * Registered as a Newspaper in Srilanka * Supplement to Kalki 23.8.98




அருமையான உங்கள் வீடுகளுக்கு

அழகும் உறுதியும் நிறைந்த

மாயூரம் டிம்பர்

கதவுகள்



- ★ தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்தர மரம்
- ★ சரப்பதம் குறைக்கப்பட்டது.
- ★ ரசாயன கலவை பாதுகாப்பு
- ★ நேர்த்தியான இயந்திர வடிவமைப்பு

MADE TO ORDER BY:

MAYURAM TIMBER

& General Trading Corpn.

Showroom: 13, Rameswaram Road, T. Nagar, Chennai - 600 017.
Phone: 4345207

H.O.: 83, G.S.T. Road, Tambaram, Chennai - 600 045, Tel: 2368297

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Ms (S) M4332/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka



* இச்சலுகை சென்னை நகரில் மட்டும்.